Q7
M86
H5338

1307
139
2-1886

பிசுமில்லா கிற்றகுமா னிற்றகிம்.

இஃது,

நயிமாக்களினுடைய இயற்கையுஞ்

செயற்கையுமாகிய

# கசகல்லின் [illegible]

முன்னர்-பாசிப்பட்டணம்.

நயினாமுகம்மதுப்புலவரவர்களாற்செய்யப்பட்ட

பிரதிக்கிணங்க,

கோயம்புத்தூர்

கெ-சி-பி-செய்யிதுமுகம்மது மரைக்காயர்-குமாரர்

கெ-சி-பி-எம்-எஸ்-முகம்மதுகாசிம்

மரைக்காயரவர்கள் விரும்புற,

கண்ணகுமது மகுதூமுகம்மதுப்புலவர்

அவர்களாற் பரிசோதிக்க.

தி-இ-பரசுராம முதலியாரவர்கள்

பொருளுதவி முயற்சியால்

தமது,

பரப்பிரமமுத்திராட்சரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

முதற் பாகம்.

கெறத்தறு-தகாடு-ம்-தல்றுஜதியீ.

Copyright Registered.

# விளம்பரம்.

இந்தக்கசசுல் லீபியா முப்பாகத்தையு முன்னர் காயற்பட்டணம் மகலீனம்பொருந்திய ஸ்ரீ மீராசாகிபு அவர்கள் பாசிப்பட்டணம் - நயினுமுகம்மது புலவ ரிவர்கள் அச்சிட்டு ரிஜிஸ்தர் செய்துகொண்டதி லிப்போது ஆயுளோடிருக்கும் ஷை மீராசாகிபவர்களுடைய உத்திரம் பெற்றுக்கொண்டு நான் அச்சிட்டமை யால் எங்களது மதியின்றி யச்சிடப்பட்டவர்களை ஷை பத்திரப்பிரகாரந் தாவாசெய்யப்படும்.

இங்ஙனம்

ஸ்ரீ தி - இ- பரசுராமமுதலியார்.

## இந்தப்புத்தகத்தி லடங்கிய

### கிஸ்ஸாக்களாவன.

முதலாவது. அவர்க்கமாகப்படைத்ததி ருடைய கிஸ்ஸா

க-வது. ஆதமலைகிஸ்ஸலாத்துடையகிஸ்ஸா.

உ-வது. சீது அலைகிஸ்ஸலாத்துடைய கிஸ்ஸா.

௩-வது. இதுரீசு அலைகிஸ்ஸலாத்துடைய கிஸ்ஸா.

௪-வது. காரூத்து மாறூத்தென்னு மிரண்டு மலக்குக ளுடைய கிஸ்ஸா.

ரு-வது. நூகு அலைகிஸ்ஸலாத்துடைய கிஸ்ஸா.

சு-வது. கூது அலைகிஸ்ஸலாத்துடைய கிஸ்ஸா.

எ-வது. சத்தாதுகட்டின இறமதாத்துல் இமாதென்கிற சுவர்க்கத்துடைய கிஸ்ஸா.

அ-வது. சாலிகு அலைகிஸ்ஸலாத்துடையகிஸ்ஸா.

கூ-வது. இபுறுகீம் அலைகிஸ்ஸலாத்துடைய கிஸ்ஸாமுத ற்கொண்டு-அவர்க ளிரண்டுகண்மணியான இசுமாயீல் அலைகிஸ்ஸலாத்துடைய கிஸ்ஸா இசுகாக்கு அலைகிஸ்ஸலாத்துடைய கிஸ்ஸா.

௰ - வது. யகுக்கூபு அலைகிஸ்ஸலாத்துடைய கிஸ்ஸா முதல் நுதலியவர்களினது புத்திரகிகாயணி யூசுபு அலைகிஸ்ஸலாமுடைய கிஸ்ஸாவோடு,

இந்த முதற்பாகம்.

(ஜெயமில்லா ஜிநருமா னித்தமே)

இ ஃ க,

# சிறப்புப்பாயிரம்.

[illegible] வாகுவாதிகாலகூடத்த ஆலா குரு ஆணிலை [illegible]ரை தமிழார்களுடைய கிவிலாக்களில் - அக்கலுடைய வர்த்துந்து உற்றியுண்டாயிற்றென்று திருவுளம் பற்றியிருப்பதில்-என் மனந்துணிவுற்று அவ்வாறுத்த ஆலாவைப் புகழ்ந்து நமி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்பேரில்-சலவாத்தும்-சலாமுஞ்சொன்னதின்பிறகு இந்நூலே அச்சியற்றிய வரலாறு சொல்லத்துடங்குகிறேன்.

இவண்முதத்தில் நின்றும் [illegible] [illegible]த்தினத்தில் நின்றும் [illegible]கின்றமுதத்தில் நின்றும் [illegible]ன்னினையும் - வர்ணிக்கக்கூடாத மாகத்தில் நின்றும் அரச [illegible]வையும் அவ்வரசைச்சுமந்த மலக்குகளையும்-அதைச்சூழ்ந்த [illegible]யும் - மனிதர், புலி,காற்கால் பிருகம்,பறவை,இவைகள் [illegible]தைக் கொண்டிருந்து ஆளுச்செய்யும்பொருட்டாய் - அவைகளின் சூத்தாக நாலுமலக்கையும்,மிகவுஞ் சிறகுகளையுடைய காற்றையும் - தன் [illegible]த்தை கல்குகள் அறியும் பொருட்டாய் அவையில் நின்றும் ரம்காவென்கிற முதற் பூமியும், [illegible]வென்கிற இரண்டாம் பூமியும், [illegible]யா வென்கிற மூன்றாம் பூமியும்; [illegible]யா வென்கிற நாலாம் பூமியும், முதலாவென்கிற ஐந்தாம் பூமியும், சிஜ்ஜீனென்கிற ஆறாம் பூமியும், அறியபத்தியென்கிற ஏழாம் பூமியும், இப்பூமிகளைபாதிருக்கும் பொருட்டாய் [illegible]த்திராகின்ற அவையில் நின்றும் [illegible] [illegible] முதலிய மலைகளையும், [illegible] [illegible]டொன்று சேர்ந்திருக்கும் பொருட்டாய்த் தயூலகு வென்கிற முதற் [illegible] [illegible]கிற இரண்டாங் கடலையும், அல்அசமு வென்கிற மூன்றாங் கடலையும், அல்மதுல் [illegible]கிற நாலாங்கடலையும், அல்முமாசென்கிற ஐந்தாங்கடலையும்-அசாக்கியென்கிற ஆறாங்கடலையும், அல்பாக்கி யென்கிற ஏழாங்கடலையும், இப்பூமியைத் தொட்டியத்திருக்கா நிற்கும் வல்லபத்தின் நி



மானத்திலுடைய மலக்கையும் - அம்மலக்கைக் [illegible] நிற்கும் [illegible]யாயிரத் தட்டலடங்கிற குழிகள் கடுவில் வாய்ந்தபசிய மாணிக்க காற்[illegible] ளன கல்லையும் - அக்கல்லை முதுகாலும், கொம்புகளாலும் தாங்கி நிற்கும் (சத) தலையும் (சமித) கண்ணும் (சமித) காதும் (சமித) மூக்கும் (சமித) வாயும் (சமித) நாவும் (சமித) காலுமுள்ள [illegible]தென்கிற மாட்டையும் அம்மாட்டை முதுகாலே தாங்கா நிற்கும் [illegible] [illegible]பட்ட பகுமூத் தென்கிற நாம மணிந்த [illegible] யவோர் மீனையும்-அம்மீனிறக ஏதுவான தண்ணீரையும் அத்தண்ணீரின் [illegible]க்காற்றையும் - அக்காற்றின்கீழ் ஆகாயத்தையும் - அவ்வாகாயத்தின்கீழ் இருளையும் - இகமாயியெ [illegible] மலக்கின் கார்மானத்தையுந் தறுபியா வென்கிற நாமத்தையும் பச[illegible]வென்கிற உருவத்தையும் அணிந்த முதல்வானத்தையும் மஞ்ஜாயியென்கிற மலக்கின் கார்மானத்தையும்-குடூதென்கிற நாமத்தையும், மாணிக்கமென்கிற வடிவத்தையும் அணிந்த இரண்டாம் வானத்தையும் - சகிதாயியென்கிற மலக்கின் கார்மானத்தையும், மாகூனென்கிற நாமத்தையும் புட்பராகமென்கிற வடிவத்தையும் அணிந்த மூன்றாம் வானத்தையும் - சல்சாயியென்கிற மலக்கின் கார்மானத்தையும்- றம்ஆவென்கிற நாமத்தையும் வெள்ளியென்கிற சொரூபத்தையும் அணிந்த நாலாம்வானத்தையும் கல்காயியென்கிறமலக்கின் கார்மானத்தையும்-றக்காவென்கிறநாமத்தையும், பொன்னென்கிற சுருபத்தையும் அணிந்த ஐந்தாம்வானத்தையும் - சம்ஹாயியென்கிறமலக்கின் கார்மானத்தையும்-றம்காவென்கிற நாமத்தையும்-வெண்முத்தென்கிறசாயலையும் அணிந்த ஆறாம் வானத்தையும், றம்பாயியென்கிற மலக்கின் கார்மானத்தையும் [illegible] நாமத்தையும் ஒளியென்கிறசுருபத்தையும் அணிந்த ஏழாம் வானத்தையும், இவ்வானங்கள் பிரகாசித்திருக்கும் பொருட்டாய் [illegible] அணியணியாகப் பதித்திலங்கப்பட்ட நட்சத்திர [illegible] சித்திரங்களையும், மலாயிக்கத்துகளைத் பக்கத்திற் சிருபத்துநாலாயிரஞ் சங்கிலியிட்டுக்கொண்டிழுக்கும்படி அவைகளுடைய ஒளியில்நின்றும் பொழுதையும், இராயுடைய ஒளியிலிருந்தும் நிலவையும்-உலகுயிர்களுயாவும் ஜீவித்திருக்கும் பொருட்டாய் தீ-செரியும் மேகமுதலிய-பூ- பொன்-மணி-மண்-கல்-[illegible] பொழியும், இவ்வேழு லோகங்களையும் வெண்முத்தினில் ஜென்னத்துல் தாறுல்ஜலாலையும் மாணிக்கத்தினால் தாறுல்ஸ

னிமையும்—மரகதத்தினுல் திருவாலவையும் - புட்பராகத்தினுல் — குல்லைநூயும் — வெள்ளியினுல்—கினைமையும் — பொன்னினுல் பிறருவகையும் — கஸ்தூரியினுல் கருமையும் - இலங்கப்பட்ட முத்தினுல் அதினையும் — பெரும்பாவம் செய்தவர்களுக் கிருப்பிடமாகிய ஜகன்னத்தையும் - புத்தியவணங்கினவர்களுக் கிருப்பிடமாகிய லைாவையும் யாஜுஜ மாஜூஜுகளுக் கிருப்பிடமாகிய குத்துமாவையும் — சைத்தான்களுக் கிருப்பிடமாகிய சகிறையும்—தொழுகை, ஸக்காத்தை விட்டவர்களுக் கிருப்பிடமாகிய சக்றையும்—எகூதி—நசாறு — மஜூஸி—முஷ்ரிக்கின் இவர்களுக் கிருப்பிடமாகிய ஜகீமையும் — முனபிக்கீன்களுக் கிருப்பிடமாகிய ஹாவியாவையும்—ஆகுல் அஃறென்கிற நாமமணிந்த [illegible]மார்களுக்கிடையில் ஆதுநி காலத்தாகிய ஜிபுரியில் அங்கிஸ்லைாத்தையும், இரணமழை முதலியவைகளுக்குக் கருத்தாகிய மீக்காயில் அலைஹிஸ்ஸலாத்தையும் குறித்தெனுங் குழலூத அதிகாரஸ்தராகிய இசுறாபீல் அலைஹிஸ்ஸலாத்தையும், சகலமான ஜீவர்களின் ஆவிக்கு அதிகாரஸ்தராகிய மலக்குல்மவுத் அலைஹிஸ்ஸலாத்தையும் - அவ்விடக்கூடாத மலைக்குத் [illegible] - பைத்துல்முகத்திஸ் [illegible] மருமுதா — வசீலத்தால் மறுலிப்பா, சிறுத்துல் [illegible] கொளென்னுஞ் சொர்க்கங்களையும், இன்ச ன் - ஜான்ஜின் - இப்லீசு முதலிய எல்லாவுயிர்களையும், மற்றெல்லா வஸ்துக்களையும் படைத்துக் காத்தழித்தக்கி, யாமத்துநாளையி லெல்லாரையுமெழுப்பிச் சப்புசப்பாகநிறுத்திக் கேள்வி கணக்குக்கேட்டு — நன்மைசெய்த அடியார்களை சுவர்க்கத்திலும்—தீமைசெய்த அடியார்களை நரகத்திலு மாக்கிவைப்பரும், வல்ல ஒருவர்க்கும், கரவும், முடிவும், பிறப்பிறப்பும், உவமையு [illegible]ம், விருப்பும் [illegible]ப்புமாகிய இவைகளிற் சுபாவமாகவுமயா வெறுப்புத்தையும்—சிறப்புமுடைய அல்லாஹு, ஜின்னென இறைவனாகிகொண்டாயன் - திவ்விய சித்தமான குவாஅரி [illegible] லத்தேனைச்சொரிந்த மணமலர்ச்சோலையில், குயிலினங்கள் கைத்தந்துப்பாடவும், கோமேதகம் — நீலம் - பவளம் - புட்பராகம்—மரகதம்—மாணிக்கம் - முத்து—வயிரம் — வைடூரியமென்னு நவரத்ந கசிதக்கிவானவைகளிடங்கள் - திந்திமென்று நடனமாடவும், ஆருகால், ஐவிதங்கையுடைய வண்டினங்கள்-ச-ரி-க-ம-ப-த-நி — வென்று முசகபுசாரிக வீணைவாசிக்கவும், நாகணவாய்ப்புள்ளு சவைத்துஞ், சஙமுஞ் செ



ல்லி மயூரநாடவும், பலவகைப் பறவைகள் - இவைக் கெலித்தி ஜையாகிய - தக்பீறு - தகுலீலு - தசுபீகு சொல்லி யோதவும், இவ்விதமான அலங்காரஞ் சேர்ந்த பூங்கோட்டமு, மணியின் சேர்ந்திய தடாகமுஞ் சூழ்ந்த மக்கமாநகரத்தில், மனுவுருதாரமாய்ப் பிறந்தும தினமா நகரத்தில் அரசியல்புரிந்த உயிர்களுக்குக் காரணமாகிய ஒளிகலந்து கஸ்தூரி மணம்வீசிய உடலின் பிராணமாகிய அழகுள்ளவிய பூரண மதிமுகமும், தேன் பொசிந்த செவ்வல்லி மலர்போற் குவிந்த கற்பூர சவாதை மணத்தவாயும், அருள் நிறைந்து கருணைகனிந்து ததும்பிய கண்டோரைப் பின்காணுகிற இருவிழியும், வில்போல் வளைந்த இருபுருவமும், மூன்றாம்பிறைச் சந்திரனை இகழ்ந்த நெற்றியும், மகாமேருவைப் [illegible]த்திருப்புறத்தும் பணைத்துத் திரண்டலாஞ்சனையாகிய முத்திரை தாங்குகின்ற புயமும், தெளிவுள்ளசுவர்க்கத்தாகிய அருளான்த மாலை புரளுகின்ற மார்பும்-க-ஸ்தூரிப்பு முதலிய கெழிந்தகள் யாதொன்று மெய்த்தாதுவத்து வெண்டாமரைபோலொத்த வெள்ளிய சரீரமும், பிரதியுபகாரத்தை நினையாதுகொடுக்குங் கொடையினையுடைய காரும்பிடிக்குங்கிறப்படிந்த இரண்டுகையும், காரீரகம் பாடியாடிய நடைகமல மொத்து விரிந்த [illegible] ரோயாதபாதமும், அருஷின்மேலுயர்ந்தருவிக் கடந்த கிரீடமணைந்த தலையும் மேகத்தாகிய குடையும், நிழல் சாய்கையில்லாத மேன்மையும், மாசுத்திரண்டவாதாரபக் காரணக்குருவாகிய நபிமுகம்மது-முஸ்தபா சல்லல்லாகு அலைஹிவசல்லம் அவர்களி—இருளாய் மலர்ந்தருளிய ஹதீதிலும் நின்று—வெளிப்பட்ட நிலவிடக்குறையாத பொற்கட்டியான (கசசுல்லன்பியாவென்று) வழங்காநின்ற நபிமார்களுடைய கிஸ்ஸாவானது—அறபு,பார்சி இந்திமுதலியபாஷைகளிற் [illegible]டிருப்பதினுலே இத்துஸ்தான் தேசத்திற் குட்கடையாக கருநாடக தேசத்திலும், சோழதேசத்திலும் வாழாநின்ற முகம்மதியான பிரவேசனில், அனேகருக்கு இந்நூலிற் சொல்லப்பட்ட நபிமார்களுடைய இறத்தையும், சொற்றையும் தெரியாததினுலே இந்நூலைத் தவணங்குந் தமிழுமென்னும் ஒருவித மதத்தவராற் செய்யப்பட்டிராநின்ற கதை காவியங்களைப் படித்துவீண்பொழுது போக்கிவிடுகிறார்கள்-அதையால் இதுக்கு குபிர், பிறஹத்து, ஹறாமுதலிய தீமையானவைகளைவிட்டுவிட்டுத் தொழுகை, நோன்பு முதலிய நன்மையானவைகளை யுவந்து செய்யும் பொருட்டாக—இந்நூலினைத் திரவிடபாஷையாலக்

இந்நூ லிவணுமென்று சன்னத்து ஜமாஅத்தையுடைய முசுலிமானவுட
ற்பிறந்தான் மார்களிற்-சிலகனவான்களாகிய சுந்சனர்கள் மிகுந்தவிருப்
பங்கொண்டு நாடோறு மதேவேலையாக நடந்துபோய்க் கேட்டுக்கொ
ண்ட தன்மையைப்பற்றியும்-தமக்கும் இகபரமிரண்டினும்- பிரயோசன
முண்டென்றெண்ணியும் - ஹிந்திராச்சியத்தில், தொண்டமண்டலபூமி
யில்பொன்னேரித்தாலுக்காவைச்சேர்ந்த பவளமாநகரத்தில் வசிக்குமு
சுலிமாகிய குடிகளுக்கு நேர்வழி காட்டுகின்ற முகம்மது ஜான்சாகிபுலெ
ப்பை ஆலி மவர்கள், முகம்மது சக்கிசாகிபவர்கள் குமாரராகிய அறபி
லக்கிய இலக்கண நூலையும் நஃகுவு-ஸறுபு-ஹதீது-பிக்குகு-தபுசீறு-மன்
திக்கு-மஆனி-அறூலு-பதீனி-அகாயக்கில்மாகி-புரூசு இவைமுதல் மற்
றக்-கித்தாபுகளையுமோதி, புணர்ந்து பிறர்க்குரைக்கும் வல்லபுருஷராகிய
காலி முகம்மது ஜான்சாகிபு லெப்பை-ஆலி மவர்களால் தமிழ்மொழி
பெயர்க்கப்பட் டிருந்தது போக மற்றதை அவ்வூர்-முகம்மது அலிலெப்
பை ஆலி மவர்களைக்கொண்டு தமிழ்மொழிபெயர்ந்தது முன்னர்-பாகிப்
பட்டணம் கவிஞர்முகம்மதுப் புலவரவர்களால் அச்சிட்டிருந்த பிரதிகளி
ல் அறபுச்சொற்கள் மிகவுங் கலந்திருந்தனவாகிய வைகள் அறபுபாஷையறி
யாதவர்கள் மயங்கிக்கேட்டுக்கொண்ட தினிமேல் ஆகாயற்பட்டணம் கண்
ணகுமது மருதூர்முகம்மதுப் புலவரவர்களாற் பரிசோதித்து திருவொற்
றியூர் - இரத்தினமுதலியார் குமாரர் பரசுராமமுதலியாரவர்கள்
பொருளுதவி முயற்சியால் தமது பரப்பிரமமுத்திராட்சரசாலையிற் பதி
ப்பிக்கப்பட்டது.

ஆகையால்-என தன்புள்ள சகோதரர்களே இப்புஸ்தகத்தை கனம்
பெற வுவந்து காணிக்கைகளைத்துக்-கையாட்சி கொள்பவர்க ளிங்ஙனம்
அச்சிலிட்ட முறைப்போல நோட்டமிட்டுக் கொண்டுவருகையில் வேண்
டாது கிடந்த ஒற்றுகளையும்-கோடினும்-உயிர்மெய்யினும்போந்தசுழி
களையும்-மேல்கீழ் விலங்குகளையும்-உயிர்மெய் எழுத்துகளையும்- வேண்
டியபோது-கூரிய கருவியினுடைவால் நீக்கிக்கோடலும்- அன்றியும்-
அவைகள் வேண்டுமிடங்களில் மையிற்றோய்ந்த தூரிகையினால் அமை
த்து மிவற்றைநன்குணர்ந்து உள்ளக்கருத்திற் பதியவைத்துக்கோடற்
குரியது முவர்களை மிகவும் விரும்புகின்றனம்.

இங்ஙனம்.

சென்னைப் புத்தகபரிபாலனத்தலைவர்

ஸ்ரீ கண்ணகுமது மருதூர் முகம்மதுப்புலவர்.

பிசுமில்லா ஹிற்றகுமா னிற்றகீம்.

இ ஃ அ.

அல்லாகு சுபுகானகூத்த ஆலா, திருவுள
மான, குறுஆன் ஷரீபின் வழியாயும், நம்மு
டைய நாயக முகம்மது சல்லல்லாகு அலை
கி வசல்லந் திருவாய்மலர்ந் தருளிய ஹதீது
ஷரீபின் வழியாயும் - வரிசையும் - சிறப்பும்
தகுதியுமுடைய கனம்பொருந்திய இமாம்க
ளாற் கோர்வை செய்யப்பட்டது.

கசசுல் லன்பியா வென்று வழங்காநின்ற
நபிமார்க ளுடைய கிஸ்ஸா.

—0—

பவழமாநகரம்-காலிமுகம்மது-ஜான்சாகிபு
லப்பை ஆலிம்சாகிபு அவர்களால்-அறபுப்
பாஷையி லிருந்ததைத் தமிழ்ப்பாஷையில்-
தருஜுமாச்செய் திருந்ததுபோக - மற்ற
தை-மேற்படிநகரம்-முகம்மது அலிலப்பை
ஆலிம்சாகிபு-அவர்களால் தருஜுமாச்செய்
யப் பட்டது.

—0—

அஊது பில்லாகி மினஷ்ஷைத்தா னிற்றஜீம்.

பிசுமில்லா ஹிற்றகுமா னிற்றகீம்.

அல்ஹம்து லில்லாகி - றப்பில் ஆலமீன்-
வல்ஆக்கிபத்துலில் முத்தக்கீன் - வஸ்ஸலா
த்து வஸ்ஸலாமு. அலாசெய்யிதுல் முர்ச
லீன் - முகம்மதின் - வஆலிகி வஅஸ்காபிகி-
அஜ்மயீன்.

—*—

பிசுமில்லா இற்றகுமா னிற்றகீம்.

இ ஃ அ.

# ஆதம் அலைகிஸ்ஸலாத்தைப் படைக்க முந்தித் துவர்க்கம் படைத்ததினுடைய கிஸ்ஸா.

எல்லாப்புகழும் அல்லாவுக்காக
இருக்கும்-கல்க்குகளை முளைப்பிக்கி
றதாரு முளைப்பித்தான்-அவர்கள் ம
வுத்தானதின் பின்னுலே அவர்களை
ஹயாத்தாக்கி வைத்தான் கிட்டுமை
யில்நின்றுங் கிட்டுமையில் அவர்க
ளைத் திருப்பி வைத்தான்-இரத்தக்
கட்டிக்குப் பின்பு சதைக் கட்டியா
க அவர்களைச் செய்தான்-பின்பு அ
வர்களில்நின்றுங் கேள்விகளையும்,
கடைக்கண்களையும் பிளந்தான்-அ
வர்களிலே சவ்வைச் சவ்வாய்கி வை
த்தான்-அவர்களிலே சதையை யு
ண்டாக்கி வைத்தான்-அவர்களிலே
இரத்தத்தை ஓலித் தோடவைத்
தான்-அவர்கள்மேலே தொலியை
நீளமாக்கி வைத்தான், அவர்களிலே
ஆவை யூதினன்-அவர்களிலே [illegible]
ங்குதலையும், உ[illegible]புதலையு, மு[illegible]
டாக்கினன் - அவர்கள் வயிற்றி[illegible]
பிரிவாகிய வஸ்துகளை யுண்டாக்கின
ன்-அவர்களுக்கு ஒருமித் திருக்கப்
[illegible]களை யுண்டா
க்கினன் - அவர்களிலே ஐந்து குறி
யை யுண்டாக்கினன் - அவர்களைத்

தொட்டும் பிசகுதலை நீக்கிப்போட்
டான்படைப்புடையகிரப்பத்தின்பி
ன்புகளை மாக்கப்பட்ட முற்ற[illegible]
யில்அவர்களைப் புறப்படுத்தி வைத்
தான்-அவர்கள்மேலே பாலை யிரை
மாக ஒலித்தோட வைத்தான்-
அவர்கள்மேலே கிருமத்தை கிரப்ப
மாக்கிவைத்தான் அந்த கிரப்பத்
தை அவர்கள் எத்திக்கொண்டு ஊ
க்கைப்பிந்தபோது அவர்களுக்கு
த்தாக்கத் துள்ளமட்டுக்கும் போத
த்துச் செய்கிறதைக் கட்டளை வி
தியாக்கி வைத்தான்-அவர்கள் கூத்
துகொண்டதை அவர்களுக்கேகம
த் காட்டிவைத்தான், பார்வையின்
மேலே அவர்களை யெழுப்பி வைத்
தான்-தாரணை யிடுகிறதையவர்களு
க்குக் காண்பிவித்தான்-அல்லாகுத்
த ஆலாவுடைய-சலவா[illegible]ம், சலா
முமாகிறது அவனுடைய படைப்
புகளில் மெத்தவும் எத்தமானவரா
ய்-அவர்களில் மெத்தவும் வரிசை
யானவராய் - நபிமார்களுக் கெல்லா
ம் ஒடுக்கத்து நபியுமாய், அப்துல்
லாவுடைய மகனுருமாய், இருந்திபி



னும் புகழைப் பெற்றுக்கொண்ட
வுள்ளலான நபிமுகம்மது சல்லல்லா
கு அலைகிவசல்லம்பேரினும்- அவர்
ள் கிளையார்பேரினும்-அவர்கள்தோ
முன்மார் பேரினுங் கியாமத்துடை
ய நாள்வரைக்கு முண்டாவதாகவும்.
ஆமீன்யாறப்பல் ஆலமீன்

## இதாவது கித்தாபு.

இதில் வானத்தைப் படைத்த
தில் நின்றும், பூமியைப் படைத்த
தில் நின்றும் ஜின்களையும் இன்சா
ன்களையும் படைத்ததில் நின்றும்,
நபிமார்களுடைய [illegible]ளங்களில்நின்
றும், எனக்கு வெளியாச்சுதே அ
ந்தக் கதறின்படிக்கு அவர்களுடை
யஹால்களின் அவக்கங்களில் நின்று
ம், அவர்கள் மவுத்தளவும் நடக்கப்
பட்ட செய்திகள்-காரணங்கள்- அ
திஜயங்களில் நின்றும் - துவக்கத்தி
லுண்டாக்கப்பட்ட ஆகமங்களைக்கூ
ட்டிவைத்தேன்-என்னுடைய தே
ட்டாவில் நல்லுதவி அல்லாவைக்
கொண் டாகவிருக்கும்-அவனுயர்த்
தி யானவன்-வலுப்பமானவன்-சல
வாத்தும், சலாமுமாகிறது நமக்கெ
ல்லாம் நாயகமான முகம்மதுநபி ச
ல்லல்லாகு அலைகிவசல்லம் பேரினு
ம் அவர்களுடைய குடும்பத்தார்
பேரினும் அவர்கள் அசுகாபிகள்
[illegible] முண்டாவதாகவும்.—ஆமீ
ன்யாறப்பில் ஆலமீன்.

## இதாவது, லவ்ஹையுங் கலத்தையும், அறுசையும், குறுசையுந், தண்ணீரையும், படைத்ததிற் பேசுகிற பாபா யிருக்கும்.

—0—

இபுநு அப்பாசு றலியல்லாகு
அன்குசொல்லுகிறார் - அல்லாகுத்த
ஆலா படைத்த படைப்புகளில் மு
ந்தினதாவது-லவ்குல் மகுபூலு - எ
ன்கிறதா யிருக்கும்- (அதினுடைய
பொருள்)பேணப்பட்டப்லகையெ
ன்கிறது - உண்டானகாரியமும், உ
ண்டாகப்போகிற காரியமும்-இவை
களில்நின்றும்எழுதினதைக்கொண்
டு அல்லாகுத்தஆலா அந்தலவ்ஹை
ப்பேணிக்கொண்டான், அதிலுள்ள
தயில்மை அல்லாவையொழிய மற்
றொருவரு மறியமாட்டார்கள்- வெ
ளுத்த முத்தில்நின்றும் அந்த லவ்
ஹைப் படைத்தான்- அதினுடைய
இரண்டுகரையும் சிவந்த மாணிக்கமா
யிருக்கும்-அதினுடைய பெருப்பம்
வர்ணிக்கக் கூடாது- இரத்தினத்தில்
நின்றும் அதற்கு ஒரு கலத்தைப்
படைத்தான் - அதினுடைய நீளம்
(நூ) வருஷத் தடிப்பாடாயிருக்கு
ம், நாவு பிளக்கப் பட்டதா யிருக்கு
ம், அதில் ஒளிவு ஒலித்தோடும்-பி
ன்பு எழுதென்று ஒருசத்தம் கூப்
பிடப் பட்டது-அந்தச் சத்தத்தி னு
டைய அமலிப்பில்நின்றும் அன்றும்
பிறக்குமென்கிற மலக்குத், தகபீரு
செய்கிறதுபோலே தகபீருசெய்து
கொண்டு, அந்த லவ்கில் நடப்பதை

ஆலா அறுவைை ஒரு இரத்தினத்தி
ல் நின்றும், குறுசைவேறொரு இர
த்தினத்தில் நின்றும் படைத்தான்-
வசுபுறலியல்லாகு அன்கு சொல்லு
கிறார். மலாயிக்கத்துகள் அவர்களு
டைய தோட்புயத்தின்பேரில் அறு
வைைச் சுமந்துகொண் டிருக்கிறார்க
ள்-அபூதற்று றலியல்லாகு அன்கு
சொல்லுகிறார். நபிசல்லல்லாகு அ
லைகிவசல்லம் திருவுளமானார்கள் -
குறுசினுடைய பெருப்பமாகிறது -
எழுவானத்தையும் அதி லெறியப்
பட்டாலு மைதான் வெளியில் ஒரு
வளையத்தை யெறிப்பட்டதுபோ
லாக விருக்குமென்று,

இதாவது அறுவைைச் சூழ்
ந்த பாம்பைப் படைத்தகி
ற் பேசுகிறபாபாயிருக்கும்,

பின்பு அல்லாகுத்தஆலா அறு
வைைச் சூழ்ந்துகொண் டிருக்கும்ப
டி ஒருபாம்பைப் படைத்தான்-அ
தினுடைய தலைவெளுத்த முத்தி
னுலும் அதினுடைய கன்னம்பொ
ன்னினுலும்-அதினுடைய இரண்டு
கண்ணும் மாணிக்கத்தினுலும், ப
டைத்தான்-அதினுடைய வுடம்பு
த்தை அல்லாவையொழிய ஒருவ
ரு மறிய மாட்டார்கள்-இரத்தினத்
துடைய வகைகளினுலும், அதற்
கு நாற்பதினயிரஞ் சிறகுண்டும் -
அந்தச் சிறகுகளிலுண்டான, இற
குகளில் நின்றும், ஒவ்வொரு இற
கு அடங்க லுடைய இடத்தில்-ஒ
வ்வொரு மலக்குகள் அவர்கள் கை
யில் இரத்தினத்தினுல் வல்லையம்
பிடித்தவர்களாக நின்றுகொண் டிரு
க்கின்றார்கள். அவர்களடங்கலும், த
சுபிகு செய்கிறார்கள்.—அந்தப் பா
ம்பு தசுபிகு செய்தால், அந்தமலக்
குக ளுடைய-தசுபீகின் பேரில் மி
கைக்கும்-வாயைத் திறந்தால், வா
னமும், பூமியுமிலங்கும்-இபுனு அ
ப்பாசு றலியல்லாகு அன்கு சொல்
லுகிறார். பாம்பு தசுபிகு யெதுவா
ய்ச் செய்யாமற்போனால் அதினு
டைய சத்தத்தினது வுறுப்பத்தின்
பேரில் கல்கு ளடங்கலும் அடி
த்து விழுவார்கள் - மிகுறுஜு இர
வையில் நபிசல்லல்லாகு அலைகிவ
சல்லம்பேரில் சலாமும் சொல்லி
கைது அடங்கலும், உங்களிலும்,
உங்கள் உம்மத்துகளிலுமாக விரு
க்குமென்று சொல்லிறது

இதாவது பூமிகளையும், மலை
களையுங், கடல்களையும் துவ
ர்க்கம் படைத்ததிலும், இ
வைகளுடையபேர்களிலும்
பேசுகிறபாபாயிருக்கும்.

கருபு றலியல்லாகு அன்கு சொ
ல்லுகிறார் - அல்லாகுத்த ஆலா
பூமிகளைப் படைக்க நாடினபொழு
து-தண்ணிரை யடிக்கச் சொல்லிக்
காற்றையேவினான் - பின்பு காற்று
அந்தத் தண் ணிரிற் திரிகைத்



திரி யடித்தது அந்தத் தண்ணீர்
நுரைம்பி அதி னுடைய அலைக
ளுயர்ந்து நுரையுண்டாகி அதினு
டைய புகாறுகிளம்பியுயர்ந்தது அப்
போது நுரையை யுறைந்து கொள்
ளும்படிக் கேவினான் - அந்த நுரை
புலர்ந்து போய்விட்டது அதின்பே
ரிற் பூமியைப்படைத்துத் தண்ணீ
ருடைய முதுகின்பேரில் விரித்தா
ன்-அதை யிரண்டுநாளையிற் படை
த்தான்-பின்பு அலைகளை ஒடுங்கச்
சொல்லி யேவினான்-அது ஒடுங்கிற்
று அதில்நின்றும்,மலைகளைப் படை
த்தான்-அந்தமலைகளைப் பூமிகளுக்
கு முளைகளாக்கினான்-அல்லாகுத்த
ஆலா திருவுளமானான்-பூமி,மலை
களை முளைகளாக்காமற் போனாற்
பூமி அதை யுடையவர்க ளுடனே
தரிபட் டிருக்கமாட்டாது இந்தம
லைக ளுடைய வேர்களாகிறது - அ
னியா வென்னும் பிரபஞ்சத்தைச்
சூழ்ந்த காபுமலையுடைய வேரைச்
சேர்ந்துகொண் டிருக்கும் - பின்பு
அந்த காபுமலைக்குப் பின்னாலே எ
ழுகடல்களைப் படைத்தான்-முந்தி
ன கடலாகிறது-துனியாவைச் சூழ்
ந்துகொண் டிருக்கும்- அதினுடை
ய பேர் தபுலுகு - அதற்குப் பின்
னாலே ஒருகடலைப் படைத்தான் -
அதினுடைய பேர்-கைசு-அதற்குப்
பின்னாலே ஒரு கடலைப் படைத்
தான்-அதினுடைய பேர்-அல்அசம்
மு - அதற்குப் பின்னாலே ஒருகட
லைப்படைத்தான் - அதினுடைய
பேர்-அல்மதுலமு-அதற்குப் பின்
னாலே ஒரு கடலைப் படைத்தான் -
அதினுடையபேர் அல்முபாசு-அ
தற்குப் பின்னாலே ஒரு கடலைப்ப
டைத்தான்-அதினுடைய பேர் அ
ஸ்ஸாக்கினு-அதற்குப்பின்னாலே ஒ
ரு கடலைப்படைத்தான் - அதினு
டையபேர்-அல்பாகி,இந்தக்கடல் எ
ழுக்கும் கடைசிக்கடலா யிருக்கும்-
அதில்நின்றும் ஒவ்வொருகடல் பி
ந்தின கடலைச் சூழ்ந்துகொண் டிரு
க்கும்- பூமியுடைய முகத்திலிருக்
கிறகடலாகிறது-அந்தக்கடலுக்குஅ
ருவியுடைய அலத்தைக் கொண்டா
க விருக்கும் வசுபுறலியல்லாகு அ
ன்கு சொல்லுகிறார் அல்லாகுத்த
ஆலா இந்தக் கடல்களையும்-இதிலி
ருக்கப்பட்ட வஸ்துக்களையும் அ
ந்தக்கடல்களுடைய கரையி லிருக்
கப்பட்ட வஸ்துகளையும் மூன்றுவ
து நாளையிற் படைத்தான் - பின்பு
அல்லாகுத்தஆலா நாலவது நாளை
யில் இரைகளைப் படைத்து அ
தைக் கட்டளையிட்டான்-இபுனு அ
ப்பாசு றலியல்லாகு அன்கு சொல்
லுகிறார்-பூமியாகிறது - எழாகவிருக்
கும்,அதிலே(முந்தினபூமியாகிறது)
றம்காவென்கிற பேருடையதா யி
ருக்கும்-அதின்கீழே மலட்டுக்காற்
று உண்டா யிருக்கிறது, அந்தக்
காற்றை எழுபதினயிரம் மூக்கணா
ங் கயிற்றைக்கொண்டு கட்டப்பட்
டது-மூக்கணாங்கயிறு அடங்கலின்
பேரில் எழுபதினயிரம், மலக்குக

ளிருக்கிறார்கள் - அந்தக் காற்றைக்
கொண்டு அல்லாகுத்தஆலா, ஆது
டைய கவுமுகளை கலாக்காக்கி விட்
டான்.

அந்தப்பூமியில் குடியிருக்கிற க
வுமுகளுக்கு, அல்பறுசமு என்று
சொல்லப்படும் - அவர்கள் பாவஞ்
செய்தால் வேதனை செய்யப்படும்,
நன்மைசெய்தால், தவாபு கொடுக்க
ப்படும். (இரண்டாவது) பூமி-குல்
தாவென்று பேர் சொல்லப்படும்.
அந்நரகத் துடையவர்களுக்கு அ
தாபுண்டாக வகைக ளுண்டா யிருக்
கின்றன, அதிற் குடியிருக்கிறவர்க
ள்-லன்னு என்று சொல்லப்படும்,
அவர்களுடைய வஜீனம், அவர்க
ளுடைய சதையும், அவர்களுடைய
குடிப்பு அவர்களுடைய இரத்தமு
மா யிருக்கும்- (மூன்றாவது) பூமி-
அறுமா என்றுபேர் சொல்லப்படு
ம், அதிலே கறுத்தக் கோவேறு
கழுதைபோலே நட்டுவாக் காலிக
ளுண்டா யிருக்கின்றன-அவைகளு
க்கு வல்லியத்தைப்போலே வால்க
ளுண்டாயிருக்கின்றன- அவைகளி
லொவ்வோர்-வால்சட்டும்- (எ௰அ)
கொடுக் குண்டாயிருக்கின்றன, அ
வைகளி லொவ்வோர்-கொடுக்கிலு
ம், நஞ்சில்நின்றும்-(௲௮) ஜாடி
யுண்டாயிருக்கின்றன -அவைகளில்
ஒரு ஜாடியைப் பூமியை யுடைய
வர்கள்-மேலே வைக்கப் பட்டால்-
அவர்க ளடங்கலும் மவுத்தாவார்க
ள், அதிற் குடியிருக் கிறவர்களுக்
குக்-கமகனென்றுபேர் சொல்லப்படு
ம் - அவர்களுடைய, வஜீனமும்,
குடிப்புயாவது, கொழுப்பும்,மழை
த் தண்ணீருமாக விருக்கும்-(நாலா
வது) பூமி-அறுயாளென்று பேர்சொ
ல்லப்படும், அந்தப் பூமியில் நரகத்
துடையவர்களுக்கு மலைகளைப்போ
லே பாம்புகளிருக்கின்றன-அவைக
ளொவ் வொரு பாம் புக்கும், ஈத்
தமரத்தி னுடைய நீளத் தைப்
போலே வாலுண்டா யிருக்கின்றன
அவைகளுடைய வால்சளைக்கொண்
டும்வலுப்பமான மலைகளை யடித்தா
ல்அம்மலைகள் தூள்தூளாய்ப்போய்
விடும்-அதிற்குடி யிருக்கிறவர்களுக்
கு,ஜல்சு என்று பேர்சொல்லப்படு
ம். அந்தக் கவுமுகளுக்குக் கண்க
ளுண்டா யிருக்கின்றன- கால்களில்
லை-காலுக் குருவிகளுடையபிறகு
களைப்போலேபிறகுகளுமுண்டாயி
ருக்கின்றன- அவர்கள்கிட்டமேய
யல்லாமல் மவுத்தாக மாட்டார்க
ள்- (ஐந்தாம்) பூமி- முல்தாளென்று
பேர்சொல்லப்படும்-அந்தப்பூமியிற்
கெந்தகக் கல்லுகள் காபிருடைய
கண்மேலே கொளுவியிருக்கும்- அ
ந்தக்கல் இலங்கினால் அவனுடைய
நெஞ்சின்மே லெரியும் நெருப்புக்க
ங்கி அவன் முகத்தின்மே லுண்டா
யிருக்கும்-அது அல்லாகுத்த ஆலா
வுடைய சொல்லா யிருக்கும் யஹு
னி அந்த நரகத்துடைய நெருப்பா
கிறது மனிதர்களுங், கல்லுகளு
மாக விருக்கும்-அதைத் காபிரான



கவுமுகளுக்குத் சங்கரிக்கப் பட்ட
து- இன்னும் அல்லாகுத்தஆலா வு
டையசொல் - யகுனி அவர்களு
டைய முகங்களை நெருப்புப் பொ
திந்துகொள்ளும்- அந்தபூமியிற் கு
டியிருக்கிற கவுமுகளுக்கு- குல்லத்
தென்று பேர்சொல்லப்படும்- அவ
ர்களுடைய மிருகத்தை மட்டிடக்
கூடாது - அவர்களிற் சிறிதுபேர்,
சிறிது பேர்களைத் தின்பார்கள்-
(ஆறுவது) பூமி-சிஜ்ஜீன்-அந்தப்பூ
மியில் நரகத் துடையவர் களின் ப
ட்டோலைக ளுண்டா யிருக்கும், அ
வர்களுடைய அமல் - தனுமையா
யிருக்கும்- அது அல்லாகுத்தஆலா
வுடையசொல்லா யிருக்கும்யகுனி
அந்தப்பூமியிற்குடியிருக்கிற கவுமு
களுக்கு- குதாத்தென்று பேர்சொ
ல்லப்படும்-அவர்கள் பார்வையுடை
ளூதத்தின்மே லிருப்பார்கள்- அல்
லாகுத்தஆலா கூத்த ஆலாவை ஹ
க்கான வணக்கமாக வணங்குவார்க
ள்-(ஏழாம்) பூமி-அஜியபத்து என்
று பேர்சொல்லப்படும்- அந்தப் பூ
மியில், இபுலீசு லகுனத்துல்லா கு
டியிருக்கின்றான்- அதிற் குடியிருக்
கிறகவுமுகளுக்கு- சயூமென்றுபேர்
சொல்லப்படும்- அதாவது- ஷூதான்
கிளாறன் ஆகவிருக்கும் - ஷூதான்-
கிளாறுகிறது, சிறுத்தைப்புலிக்கும்,
ஓநாய்க்கும்,ஜின்னு மனிதருக்குஞ்
சொல்லப்படும் - அவர்களுக்குப்பு
லிகளுடைய நகங்களைப்போல் நக
ங்க ளுண்டா யிருக்கும் - யாஜூ
ஜூ, மாஜூஜூபேரில் அவர்களைச்
சாட்டப்படும் - அவர்கள் கைமே
லே- யாஜூஜூ மாஜூஜூ கலாக்
காவார்கள்-வகுபுறலியல்லாகு அன்
குசொல்லுகிறார்.

அந்தப்பூமியை யுடையவர்களை
க்கொண்டு - பூமி கப்பலைப்போ
லே அலைமோதும்- அல்லாகுத்த ஆ
லா அந்தப்பூமியனவில் கூவத்துடை
யதீர்மானத்திலும்-வல்லபத்துடை
ய தீர்மானத்திலும் - ஒருமலக்கை
யனுப்பிவைத்து அந்தப்பூமியைச்
சுமக்கச்சொல்லி யேவினான்- அந்
தமலக்கு அந்தபூமியின் கீழே புகு
ந்து அவர்தோள்கட்டின்மேற் சு
மந்துகொண்டார்-மஹ்ரிபு ராச்சிய
த்தின்பேரில் ஒருகையும், மஷ்ரிக்கு
ராச்சியத்தின்பேரில் ஒருகையு மா
கப் புறப்படவைத்து பூமியுடைய
அருகின்மேலே பிடித்துக்கொண்டு
நின்றார்- அவருடைய இரண்டு கா
லுந் தரிபா டில்லாம லிருந்தது- பி
ன்பு அல்லாகுத்த ஆலா பசுமையா
ன மாணிக்கத்தினாலே நாலு சதுர
முள்ள ஒருகல்லைப் படைத்தான்-
அந்தக் கல்லுக்கு நடுவே-எழாயிரங்
குழியுண்டா யிருக்கின்றன அவை
களிலொவ்வொரு குழியடங்கலிலு
ம் ஒவ்வொரு கடலுண்டா யிருக்கி
ன்றன [illegible]
ப்பை அல்லாகுத்த ஆலாவைத்தவி
ர-வேறே யொருவரு மறிய மாட்
டார்கள், பின்பு அல்லாகுத்த ஆலா
மலக்குகளுடைய இரண்டு காலின்

கீழே புகுதச்சொல்லி அந்தக் கல்லையேவினான்- அந்தக் கற்புகுந்தது மலக்குடையகால் அந்தக் கல்லின்பேரிற் பட்டது, பின்பு கல்லுக்குத் தரிபடுகிறதற்கு இடமில்லாதிருந்தது.

அல்லாகுத்தஆலா வலுப்ப மானவொருமாட்டைப் படைத்தான் அதற்கு நாலாயிரந்தலை யுண்டாயிருக்கின்றன- இரண்டு தலைக்கிடையில் (௫௰) வருஷத் தடிப்பாடுத் தூரமுண்டும் [illegible]பதினாயிரங் கண்ணும்- நாற்பதினாயிரங்காதும்- நாற்பதினாயிர மூக்கும் நாற்பதினாயிரம் வாயும்- நாற்பதினாயிரம் நாவும்- நாற்பதினாயிரங் [illegible]டும் இரண்டொருகாலுக்கிடையில் (௫) வருஷத் தடிப்பாட்டுத் தூரமுண்டு- பின்பு அல்லாகுத்தஆலா மாட்டை யேவினான்- அந்தமாடு கல்லின் கிழாலே புகுந்தது அதினுடைய முதுகின் பேரிலுங், கொம்பின்பேரிலுஞ் சுமந்துகொண்டது- அந்த மாட்டுடைய பேர், ஹுறுதென்று சொல்லப்படும்- பின்பு மாட்டுக்குத் தரிபடுந் தலமில்லா திருந்தது- அல்லாகுத்தஆலா அதின்கீழே வலுப்பமான ஒரு மீனைப்படைத்தான்- அதினுடைய வல்லபத்தைப் பார்க்கிறதற்கு ஒருவராலேயுஞ் சக்தியில்லை - அதினுடைய [illegible] பிலங்கின்றன- அதைப் பார்க்கவும் ஒருவருக்குஞ் சக்தியில்லை- சடைடங்கலேயும்- அதினுடைய இரண்டு மூக்கில் வைக்கப்பட்டால் மைதானில் ஒரு சடுகு வைத்ததுபோலாக விருக்குமென்று சொல்லப்பட்டது.

அல்லாகுத்தஆலா மீனை யேவினான் அந்தமீன் மாட்டினுடைய கால்களின் கீழே புகுந்தது- அந்தமாடு மீனுடைய முதுகின்பேரிற் தரிபட்டது- அதினுடையபேர்- பகுமூத்து- பின்பு மீன் தரிபடுந் தலத்தைத் தண்ணீ ராக்கினான்- தண்ணீரின் கிழாலே காற்றை யாக்கினான்- காற்றின் கிழாலே ஆகாசத்தை யாக்கினான்- ஆகாசத்தின் கிழாலே யிருளை யாக்கினான்- பூமிப் படப்புகளும் மலைக்குடைய முதுகின் பேரி லிருக்கின்றன - மலக்கு கல்லின்மேல் இருக்கின்றார். கல்லு மாட்டின்மேல் இருக்கின்றது- மாடு-மீன்மேல் இருக்கின்றது-மீன்-தண்ணீர்மேல் இருக்கின்றது- தண்ணீர்- ஆகாசத்தின்மேல் இருக்கின்றது- ஆகாசம்-இருளின்மேல் இருக்கின்றது-இருளின் கீழிருக்கும் வஸ்துவை யறிகிறதந்தொட்டம் அதுக்குசளுடைய இல்மு முறிந்துபோய் விட்டது.

பின்பு அல்லாகுத்தஆலா- அக்கிலைப் படைத்தான்-பின்பு முன்னேக் கென்றான்- முன்னேக்கிவந்தது பின்பு பின்னறித்துப் போவென்று திருவுளமானான் பின்னறித்தது அல்லாகுத்தஆலா திருவுள மானான்- என்னுடைய இஜ்ஜத்தினாலே, வல்லபத்தினாலே உன்னைக்காண என்னிடத்தில் மெத்தவு முவப்பான



படைப்பைநான் படைக்க வில்லை- உன்னைக்கொண்டு நான்பிடிப்பேன், உன்னைக்கொண்டு கொடுப்பேன்,உன்னைக்கொண்டு தவாபுசெய்வேன், உன்னைக் கொண்டு வேதனை செய்வேன்- நபிசல்லல்லாகு அலைகி வசல்லம் திருவுள மானார்கள் - யாதாமொருவன் அவன் தற்செயற் குணமும், அவனுடைய நற்கருத்தும், அக்கிலாகவிருக்குமானால் - அவனுடைய மிருந்த பாவத்தைப் பொறுக்கப்படும் - அக்கிலுடைய வரிசை பாக்கியா யிருக்கும் - அதைக் [illegible]திற்புகுதுவான்.

இன்னும் திருவுளமானார்கள் அக்கிலுள்ளவன்- உண்மையானவன்- வாய்மூடுதல்— தீனமானவன்— அவனுடைய தீங்கை விட்டு, மனிதர்கள் சுகமத்தாவார்கள் — ஆகிலான வனை வேதனை செய்யப் படாதே- அந்த முன்றைக்கொண்டு ஆகிலான வனை வேதனை செய்யப்படும்- அக்குலில்லாத மூடனாகிறவன் நாவைக்கொண்டு பொய்பேசுகிறவன்— வீணான காரியத்தில் முங்கிறவன்—அவன் உதாசிறவனாக விருந்தாலு மொக்கும்- எழுதுகிறவனானாலு மொக்கும்-இன்னும் திருவுளமானார்கள்- அக்குலைக்கான மிகுந்தவரிசையைக்கொண்டு ஒருவன் ஜீனத்தாகவில்லை- மொட்டித் தனத்தைக் காணத்தகுமையான வஸ்து ஒன்றுமில்லை அலிகுறைறு றலியல்லாகு அன்கு பேசிவருகிறார்- துனியாவில் ஒருவனுடைய சலிப்பு நீளமாச்சு தானால் அவன் ஆகிறத்திலேசந்தோஷமாவான்- துனியாவிலேசந்தோஷமானவன் ஆகிறத்திலே சலிப்பாவான்-சுவாத்தி யத்தினுடைய வரிசையல்லா ததைக்கொண்டு ஒருவன் ஒருவன்பேரில் வரிசை யானவனென்று தன்னை யெண்ணுகிறவன் மூடனாயிருப்பான் - உலமாக்களிற்சிலர் பேசிவருகிறார்கள்- மகனுக்கு வசியத்துச்செய்கிறவர்களாகச் சொல்லுகிறார்கள்-மகனே அக்கிலைக்கான அழகானவஸ்துவொன்றுமில்லை— அக்குலுக்குஅறிவு நிறைவாகிறது ஒருவன் அறிவு படைத்தானானால்— அவனுக்கு அமர்தி நிறையாகும்-அமர்தியானவனுக்கு உண்மைநிறைவாகும்- உண்மையானவனுக்கு அமல் நிறைவாகும் — அமலுடையவனுக்குப் பேணுதல் நிறைவாகும்— பேணுதலை யுடையவனுக்கு எகின் நிறைவாகும்-எகினை யுடையவனுக்குக் கிருபைநிறைவாகும் - கிருபையுடையவனுக்கு அதபு நிறைவாகும்- [illegible]ன்னுடைய மகனே இந்தக் காரியத்தின்மேலே நீ யிருந்தால் மனிதர்களுடைய உல[illegible]ள் பேரில் மேலாய்பாமாவாய்.

வானத்தைப் படைத்ததிலும், அதிற் குடியிருக்கிறவர்களைப் படைத்ததிலும், மலாயிக்கத்துகளைப் படைத்ததிலும், பொழுதையுங் கடல்களையும் படைத்ததிலும், பேசுகிற பாபாயிருக்கும்.

—0—

இபுனு அப்பாசு றலி யல்லாகு அன்குசொல்லுகிறார்- அல்லாகுசுபுகானகூத்தஆலா—தண்ணிரிலுயர்ந்த கடலை ஆகாசத் தளவி லுயரும்படியே விளன்—அது உயர்ந்தது. வானங்களை இரண்டுநாளையிலே படைத்தான்—அதில் தாழ்ந்த வானத்தைத் தாழும்படியே விளன்— அது தாழ்ந்தது—பூமியை இரண்டுநாளையிலே படைத்தான்.

அது ஒரு பூமியும் ஒருவானமுமா யிருந்தது - இந்த இரண்டுக் கிடையி லிருக்கிறதை ஆறுநாளையிலேபடைத்தான். பின்பு வானமும் பூமியும் அல்லாகுத்த ஆலாவுடைய பயங்கரத்தில் நின்றும் நீங்கிப் போய்விட்டது— ஏழுவானமுமேழு பூமியுமாகி விட்டது — முதலினாவது வானம் மாகத்தில் நின்றுமா யிருக்கும்-அதினுடையபேராகிறது- தறுபீயாவா யிருக்கும்— அதிற் குடியிருக்கிற மலக்குக ளாகிறவர்கள் மாட்டுடைய ரூபத்தின்மே லிருப்பார்கள். அவர்களைக் கொண்டு அல்லாகுத்த ஆலா ஒருமலக்கைச் சாட்டியிருக்கிறான்-அவருடையபேர்- இசுமாயீல்,அவர்களையவர் காத்துக்கொண் டிருக்கிறவராயிருப்பார்.

இரண்டாம் வானம், சிவந்த இரத்தினத்தினாற்படையுண்டா யிருக்கும்— அதினுடையபேர்—குபூதா அதிற் குடியிருக்கிற மலக்குகள் பருந்துடைய ரூபத்தாக விருப்பார்கள்—அவர்களைக்கொண்டு சாட்டப்பட்ட மலக்குடைய பேர் [illegible]ஜாயீல் அவர் அவர்களைக் காத்துக்கொண் டிருப்பார்.

மூன்றாம்வானம் மஞ்சள் நிறஇரத்தினமா யிருக்கும்— அதினுடையபேர்-மாகூன்— அதிற்குடியிருக்கிற மலக்குகள் எருதுடைய ரூபத்தாக விருப்பார்கள் — அவர்களைக் கொண்டு சாட்டப்பட்ட மலக்குடையபேர்- சகிதாயீல்—அவர்—அவர்களைக் காத்துக்கொண் டிருப்பார்.

நாலாம் வானம்— வெள்ளியினின்றுமா யிருக்கும் - அதினுடையபேர்-றம்லூன்- அதிற்குடியிருக்கிற மலக்குகளாகிறவர்கள்— குதிரையுடைய ரூபந்தாக விருப்பார்கள்-அவர்களைக்கொண்டு சாட்டப் பட்ட மலக்குடையபேர் சல்சாயீல்-அவர் அவர்களைக் காத்துக்கொண் டிருப்பார்.



ஐந்தாம் வானம் பொன்னாற் படையுண்டாயிருக்கும்—அதினுடையபேர்,றத்கா— அதில், குடியிருக்கிற மலக்குக ளாகிறவர்கள் கொடியாட்டுடைய, ரூபத்தாக விருப்பார்கள்-அவர்களைக்கொண்டு சாட்டப்பட்டமலக்குடையபேர்- கல்காயீல்- அவர் அவர்களைக் காத்துக் கொண் டிருப்பார்.

ஆறாம் வானம் வெண் முத்தினாற் படையுண்டாயிருக்கும் — அதினுடைய பேராகிறது- றம்கா—அதிற் குடியிருக்கிற மலக்குகள் இரு[illegible]ரூபத்தாக விருப்பார்கள்— அவர்களைக்கொண்டு சாட்டப்பட்ட மலக்குடையபேர்-சம்ஆயீல்— அவர் அவர்களைக் காத்துக் கொண் டிருப்பார்.

[illegible] வானம்— பிரகாசிக்கானின்ற ஒளிவினாற் படையுண்டா யிருக்கும்— அதினுடையபேர்— அல்யா— அதிற் குடியிருக்கிற மலக்குகள் ஆதமுடைய பிள்ளைகளின் ரூபத்தாக விருப்பார்கள் — அவர்களைக் கொண்டு சாட்டப் பட்ட மலக்குடையபேர்-றம்யாயீல்—அவர் அவர்களைக்காத்துக்கொண் டிருப்பார்.

கருபுறலியல்லாகு அன்கு சொல்லுகிறார்— இந்தமலக்குகள், தசுபீகு செய்கிறதைவிட்டும், நிலையிலே- இருப்பிலே, றுக்கூவிலே, இபாதத்துச்செய்கிறதை விட்டும் ஒருபோதும் பற்றுவத [illegible]ட்டார்கள்— அப் துல்லா இபுனுசலாம் சொல்லுகிறார்- அந்த மலக்குக ளாகிறவர்கள்—கற்றுபி யூன்களாக விருப்பார்கள்- அவர்களிற் சிறிதுபேர்கள்-சப்பு சப்பாகநின்று வணங்குவார்கள்—சிறிதுபேர்கள் முழங்காலிற் படியிட்டவர்களாக வணங்குவார்கள் சிறிதுபேர்கள் ரூழ்ந்துகொண்டு வணங்குவார்கள், சிறிதுபேர்கள் - சூஜூது செய்வார்கள்- சிறிதுபேர்-றுக்கூகு செய்வார்கள்- அவர்களில் நின்றும் சிறிது மலக்குகள் நரகத்துடைய மலைகளுக்கிடையில் உயர்ந்த தலத்தி லிருப்பார்கள்.

வகபுறலியல்லாகு அன்கு சொல்லுகிறார்— வானத்துக்குமேலே திரைகளுண்டா யிருக்கின்றன திரைகள்மேலே மலா யிக்கத்துக ளிருக்கிறார்கள் - அவர்களிற் சிறிதுபேர், சிறிதுபேரை யறிய மாட்டார்கள்— இடியிடிக்கிற சத்தத்தைப்போலே பலபாஷைகளைக் கொண்டு அவர்கள்,தசுபீகு செய்வார்கள்—இபுனு அப்பாசு றலியல்லாகு அன்கு சொல்லுகிறார்— திரைகளுக்குமே லிருக்கிற மலக்குகளுடைய கால்கள், ஏழு வானத்தையும், ஏழுபூமியையுங் கிழித்து (௫௱) வருஷத் தடிப் பாட்டைக்கொண்டு கடந்துவிடும்-அவர்களுடைய காலாகிறது- கீழ்பூமிக்கு கீழாகவிருக்கும்— கருபுறலி யல்லாகு அன்குசொல்லுகிறார் - ஜபுரீயில் அலைகிஸ்ஸலாம்—மலாயிக்கத்துகளில் மெத்தவும் வரிசையானவராருல் அமீன்- என்று அவருக்குச்

சொல்லப்படும்-அவருக்கு ஆறுசிற
குண்டும்-அதிலொவ்வொருசிறகில்-
நூறு சிறகுண்டும் அவருக்குப்பின்
னாலே-நாலுசிறகுண்டும் இரண்டுசி
றகு பசுமையான சிறகாயிருக்கும்-
லைலத்துல்கதர்- இரவையில் அதை
விரிப்பார், இரண்டுசிறகைச்சிறகா
ளைக் கலாக்காக்கிற வகுத்தில்விரிப்
பார்-சிறகு அடங்கலும் இரத்தின
த்தினுடைய வகைகளில் நின்றுமாயி
ருக்கும்- அவருடைய இரண்டுபுரு
வமும் வெளுத்திருக்கும்-பல் மின்
னலைப்போ லிருக்கும்- சரீரம் வெ
ளுத்திருக்கும்- உரோமுங் கறுத்தி
ருக்கும்- பனித்தண்ணீர் நிறமா யி
ருக்கும்- இரண்டுகாலும் ஒளிவில்
முங்கப்பட் டிருக்கும்.

இசுறுபீல் அலைகிஸ்ஸலாத்துடை
ய வர்ணிப்பு-கருபுறவியல்லாகு அன்
குசொல்லுகிறா- ஆயிஷா றலியல்
லாகு அன்கா - கருபுக்குச் சொல்
லுகிறார்- றசூல் சல்லல்லாகு அலை
இவசல்லம்சொல்ல,நான் கேட்டிருக்
கிறேன்-யாறப்ப ஜிபுரியில் வ-மீக்கா
யீல்இசுறுபீல்-இசுறயீலென்று துஆ
ச்செய்வார்- இன்னும் திருவுள மா
னார்கள், இசுறுபீலாகிறவர் காரியம்
வலுப்பமான மலக்காயிருப்பார்-அ
வருக்குநாலு சிறகுண்டா யிருக்கு
ம் அதிலொவ்வொரு சிறகைக்கொ
ண்டு மசரிக்கை யடைத்துப் போடு
வார்- ஒருசிறகைக்கொண்டு மஹ்ரி
பையடைத்துப்போடுவார், மூன்று
வது சிறகைக்கொண்டு வானத்தை

யும், பூமியையும், மறைத்துப்போ
டுவார்-நாலாவது சிறகைக் கொண்
டு- அல்லாகுத்த ஆலாவுடைய வல்
லபங் குறைச்சலானவர்களைப் பொ
றுத்துகொள்ளும் அவருடைய இர
ண்டுகாலும் எழாவது பூமிக்குங் கீ
ழாக விருக்கும் அவருடைய தலை
அறுசுடைய கால்களளவில்- நீர்மா
னமாகும்- அவருடைய இரண்டு க
ண்ணுக் கிடையில் இரத்தினத் து
டைய ஒளிவில் நின்றும் ஒருபலகை
யுண்டா யிருக்குது-அல்லாகுசுபுகா
னகூத்தஆலா அவனுடைய அடியா
ர்களில் ஒருகாரியம் புதுப் பிக்கிற
தற்கு நாடினால் [illegible]
டத்தைக்கொண்டு அந்தப் பலகை
யி லெழுதும்படி கலத்தை யேவு
வான்-பின்பு அதாலெழுதும்- பின்பு
இசுறுபீல் அலைகிஸ்ஸலா மவர்மு
கத்தை வைக்கப்பார்[illegible]
ருடைய இரண்டுகண்ணுக் கிடை
யிலிருக்கும்- பின்பு ஜிபுரியீல் அலை
கிஸ்ஸலா மளவில் தீர்மானமாகும்-
கருபுல்அருபார் றலியல்லாகு அன்
கு சொல்லுகிறார், பைத்துல் மகு
மூருக்குப் பின்னாலே மலாயிக்கத்
துக ளிருக்கிறார்கள் அவர்களெண்
ணிக்கையை அல்லாகுத்த ஆலாவை
யொழிய ஒருவரு மறிய மாட்
டார்கள்.

அவர்களைக்கொண்டுஅல்லாகுத்
தஆலா ஒரு மலக்கைச் சாட்டினா
ன்- அவருக்கு எழுபதினாயிரம்மு
கமுண்டாயிருக்குது அதில் - ஒவ்



வொருமுக மடங்கலிலும், எழுப
தினாயிரம் வாயுண்டா யிருக்கின்ற
ன ஒவ்வொரு வாயடங்கலிலும், எ
ழுபதினாயிரம் நாவுண்டாயிருக்கின்
றன-அல்லாகு சுபுகானகுத்த ஆலா
வை எழுபதி னாயிரம் பாஷைகளை
க்கொண்டு, தசுபீகு செய்துகொண்
டிருப்பார்- இவர்களுக்குமேலே இ
வர்களைக்காண வலுப்பமான மலா
யிக்கத்துக ளிருக்கிறார்கள்-இந்தம
லாயிக்கத்துக ளுக்கும் அவரல்லாத
வர் களுக்கும் திசைகளுண்டாயிரு
க்கின்றன அந்தத் திசைகளுண்டா
யிராமற்போனால் அவர்க ளுடைய
ஒளிவைக்[illegible] அவர்க ளெல்லா
[illegible]லாயிக்கத்துகள் வெந்துபோவா
ர்கள்- அவர்களிற் சிறிது மலாயிக்
கத்[illegible]ளுடைய வாய்களில்நின்றும்
தசுபீகு [illegible]போது நெருப்புக்
[illegible]மும்- அந்த நெருப்புக்கங்கி
யில் நின்றும், அல்லாகுத்தஆலா சி
றிது மலா யிக்கத்துகளைப் படைப்
பான்.

அந்த மலக்குகள் ஆகாசத்திற்
பறந்தவர்களாகக் கியாமத்துடைய
நாள்வருமளவுந், தசுபீகு செய்வார்
கள்- அதுகுடைய வர்ணிப்பிற் பேச
ப்படுகிறது- கருபுல் அகுபாறு ற
லியல்லாகு அன்கு சொல்லுகிறார்-
அந்தபைத்துல் மகுமூருக்குமேலி
ருக்கிற மலாயிக்கத்துகளுக்கு மே
லொருமலக்கு மனிதருடைய ரூற
த்தின்மே லிருக்கிறார்- வானங்களை
யும், பூமிகளையும மூழுங்கும்படி அ

ல்லாகுத்தஆலா வேண்டி யிருக்கில்
அவர்மேலே லேசாகும் அந்த மல
க்காகிறது,ஹாறாயிருக்கும்- அல்லா
குத்தஆலா திருவுள மானான்- மரு
ளிதாகும், மலாயிக் கத்துகளும் சு
ப்பாக நின்றுகொண்டு பேசாம லி
ருப்பார்களென்று, ஹாகாயிருக்கும்
அந்தரூஹென்கிற மலக்குமேலேஆ
காசத்திற் சிறிது மலாயிக் கத்துக
ள் நடப்பார்கள், மூமினானவர்கள்
துஆச் செய்யும்போது ஒருமித்து
க்கூடி ஆமீன்சொல்லுவார்கள் அவ
ர்கள் எண்ணிக்கையை அல்லாகுத்
தஆலா அறிவான்.

நபிசல்லல்லாகுஅலைகி வசல்லத்
தைத்தொட்டு- மிஃறாஜ்தாச் செ
ய்யப்பட்டது,அவர்கள் ஜிபுரியில் அ
லைகிஸ்ஸலாத்தை [illegible]டைய ரூ
ப்பமான ரூறத்தின்மே லிருக்கச்
சொல்லிச் சொன்னார்- அப்போத
வர்சொன்னார்-எனக்கு அவ்வளவு
த்தி வைக்கும்படி- ஒருகூறத்தண்
டா யிருக்குது- அதைப் பார்க்கிற
தின்மேலே ஒருவனும் சக்திபெற
மாட்டான்- எனக்குமேலே என்னை
க்கான வலுப்பமான மலாயிக்கத்
துக ளிருக்கிறார்களென்று சொன
போது நபிசல்லல்லாகு அலைகிவ
சல்லம் திருவுளமானார்கள்-மெய்தா
ன் உம்முடைய வலுப்பமான ரூற
த்தின்மேலே நான்பார்க்க உலந்தி
ருக்கிறேனென்று அப்போது அவர்
வலுப்பமான ரூறத்தின்மேலே தி
ரும்பினார்- நபிசல்லல்லாகு அலைகி

வசல்லம் பார்த்துப் போதக்கேடு ட்பட்டவராய் விழுந்து விட்டார், தெளிவுபெற்றுச் சொல்லுவார்- ஜி புரியிலே யிந்தரூறத்தின்மேலே ஒருவனையும் நானென்ன வில்லையென்று.

அப்போது ஜிபுரியீல் அலைகிஸ்ஸலாம் சொன்னார்-இசுறுபீல் அலைகிஸ்ஸலாத்தைப் பார்த்தீர்களேயானால் என்னுடைய இந்த ரூறத்தனுங்களிடத்தில் எளிதாகுமென்று-கருபுல்-அகுபாறு றலியல்லாகு அன்குசொல்லுகிறார்-ஏழாவதுவானத்தில்,பகுறுல் மகஜூறென்றொருகடலுண்டாயிருக்கின்றது- அவர்கள்கையில்இரத்தினத்தில்நின்றும்ஆயுதங்களுண்டாயிருக்கின்றதுஒவ்வொரு ஆயுதத்துடைய நீளம் ஒருவருஷத்தடிப்பாட்டுடைய நீளமுண்டாயிருக்கிறது, அவர்களைக்கொண்டு அல்லாகு சுபுகானகூத்தஆலா ஒருமலக்கைச்சாட்டினான், அவருக்கு- அன்காயீல்என்று பேர்சொல்லப்படும் அவருடைய சிபத்தையும், அவர் சிறகுடைய எண்ணிக்கையும் வர்ணிக்கிறதற்கு அல்லாகுத்த ஆலாவையொழிய ஒருவரும் சக்திபெற மாட்டார்கள், அந்தமலக்கு வாயைத் திறந்தால், வானங்களும், பூமிகளும் அவருடைய வாயிலேபெருங்கடலில் ஒரு கடுகுபோலா யிருக்கும்- அந்த மலக்கைப் பார்க்க ஒருவரும் சக்திபெற மாட்டார்கள்- கருபுல் அகுபாறு றலியல்லாகு அன்குசொல்லுகிறார்-வானத் துடையவர்கள் பேரிலும், பூமியுடையவர்கள் பேரிலும் அவர் றூகினல் அவருடைய ஒளியில் நின்றும் வெந்துபோவார்கள்.

---

## மலக்கல் மவுத்துடைய வர்ணிப்பிற்பேசுகிற பாபா யிருக்கும்.

---

கருபுல் அகுபாறு றலியல்லாகு அன்குசொல்லுகிறார்- மலக்கல்மவுத்துடைய யோசிறது - இசுறாபீலாகவிருக்கும்- அவர் மூன்வானத்தி லிருப்பார், பூமிந்தா இறவிந்து டைய எண்ணிச்சைகொண்டு அவருக்குதவிசெய்கிறவர்களைப் படைத்தான்-அவருடைய இரண்டுகாலும் ஏழாவதுபூமிக்குக் கீழிருக்கும் அவருடைய தலையானது மேன்வானத்தின் மேலே திரைசளுடைய ஒடுக்கத்தி லிருக்கும்,அவருடைய முகம், லவ்குல் மகுபூலு என்கிற பலகைக்கு நேராயிருக்கும், அவருக்கு அறுபத்துமூன்று கண்ணுண்டும்- ஒவ்வொரு கண்ணில் மூன்று கண்ணுண்டும்- அவருக்கு முந்நூற் றறுபது நாவுண்டும்- ஒவ்வொரு நாவில மூன்றுநாவுண்டும், அவருக்கு முந்நூற்றறுபது கையுண்டும்- ஒவ்வொருகையில் மூன்றுகையுண்டும் அவருக்கு முந்நூற் றறுபது காலுண்டும் - ஒவ்வொருகாலில் மூன்று காலுண்டும் அவருககு நான்கு சிறகுண்டும்- ஒருசிறகு மகரீக்கிலும், ஒருசிறகு மறாரிபிலும், ஒருசிறகு திரைசனுடைய கடைசியிலும்,ஒருசிறகு பூமியுடைய ஒடுக்கத்திலுமிருக்கும்-

அவர், லவ்குல் மகுபூலுப் பலகையிற் பார்ப்பார், கல்க்குகளுடைய நாளும் அவருடைய இரண்டு கண்ணுக் கிடையி லிருக்கும் - ஒரு படைப்புடைய அசலும், இரணமும் பற்றற்றுப்போனல் அதினுடைய றூகைக் கைப்பற்றுவார்- மூமினனவர்களுடைய றூகை வலதுகை கொண்டு பற்றுவார், பின்பு இல்லீயீனென்கிற கவிலேந்தி உயர்த்துவார், குப்பார்களுடைய றூகை இடதுகையினலே கைப்பற்றி,சிஜ்ஜீன் என்கிற ஸ்தலத்தி லுயர்த்துவார்.

---

## இராவையும் பொழுதையும், நிலவையும் படைத்ததிற் பேசுகிற பாபாயிருக்கும்.

---

வகபுறலியல்லாகு அன்குசொல்லுகிறார், அல்லாகு சுபுகானகூத்தஆலா, அறுசுடைய ஒளியில்நின்றும் பொழுதைப் படைத்தான், குறுசியுடைய ஒளியில்நின்றும்நிலவைப்படைத்தான், கருபுல் அகுபாறு றலியல்லாகு அன்குசொல்லுகிறார், பொழுதையும், நிலவையும் ஒருதுடைய ரூறத்தின்மேலே கொண்டுவந்து நரகத்தி லெறியப்படுமென்று-கருபுல் அகுபாறு சொன்னசொல்லை இபுனு அப்பாசு றலியல்லாகு அன்குகேட்டு, கருபு பொய்சொன்னார் அல்லாகுத்தஆலா திருவளமானது-யகுனி- பொழுதும், நிலவும் அல்லாகுத்த ஆலாவுடைய சொல்லுக்கு வழிபட்டதா யிருக்குது என்று சொல்லியிருக்க, எப்படி அதை செய்வான் அந்த இரண்டும் அல்லாகுத்த ஆலாவுடைய சொல்லுக்கு வழிப்பட்டதா யிருக்குது- வகபுறலியல்லாகு அன்கு சொல்லுகிறார்-அல்லாகுத்தஆலா பொழுதைக் கொண்டும்,நிலவைக் கொண்டும் சிலமை யிக்கத்துகளைச் சாட்டினான் இராவுபகலிற் புகுதுகிற சுதறுகொண்டும், பகலிரவையிற் புகுதுகிற சுதறுகொண்டும் அவர்கள் அந்தஇரண்டையு மிழுப்பார்,அந்த இரண்டில் நின்றுங் குறைந்ததற்கு மற்ற ஒன்றி லதிகமாகும்.

தவுறாத்து வேதத்தை யுடையவர்கள்- அல்லாகுத்த ஆலா, ஞாயிற்றுக் கிழமையில் கல்க்குகளைப் படைக்கத் துடங்கினான்- சனிக்கிழமை திர்மானமாச்சது அன்றையதினம் அறுஷில் செவ்வுறுதலானன்-அதையவர்கள் பெருநாளாக வெற்றுக் கொண்டார்கள்- நஸாறாக்கள் சொன்னார்கள் அல்லாகுத்த ஆலா திங்கட்கிழமை துடங்கி-ஞாயிற்றுக்கிழமையில் திர்மான மாச்சுது, அந்தஞாயிற்றுக்கிழமையில்அறுஷிலே செவ்வுறுதலானன் அதையவர்

கள் பெருநாளாக வெடுத்துக்கொண்டார்கள்— இபுனு அப்பாசு றலியல்லாகு அன்கு சொல்லுகிறுர்- சனிக்கிழமை சுவர்க்கந் துடங்கிவெள்ளிக்கிழமையில் தீர்மானமாச்சுது அல்லாகுத்தஆலா அந்தச் ஜுமுஆவைப்பெருநாளாக்கினுன்- நபிசல்லல்லாகுஅலைகிவசல்லம் திருவுளமாணுர்கள்- நிலகளுக்கு நாயகமான நாளாகிறது ஜுமுஆவுடைய நாளாயிருக்கும், அந்த நாளாகிறது நோன்புப் பெருநாளைக் காணவும்- கஜ்ஜுப் பெருநாளைக் காணவும் அல்லாகுத்தஆலாஇடத்தில் மெத்தவும் வலுப்பமானதா யிருக்கும்- அதில் ஒரு காரிய முண்டா யிருக்குது—அதில்ஆதம்அலைகிஸ்ஸலாத்தைப்படைத்தான்—அதில் அவருக்கு ஆகையூதினுன்—அதில் அவருடைய ஆகைக் கைப்பற்றினுன்- அதில் ஒரு சாஅத் துண்டாயிருக்குது-அதிற் கேட்கப்பட்ட, துஆவை அல்லாகுத்தஆலா கபூல்ச்செய்வான், ஹறுமான காரியத்தைக் கேட்டால் கபூல்ச்செய்யப்படாது-அதில் கியாமத்துடையநாள்தரிபடும்.

---

இதர்கிறது அதனென்கிற சுவர்க்கத்தையும்,மற்றும் சுவர்க்கத்தையும்,படைத்ததிற் பேசுகிற பாபா யிருக்கும்.

—0—

இபுனு அப்பாசு றலியல்லாகு அன்கு சொல்லுகிறுர் – அல்லாகுத்தஆலா எட்டுச் சுவர்க்கத்தைப்படைத்தான்—முந்தின சுவர்க்கத்துடைய பேராகிறது- தாறுல்ஸலாம்; அது வெளுத்த முத்தில்நின்றுமா யிருக்கும்— இரண்டாவது, தாறுல்ஸலாம்— அதுசிவந்த மாணிக்கத்தில் நின்றுமா யிருக்கும்—மூன்றுவது ஜன்னத்துல்மவ்வா – அது பச்சை மாகதத்தில் நின்றுமாயிருக்கும்-நாலாவது ஜன்னத்துல்குல்து— அது மஞ்சள் முத்தில் நின்றுமா யிருக்கும்—ஐந்தாவது ஜன்னத் துன்னயிம்— அது வெளுத்த வெள்ளியில் நின்றுமா யிருக்கும்-ஆறுவது ஜன்னத்னல் பிறுதவுசு- அது பொன்னில் நின்றுமா யிருக்கும்—ஏழாவது ஜன்னத்துல் கறூர் அது வாசனை மிகுந்தகஸ்தூரியில் நின்றுமா யிருக்கும்— எட்டாவது ஜன்னத்துல் அதன்- அது இலங்கப்பட்ட முத்தில் நின்றுமா யிருக்கும்.

அது அந்த எழுசுவர்த்தின்மேலிருக்கும்-அதற்கிரண்டு வாசலுண்டாயிருக்கும் – ஒருவாசலுக்கிரண்டு தலமுண்டா யிருக்கும்— ஒருதலத்தினுடைய பருப்பம் வானத்துக்கும், பூமிக்கும் இடைசரியா யிருக்கும்—சுவர்க்கத்தினுடைய வெடுப்புப்பொன்னிஞல் ஒருகல்லும்,வெள்ளியினுல் ஒரு கல்லுமா யிருக்கும்—பூசப்பட்டது வாசனை மிகுந்த



கஸ்தூரியா யிருக்கும்—அதினுடைய மண்ணாகிறது அம்பரா யிருக்கும்- அதினுடைய பூண்டாகிறது குங்குமமா யிருக்கும்— அதினுடைய மாளிகையாகிறது முத்தா யிருக்கும்—அதினுடைய வீடுகளாகிறது மாணிக்கமா யிருக்கும்—அதினுடைய வாசலாகிறது இரத்தினமா யிருக்கும்-இபுனு அப்பாசு றலியல்லாகு அன்கு சொல்லுகிறுர்— சுவர்க்கத்தில் அருவிக ளுண்டாயிருக்குது – அதுகளில் வரிசைபெற்றது- ஆறருவியா யிருக்கும்—முந்தினது— கவுதற்றுமுத்து—அந்த ஆறு சுவர்க்க மடங்கலிலும் ஓடும்—அதினுடைய கல்லாகிறது வெளுத்த முத்தாயிருக்கும்- அதினுடைய தண்ணீ ராகிறது பனித் தணணீராக்கான வெளுப்பிக், தேனைக்கான இன்பமுமா யிருக்கும்;-இரண்டாவது-கவ்தர் என்கிற ஆறுயிருக்கும்- அந்த ஆற்றினுடைய இரண்டருகின்மேல் முத்தினுடைய மரங்களும், மாணிக் கத்தினுடைய மரங்களுமா யிருக்கும்— அந்த ஆறு நம்முடைய ஆண்டவர் நபிசல்லல்லாகு அலைகிவசல்லத்துக்காக இருக்கும், மூன்றுவது – காபூறென்கிற ஆறுயிருக்கும்-நாலாவது தசுனீம்—ஐந்தாவது— சல்ஸபீல்— ஆறுவது-றகீகுல்மகுத்தும்.

இவைகட்குப் பின்னுலே நட்சத்திரத்தி னுடைய எண் ணிக்கையைக்கான மிகுந்த அருவிகளுண்டும்அதினுடைய எண்ணிக்கையை அல்லாகுத்த ஆலா அறிவான்-இது போலேதான்— சுவர்க்கத் துடைய மாளிகைகளும், சுவர்க்கங் களுக்கு இரத்தினத்தைக் கொண் டிழுத்தப்பட்ட பொன்னில் நின்றும் எட்டுவாச லுண்டா யிருக்குது, முந்தினவாசல்மேலே- லாஇலாக இல்லல்லாகு முகம்மதுற்ற சூலுல்லாகி— என்றெழுதி யிருக்குது- இரண்டாவது-வாசலில் பாபுல் முசல்லீனென்றெழுதி யிருக்குது, உலுவையும் நிரப்பமாகச்செய்து, தொழுகையும் நிரப்பமாகத் தொழுகிறவர்களுடைய வாசலென் றெழுதப்பட்டது-மூன்றுவது-பாபுல் முஸ்தகின் சீரும் சுகண்டியாக ஸக் காத்துக் கொடுத்தவர்களுடைய வாசலென் றெழுதி யிருக்கும்— நாலாவது பாபுல் அமிறின்- நன்மையைக்கொண்டும் ஏவுகிறவர்களுக்கும், தீமையைக் கொண்டும் விலக்குகிறவர்களுக்கும் வாசலென் றெழுதி யிருக்கும்— ஐந்தாவது பாபுல்- மன்பத்தம்-நப்சுரு-அனிஸ்ஷகாவத்தி – சரீரத்தின் இச்சையைத்தொட்டும், பாவம் றத்சடிக்கிறவர்களுடைய வாசலென் றெழுதி யிருக்கும் ஆறுவதுபாபுல்—ஹஜ்ஜாஜி— வல்முகுத்தமிறீன்-ஹஜ்ஜுசெய்கிறவர்களுக்கும், உம்றுச் செய்கிறவர்களுக்கும் வாசலென் றெழுதியிருக்கும்— ஏழாவது பீசபீல் செய்கிறவர்களுடைய வாச

லென் றெழுதி யிருக்கும்- எட்டா
வது பாபுல் முரீதீன் — ஸருமான
காரியத்தைப் பார்க்கிறதைத் தொ
ட்டும் பார்வையை மூடிக்கொண்டு
தாய்தகப்பன் மார்களுக்கு நன்றி
செய்கிறதில் நின்றும் நன்மையை
ப்பெற்றுக் கொண்டு இனத்தைச்
சேர்ந்து நடந்தவர்களுடைய வாச
லென் றெழுதி யிருக்கும் அந்தந்த
வாசல்களில் நின்று மெழுதப் பட்
ட அமலையுடையவர்கள் அந்தந்தவா
சலிற் புகுதுவார்கள்.

பின்பு அந்தச் சுவர்க்கங்களில் கூ
றல்லின்களுண்டா யிருக்கிறார்கள்
அவர்கள் எண்ணிக்கையை அல்லா
குத்த ஆலா அறிவான் - அவர்களு
டைய அழகை மனிதர்களாலே வர்
ணிக்கக்கூடாது-பின்பு அந்தச் சுவர்
க்கங்களி லுண்டான அலங்காரமு
ம்-நிருமத்தும் கண்கள் பார்த்துமு
டியாது-காதுகளுக் கேட்டுமுடியா
து- ஒருமனித னுடைய கல்பிமே
லே தோற்றுகிறத்தி னுலும், முடி
யாத வகைக ளுண்டா யிருக்கின்
றது-காலம் பற்றற்றுப் போகாத நி
குமத்துகு, சலாமத்தான ஜீவிப்பு
ம்அதிலுண்டா யிருக்கின்றது அதி
ல் தங்கித் திருக்கப்பட்ட நிருமத்
தானே அல்லாகுத்த ஆலாவையொ
ழிய மற்றொருவரா லறியவொண்
ணது-அந்தநிருமத்தை அல்லாகுத்
த ஆலா தன் னுடைய சாலிறான
அடியார்களுக்குத் தங்கித்து வை
த்திருக்கின்றான்.

---

## இதாகிறது ஜகன்னமென்கிற நரகமும்மற்றும் நரகமும் படைத்ததிற் பேசுகிற பாபாயிருக்கும்

ஜகன்ன மென்கிற நரகத்துக்கு
ஏழுவாசலுண்டும்- இரண்டுவாசலு
க்கிடையில், எழுபது வருஷத் தடி
ப்பாட்டுத் தூர முண்டும் ஒவ்வொ
ருவாசலுடங்களிலும், நெருப்பில்
நின்றும் எழுபதினாயிரம்,மலையுண்
டும்-ஒவ்வொரு மலையடங்களிலும்
நெருப்பில் நின்றும், எழுபதினாயி
ரம் ஓடையுண்டும் - ஒவ்வொரு ஓ
டையில் நெருப்பில் நின்றும் எழு
பதினாயிரம், மாளிகை யுண்டும் ஒ
வ்வொரு மாளிகையில், நெருப்பினு
லே எழுபதினாயிரம்-வீடுண்டும் ஒ
வ்வொரு வீட் டடங்களில் நின்று
ம்,நெருப்பினுலே எழுபதினாயிரம்
பெட்டகமுண்டும் ஒவ்வொரு பெ
ட்டகம் அடங்களில் நின்றும்,நெரு
ப்பினுலே விலங்குகளும்- இரும்பு
ச் சங்கிலிகளும்- கடு தண்ணீர்களு
ம்-ஊனத் தண்ணீர்களும்-கடிவா
க்காலிகளும்- பாம்புகளும்- தேள்க
ளும் அதாக்கள்ளி மரங்களும்— எ
ழுபதினாயிரம் வகை அதாபுகளு
முண்டா யிருக்கின்றன அதில் மூந்



தினதாகிறது. ஜகன்னம் அதுபெ
ரும்பாவம் செய்கிறவர்களுக்கு-இ
ரண்டாவது-லலா- அதுபுத்துகானே
வணங்குகிறவர்களுக்கு- மூன்றுவ
து,குத்துமா- அது யாஜூஜ் மா
ஜூஜ் கூட்டத்தார்களுக்கும்,அ
வர்கள்போல் ஒத்த காபிர்களுக்கு
ம்-நாலாவது, சகிறு அது,ஷைத்தா
ன்களுக்கும்-ஐந்தாவது, சக்கறு-அ
து தொழுகையை விட்டவர்களுக்
கும், ஸக்காத்துக்கொடாதவர்களு
க்குமாக விருக்கும், ஆறுவது ஜஹிம்
அது எகூதிகளுக்கும் - நசாறுக் க
ளுக்கும்- மஜூசிகளுக்கும்-முஷ்ரி
க்கா னவர்களுக்குமாக விருக்கும்-
ஏழாவது, காவியா— அது முனாபிக்
கின்களுக்காக விருக்கும்,

இபுனு அப்பாசு றலியல்லாகு அ
ன்கு சொல்லுகிறார், சுவர்க்கமாகிற
து அறசுடைய வலதுபுறத்திலும்,
நரகம் இடது புறத்திலுமாக விரு
க்கும், நரகத்துக்கு ஏழுதட்டுண்டு
ம், ஏழுதலைகளுண்டும்- ஏழுவாசலு
ண்டும்- ஒவ்வொரு தலையடங்களில்
நின்றும், முப்பத்துமூன்று வாயு
ண்டும் - ஒவ்வொருவாயில் மட்டில்
லாத நாவுண்டும் - அது அல்லாகுத்
த ஆலா அறிவான் தனதுடைய வ
கைகளைக்கொண்டு அல்லாகுத்த ஆ
லாவைத் தசுபீகுசெய்யும் - அந்த
நரகங்களில், நெருப்பில் நின்றும்,
மரங்களுண்டா யிருக்கிறது - அதி
னுடைய முள்ளுகளோ மரவலைப்பத்
தைப் போலிருக்கும், நெருப்புக
ளைக்கொண்டும் பழங்களெரியும்-ஒ
வ்வொருபழத்தில், ஒவ்வொருபாம்
புண்டா யிருக்கும், காபிரானவனு
டைய, இரண்டு உதட்டையுந், ச
ரீரத்தையுந் தின்னும், அந்நரகங்
களில் கட்டுவாக் காலிகளும், புலிக
ளும்-பாம்புகளும்— நாய்களும்-நெ
ருப்பினுலுண்டா யிருக்குங், ஸபா
னியா மலக்குகளுண்டாயிருக்கிறார்
கள். அவர்கள் கையில் நெருப்பினு
லே சுக்குமார்த்தடிகளுண்டா யிரு
க்கும், ஒவ்வொரு தடியில் மூந்நூற்
றறுபது துணுண்டும்- ஒவ்வொரு
துணைச் சுமக்கிற றிலி னின்றும்,மனி
தருந்,ஜின்னும், மாட்டாங்காவா
ர்கள்-மலாயிக்கத்துகளில் நின்றும்-
பத்தொன்பது மலக்கு அந்நரகத்
தி லிருப்பார்கள் — அவர்கள் ஸபா
னியாக்களாக இருப்பார்கள்,

---

## தாகிறது ஜின்னையும், ஜானையும், இபுலீசையும், படைத்ததிற் பேசுகிற பாபாயிருக்கும்.

---

[illegible]புறலியல்லாகு அன்கு சொ
ல்லுகிறார்- அல்லாகுத்த ஆலா [illegible]
ப்பாயில்லாத நெருப்பைப்படைத்
ததுபோழுது— அதில் நின்றும்— ஜா
னைப்படைத்தான். அந்த நெருப்பி
ல் நின்றும்,மாறிஜென்று ஒருவனை
ப் பானைப்படைப்பைப்படைத்தான்.

அதில் நின்றும் — அவனுடைய பெண்சாதியைப் படைத்து, மாறிஜா என்று பேரைவைத்தான் — மாறிஜூ என்கிறவன் மாறிஜாவுடன் விகூடி ஜான் என்கிற பிள்ளையைப் பெற்றான் ஜானுக்கு ஜின்னென்று ஒருபிள்ளை பிறந்தது- அதிலின்றும்- ஜின்னுடைய கூட்டங்கள் பிறந்தது- அந்தக் கூட்டத்தில் நின்றும்- இபுலீசுள்ளவனுமிருப்பான்- ஜின்னுக்கு ஒரு ஆண்பிள்ளையும், ஒருபெண் பிள்ளையும் பிறக்கப் பட்டது.

ஆண்பிள்ளையைப் பெண்பிள்ளைக்குக் கலியாணஞ்செய்தார்கள்— எழுபதினாயிரம் ஆண்பிள்ளையாய் விட்டது-பின்பு மனுவுடைய எண்ணிக்கையை பெத்துமனமும் அதிகமானார்கள்— ஜின்னில்நின்றும் ஒருபெண்பிள்ளையை இபுலீசு கலியாணஞ் செய்துகொண்டான்-அவனுக்குப்பேர்— ஆகா, அவன் ஜல்சாயீ என்கிற ஜின்னுடையமகள்— அந்தஜல்சாயில் ஜாவுடையமகள்—அந்த ஆகாஎன்பவள்—இபுலீசுக்கு-புத்தான்-குத்தூனு என்று ஒரு வயிற்றிலிரண்டு பிள்ளையைப் பெற்றாள்- பின்பு சகலை தகுரா என்றும்— தகறு தசறு-என்றும் ஒரு வயிற்றிற் பெற்றாள்— பின்பு ஜைசான் ஜைசானென்றும் ஒரு வயிற்றிலிரண்டு பிள்ளையைப் பெற்றாள்— பின்பு-சபுத்தசு-சபுத்தசா என்றும ஒரு வயிற்றி லிரண்டு பிள்ளையைப்பெற்றாள்-பின்பு,பிள்ளைகள் மட்டில்லாமல் எறும்புகளைப்போலே, கொசுகளைப் போலே,வெட்டுக் கிளிகளைப் போலே, பறவைகளைப்போலே, ஆகிமுகம்போன போக்கில் நடந்துபோனார்கள்- காடுகளிலும் மேயுந்தலங்களிலும், குப்பைகளிலும், இருந்தநிலத்திலும், குடியிருந்தார்கள்- பூமியை நிரப்பினார்கள்.

பின்பு மனிதர்களுடைய ரூபத்தின் மேலேயும், ஊர்வனமுடைய ரூபத்தின்மேலேயும், கோவேறு,கழுதை-ஆடு-மாடு கழுதை-நாய்-புலி இவைகளுடைய ரூபத்தின்மேலேயும் [illegible]யாய்விட்டன, பூமியை இபுலீசுடைய பிச்சைங்கள் நிரம்பிக் கொண்டபொழுது- அல்லாகுத்தஆலா ரீனை ஆகாசத்திற்குடியிருத்தாட்டி வைத்தான், ஜின்னையும்,அதினுடைய அவலாதையும், முன்வானத்திற் குடியிருத் தாட்டி வைத்து— இபாதத்தைக கொண் டேவினான்- பின்பு அல்லாகுத்த ஆலா மலாயிக்கத்துகளுக்கு, வஹியிறக்கிவைத்தான், நான் இரண்டுவீட்டைப் படைத்தேன்—ஒன்று என்னுடைய, றகுமத்தில் நின்றும், மற்றொன்று என்னுடைய கோபத்தில் நின்றுமா யிருக்கும், அந்த இரண் டளவிலும் பாருங்கவென்று- அப்போது—ஜகன்னம் என்கிற நரகத் தளவிலும்— அதினுடைய தட்டுக ளளவிலும்—



அதினுடைய அதாபின்வகையளவிலும்பார்த்து—கைருகுனாகள்-பின்பு சுவர்க்கத்தளவிலும்- அதினுடைய-நிருமத்தளவிலும் அல்லாகுத்தஆலா அந்தச் சுவர்க்கத் துடையவர்களுக்குத் தங்கரிப்பாக்கி வைத்தாய்கொண் டிருக்கிறதையும் பார்த்துசோபனம் கூறி ஆண்டவனே இந்தப்பதியை யாருக்குப் படைத்தாயென்று கேட்டார்கள் — அல்லாகுத்தஆலா சுவர்க் கத்தைப் பேசச் சொல்லிபேவினான்-சுவர்க்கம் சொல்லியது—மூமினானவர்கள் ஈடேற்றம் பெற்றார்களே அவர்களுக்குஎன்னைப் படைத்தா னென்றபொழுது- மலாயிக்கத்துகள் சொன்னபடி நாங்கள் மூமினானவர்கள் எ[illegible]க்கோ படைக்கப்பட்ட தென்று போ[illegible]-சுவர்க்கம் சொல்லியது-மூமினானவர்களில் அவர்களுடைய அ[illegible]மானத்தைப் பேணிக் கொண்டவர்களுக்கு என்று சொன்னபோது—தங்களை யல்லாதவர்களுக்கென்று எண்ணிக்கொண்டார்கள்.

பின்பு அல்லாகுத்த ஆலா திருவுளமானான் என்னுடைய கையைக் கொண்டு படைத்து என்னுடைய றூகில்நின்றும் ஊதி என்னுடைய மலாயிக்கத்துகளை சுஜூதுசெய்யவும் என்னுடைய கல்க்குகளுடங்கலின்பேரிலும் வரிசையாக்கி வைத்தேனல்லவா அவர்களில் நின்றும் எனக்கு வழிப் பட்டவர்களுக்கு இந்தச் சுவர்க்கத்தை நான்படைத்தேனென்று திருவுளமானான் வாயுறலியல்லாகுஅன்குசொல் லுகிறார்— வானையானது பூமியின் மேலே பெருமை யடித்ததாய்ச் சொல்லியது- அல்லாகுத்த ஆலா என்னை யுன்பேரில் வரிசையாக்கிவைத்தான் நான் வெகுப்பமான படைப்பு-மலாயிக்கத்துகளுக்குக் குடியிருக்குந் தலம் என்னில் அறுசங்,குறுசிம்,பொழுதும், நிலவும், நட்சத்திரமு முண்டாயிருக்குது, றகுமத் துடைய கஸ்னும் என்னிடத்தி லுண்டாயிருக்குது என்னில் நின்று முன்பேரில்வஹி இறங்கு கிறதென்று சொன்னபோது பூமி சொல்லியது.

என்னுடைய ஆண்டவனே என்னைத் தண்ணீருடைய முகத்தின் மேலே விரித்தாய் மாத்துடையவேர்களை யென்னிடத்திற் பிணையுமாக்கினாய் அருவிகளையென்னில்-ஓலித்தோட வைத்தாய் என்னுடைய முதுகின்மேலே மலைகளைத் தரிபடுத்திவைத்தாய்— மரங்களையும், பழங்களையும் என்னிற் படைத்தாய் என்னுடைய ஆண்டவனே இதுகளையெல்லாம் யாருக்குப் படைத்தாய், வானம் என்பேரிற்பெருமையடித்ததை நீயறிவாய் என்னுடைய முதுகின்பேரில் உன்னை நினைக்கிறவர்கள் ஒருவருமில்லை நான் வெருட்சியா யிருக்கிறேனென்றபோது பூமியைக் கூப்பிடப் பட்டது நீவா

யைமூடு- உன்னுடைய மண்ணில்
நின்றும் நான் ஒரு குறத்தைப் ப
டைப்பேன் அதிலும் நெளிவிலு
ம் ஒப்பில்லே அந்தப் படைப்புக்கு
அகருலேயும்- இளமையுங் கொடுப்
பேன், அதின்மே லென் னுடைய
வேதத்தை யிறக்கிவைப்பேன்- பி
ன்பு உன்னுடைய வயித்தையும்,
உன்னுடைய முதுகையும், உன்னு
டைய மஷ்ரீக்கையும், மஹரீபையு
ம், உன்னுடைய மண்ணின் மீசா
னமேலே நிறுத்தினும், தாகிலும்,
ஐடலத்திலும் நிரப்பியிரு அதைக்
கொண்டு சீவானத்தின் பெரிற் பெ
ருமையுடைய நல்லாரயம் பெற்றுக்
கொள் ளென்று சொன்னபோது-
பூமிதாரிபட்டது- வெளுத்த வெள்
ளையாய்விட்டது-பின்பு சூத்தப பூமிய
வனிற் பார்த்தான்-அத்தப்பூமியிலு
ண்டாயிருக்கிற மிருகஜாதிகளைக் க
ண்டபோது பூமியளவி லிறக்க அல்
லாகுத்த ஆலாவைக் கேட்டதற்கு
பூமியிலிறங்கி அவனை வணங்கவும்,
அவனுக்கு மாறுசெய்யாம லிருக்க
வும், வார்த்தைப்பாடு வாங்கிக்கொ
ண்டு ஜின்னலிருந்தும் ஏழுபதினா
யிரங் கூட்டங்களைப்பூமியி லிறக்கி
வைத்தான்-அத்தஜின்னள் நீண்டகா
லத்தில் மக்களை இபாதத்தாக
அல்லாகுத்த ஆலாவை வணங்கினா
ர்கள்- பின்பு பாவஞ்செய்யவும் இச
ந்தத்தை நட வைக்கிறதிலுந் தட
ங்கினார்கள், பாவத்தில் முங்கினர்

கள், பூமிசொல்லிற்று- என்னுடை
ய நாயனே என்னுடைய முதுகின்
பேரில் உனக்குமாறு செய்கிறவர்க
ளுண்டாயிருக்கிறதைக்காண உன்
டாகாமல் நான் ஒழிகிறது எனக்கு
மெத்தவு முவப்பாயிருக்கும்- அல்
லாகுத்த ஆலா அந்தப் பூமியளவில்
வயி லிறக்கிவைத்தான், மீவாமைமூ
டு அவர்களளவில் நான் றசூல்மார்க
ளை யனுப்பி வைக்கிறேனென்றுவ
லிவந்தபோது வாயைமூடிக்கொண்
டது-சுருபுல் அறபாது நபியல்லா
ரு அன்று சொல்லுகிறார், அந்தஜி
ன்களளவில் அனுப்பப் பட்ட நபி
மார்களில் முதல்நபி ஆமிறு-புலு
கைமத்… ன்-பின்பு-சாகிருபு
… கிருபுனு-மாதிருபுனுஜான்-
பின்… முன்னூறு வருஷத்தில் முந்
நூறு நபிமார்களையனுப்பினைத்த
ன் அந்த நபிமார்களைவெட்டிப்போ
ட்டார்கள் அவர்கள் நபிமார்களைப்
பொய்யாக்கி வைத்தபொழுது வா
கவுமுகனே எனக்கு ஐநூறுமில்லை உங்களிடத்திலுண்டாயிருக்கிற பணத்தனவிலே யெனக்கு தேவைத்துமில்லை இராஜாங்க மாகிறது அல்லாவுக்காக விருக்குது என்னிலும் எனக்கு ஹாஜத்தாகிறது நீங்களெல்லாம் - லாஇலா இல்லல்லாஹு லயின்னி நாகு நகுலுல்லாஹி யென்று கலிமாச்சொல்லுகிறதென்று சொன்னபொழுது இராஜா தருமசீலென்கிறவன் கோபமாகி யிந்த நாள் எங்களுக்கு ஈதாக விருந்தபடியினாலே உம்மை வெட்டுகிறதற்கு நாலுத்திரவுகொடுக்கவில்லை சதில்லாமற்போனால் கடிசானவெட்டாக வெட்டிப் போடுவேன் இனிமேல் ஒருத்தரும் அப்படிக்கொத்த கலிமாக்கள் சொல்லாமலிருக்கிறதற்காக வேண்டி யென்றான்.

பிறகு அவருடைய கவுமுகனில் நின்றும் ஒரு பெண்பிள்ளை முதல் ஈமான்கொண்டாள்-அவளுக்கு உம்மாதுதென் றுபேர் சொல்லப்படும் அவளை நாகு அலைகிஸ்ஸலாம் நிக்காகு செய்துகொண்டார் அவள் ஆண்பிள்ளைப்பெற்றாள் அந்தப் பிள்ளைகள்பேர், ஹாமு-சாமு-யாபிது மூன்று பெண்பிள்ளைகளையும் பெற்றாள் அவர்கள்பேர்-ருகுத்-குறத்து-மறுபுறத்து-பின்பு ஒரு பெண்பிள்ளை ஈமான்கொண்டாள் அந்த மனிதியையும் நிக்காகுசெய்துகொண்டார்.

அவளுக்குப் பேர்-வஹிலத்தென் றமகாவிது அவள் கன்ஆன் என்ற ஒரு ஆண்பிள்ளையைப் பெற்றாள் பிறகு அந்தப்பெண்சாதி முனைபிக்காக விருந்து முந்தின தீனிலே போய்விட்டாள் நாகு அலைகிஸ்ஸலாம் தினக்தோறுங் கவுமுகனுடைய மஜ்லிசனிலே போய் அல்லாவுக்கு இயாதத்துச் செய்கிறத்தனவிலேயும், பாவத்தை விலக்கிக் கொள்ளுகிறத் தனவிலேயும் அழைப்பார்-கவுமுகன் வீட்டிலிருந்து புறப்பட்டு அவனையடிப்பார்கள் அவருக்கு உடம்பு மறக்குமளவும் பிறகு காலைப் பிடித் திழுத்துக் குப்பையிற் கொண்டுபோய் எறிந்துபோடுவார்கள்.

தெளிவுபெற்ற பிறகு மறுபடியும் கவுமுகனிடத்திலே வந்து அழைப்பார் முதற்செய்தது போலே அடித்திழுத்துக் குப்பையிலே றிந்துபோடுவார்கள் - இப்படிக்கு மூன்று, தறுருமளவுஞ் செய்தார்கள்-ஒருசமனுகிறது - நாகு அவளுசுதமாயிருக்கும் அந்நூன் நாலுகைருஷமும் இவர் அவர்களை அழைக்

றதும் அவர்கள் இவரை வேதனை செய்கிறதும் இந்தப்படியிருந்தது.

பெண்பிள்ளைகளும், சிறும்பிள்ளைகளுங் கூடிஅடிப்பார்கள் தன்னைமறந்து விழுந்துவிடுவார்தெளிவுபெற்ற பிறகு முகத்தைத்துடைத்து உளுச்செய்து இரண்டுறக்கு அத்துத் தொழுது கொண்டு சொல்லுவார் ஆண்டவனே யுன்னுடைய வஹுப்பத்தினாலே இஸ்லத்தினாலே யென்னையவர்கள் செய்கிறதற்கெல்லாம் சபூர்செய்கிறதே யொழிய வேறே ஒன்றும் நாடவில்லையென்பார்.

பிறகு அவர்களி ராஜா - தறுமசிலென்கிறவன் மவுத்தாய் அவனமகன் - தவுலீன் என்கிறவனை இராஜா வாக்கினார்கள் அவன்தகப்பனைக்காண மெத்தவும் வழிகெட்டவனாகவும், வம்பனாகவு மிருந்தான் அவன்மேலே நாலாவது, கறன் வந்தது அவர்கள் கூட்டமாக விருக்கிறபோதும் ஹக்குடைய இபாதத்தனவிலே அழைப்பார் ஒருமனிதன் தனியேயிருந்தாலும் அவனிடத்திற் போய் (லாஇலாக இல்லல்லாகு வயின்னி நூகு றசூலுல்லாகி) யென்று சொல்லென்பார் அவர்கள் எழுந்திருந்து கன்னத்திலும் உடம்பிலும் அடித்து அவர்நாடிமயிரை யெல்லாம் பிடுங்கிப் போடுவார்கள் ஒருவேளையவர்மேலே மண்ணையும் வாரி யிறைப்பார்கள் ஞானியக்காரனே-பொய் பேசுகிறவனே யெங்களிடத்திலே நீவர வேண்டாம் போய் விடென்பார்கள் பின்பவர்கள் விரல்களைக் காதுக்குள் வைத்துக் கொள்வார்கள் நூகு அலைகிஸ்ஸலாத்துடைய சொல்லைக் கேட்காம லிருக்கிறதற்காக வேண்டிப் பிறகு அவர்களைவிட்டுத் திரும்பிப் போய்விடுவார்.

மறுநாட்காலமே வந்துபொழுதையும், நிலவையும் நடப்பிக்கிறவன், வானத்தையும், பூமியையும்படைத்தவன் உங்களுடைய - றப்பாகவிருப்பான் அவனுக்கு நீங்கள் மாறுசெய்ய வேண்டாமென்று இப்பேர்க்கொத்த தலீலுகளெல்லாம் சொல்லுவார் அவர்களுக்கு வழிகேடே யொழிய நசீகத்துப் பிரயோசனமுங் கொடுக்கவில்லை-அல்லாகுத்தஆலா குறுஆனிலே திருவுளமானதுபோலே-நூகு அலைகிஸ்ஸலாம் சொன்னார்,

யாறப்பீ, அவர்கள் பாவத்தைநீ பொறுத்து விடுகிறதற்காக வேண்டி நான் அவர்களை யுன்னுடைய இபாதத்திலழைக்குந் தோறெல்லாம் அவர்களுடைய விரல்களையவர்கள் காதுக்குள்ளே யாக்கிக்கொள்ளுகிறார்கள், அவர்களுக்கு வழிகேடேயொழிய வேறே யொன்று மதிகமாகவில்லையென்றார்.

இன்னுமவர்கள், மேல்வீட்டின் மேலே கல்லைக்கட்டி வைத்து



க்கொண்டிருப்பார்கள்-நூகு அலைகிஸ்ஸலாம் நடந்துவந்தா லக்கல்லினு லெறிவார்கள் அவர் விழுந்துகயாத்தானவ ரில்லாமலு, மவுத்தானவ ரில்லாமலு மிருப்பார்-அவரை யிழுத்துக் குப்பையி லெறிந்துபோடுவார்கள் -பக்கிசாரங்கள்வந்து சிறகினாலே விசிறிக்கொண்டிருக்கும் தண்ணீரைக் கொண்டுவந்து முகத்திலே தெளிக்கும்.

பின்பு தெளிவுபெற்று எழுந்திருந்து மறுநாளைக்கும் போயழைப்பார் அவர்கள் ஜவாபு சொல்லாமற் சொல்லுவார்கள் நூகே எங்களுடைய அடியும் உன்னை வருத்தமாக்கி வைக்கவில்லை உன்னைநாங்கள் கண்குறைச்சலாகக் காண்கிறது முனக்குவெட்கமில்லை, நீர் நபியென்று சொல்லி இகலாத்திலே யெங்களை யழைக்கிறீரோ அது உண்மையாக விருக்குமானால் நாங்கள் செய்கிற நோவினையை உம்முடைய - றப்பு காத்துக்கொள்ள வேணுமே அப்படி யல்லாமல் நீர் நோவினைப் படுகிறீரோ உம்மை-றப்பு பயித்தியத்தின் மேலே சுமத்தி வைத்தானென்பார்கள்.

அப்போது நூகு அலைகிஸ்ஸலாம் சொல்லுவார் எனக்குப் பயித்திய மில்லைஎன்கிலும் நீங்கள் ஜாகிலான கவுமுகள் உங்களுடைய தகப்பன் மாரையும்-பாட்டன்மாரையும் அழைத்தேன் அவர்களும் ஈமான் கொள்ளாமல் மவுத்தானார்கள் அவர்கள் கைசேதப் பட்டுக்கொண்டு அதாபிலே யிருக்கிறார்கள் நீங்கள் எனக்கு ஈமான் கொள்ளுங்கள் அஜீம்என்கிற நாசத்துடைய அதாபைவிட்டும் சலாமாவீர்களென்றார்.

இன்னுமுங்கள் பிழையும் பொறுத்துவிட்டு குறிக்கப்பட்ட அஜல் வருமளவும் உங்களைப் பிறபடுத்தி வைப்பானென்றார் அந்தஹாலிலே நூகுக்கும், காபிர்களுக்கும் ஆறு கறன் அறுநூறு வருஷமாய்ப்பேச்சுது ஏழாவது கறனானபொழுது தவுலீனுபுனு தறுமசிலென்கிற இராஜாவு மவுத்தாய்ப் போனான் அவன்மகன்-தைறதுசென்கிறவனை இராஜா வாக்கினார்கள் அவனும் தகப்பனைப் போலேயும் பாட்டனைப் போலேயும் வம்பனானவனாக விருந்தான்.

நூகு அலைகிஸ்ஸலாம் இரவிலே புத்துகான்களிடத்தில் வந்து (லாஇலாகஇல்லல்லாகு- வயின்னிநூகுறசூலுல்லாகி யென்று) கூப்பிடுவாரின்னும் புத்துகான்க்கு இபாதத்துச் செய்கிறதை விட்டு விடுங்களென்பார்.

புத்துகளெல்லாம் முகங்குப்புறவிழும் எல்லாருங்கூடிக் கடினமாக அடிப்பார்கள் பனியப்போட்டுவாற்றின்மேல் மிதிப்பார்கள் வயிற்றிலு மூக்கிலுங் காதிலு மிருந்து இர

த்தம் புறப்படும் சிறிதுவேளை இரத்தமாகச் சிந்திவிடுப்பார்.

அப்போதவர்கள் சொல்லுவார்கள், நூகே, எங்களிடத்தில் நீயிருக்குங்காலமெல்லாம் உமக்கிந்தப்படிக்குப் பிரதிசெய்வோமென்பார்கள் அவர்களில் நின்றுமொரு மனிதன் மவுத்தாகிறபோது அவன் பணத்தை அனாவாசு புத்திரர்களுக்கும் அதினுடைய காதிமகளுக்கும், மற்ற அனாவாசி பிள்ளைகுட்டிகளுக்குமாக வசியத்துச் செய்துமவுத்தாவான்- நூகு அலைகிஸ்ஸலாத்துக்கு ஈமான் கொள்ள வேண்டாமென்று பிள்ளைகளிடத்தில் வார்த்தைப்பாடு வாங்கிக் கொள்வான் அந்தமனிதன் தன் பிள்ளையை நூகு அளவிலே கூட்டிவந்து என் சின்னமகனே யிவர்தான் நூகென்கிறவர் என் தகப்பன் மவுத்தாகிறபோது எனக்கு வசியத்துச் செய்து என்னையிவரிலே நின்றும் பயந்தக்காட்டி, மவுத்தானான் நானுமுனக்கு வசியத்துச் செய்கிறேன் உன்னுடைய நினைவிட்டும் நீங்கி நூகு சொல்லுகிறதினிலே போகாதே நூகாகிறவர் வஞ்சனைக்காரர் பொய்பேசுகிறவரென்று சொல்லுவான் இந்தப்படிக்கவர் இசாரத்தி வைக்குந்தோறெல்லாம் அவர்களுக்கு வழிகேடே யொழிய அதிகமாகவில்லை.

அப்போது வானமும், பூமியும் மலாயிக்கத்துகளும்- றப்பளவிலே அழுது கொண்டு சொல்லுவார்கள். யாறப்பி - இந்தக் கொச்சத்தனமுடையாபாசிக்காரவர்கள் மேலே உன்னை அமாதியாக்கிவைத்த புதுமையதாகென்ன அவர்களுடைய பூமியில் நடந்துகொண்டு உன்னுடைய இரணத்தையும், பழவர்க்கங்களையும் தின்றுகொண்டு உன்னல்லாதவனை வணங்கிக்கொண்டிருக்கிறார்களென்றார்கள் - காட்டிலிருக்கிற ஷைவான்கள் சொல்லிச்சது யாறப்பி பாலிகளு, வமவுளறு, எங்களையெனினுல் அவர்களையெல்லாம் நாங்கள் முறித்துப் போடுகிறோம் வழைக்காக்கிப் போடுகிறோமென்று எல்லாவஸ்துகளும் அவர்களுடைய அழிச்சாட்டியத்தினின்றும் ஷக்களிலே அவர்களைஷலாக் காக்கிறதைக் கேட்டதுகள்.

பின்பு நூகு அலைகிஸ்ஸலாம் துஆச் செய்தார -ஆண்டவனே ஆறுதறன் மட்டும் நானவர்களைத் தருவாச்செய்து வந்தேன் அவர்கள்முழுமையும் வழிகெட்டிருக்கிறதே யொழிய நேர்வழியில் வரவில்லை யவர்களை ஹலாக்காக்கிப் போடென்றார்- அல்லாகுத்தஆலா குறுஆனிலே திருவுள மானதுபோலே ஆண்டவனே காபிரானவர்களில் நின்றும் ஒருத்தனையும் பூமியின்மேலே விட்டுவிடாதே.



கூப்புபேசிவருகிறார் நூகு அலைகிஸ்ஸலாம் இரவிலும், பகலிலும் ரகசியமாகவும், பரகசியமாகவும்காபிர்களைத் தவாச்செய்தார் ஒருநாள் அவருடைய கவுமுகளை யழைக்கிறபோது அவர்களி லொரு பெரியமனிதன் அவனுக்கு-குவ்வியென்றுபேர் சொல்லப்படும் அவனுமவனுடைய மகன்- ஊறாவென்கிறவனும் வந்தார்கள் குவ்வியென்பவன் மகனுக்குச் சொன்னான் என் சின்னமகனே யிந்தமனிதனாகிறவர் மெத்தவும் பொய்பேசுகிறவர், வஞ்சனை செய்கிறவரென்றான் அப்போது அவன் மகன் ஊறாவென்கிறவன் ஒருபிடிமண்ணையள்ளி நூகு அலைகிஸ்ஸலாம் முகத்தி லெறிந்தான் அவருடைய இரண்டு கண்களிலும் நிரம்பிப் போச்சுது.

அப்போது நூகு சொன்னார் ஆண்டவனே காபிரானவர்களில் நின்று மொருத்தனையும் பூமியிலே விட்டு வைக்காதே யோகிறவன் விட்டு வைத்தாயானால் உன்னுடைய அடியார்களை யவர்கள் வழிகெடுத்துப்போடுவார்கள் அவர்க ளினி மேல்வழிக்கெட்டுக் காபிராய்ப்போவார்களே அவர்களை யொழியப் பெறமாட்டார்கள் நூகு அலைகிஸ்ஸலாமுடைய துஆவுக்காக வேண்டி வானத்து வாசல்களெல்லாந் திறக்கப்பட்டது, மலாயிக்கத்துகளெல்லாரும் ஆமீன்சொன்னார்கள் அல்லாகுத்தஆலா மழையை விலக்கச் சொல்லி வானத்துக்கு வசியிறக்கி வைத்தான், புற்பூண்டு முளைக்கிறதை விலக்கச் சொல்லிப் பூமிக்கு வசியிறக்கிவைத்தான், நூகு அலைகிஸ்ஸலாமுக்குச் சப்பல்பனைச் சொல்லி வசியிறக்கிவைத்தான், அப்போது நூகு அலைகிஸ்ஸலாம் அவர் கவுமுக ளெல்லாம் முழுகிப் போகிறவர்களென் றறிந்தார் எல்லாரும் ஈமான்கொள்ளாமற் போனாலும் சிறிதுபேராகிலும் ஈமான் கொள்ளுகிறதை யவர் உவந்திருந்தார் அப்போது அல்லாகுதஆலா நூகு அவர்களிலே வசியிறக்கி வைத்தான், உம்முடைய கவுமுகளிலே நின்றும் இப்போதுஈமான் கொண்டிருக்கிறார்களே, அவர்கள் தவிர இனிமேல் ஈமான்கொள்ளுகிறவர்க ளொருத்தருமில்லை அந்தப்படிக்கு வானமும், பூமியும்படைக்க இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்னாலே துபானைக்கொண்டு பூமியிலிருக்கிற வர்களெல்லாம் ஹலாக்காவார்க ளென்று என்னுடைய இல்மிலே முந்தியிருக்குதென்றான் நூகு என்று அவருக்குப் பேர்வைக்கப்பட்டதாகவும் அவர் மேலே புலம்பிக்கொண்டிருப்பார் அதற்காகவேண்டி. அப்பெயர்கிடைத்தது இதுநிற்க.

அல்லாகுசுபுகானகூத்த ஆலா நூகு நபியைக்கப்பல்வைக்கச்சொல்லி பேசினபொழுது நூகுஅலைகிஸ்ஸலாம் கவுமுகள் கலாக்காகிறதை யெசினைக அறிந்து அவர்களைத் தாவாச்செய்கிறதை பவுக் கூபுசெய்தார் அப்போது நூகு அலைகிஸ்ஸலாம் - யாறப்பி கப்பலென்கிறதென்னவென்றார் மரத்தினலேவிடுஅது தண்ணீர்மேல் ஓடுமென்று வகியிறக்கிவைத்தான் - யாறப்பிமறமெகேயென்றார் தேக்கமரத்துடையவிளைவைநட்டும் அது (௪௰) வருஷத்திலே மரமாகும் அதைப் பலகைபோலே யறுத்துக்கப்பல்பண்ணுமென்று வகிவந்தது,

அல்லாகுசுபுகானகூத்த ஆலா அவர்கள் பெண்களுடைய குடல் வாயெல்லா மலடாக்கிப் போட்டான், பிள்ளைப்பெறவில்லை பின்புமரத்தை வெட்டச்சொல்லி யேவினான் நூகு அலைகிஸ்ஸலாம் தச்சுவேலைசெய்கிற கல் வாள்-உளி, வாச்சிதுறப்பணமுதலிய மற்ற ஆயுதங்களெல்லாம் பெட்டகத்தி லிருந்து அதையெடுத்து மரத்தைவெட்டி அதைப் பலகையாக்கின பிறகு உம்முடைய கவுமுகள் இருக்கிறவூரிலே கப்பல் பண்ணுமென்று ஏவினான் கப்பல் நீளம் ஆயிரம் முழம், அகலம் (௫௱) முழம், உயர்ந்தி (௩௱) முழமாக வைக்கச்சொன்னான் பலகை ஒன்றுடனே ஒன்று சேர்த்து ஆணியடித்து அந்தப்பலகையிலும் ஆணியிலும் ஒவ்வொரு நபியுடைய இசுமை நச்சாக்கிவையும் அந்தப்பலகை யெல்லாம் நட்சத்திரம் போலே யிலங்கும்முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமுடைய இசுமை நகசாக்கி வைக்கிறபலகை பொழுதைப் போலேயும், நிலவைப்போலேயுமிலங்கு மென்றான்.

அதினுடைய தலையைச்சாவல்த்தலையைப் போலுங், கழுத்தைப் பக்கி சாரத்துடைய கழுத்தைபோலும், வாலைச்சாவலுடைய வாலைப் போலும் பண்ணச்சொல்லி அதை மூன்று தட்டாக ஆக்கச்சொல்லி ஜிபுரியீல் அலைகிஸ்ஸலாத்தை அதையெல்லாம் நூகு அலைகிஸ்ஸலா முக்குக் கப்பல்வைக்கிறத்தைப் படித்துக்கொடுத்தனுப்பி வைத்தான் அவர்வந்து சொல்லிக் கப்பல்- தயாருனபொழுது சுக்கான் புறத்திற் பெரிய ஒரு கண்ணாடியைச் சேர்த்தார் - அந்தக்கண்ணாடிபொழுதுடைய வெளிச்சம் போலே வெளிச்சமாயிருக்கும் பின்பு கிலும் பூசிஅதினுடைய கயறுகளெல்லாம் இரும்புச் சங்கிலியாக்கினார் தட்டுகளிலே கிந்தில்களும் தூக்கிவைத்தார்.

இன்னமொரு கவுலிலே கப்பலுக் கேழுதட்டாக்கினு மென்றும் வந்திருக்குது-கப்பல்பண்ணித்தீர்ந்தபொழுது கப்பலிலொருவிடத்திற் செல்பிடித்தது அந்தச்சொல்லை



யெடுத்துப்போட்டு அதைத் திருத்தமாக்கிவைக்க ஒருமாதஞ்சென்றது பிறகு மறுபுறத்திலும் பிடித்தது அல்லாகுத்த ஆலாயிடத்திலே முறைப்பாடுசெய்தார் நூகுஅலைகிஸ்ஸலா மனவிலே வகியிறக்கிவைத்தான் கப்பல் திருத்தமாக மாட்டாது.

இன்னும் நாலாணியை யடித்தாலொழிய அந்த ஆணியிலேயும் நாலுபேரை நக்சாக்கி வையும் அந்த நாலுபேரும் அன்பியாக்கள் றசூலு[illegible]துப் பின்னாலே யேத்தமானவர்கள்.

அப்போ தவர்கள் நாலுபேருமாரென்று கேட்டார், முகம்மதுடைய அசுகாபிகள் அவர்கள்பேர் ஒத்திக்கு-பாறாக்கு-உதுமான்- அலிறலியல்லாகு அன்கும் - இந்தநாலுபேரையும் ஆணியில் நக்சாக அடித்தபிறகு கப்பல் ஒத்தாச்சுது அல்லாகு சுபுகானகூத்தஆலா கப்பலைப் பேசவைத்தான் மனிதரெல்லாம் பார்த்துக்கொண்டிருக்க அவர்கள் கேட்கத்தக்கதாக லாஇலாக இல்லல்லாகு இலாகில் அவ்வலீனு - வல ஆகிறு நான் கப்பலாக விருப்பேன்-என் மேலேறினவர்கள் தப்பிப்போவார்கள் வெருமை லிருந்தவர்கள் கறுக்காதப்போவார்கள் - என் மேலே இகுலாசையுடைய பேர்களே யொழிய மற்றவர்களேறமாட்டார்களென்று கப்பற் சொன்னபொழுது.

நூகு அலைகிஸ்ஸலாம் கவுமுகளைப்பார்த்து இப்போதாகிலும் ஈமான் கொள்ளுகிறீர்களா வென்றார் அப்போது கவுமுகள் சொன்னார்கள் அந்தக் கப்பல்பேசினது உம்முடைய சிதுறிலே நின்றுங்கொஞ்சம் சிகுறாக விருக்கு மென்றார்கள் பிறகு நூகு அலைகிஸ்ஸலாமும் அவர் பிள்ளைகளுங் கப்பல் வைக்கிறபோது காபிர்கள் வந்துபரியாசம் பண்ணி நூகே நபியாகவிருந்ததற்குப் பின்னாலே தச்சனாய் விட்டாரென்பார்கள்.

இன்னும் சொல்வார்கள் அந்தப் பயித்தியகாரனைப் பாருங்கள் தண்ணீர்மேலோடுகிற வீட்டைக் கட்டுகிறார் தண்ணி செங்கேயிருக்குது ஓடுகிறதற் கென்பார்கள் அப்போது நூகு சொல்லுவார் நீங்கள் பரியாசமடிக்கிறதுபோலே நாங்களும் பரியாசமடிப்போம் இனிமேல் எங்கள் பரியாசமும், வெற்றியுமறிவீர்களென்பார்.

அப்போது அல்லா வகியிறக்கிவைத்தான் நூகேயவர்கள்மேலெனக்குக் கோபங் கடிசாக விருக்குது கப்பலைச் சுறுக்காகப் பண்ணிமுடியுமென்ற பிறகு நூகு அலைகிஸ்ஸலாம் தம்முடனேயும், பிள்ளைகளுடனேயும் இரண்டு தச்சனைக் கூலிக்கு வைத்துக்கொண்டார்.

இபுனு அப்பாசும், லசிசாக்கும் கப்பலுடைய நீளம் (௩௱) முழம்

அகலம் (௩௰) முழமென்றார்கள் க
ப்பல் தயாராகத் தீர்ந்தபொழுது
நூகு அலைகிஸ்ஸலாம் —கருபத்துல்
லாவுக்கு ஹஜ்ஜுக்குப் போகச்செ
லவுகேட்டார் போகச்சொல்லி அல்
லாசொன்னான் அவர் போயிருக்கிற
போது கவுமுகள் கப்பலைக்கொளு
த்திப்போட நாடினார்கள் அல்லாகு
த்த ஆலா மலாயிக்கத்துகளை யனு
ப்பிவைத்துக் கப்பலை வானத்துக்
கும், பூமிக்கும் நடுவே கொளுவச்
சொல்லி யேவினான்.

அவர்கள் சுமந்துகொண்டுபோ
ய் ஆகாயத்திலேவைத்தார்கள் கவு
முகள் பார்த்துக்கொண்டிருக்கிறா
கள் அவர்களாலே ஒன்றுமேலவில்
லை நூகு அலைகிஸ்ஸலாம் ஹஜ்ஜுசெ
ய்து தீர்ந்தபிறகு கவுமுகள் கலாக்
காகத் துஆச்செய்தார் மலக்குகள்
ஆமீன்சொன்னார்கள் அல்லாகு சுபு
கானகூத்த ஆலா அவர் துஆவைக்
கபூல்செய்தான்.

௱ு ஆனிலே திருவுளமானது
போலே எம்முனி நூகுஅலைகிஸ்ஸலா
த்தைத் திக்குசெய்யும் அதற்குமு
ன்னாலே அவர் துஆச்செய்த நேர
த்திலே அவர் துஆவை நாம்கபூல்ச்
செய்தோம் அவரையும் அவர் குடு
ம்பத்தாரையும் நாம் வலுப்பமான
வருத்தம் கடலில் முழுகிறதில்நின்
றும் ஈஜாத்தாக்கி வைத்தோமென்
று திருவுளமானான் வுச்சுசெய்து
தீர்ந்தபிறகு திரும்பிப்பார்த்தார்.

ஆதம் அலைகிஸ்ஸலாத்துடைய
தன்னூறு - கருபத்துல்லாவுடைய
வலதுபுறமாக வைத்திருக்கக்கண்டு
யாநப்பி இந்தத் தன்னூறை என்
னுடைய வீட்டுக்குக்கொண்டுபோ
கிறேனென்றார்—அல்லாகுத்த ஆலா
மலாயிக்கத்துகளை யேவித் தன்னூ
றைச் சுமந்துகொண்டுபோய் நூகு
அலைகிஸ்ஸலாம் வீட்டில் வைக்கச்
சொல்லி யேவினான்.

அன்றையிலவர் வீடு கூபா பள்
ளியிலே யிருந்தது ...
லைகிஸ்ஸலாம் ஹஜ்ஜுசெய்து திரும்
பிவந்தபொழுது கப்பலை ஆகாயத்
தில் நின்று யிறக்கப்பட்டது அல்
லாகு சுபுகானகூத்த ஆலா அவருக்
கு வீட்டிலிறக்கி வைத்தான்-யேயிற
லைறவான்கள் புழுப்பூச்சிகளையும்,
புலிகாடிகளையும், ஆடுமாடு ஒட்டக
ங்களையும் பக்கிசாரங்களையும் கப்
பலிடத்தில் வந்து காவிருக்கக
வென்று கூப்பிடச்சொல்லி வசிவ
ந்தபிறகு கல்லரவல்துவையும் கூப்
பிட்டார்.

அந்தச்சந்த மகரிக்கு மஹரிபு
அளவும் எதிர்ச்சது பிறகு கூட்ட
ங்கூட்டமாக எல்லாம் முன்னேக்கி
வந்தது அப்போது நூகுஅலைகிஸ்
ஸலாம் சொன்னார் ஆணும் பெண்
ணுமாக இரண்டிரண்டு ஜோட்டை
க் கப்பல்மே லேற்றிக்கொள்ள நா
னேவப் பட்டேனென்று எல்லா
ஸ்துகள் பேருக்கும் சீட்டுப்போட்



டுச் சீட்டுவந்தபேர்களைக் கப்பலில்
ஏற்றிக்கொண்டார்.

ஆதமுடைய மக்களையே யொ
ழிய அப்போது அவருக்கு ஈமான்
கொண்டபேர் (௮௰)பேர்களிருந்தா
ர்கள் ஆண் பிள்ளையும் பெண் பிள்
ளைகளும் அவர்களையுமேற்றிக்கொ
ண்டார் - அந்தநாளையிலே பாம்புக்
தேளும் பெரியபட்டைப்பாக விரு
க்கும், புலி, யானைபோலிருக்கும்
இபுரியில் அலைகிஸ்ஸலாம் வந்து பு
லியைச் சிறகாலடித்தார் அந்தப்பு
லி பெக்காலமும் ஈசலாய்க்காய்ச்ச
லிருக்கிறதாக வாச்சுது பிறகு பா
ம்புடைய வாயிலடித்தார் - அதினு
டைய விசப்பல் விழுந்துபோச்சு
து பிறகு தேளையடித்தார் அதினு
டைய கொடுக்கு விழுந்துபோச்சு
து, பனி ஆதங்களை ஒருவனுவு
ம் நோவினை செய்யமாட்டாது மு
ழுகிப்போகிறதற்குக் குறிக்கப்பட்
ட வருத்தந் தன்னூறில் நின்றுந்
தண்ணீர் சுரந்தால் அப்போது ஈறு
க்காக்கிப் போடுகிறேனென்று, அ
ல்லாகு சுபுகானகூத்த ஆலா வஹு
தாச் செய்திருந்தான், நூகு அலை
கிஸ்ஸலாம், தன்னூறைப் பார்த்து
க்கொண் டிருக்கிறார்.

௱ஜபுப்பிறையன்றைக்கு, ஹறு
அவகுத்திலே தன்னூறில் நின்று
மொரு சத்தமுண்டாச்சுது உம்மு
டைய கப்பலிலே யெல்லாரையுமே
ற்று மென் றுண்டானபொழுது ஒ

வ்வொரு கல்குகளுக்கு இரண்டிர
ண்டுஜோடு ஏற்றிக்கொண்டு முந்தி
னதட்டிலே மனிதரையும், ஆதம்
அலைகிஸ் ஸலாத்துடைய மையித்
தையும் ஏற்றிக்கொண்டார் அப்
போது அவர், ஈசது பேதகமாகவி
ல்லை-நகம்தவிர அந்தநகம் பச்சை
யாக விருந்தது-வாசனையுண்டாதவி
ல்லை.

பிறகு ஆதமுடைய தாபூத்தை
யுமேற்றிக்கொண்டார் (௩௱௩) ற
ருக்சலுடைய அசாக்களுமுண்டா
யிருந்தது ஒவ்வொரு அசவிலே
அவரவர்கள் பேருமெழுதி யிருந்த
து-மற்ற அன்பியாக்கள் அசாவெ
ல்லாம் பேரில்லாம லிருந்தது.

இரண்டாவது தட்டிலே பெண்
பிள்ளைகளையும் ஹவ்வா அலைகிஸ்ஸ
லாத்துடைய மையித்தையும் ஏற்
றிக்கொண்டார்-மூன்றாவது தட்டி
லே புழுப் பூச்சிகளும், ஆடு, மாடு
ஒட்டகங்களு மேற்றிக்கொண்டார்
நாலாவது- தட்டிலே பக்கிசாத்து
டைய இனிசகு ளடங்கலையு மேற்
றிக்கொண்டார்-ஐந்தாவது - தட்டி
லே புலி அதுபோற்கொத்த,ளெற்று
செய்கிற வஸ்துகளெல்லா மேற்றி
க்கொண்டார்- ஆறாவது தட்டிலே
பாம்பு தேள் இவைகளையெல்லா
மேற்றிக்கொண்டார்.

நூகு அலைகிஸ்ஸலாம் கப்பலின்
நடுவே நின்றுகொண்டு இந்த ஆயத்
தை ஓதினார் (பிசுமில்லாகி முஜ்ம

ருக வழு நாசாக) வென்று சொன்ஞர். வம்புறவி யல்லாகு அங்குமே யிவருகிருர் கப்பலி லேறினவர்களுடங்களும் (பிசுமில்லாகி அஸாமில்லகி நாகென்று) சொன்ஞர்கள் அவர் அவர்களிடத்திற் போகுமளவும் தக்பீறு, தகுலீலு சொல்லுகிறது கொண்டு சத்தத்தை உயர்த்தியாக்கிஞர்கள் கழுதையுடைய வாலைச் சைத்தான் பிடித்துக்கொண்டு வாலுடைய மறைவிலே யிருந்தான் அது ஏருமலிருந்தது, நாகுஅலைகிஸ்ஸலாம் ஏறேறென்ருர் சைத்தான் வாலைப் பிடித்துக்கொண்டிருக்கிற படியினலே யேறக்கூடவில்லை- பிறகு கோபமாக, யாசைத்தான் கப்பலில் ஏறென்ருர் சைத்தானுங் கூட ஏறிக்கொண்டான் நாகு அலைகிஸ்ஸலாம் சைத்தானைப்பாராமல் கூனே; நீ யென்கப்பலிலேன் ஏறினுய் வெளியே போவென்ருர்.

அப்போது சைத்தான் சொன்ஞன்-நாகே நீர்தானே யாசைத்தான் ஏறென்று சொன்னீர்களே யென்ருன்-நீயென் கப்பலிலிருக்கிறதைநானுவந் திருக்கவில்லை யென்ருர்-உங்களுக்கிர வில்லாமல் நானேறவு மில்லையென்ருன் அப்போது சைத்தானைக் கொல்லநாடிஞர் அவன்சொன்ஞன் — என்மேலுமக்குக் கையில்லை யென்னுடைய அஜல் முந்தின குறாதுமட்டும் பாக்கியாக விருக்குமென்ருன்,

அப்போது நீ யென்கப்பலிலே யிருந்தால் ஒருத்தரையும் சலேக்க வேண்டாமென்ருர் கப்பலிலே கலைக்கிறதில்லை வெளியே புறப்பட்டபொழுது கலைப்பே னென்ருன் பின்பு சொன்ஞன் நாகே உம்முடைய,நப்பிடத்திலே யென் தௌபாக்கபூல்ச் செய்கிறதைக் கேளுமென்ருன், நாகு அலைகிஸ்ஸலாம் அவனுடைய,நப்பைக் கேட்டபொழுது,நப்புசொன்ஞன் அவனுடைய தௌபாவாகிறது ஆதம் அலைகிஸ்ஸலாத்துக்குச் சுஜூது செய்கிறதென்ருன், நாகு அலைகிஸ்ஸலாம் அந்தச்செய்தியைச் சொன்னபொழுது அல்லாகு சொன்ஞன் — அவர் ஹயாத்தாக என் நப்புடைய கபர்க்கத்தி லிருக்கிறபோது சுஜூது செய்யவில்லையே இப்போது செய்வேனு வென்ருன்.

பின்பு அல்லாகு சுபுகானகுத்த ஆலா ஷிபுரியில் அலைகிஸ்ஸலாத்துகளவிலே வகியிறக்கிவைத்துத் தண்ணீருக்கு அதிகாரியாக விருக்கிறமலக்கை அளவில்லாமலும், நிறையில்லாமலும், கதறில்லாமலும் தண்ணீரைப் பூமியி லிறக்கச் சொல்லியேவச் சொன்ஞன்—ஷிபுரியில்கோபமென்கிற சிறகைக்கொண்டு தண்ணீரை யடியுமென்ருர் அவரடித்த பொழுது தண்ணீர் அருவிகளெல்லாம் அளவில்லாமலும், ஒஜனில்லாமலும் சுரந்தது, ஆகமுடைய, தன்னூறுஞ் சுரந்தது, வானமுமழைபெய்ய வைத்தது வானத்துடைய தண்ணீர் சிவப்பாகவும், பூமி யுடைய தண்ணீர் மஞ்சள் நிறமாகவு மிருந்தது பின்பு தண்ணீர்பூமியிலிருக்கிற ஓடக்கரையிலும் பள்ளங்களிலும் மின்வெட்டி மறைகிற நேரத்திலே நிறைந்து போச்சுது, பிறகு பூமிபடங்களு மின்னலு, மிடியும், தூபானும் கடிசாகிக் கோபத்துடைய மலாயிக்கத்துகள் — அவர்கள் சிறகைக் கொண்டடிக்கிறதும், மிகுதமாச்சுது அல்லாகுசுபுகானகுத்த ஆலா அந்த மலாயிக்கத்துகளுக்குப் பூமி முறிந்து போகாமல் அடியுங்களென்று வகியிறக்கி வைத்தான் சைத்தான்களெல்லாம் புத்துகானுடைய வயிற்றிற் புகுந்து கொண்டு புத்துகான்கள்பேசுகிறதுபோலேபேசும் அதைக்கொண்டு கவுமுகள் வழிகெட்டுப் போவார்கள்.

அந்தச் சைத்தான்கள் தூபானைக் கண்டபொழுது புத்துகானுடைய வயிற்றைவிட்டும் புறப்பட்டோடுகிறபோது மலாயிக்கத்துகள் சிறகினலடித்துச் சைத்தான்களும் புத்துகான்களும் கூடக் கருக்காகமுழுகிப்போச்சுது அல்லாகுத்த ஆலா மலாயிக்கத்துகளைப் பைத்துல் ஹறாமைச் சுமந்துகொண்டுபோய் முன் வானத்தில் வைக்கச்சொல்லி யேவிஞன்,

அந்த நாளையிலே கீசுறுல் அசுவது என்கிற கல்மெத்தவும் வெள்ளையாகவிருக்கும் பிறகு கப்பற்றண்ணீரில் மிதந்து ஓடிச்சுது அல்லாகுசுபுகானகுத்த ஆலா, குறுஆனிலே திருவுளமானதுபோலே என்னி அந்தக் கப்பலாகிறது அவர்களையெல்லாஞ் சுமந்துகொண்டுமலைபோ லிருக்கிற அலைகள்மேலோடிச்சுது,

அப்போது நாகு அவர் மகன் கன்ஆனைக் கூப்பிட்டார், அல்லாகுத்தஆலா குறுஆனிலே திருவுளமானுன், நாகு அலைகிஸ்ஸலாம் அவருடைய மகன் கன்ஆனைக் கூப்பிட்டார் — என்னுடைய சின்னமகனே யெங்களுடனே நீயும் கப்பலிலேறிக்கொள் காபிர்களுடனேயிருக்கவேண்டா மென்ருர் அப்போது கன்ஆன் ஒருமேட்டின்மேலேயிருந்து சொன்ஞர் தண்ணீரில் நின்று மென்னைக் காத்துக்கொள்ளுமே அப்படிக்கொத்த மலேமேலே நானேறிக்கொள்வேனென்ருர்.

அப்போது நாகு அலைகிஸ்ஸலாஞ்சொன்ஞர் அல்லாகுத்தஆலாவுடைய அம்றில் நின்றும், அவனுடைய கலாவில்நின்றும்காத்துக்கொள்ளுகிறவர்கள் இன்றையில்லொருத்தருமில்லை அவன் ஈமான்கொண்டபேர்களில் நின்றும், றகுமத்துச் செய்வானே அவர்களே யொழிய வென்ருர் — அதற்கிடையில்

நூகு அலைகிஸ்ஸலாத்துக்கும் அவர் மகன் கன்ஆனுக்கு மிடையிலேயொரு அலை வந்து மறைத்துக்கொண்டது கன்ஆன் முழுகிப்போய்விட்டார்—மலையிலே சேரு முன்னாலே- பின்பு கப்பல் அவருடைய கவுமுகள் வீடுகளைச் சுற்றிக்கொண்டு நடந்தது அல்லாகு சுபுகானகூத்த ஆலா கப்பலுக்கு வஹியிறக்கி வைத்தான்.

உன்மேலிருக்கிறவர்களைப் பிள்ளையைத் தாய் எப்படிப் பேணிக் காத்துக் கொள்வாளோ அந்தப்படிக்கு நீயும் பேணிக்கொள்ளென்று அவர்களுக்குத் தூபானுடைய அமளிகளொன்றுந் தெரியாமலிருக்க இன்னம் நூகையும் கப்பலிலிருக்கிற பேர்களடங்கலையும், பூமியுடைய கோணங்களி லெல்லாஞ் சுற்றித்திரியென்று கப்பலுக்கு வஹிவந்தது.

பிறகு நூகு அலைகிஸ்ஸலாம் கப்பலினது தட்டுடைய வாசலெல்லா மடைத்துப்போட்டார் சீது,இதுரீசலைகிஸ்ஸலாத்துடைய சுருவை ஓதிக்கொண்டிருந்தார்-கப்பலில் இருக்கிறவர்களுக்கு இரவும்,பகலுந்தெரியாது என்கிலும் ஒருவெள்ளைக்கல் கப்பலுக்கு நடுவாலேவைத்திருந்தது அதினுடைய வெளிச்சங் குறைந்தானாற் பகலென்றும் அதினுடைய வெளிச்சம் அதிகமானால் இரவென்றறிவார்கள்.

சாவல்சுபுகாச்சுதானுவ் சிறகை யடித்துக்கொண்டு கூவும் (சுபுகானல் மலிக்கில் குத்தூசு— சுபுகானமன் அஜ்ஜிஅபல்வரிலா வசூவினனாரி...கே சுபுகுடைய வகுத்தாச்சுது சுபுகு தொழுதுகொள்ளும் அல்லாகு சுபுகானகூத்தஆலாஉமக்கு,றகுமத்துச் செய்வானென்றுகூவும், பிறகு துனியா அடங்கலும் தண்ணீருடைய தட்டுப்போலாய் விட்டது ஒரு கல்லையும், ஒருமலையையும், ஒருமரத்தையும், பூமியிற் காணப்படவில்லை உயர்த்தியான மலைகளுக்கு மேலே தண்ணீர்(சய) முழம் உயர்த்தியாச்சுது கப்பல் ஒடிஅபீத்தல் முகத்திஸிடத்தில் எத்தினபொழுது அவ்விடத்தில்தரிபட்டுநின்று அல்லாவுடைய வுத்திரவுகொண்டு கப்பல் பேசிச்சுது.

நூகே யிந்த இடமாகிறது பைத்துல் முகத்திசாயிருக்கும் உம்முடைய பிள்ளைகளில் நின்றும் அன்பியாக்கள் இதிலேவந்து குடியிருப்பார்களென்று சொல்லிப் பின்பு கப்பல் நடந்து கஃபத்துல்லா அளவிற்சென்ற பிறகு, தல்பியத்துச் சொல்லிக்கொண்டு ஏழுதரம், கஃபத்துல்லாவைச் சுற்றித்தவாபுசெய்தது, நூகு அலைகிஸ்ஸலாமும்,அவருடனே ஈமான்கொண்ட பேர்களும், தல்பியத்துச் சொன்னார்கள்

பின்புகப்பல் நடந்தது - ஒருஇடத்திலே அதுதரிபடவில்லை,நூகு



அலைகிஸ்ஸலாத்தைக் கூப்பிட்டு அது இந்த இடமென்று சொல்லியே யொழிய அந்தமலை யின்னமலையென்று அறிவித்தே யொழிய அந்தப்படிக்குக் கப்பல் நூகைச்சுமந்து கொண்டு மகரிக்கு, மஷ்ரிபளவும் சுற்றித் திரிந்தது பின்பு நூகு அலைகிஸ்ஸலாத்துடைய கவுமுகளினது ஊரில்வந்து தரிபட்டு நின்று சொல்லிச்சுது அல்லாவுடைய நபியே உம்முடைய கவுமுகளினது கழுத்திலே சங்கிலிபோடுகிற சத்தத்தை நீர் கேட்கவில்லையா வென்றது.

அல்லாகு சுபுகானகூத்த ஆலா குறுஆனிலே திருவுளமானென்னவர்கள் செய்த பாவத்தில் நின்றும் அவர்களைத் தண்ணீரில் மூழ்த்தப்பட்டு ஜகன்னமென்கிற நரகத்திலவர்களைப் புகுதவைக்கப் பட்டது, பிறகுகப்பல், றஜபுமாதமுதல் தெய்தி துவக்கி துல்சச்சு மாதம் ஆகிறளவும் ஆறுமாதஞ் சுற்றித்திரிந்து ஆறுமாதத்தைக்குப் பின்னாலே ஜூதியென்கிற மலையிலே தரிபட்டது.

பின்பு அல்லாகுத்த ஆலா பூமியையும், வானத்தையும் எவினான்— எஃனிபூமியே யுன்னுடைய தண்ணீரை நீ முழுங்கிப் போடு, வானமே உன்னுடைய மழையைப்பெய்யாமற் பிடித்துக்கொள் தண்ணீரைப் பூமியைத் தொட்டுங் குறைக்கப்பட்டது அவனேவினதுபோலே அலையடங்கலும் பனவாகப்போகிறது, ஊக்குடைய இல்மிலுண்டாயிருந்த காரியத்தைக் கற்பிக்கப்பட்டது கப்பல் ஜூதி யென்கிற மலையிலே தரிபட்டுநின்றது அநியாயஞ்செய்த கவுமுகள் ஹலாக்காகிறதாக கலாக்காரர்களென்றுசொல்லப்பட்டது.

பின்புவான மழைபெய்கிறதைப் பிடித்துக்கொண்டது, பூமியும் தண்ணீரை முழுங்கிப்போட்டது- நூகுஅலைகிஸ்ஸலாம் அவர் மகன்கன்ஆன் முழுகிப்போனதில் மிக்கு துசெய்துகொண்டிருந்து அவருக்குச் சபூறு செய்யக் கூடாமலவர் றப்பிடத்திலே கேட்டார்- என்னுடைய றப்பே - என்மகனாகிறவன் என்னுடைய குடும்பத் தாரிலே சேர்ந்தவன் நீயெனக்கு வகுதாச் செய்திருக்கிறாய் உம்மையும், உம்முடைய அகுலுகளையும் நஜாத்தாக்கி வைக்கிறேனென்று வகுதாச் செய்தது ஹக்காயிருக்குமே யென்னுடைய மகனென் அகுலுகளிலேநின்று முள்ளவன் அவனைநீ ஹலாக்காக்கிப் போட்டாயே யென்றார் அப்போது, றப்புசொன்னான் உன்மகனாகிறவன் உன்னுடைய அகுலுகளில்நின்று முள்ளவனல்ல அவன் அமல்ஸாலிகான அமலல்லாத தாயிருக்கு மென்கிறது அவன்முமினானவனல்ல என்கிறது.

இபுனு அப்பாசு றலியல்லாகு
அன்கு பேசிவருகிறார் நபிமார்கள்
பெண்சாதிமாரில் ஒருதரும் பசா
து சதிமானஞ் செய்யவில்லை நூ
கு அலைகிஸ்ஸலாத்துடைய இரண்
டாவது பெண்சாதியும், லூத்து அ
லைகிஸ்ஸலாத் துடைய பெண்சாதி
யுமேயொழிய நூகு அலைகிஸ்ஸலா
த்துடைய பெண்சாதி கவுமுகளி
டத்திலேபோய் நூகுமசுநூ னெ
ன்றுசொல்லுவாள்—லூத்து அலைகி
ஸ்ஸலாத்துடைய பெண்சாதிவிருந்
தாளிகள் லூத்திடத்தில் வந்தால்
கவுமுகளுக்கு அறிவிக்கிறவளாக
விருந்தாள்.

பிறகு நூகு அலைகிஸ்ஸலாம் க
ப்பல் கதவைத்திறந்து பாத்து க
வுமுக ளெல்லாரும் அழிந்து பனை
வாகப் போனதை எந்நேரமும் வி
சாரமாக விருப்பார் அப்போது அ
ல்லாகு சுபுகானகூத்தஆலா வகியிற
க்கிவைத்தான்—நூகே உம்முடைய
கவுமுகளைவெகுநாளாக நீர் இகலா
த்திலேயழைத்தீர் அவர்கள் உமக்
கு ஜவாபு சொல்லவில்லை—பிறகுஅ
வர்களெல்லாம் ஹலாக்காகப்போகி
றதற்குப் பதுவாச்செய்தீர் நானும்
முடைய பதுவாவைக் கபூல்ச்செய்
து பெரியவர்கள்செய்த பாவத்தை
க்கொண்டு அவர்களை யெல்லா மு
ழ்த்திப்போட்டேன்.

சிறுபிள்ளைகள் ஹயாத்தாகவிரு
ந்து பெரியவர்களானாலும் அவர்க
ள் ஈமான் கொள்ளமாட்டார்களெ
ன்று என்னுடைய இல்மிலிருந்தப
டியினாலே அவர்களையும் ஹலாக்கா
க்கிப் போட்டேன் அதின்மேலே
நீர் விசாரப்படவேண்டிய தென்ன
நான் இன்னம் சிறிது சல்க்குகளை
ப் படைப்பேன் அவர்கள் என்னை
வணங்குவார்கள் எனக்கு மாறுசெ
ய்தார்களானால் நூகே அவர்களையு
ம் ஹலாக்காக்கிப் போடுவேன் எ
ன்னுடைய இல்மிலே முந்தியிருக்
குது இனிமேல் உம்முடைய கவு
முகளை அதாபுசெய்த தற்குப் பி
ன்னாலே வேறே கவுமுகளைத் தா
பாலைக்கொண்டு அதாபுசெய்யமா
ட்டோ மென்கிறது முந்தியிருக்கு
தென்றான்.

பிறகு நூகுஅலைகிஸ்ஸலாம் சந்
தோஷமானார் பிறகு கப்பலிலே
ஹைவான்களுடைய புழுக்கை மி
குதியாயிருந்தது அல்லாகுத்தஆ
லா வகியிறக்கி வைத்தான் யானையு
டைய வாலை முறுக்கச்சொல்லி,மு
றுக்கின வுடனே வாலிலே யிருந்
து, கின்ஜீறு அணும்பெண்ணு மு
ண்டாகி யந்தப் புழுக்கைகளை யெ
ல்லாந் தின்றுபோட்டது.

கப்பலிலே எலிகள் மெத்தவு
முண்டாகிக் கயிற்றை யெல்லாங்க
டித்தது அல்லாகுத்தஆலா வகியிற
க்கி வைத்தான் புலியுடைய இர
ண்டு கண்ணுக்கு மிடையிலே அ
டிக்கச்சொல்லி அடித்த வுடனே



புலியுடைய மூக்கில் நின்றும் விரு
வம் பூனை விழுந்து எலிகளை யெல்
லாம்பிடித்துப்போட்டது.

பின்பு நூகு அலைகிஸ்ஸலாம் கா
கத்தை யனுப்பிப் பூமி யடங்கனு
ம் முழுகிப் போச்சுதா பார்த்து
வாவென்றார் காகம்போன விடத்
தில் மையித்தா யிருக்கிறவர்களைக்
கண்டு இறங்கித் தின்றுகொண் டி
ருந்ததுவரவில்லை.

அதனாலே காகத்துக்குப் பயங்
கரத்தைக் கொண்டு பதுவாச்செ
ய்தார் அதற்காக வேண்டிய காகம்
மருகுத லில்லாமற் பயந்துகொண்
டிருக்குது பிறகு புறுவை யனுப்பி
வைத்தார் அது பூமியெல்லாம் பற
ந்து பார்த்து அதினுடைய சொண்
டிலே ஜெயித் தூனிலையைக்கொத்
திக் கொண்டு காலிலே சேற்றைப்
பூசிக்கொண்டு வந்து அல்லாவுடை
ய நபியே பூமியிலும்,பூமியி லிருக்
கிறவர்க ளடங்கலும் ஹலாக்காகப்
போனார்கள் பூமியுடைய முகத்தி
ன்மேலே ஒருமரமு மில்லை ஜெயித
தூன் மரந்தவிர என்று சொல்லிச்
சுது அது பச்சைப்புறுவாக விருந்
தது அந்தப் புறுவுக்கு மனிதரிட
த்தில் மருகுதலாக விருக்கத் துஆச்
செய்தார்.

குதியென்கிற மலையாகிறது மூ
சல் என்கிற ஊர்க்கடலிலே ஒருஜெ
ஸீறு யிருக்குது — அந்த ஜெஸீறுவி
லிருக்கிற மலை அந்த மலையிலேகப்
பல்சேர்ந்த சுபபாகிறது ஷேர்த்தி
யான மலைகளெல்லாம் தன்னுயிர் எ
ன்மேலே வரமாட்டாதென்று பெ
ருமை பேசிக்கொண் டிருந் ததா
லே குதியென்கிற மலை பேசாமல் ஹ
க்குடைய வலிமைக்குத் தாழ்ச்சிசெ
ய்துகொண் டிருந்தபடியினாலே க
ப்பலை அவ்விடத்திற் சேர்த்தான்.

இபுனு அப்பாசு றலியல்லாகு
அன்கு பேசிவருகிறார்

ருமலிருந்தவர்கள் ஒருவரும் கப்
பலிலே யெல்லாரும் ஹலாக்கானா
ர்கள் இபுனுகு இறக்கையேயொ
ழிய அவன் நூகு அலைகிஸ்ஸலாமி
டத்தில் வந்து என்னையும் கப்பலி
லேற்றிக் கொள்ளுங்க ளென்றான்
அவரேற்றிக் கொள்ளவில்லை அவ
னுடைய நீளம் (௩௰௩ முழமாக)
முழமான படியினாலே வார்த்தப்
பெருவெள்ளம் அவன் முழங்காலை
க்கடக்கவில்லை துபான் உண்டான
து நூகு அலைகிஸ்ஸலாத்துடைய
வயது-அறுநூறும்— வருஷம் ஆத
ம் அலைகிஸ்ஸலாம் பூமியி லிறங்கி—
இரண்டாயிரத்து இருநூற்றைம்ப
தாம்,வருஷம் நிரப்பமானதி லுண்
டாச்சுது.

அல்லாகுத்த ஆலா நூகு அலை
கிஸ்ஸலாத்தி நாளிலே வகியிறக்கி
வைத்தான் நூகேயும் முடைய மே
லேயும் உம்முடைய கூட விருந்த
உம்பத்துகள் மேலேயும் சலாமின்
தின்னுமை சலாமும் பறக்கத்துங்கொ

ண்டு கப்பலைவிட் டிறங்குங்களென்று பிறகு நூகு அலைகிஸ்ஸலாம் கப்பலிலேயின்று மிறங்கிக் கப்பலிலிருக்கிறவர்களையு மிறக்கி வைத்தார் (முஹற்றமாதம்) பத்தாந்தேயிதி யிறங்கி யெல்லா ஹைவான்களையும், மனிதர்களையும் நோன்பு வைக்கச்சொல்லி யேவினார் கப்பலி லிருக்கிறபோது கண்களிருளாக விருந்தது பத்தாம் நாள் சுறுமாய்ப்போடச்சொல்லியு மேவினார்.

நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுளமானார்கள் ஆசுறாவுடைய நாளையிலே ஒருதன் சுறுமாப்போட்டால் அவனுக்குக் கண்ணோக்கா [illegible]தென்று பிறகு கப்பலி லிருந்தவர்களைச் செத்தமையித்தைத் தின்கிறதையும் இரத்தத்தையும் இன்ஜீறையும் (அல்லா) அல்லாத பேர்சொல்லி யறுக்கப் பட்டதைத் தின்கிறதையும் விலக்கினார் இன்னம் ஆறுமாக ஒரு சரீரத்தைக் கொல்லுகிறதையும் விலக்கினார் பின்பு ஹைவான் பக்கிசாரமற்றது பூமியுடைய கோணங்களிலே போய்விட்டது.

பின்பு நூகு அலைகிஸ்ஸலாம் குடியிருக்கிறதற்கு வீடுகள் கட்டச் சொல்லி யேவினார், ஜூதியென்கிற மலைக்குக் கீழாலே ஒரு சிற்றூர் உண்டாக்கி அந்த வூருக்கு எண்பது பேருடைய சிற்றூரென்று பேர் வைக்கப்பட்டது அந்தவூர் துபானுக்குப் பின்பு துண்டான வூரிலே முதலூரா யிருக்கும் பின்பு நூகு அலைகிஸ்ஸலா மத்துடைய விசுவாசிகளைக் கப்பலி லேற்றி வந்தார் அதையெல்லா மெடுத்துநாட்டினார்.

அதெல்லா முளைத்துப் பழுப்பழுத்தது கொடிமுந்திரிப் பழமே பொழிய அது அம் மதமாகப் பழுத்தது நூகு அலைகிஸ்ஸலாம், ஷாம் ஹாம்-யாபிது, இந்த மூன்றுபிள்ளைகளுக்கும் பூமியைப் பகிர்ந்துகொடுத்தார்-சாமுக்கு, சிசாவைக் கொடுத்தார் அவர் அறபிகளுடைய தகப்பன்-ஹாமுக்கு மஹ்ரிபுடைய சீமையைக்கொடுத்தார்-அவர் ஹபசிகளுடைய தகப்பன்-யாபிதுக்கு மசுரிக்குடைய சீமையைக் கொடுத்தார் அவர் துருக்கிகளுடைய தகப்பன் ஒரு நாள் உச்சிநேரத்திலே நூகு அலைகிஸ்ஸலாம் நித்திரைசெய்தார் காற்றுவீசிப் பிடவை நீங்கிப்போய் அவுறத்துத் தெரிந்தது அதை ஹாமென்கிறவர் பார்த்துச் சிரித்துக் கொண்டு மறைக்காமற் போய்விட்டார் பிறகு-ஷாம் பார்த்துச் சிரிக்காமலு மறைக்காமலும் போனார் பிறகு- யாபிது பார்த்துச் சிரிக்காமற் பிடவையாலே மறைத்தார் அவர் முழித்தபொழுது ஜிபுரியில் அலைகிஸ்ஸலாம் வந்து மூன்றுபேருடைய செய்தியையுஞ்சொன்னார் அப்போது-ஹாமுடைய அவுலாதுகளுக்குத் தலைமயிர் சாதை



விட்டுங் கடக்காமலிருக்கத் துஆச் செய்தார் ஷாமுடைய பிள்ளைகள் எந்நாளும் சபுறி லிருக்கவும்-யாபிதுடைய பிள்ளைகள் ஹரிற்குடியிருக்கவுந் துஆச்செய்தார்.

இன்னமொரு கவுலில் வந்திருக்குது கப்பலிலே யிருக்கிறபோது ஒருதரும் பெண்சாதி[illegible] செய்ய வேண்டாமென் றேவினார். ஹாமென்கிறவர் ஜிமாகு செய்தார் அப்போது அவருடைய நுத்பாக் கறுத்துப்போகத் துஆச் செய்தார் ஆண்நாய் பெண்நாய் மேலேயேறிச்சுது அதை பகிறத்தாகத் துஆச்செய்தார் அந்தப்படியே யது விட்டுப்போகாமல் பகிறத் திருது அபசிகளுக்கு மயிர் சுருண்டிருக்கிறதும், கறுப்பாக விருக்கிறதும் நூகு அலைகிஸ்ஸலாத்துடைய பதுவாவாகவிருக்கும் அவர்களெல்லாம் ஹாமுடைய பிள்ளைகள்,

துபானுக்குப்பின்னாலே(௩௱௫௰) வருஷம் கயாத்தாக விருந்தார் • அவருடைய வயது அடங்கலுமாகிறது (௫௰) குறைய ஆயிரம் வருஷம் இந்தக்கவுலு உலமாக்களிலே மிருதிபேர் சொன்னதும் தவுறாத்து வேவத்தில் வருகிற சொல்லுமாக விருக்கும்,

இன்னமொரு - றிவாயத்திலே (௬௱) வருஷமென்று வந்திருக்குது அவருக்கு மவுத்து காலிருன பொழுது அவர்மகன் ஷாமுக்குவசிய்யத்துச் செய்து அவனைக்கலிபாவாக்கினார் வசிய்யத்து நூகு அலைகிஸ்ஸலாம்.

கஃபுறவி யல்லாகு அன்றுபேசி வருகிறார் அல்லாகு அபுநாஸகூத்த ஆலா நூகு அலைகிஸ்ஸலாத்துடைய வயது (இருநூற்றைம்பதில்லை) [illegible] பிறக்கி வைத்தான் அவர்தமுக[illegible] தவிர (ஆயிரம்வருஷ)மிருந்தார் அவருக்கு உபாத்தாகிற வருத்து முடுகிறபொழுது அவர்மகன் - ஷாமென்கிறவனைக் கூப்பிட்டு நானுனக்கு வசிய்யத்துச் செய்கிறேன் அந்தவசிய்யத்துப் படிக்கு நடந்துகொள் மகனே இரண்டு காரியத்தையுனக்கு ஏவுகிறேன், இரண்டு காரியத்தை விட்டும் விலக்கிறேன் ஏவுகிற காரியமாவது கலிமாவுதாஹத்து-லாஇலாக இல்லல்லாகு என்று சொல்லுகிறது- அந்தக்கலிமாவின திறது- ஏழுவானத்தையும் ஏழுத்துக்கொண்டு போகும் ஒருவஸ்துவும் அதைவிலக்க மாட்டாது வானமும், பூமியும் அதிலுண்டா யிருக்கிறதையும் ஒருதட்டிலே வைத்து அந்தக் கலிமாவை ஒரு தட்டில்வைத்தால்க்கலிமா இருக்கிற தட்டுக் கனக்கும்,

இரண்டாவதாவலாகிறது (சுபுஹானல்லாகி வபிஹம்திகி) என்கிற தசுபீகை நீ மிகுதியாகச் செய்கிறது அந்தத் தசுபீகாகிறது ஸவாசபு

பெல்லாங் கட்டிக்கொண்டு வரும் இரண்டு காரியத்தைத் தொட்டும் விலக்கிக் கொள்ளுகிற காரியமாவ து அல்லாவைக் கொண்டு கிறக்கு வைக்கிறதும் அவனல்லா தவர்கள் மேலே மீயுன்னுதலாக விருக்கிறது மென்றார்.

ஒழிப்பத்துச் சொல்லினார் ... பிறகு மேலுமவர்களைத் தூவந்து அல் லாமு அலைக்க வென்றார்- நூகு அலைகிஸ்ஸலாம் சரீரம் துடித்து ம னிதனே யாரென்றார் உம்முடை யசலாமும், உம்முடைய பேச்சும் என்கல்லைத் திடுக்கமாக்கி வைத் தது நீரார்சொல்லு மென்றார்நான் மலக்கல் மவுத்து உம்முடைய ஆ னைச் சூழ்ச்செய்ய வந்தேனென் றார் நூகு அலைகிஸ்ஸலாத்துடைய முகம்பேதகமாய் நாவுந் தடுமாற்ற மானது அப்போது மலக்கல் மவு த்து கேட்டார் நூகே இந்தப்பத ருட்டமென்ன உம்முடைய ஹயா த்து நீளமாயிருந்தும் உமக்கு வயி று நிரம்பவில்லையா வென்றார்.

அப்போது நூகு அலைகிஸ்ஸ லாம் சொன்னார்-வயிறு நிரம்பவில் லை துனியா எனக்கொரு வீட்டை ப்போலே அந்தவீட்டுக்கிரண்டுவா சலுண்டா யிருந்தது, ஒருவாசலிற் புகுந்தேன் மறுவாசலிலே புறப்ப ட்டேன் அந்தப்படிக் கிருந்தது வ யதும் நீளமா யிருக்கிறதுடனே யென்றார் பிறகு நூகு அலைகிஸ்ஸ லாம் வலதுபுறமு மிடதுபுறமுந்தி ரும்பிப் பார்த்தார் பிள்ளைகள் ஒரு த்தரையும் காணவில்லை.

பிறகு மலக்கல் மவுத்து ஒருபா த்திரத்திற் குடிப்புண்டா யிருந்த து அந்தக்குடிப்பைக் குடியும் உம் முடைய பயந்தர பொடுங்கிப்போ ... நூகு அலைகிஸ்ஸலாம து க்குக் குடித்தார் உடனேயமித் தாக விழுந்தார்-(சலாத்துல்லாஹி அ லைஹி வஅலாக்குல்லி நபியின்வபுவி கி வமின்பகுதிகி அல்லாகுத்த ஆ லாவுடைய சலவாத்தாகிறது நூகு அலைகிஸ்ஸலாம் பேரிலேயும்அவரு க்கு முன்னுண்டான நபிமார்கள் பேரிலேயும் அவருக்குப் பின்னு ண்டாகிற நபிமார்கள்பேரிலேயும் உண்டாவதாகவும்.

அல்லாகு சுபுகானகூத்த ஆலா கியாமத்திலே - குக்கும் செய்கிறத ற்காக வேண்டி கல்க்குகளையெல் லாமெழுப்பினால், முதல் நூகு அ லைகிஸ்ஸலாத்துடையஉம்மத்துகளை யெழுப்பப்பட்டு கிளாபுகேட்கப்ப டும் அவர்களுக்குச் சொல்லப்படு ம் உங்களுக்கு றசூலாகவும் நபியா கவும் நூகை நானனுப்பிவைத்தே னே நீங்கள் அவருக்கென்னஜவா பு சொன்னீர்களென்று அப்போத வர்கள் சொல்லுவார்கள் நூகு எங் களிடத்தில் வந்து எங்களையழைக் கவுமில்லை யெங்களையேவல் விலக் கல் செய்யவுமில்லை நீயெங்களுக்கு



றசூலாக அனுப்பிவைத்தால் உன் னுடைய - ரிசாலத்தை யவர் மறை த்துப்போட்டு உன்னுடைய கபீலு த்தையெல்லாஞ் சுருட்டிப்போட் டாரென்பார்கள்.

அப்போது நூகு அலைகிஸ்ஸலா ... பரிம் உம்மு டைய கவுமுகளுக்கு நீ ... சுத்தாச் சொல்லுகிறீரென்று கே ட்கப்படும் நீ ... ரவர்களிடத்தில் ரூ வுமில்லை அவர்களை இசுலாத்திலழை க்கவு மில்லையென்றுசொல்லு கிறார்களே - அவர்களுக்கு ஜவாபு சொல்லுமென்று கேட்டபொழு து நூகு அலைகிஸ்ஸலாஞ் சொல்லு வார் (இலாகி வஷெய்யிதீ) நீ நானழை த்ததை யறிந்திருக்கிறாய்நீயெ னக்குச் சாக்ஷிசொல்லப்போதும் நானவர்களை இசுலாத்தி லழைத்து உன்னுடைய- ரிசாலத்தையும் அ வர்களுக் கெத்திவிக்க அவர்களுக் குப் பகலிலிலும் இரவிலிலும் அ ச்சம்பூட்டி வைத்து அழைத்தே னென்னுடைய அழைக்குத லவர் களுக்கு விலண்டோடுகிறதை யே யொழிய அதிகமாக்கி வைக்கவில் லை நானவர்களைத் தருவாச்செய்த கபர் எனக்குப் பின்னுண்டான ந பிகள், றசூல்க ளெல்லாருக்கும் வ ந்திருக்குது.

காத்திமுன்னபியீன் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் உள்பட அவர் உம்மத்துகள் உள் பட நானவர்களை யழைத்தசெய்தி அவர்க ளெல்லாரும் நான் அழைத் ததற்குச் சாக்ஷி சொல்வார்களெ ன்பார்-அப்போது அல்லாகுசுபுகா னகூத்த ஆலா முகம்மதே யும்மு டைய தகப்பனார் நூகுக்கு உம்மி டத்தில் சாக்ஷியுண்டாயிருக்குதா ... அப்போது மு கம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் நின்றுகொண்டு இ ந்த ஆயத்தை ஓதுவார்.

அதன்பொருளாவது எம்மினூ கு நபியை அவருடைய கவுமுக ளிலே நாமனுப்பிவைத்தோம் அ ந்தக் கவுமுகளிடத்தில் (௯௫) வரு ஷம் தவிர ஆயிரம் வருஷம் தரிப ட்டிருந்தார்-அந்தக் கவுமுகள் அவ ருக்கு வழிப்படாத படியினாலே துபான் அவர்களுக்கு வந்து பிடி த்தது-அவர்கள் அநியாயம் செய் கிறவர்களாக விருந்தார்களென்று பயான் பிறக்க ஓதியபோது நூகு அலைகிஸ்ஸலாத்துடைய கவுமுகள் சொல்லுவார்கள் முகம்மதே நாங் கள் உமக்கு முன்னுண்டானவர்க ள் நீ எங்களுக்குப் பின்னுண்டா னவர் எங்களுடைய செய்தியை யெ ப்படியறிவீர் நீர் எப்படி சாக்ஷி சொல்வீரென்பார்கள்.

அப்போது அல்லாகு சுபுகான கூத்த ஆலா நூகு அலைகிஸ்ஸலாத்து டைய கவுமுகளுக்குச் சொல்லுவா ன் எடா முசிரிக்குகளே யென்று

டைய நபி முகம்மது சொன்னசகாத்தாகிறது நானருக்கிறக்கவைத்த குறுஆனில்நின்று முன்னசகாத்து என்று சொல்லி யவர்களை நரகத்திற் போடச்சொல்லிப் போவுவான் நரகத்திற் புகுறுகிற உம்மத்துகளிலே முதலிற்புகுறுகிறவர்க ளவர்களா யிருப்பார்கள்.

௮ பின்பு நூகு அலைகிஸ்ஸலாத்துக்குச் சுவர்க்கத்தி லிருந்து ஒட்டகை கொண்டுவந்து அதின்மேலேத்தி மலாயிக்கத்துகள் கூடப்போய்ச் சுவர்க்கத்து வாசலி லவரையிறக்குவார்கள்-முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம்-பசல்-நூகு அலைகிஸ்ஸலாத்துக்குத்தனதாக்கிவைத்த காரியங்களிலேபேசுகிற பசலா யிருக்கும் - அன்பியாக்களில்நின்றும் ஒருதருக்கும் அவருடைய பேரைப்போலே வைக்கவில்லை அவர் சவுறுகளைத் தருவாச்செய்ததில் முந்தின நபியாகவிருப்பார்.

சிறுக்குமேலே அச்சம் பூட்டிவைத்ததில் முந்தினவர் அவருடைய உம் மத்துகள் இன்காறுசெய்ததற்காக அவர்களை அதாபுபடுத்தின நபிகளில் முந்தினவர் அவருடைய பதுஆவைக்கொண்டு பூமியடங்கலையும் கலாக்காக்கிப்போட்டான் அவர் நசுல்களுக்கெல்லாம் வயதுநீளமானவர் அவருடைய முகுசிதாத்து அவர் கபுறிலேயிருந்தது அதாகிறது அயிசம்வருஷம் ஹயாத்தாயிருந்து பல்லும்விழ வில்லை கூவத்தும் குறையவில்லை- உம்மத்துகளைத் தருவாச்செய்ததில் நானைப்போலே ஒருதருஞ் செய்யவில்லை அவருடைய வருத்தத்தைப் போலேயும் சொப்பலத்தைப்போலேயும் ஒருநபிமார்களுக்குமிருந்ததில்லை மிதாகிலேயும் வகியிலேயும் நபிசல்லல்லாகு அலைகிவசல்லத்துக்குக்கு இரண்டாவதாயிருந்தார் அல்லாகுத்த ஆலா ஆக்கினான்-அல்லாகுத்தஆலா திருவுளமானான் நபிகளில்நின்றும் அவர்கள் வார்த்தைப்பாட்டை நாமெடுத்துக்கொண்டோம் உம்மிடத்தில் நின்றும் நூகு இடத்திலே நின்று மெடுத்துக்கொண்டோம்.

இன்னம் திருவுளமானான் நூகு அலைகிஸ்ஸலாத்தளவிலே வசியிறக்கிவைத்ததுபோலே முகம்மதே உம்மளவிலேயும் நாம் வசியிறக்கிவைத்தோம் இன்னம் நூகுஅலைகிஸ்ஸலாம், முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லத்துக்குப் பின்னாலே முதலிற்பூமியிலே வந்து "எழுந்திருக்கிறவர் அல்லாகு சுபுகான கூத்தஆலா அவருக்குக் கப்பல் பண்ணுகிறதையும் படித்துக் கொடுத்து அவனாயும் அவருக்கு சமான்கொண்டபேர்களையும் ஈடேற்றமாக்கி வைத்தான் பறக்கத்துக்கொண்டும், சலாமத்துக்கொண்டும் அவரைச் சங்கையாக்கிவைத்தான்.

(1) சுவர்க்கம்புகுகிறபோது அவருர் புகுவார்.



குறுஆனிலே திருவுள மானான் எஃனிறாகே யென்னிடத்தில் நின்றும் சலாமத்துக்கொண்டும், பறக்கத்துக்கொண்டும் நீ றங்கு மென்றான் ஆதம் அலைகிஸ்ஸலாத்துக்குப் பின்னாலே அவர் மனிதருக் கெல்லாம் தகப்பனார் - நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுளமானார்கள்-நூகு அலைகிஸ்ஸலாத்துக்குசாம்-காம்-யாபிது-இந்த- மூன்றுபிள்ளைகள் பிறந்தது-சாமாகிறவர் அறபிகளுக்கும், பாரிசிகளுக்கும் ரூமிகளுக்கும் தகப்பனாயிருப்பாராகும் காமாகிறவர்- அபசிகளுக்குத் தகப்பனாயிருப்பார்-யாபிதா கிறவர்துருக்கிகளுக்கும் யாஜுஜு, மாஜுஜுகளுக்கும் தகப்பனா யிருப்பார்.

அத்தா பேசிவருகிறார் நூகுஅலைகிஸ்ஸலாம் அவர்மகன்-காமுமேலே பதுவாச்செய்தார் அவருடைய பிள்ளைகள் தலைமயிர்காதைக்கடக்காமலிருக்கவும் அவருடைய பிள்ளைகளெல்லாம்-சாம்-யாபிதுடைய அவுலாதுகளுக்கு அப்துகளாகவிருக்கவும் பதுவாச்செய்தார்.

கஃபுறலியல்லாகு அன்கும்-வஹ்புறலியல்லாகு அன்கும் பேசிவருகிறார்கள்-நூகு அலைகிஸ்ஸலாம் உபாததானபிறகு - சாமென்கிறவர் பெண்சாதியுடனே கூடினார் அவருடைய பித்தையும் பெண்சாதியுடைய பித்தையும் திறந்து விட்டு அக்தப்பித்து இருவர் நாசுபாலுடனேயும் கலந்துபெண்சாதி அமலாகி ஒரு ஆண் பிள்ளையும் ஒருபெண்பிள்ளையும் இரட்டைப் பிள்ளையாகப் பெற்றாள்- அந்தப்பிள்ளையும் கறுப்பாகப் பிறந்தது-சாம் அந்தப்பிள்ளைகளைப்பார்த்து எனக்குப் பிறந்தபிள்ளைக ளல்லவென்று சொன்னார் பெண்சாதி சொன்னாள் உமக்குப்பிறந்த பிள்ளைகள் தான் உம்முடைய தகப்பனாருடைய பதுவா கறுப்பாக்கிப்பிள்ளைகள் கறுத்துப்போச்சுதென்றாள்.

பிறகு - சாம்பெண்சாதியுடனே கூடாமலிருந்தார் பிள்ளைகள் வாலிபமானபொழுது மறுபடியும் கூடினார் பிறகு ஒரு ஆண்பிள்ளையும் ஒருபெண் பிள்ளையும் சிவப்பாகப்பெற்றாள் அதைப்பார்த்துப்பெண்சாதி பிள்ளைகளிடத்திலிருக்காதபடிக்கு முகம்போனபோக்கிலே ஓடிப்போய்விட்டார்-முந்தினஇரண்டு பிள்ளைகளும் பெரிதானபொழுது தகப்பனைத் தேடிப்புறப்பட்டுக் கடலோரத்தில் வந்தபொழுது அல்லாகுத்தஆலா ஆண்பிள்ளைக்குச் சகுனத்தைக் கொடுத்தான் பிறகு உடற்பிறந்தா ளுடனேகூடி அமலானாள் அந்தச்சிந்தாதி யவர்களுக்கு வழிபனையில்லாமற் கடலிலே மீனைப்பிடித்துத் தின்றுக்கொண்டிருந்தார்கள்.

பின் புடற்பிறந்தாள், உடற்பிறந்தானுக்கு ஒருஆண்பிள்ளையும் ஒருபெண் பிள்ளையும் கறுப் பாகப் பெற்றாள்பிறகு- சாம் இரண்டுபிள்ளைகளையும் தேடிப்புறப்பட்டு அவர்களைக் காணாமல் விசாரமாகவிருந்துகொஞ்ச நாளையிலேமவுத்தா

னர் அவர் பெண்சாதியும் மவுத்தானாள்.

பிந்திப்பிறந்த இரண்டு பிள்ளைகளும் முந்தின உடற்பிறந்தானைத் தேடிப் புறப்பட்டு அவர்களுமவர்களைக் காணுகபடிக்கு ஒருகடலோரத்திலொருசிற்றூரிலேவந்துசேர்ந்து உடற்பிறந்தான் கூடக்கூடிஅவளும், உடற் பிறந்தானுக்கு ஆண்பிள்ளையொன்றும் பெண்பிள்ளை ஒன்றாங் கறுப்பாகப்பெற்றாள் அந்தக் கடலோரத்தில் அவர்களுடைய அவுலாதுகள் மிகுதியாகப் பரவினார்கள் அந்த அவுலாது களிற்நின்றுமுள்ளவர்கள் - நவுபாவென்கிற கூட்டமும் — ஜின்சாவென்கிற கூட்டமும்—பர்பரென்கிற கூட்டமும் சந்தென்கிற கூட்டமும்— கிந்தென்கிற கூட்டமும் அந்தக் கூட்டமெல்லாம் கறுப்பானவர்கள் அவர்களெல்லாம் ஹாமுடைய அவுலாதிலுள்ளவர்கள்.

யாபிதுபுனு நூகு அலைகிஸ்ஸலாமாகிறவர்—மசுரிக்குக்குப் போய் அவருக்கு (௫) பிள்ளைகள்பிறந்தது. ஜவ்கர்—கபுறசி—உசுறு—அசுக்கவில்—மயாசிகு— ஜவ்சறுடைய அவுலாதில் நின்று முள்ளவர்கள் - சகாலிபாக் கூட்டமும், றூமிக் கூட்டமும் அவர்களைச் சேர்ந்தவர்களும் கபுறசியுடைய அவுலாதில் நின்றும் துருக்கிகளும் - கபுசக்குகளுமுண்டானார்கள் — உசாறுவுடைய அவுலாதில் நின்றும்—யாஜூசு—மாஜூசும் அவர்களைச் சேர்ந்தவர்களும் பிறந்தார்கள்—அசுக்கவிலுடைய அவுலாதில் நின்றும் பூமியில் மிகுதிபேருண்டானார்கள்— மாயாசிகுடைய அவுலாதில் நின்றும் அஜமிகளெல்லாரும் பிறந்தார்கள்—ஷாமிபுனு நூகு அலைகிஸ்ஸலாம் அவருக்கு (௫) பிள்ளை பிறந்தது— அதில் பகுசது ஒருவர் அவர் அறபிகளுடைய தகப்பன்—அவரில் நின்றும் முதலுகிலையும், தமூ அத்துகிலையும்—இன்பாறுக்கிலையும் எமன் பட்டணத்திலிருக்கிறவர்களடங்கலும், அமாலிக்காக்கிலையும் பிறந்தார்கள்.

இரண்டாவது— பிள்ளை அசுவதி புனுஷாம்—அவர்—கிசுறாவுடைய தகப்பன்—அந்கிசுறாசுக ராகிறது எமனென்கிற ஊரிலும்,ஹலறுல் மவுத்திலு மிருந்தார்கள் அவர்களுக்கு ஒருகண்ணும்—ஒருகாதும்— ஒருகையும்— ஒருகாலும்— இந்தப்படிக்குப் படைக்கப்பட்டது.

மூன்றாவது மகன்— அலிவிபுனுஷாம் அவர் முந்தின ஆதுடைய தகப்பன் இன்னம் அவர் பிள்ளைகள் அலிக்கு—எல்மகீ—சவின்ஜா— இவர்கள் மூன்று பேருக்கும் பிச்சளபில்லைநாலாவதுபிள்ளை, இறமிபுனுஷாம் அவராகிறவர், ஆது, தமூதுடையதகப்பன், ஆதாகிறவன், இவ்வசுடையமகன், இவ்வசாகிறவன், இறமுடைய மகன், இறமாகிறவர், ஷாமுடையமகன்—ஷாம்— நூகு அலைகிஸ்ஸலாமுடைய மகன், தமூதென்கிறவனும் அவர்கள் கூடவிருந்தான் ஆது இருந்த ஊராகிறது, அம்மானில் நின்றும் ஹலறுல் மவுத்தளவுமிருந்தது, வஸ்ஸலாத்து வஸ்ஸலாம்.

## ஐந்தாவது செய்தி.

நூகு அலைகிஸ்ஸலாத்துடையகிஸ்ஸா—முற்றிற்று.

—()—

பிசுமில்லா கிற்றகுமானிற்றகீம்.

இஃது,

## ஆறுவது செய்தி.

## ஹூது அலைகிஸ்ஸலாத்துடையகிஸ்ஸா.

—(*)—

மஜ்லிசு—பிகிஸ்ஸா ஹூது அலைகிஸ்ஸலாம்—சால்லல்லாகுத்த ஆலா எஃனி ஆதுடைய—கவுமுக ளளிலே அவருடற் பிறந்தான் ஹூது அலைகிஸ்ஸலாத்தை நாமனுப்பி வைத்தோம்— ஆதாகிறவன் ஷாமுக்கு மூன்றுவது பேரன் அவன் முந்தின ஆதுஅவர்கள் எமனிராச்சியத்தில் மாமுமலைமேடுகளு முண்டாயிருந்தது அவ்விடத்தி லிறங்கியிருந்தார்கள்.

அல்லாகுத்த ஆலா திருவுளமானதுபோலே—எஃனிஆதுடைய வுடற்பிறந்தான் — ஹூதென்கிறவரை திக்குசெய்யும் அவர் ஆதுடைய கவுமுகளுக்கு அல்லாகுத்த ஆலாபரத்திலேலே அதாபுவருகிறது கொண்டு அச்சம் பூட்டின நேரத்திலேயவர்களு மணல்மேட்டி லிருக்கிற போது— அம்மானென்கிற ஊருக்கும் ஹலறுல் மவுத்துக்கு மிடையிலே யிருந்தார்கள் அல்லாகு சுபுகானகூத்த ஆலா, கூவத்தையும், சரீரம் நெடிதாகப் பெலனுமிருக்கிறதையும் அவர்களுக்குக் கொடுத்தது போலே பின்னை யொருதருக்கும் கொடுக்கவில்லை.

அவர்களிலே நீளமா யிருக்கிறவர்கள்—நூறுமுழம்—குள்ளமா யிருக்கிறவர்கள்—அறுபது முழம்— அவர்கள்தலை விலுப்பமான குப்பானைப்போ லிருக்கும்—அவர்கள் மவுத்தாய் மைமித்திருந்தால் வைரான்கள் கண்ணைத் தோண்டிக் கண்ணுக்குள்ளாகக் குடியிருந்து குட்டியும் போடு—மூக்கிலேயும் குடியிருக்கும் அவர்களெல்லாரும் புத்தைவணங்கிற வர்களா யிருந்தார்கள் பாவமெத்தச் செய்கிறவர்களாகவும் புத்துடைய இபாதத்திலே முங்கின பேர்களாகவு மிருந்தார்கள் அவர்கள்செய்கிற பாவத்தை வானமும்,பூமியு, மலையிக்கத்துகளும் பார்த்து, றப்பளவிலே அலற்றினார்கள்.

அப்போது—றப்புசொல்லுவான் இன்னஞ் சிறிதுகா லவர்களுக்கு அஜலிருக்குது அந்த அஜல்பற்றற்றுப்போனால் அவர்களை ஹலாக்காக்கிப் போடுவேன் — அவர்களுக்கு, குச்ஜத்துண்டாயிருக்க ஒரு — நதுலையு மனுப்பிவைப்பேனென்றான்.

பிறகு அல்லாகுத்த ஆலா ஹூது அலைகிஸ்ஸலாத்தை அவர்களுக்கு—

றசூலாக அனுப்பிவைத்தான் கூதாகிறவர் அவர்களிலே தாய்தகப்பனுடைய வங்கிஷத்தால் மெத்தவும் வரிசையானவர் அவராகிறவர் கூதிபுனு அப்துல்லா கிபுனு ரிபாகு பின் இக்றபுனு-அதிபுனு- இவ்விசிபுனு இறமிபுனு-சாமிபுனு நபியுல்லா நூகு அலைகிஸ்ஸலாம் கூதுடைய தகப்பன் அப்துல்லாவுக்கு குலூது என்றும் பேர் சொல்லப்படும்- அவருக்கு அல்லாகுத்தஆலா சரீரத்தில் கூவத்தையும், அழகையும், நாவிலே பசாஅத்தையும் மிகுதியாகக் கொடுத்தான் அவரை நீர் உம்முடைய தகப்பனுரின் வயதை பெத்தினீரோ கலியாண மென்ன சபபுக்காகவேண்டிச் செய்யாம லிருக்கிறீரென்று கேட்கப்பட்டது.

அவர் சொன்னார் நானொருமஞ்ம் கண்டேன் என் முதுகில் நின்றும் ஒரு வெள்ளைச் சங்கிலி புறப்பட்டது அந்தச்சங்கிலிக்குப் பொழுதுடைய ஒளியைப்போலே ஒளியுண்டாயிருக்குது ஒரு மனிதன் சொல்லுகிறார் — குலூதென்கிறவரே யந்தச்சங்கிலி யின்ன மொருதரம் உம்முடைய முதுகில் நின்றும் புறம்படக் கண்டீரோ யானால் உம்மைக் கலியாணஞ் செய்யச்சொல்லி யேவப்படுகிறது பெண்பிள்ளையை நீர் கலியாண முடித்துக் கொள்ளுமென்று சொல்லக்கேட்டேன்.

இரண்டாவது- இன்னும் மனும் காணவில்லை இப்போது கலியாணஞ் செய்கிறத்தளவிலே நாட்டமிருக்குதென்று புத்துகான்க ளிருக்கிற கோயிலிலே போய்க் கலியாணஞ் செய்கிறதற்குப் புத்துசாலைகளிடத்திலே யுதவி தேடப்போனார்- அப்போது அந்தக் கோயிலுக்குள்ளே புகுதுகிறதற்கும் அதோடேபேசுகிறதற்கு மவருக்குச் சக்தியுண்டாகவில்லை அப்போது ஆகாயமாக ஒரு சத்தங்கேட்டார், குலூதே யும்முடைய முதுகி லிருக்கிறவருக்கும் அந்தப் புத்துகான்களுக்கும் என்ன நிசபத்துண்டா யிருக்குதென்று சத்தங்கேட்டபிறகு கோயிலிற் போகாமற் திரும்பி விட்டார்.

அந்தஹாலிலே பேசுகிற தற்கு நாவுமுண்டாச்சுது அன்றிரவிலே அவர்முதுகில் நின்றும் வெள்ளைச் சங்கிலி புறப்படவுங்கண்டு ஆகாசமாகச் சத்தங்கேட்டார் -குலூதே உம்முடைய சிறியதகப்பன் மக்களைக் கலியாணஞ் செய்துகொள்ளுமென்று கேட்ட பொழுது பதில்முழித்துச் சிறியதகப்பன் மகளைப் பெண்பேசிக் கலியாணஞ் செய்துகொண்டு ஜமாகு செய்தார்- அன்றிரவிலே கூது அலைகிஸ்ஸலாத்தை ஊம்லாவுள் கூதை ஊமலானது கொண்டு ஷைத்தான்களும் பக்கிசாரங்களுங் கடலுங் கரையுஞ்சந்தோஷமாய் நல்மாராயம் பெற்றுக்கொ



ண்டன-கவுமுகளெல்லாம் அந்தந்தத் தோணத்தி லிருந்து கூது நபியை அவர் தாயார் ஊமலானு என்றும் அவருக்கு வழிப்படாம லிருக்கிறவர்கள் கலாக்காவாவென்றும் பேசினார்கள்.

பிறகு தாயாருக்கு நாட்கள் நிரப்பமான பொழுது வெள்ளிக்கிழமை யிரவையிலே பிள்ளையைப்பெற்றாள், அன்றிரவு அநுடைய கூடடந்தார் மேலே யிடியும் விழுந்து அவர்களுக்குப் பயங்கரமும் வந்து தொடுத்தது அவர்களந்த சபபுக்காகவேண்டி யிந்த ஊறலுண்டாச்சுதென் றறியமாட்டார்கள் பிறகு குலூதென்கிறவருக்கு ஒருபிள்ளை பிறந்ததென்று அவர்களு மறிந்து அந்தப்பிள்ளைக்குச் சிறிது காரியமுண்டாகு மென்று எல்லாரும்பேசிக் கொண்டார்கள்.

பிறகு கூது அலைகிஸ்ஸலாம் தாயாரிடத்திலிருந்து முக மழகானவராகவும், அக்குல் நிரப்பமானவராகவும் வளர்ந்தார் தாயார்கூதென்று பேரும் வைத்தாள் பெரியவரான பொழுது ஒருநாள் தொழுகிறவராகத் தாயார்கண்டு மகனே யிந்தத் தொழுகை யாருக்காக வேண்டித் தொழுகிறா யென்றாள் அப்போது கூது அலைகிஸ்ஸலாம் சொன்னார் என்னையு, முன்னையும், கல்க்குகளடங்கலையும் படைத்தானே அந்த நாயனுக்காகவேண்டித் தொழுகிறேனென்றார்.

அப்போது தாயார் நம்முடைய புத்துகான்களுக்காக வேண்டித் தொழவில்லையா வென்றார் கூதுசொன்னார் அந்தப் புத்துகான்களெல்லாங் கல்லினாலே பண்ணப்பட்டது அதுகளெல்லாம் நமக்கொரு பிரயோசனமுங் கொடுக்கமாட்டாது ஒரு தங்கடமுஞ் செய்யமாட்டாதென்றார்-அப்போது தாயார் சொன்னாள் மகனே யுன்னுடைய நாயனை நீ வணங்கு உன்னை நான் ஊமலாக விருக்கிற போது மிகுதியான புதுமைகளைக் கண்டேன் உன்னைப் பெறுகிறபோது இந்த வீட்டிலே உலர்ந்து போன மாங்களுண்டா யிருந்தது நீ பிறந்தபோது அந்த மரங்களெல்லாந் தளிர்த்தது உடனே பழமும் பழுத்துக் குலையும் சாய்த்தது.

அந்தநாட் பழம் பழுக்கிறகாலமல்ல மகனே; உன்னைப்பெற நாடினபொழுது எழுபது ஓடைக்கரையிற் சுற்றித்திரிந்து ஒடுக்கம் ஒரு இடத்திற் போனேன் அவ்விடத்திலே பிள்ளையைப் பெறச்சொல்லிக் கூப்பிடப்பட்டது மகனே, ஒரு கறுத்தக் கல்லின்மே லுன்னைப்பெற்றேன் அந்தக்கல் வெள்ளையாய்ப் போச்சுது உன்னைச்சுமந்துகொண்டு வீட்டில் வருகிறபோது ஒருமனிதனைக் கண்டேன் அவர்கலை வானத்திலே யிருக்குது இரண்டுகாலும் பூமியின்கீழாலே யிருக்குது எஞ்

னிடத்தில் நின்றும் உன்னை யெடுத்துக்கொண்டு ஆகாசத்தில் முகம் வெள்ளையாகச்சிறிது கவுமுக ளிருந்தார்கள் அந்த மனிதன் அவர்கள் கையிற் கொடுத்தார் மறுபடியும் உன்னை யென்னிடத்திற் கொடுத்து விட்டார். உன்னுடைய தலைமேலே ஒளியினாலே தாங்கள் நிற்கக் கண்டேன் உன்னுடைய கொடுங்கையில ஒருபச்சைக்கதி கட்டியிருந்தது அவர்களிலொருமனிதன்சொல்லுகிறார் அல்லாகு சுபுகானகூத்த ஆலா உம்மை றசூலாக ஆக்கினெனென்றுசொன்னார் மகனே யுனக்கு வேண்டின படிக்கு உன் நாயனைத்தொழுதுவாவென்றார்.

கம்புறவியல்லாகு அன்குபேசி வருகிறார்-ஹூது அலைகிஸ்ஸலாம் சவுமுகளிடத்தி லிருந்தது நாற்பது வருஷம் அவருக்கு நிரப்பமான பொழுது ஜிபுரியீல் அலைகிஸ்ஸலாம் வகிகொண்டு வந்து இறங்கிச் சொன்னார் உம்முடைய றப்பு உமக்குச் சலாஞ் சொன்னான் உமக்குச்சொல்லச் சொன்னான் உம்முடைய கவுமுகளுக் கிடையிலேயும்மை நான் தெரிந்து கொண்டேன் உம்மை றசூலாக அனுப்பிவைத்தேன் ஆதுடைய மக்களளவிலே நீர்போய் அவர்களுக்குப் பயப்படாமலிருக்கத்தி ... மையும் அவர்களுக்கு ...த்தி தாத்தையும் நான் காண்பிக்... ன் கூடே அவர்களுக்குநீர்சொல்லும் உங்களுடைய ஜயாத்தையும் நான் நீளமாக்கி வைத்தேன் என்னுடைய இரணத்தையும்நீங்கள் தின்றீர்கள் கூவத்தையும் கொடுத்தேன் அவர்களுக்கு முன்னாலே யொருகருக்கு மிப்படிக்கொத்தகூவத்தைக் கொடுக்கவில்லை அவர்களைத் தருத்தின்மே லிருக்கிற இராசாக்களாக்கிவைத்தேன் அவர்கள் கூட்டத்தையும் பெரியகூட்டமாக்கி வைத்தேன்.

இப்பேர்க்கொத்த நிகுமத்துகளையெல்லாங் கொடுத்திருக்க அவர்களெனக்கு மாறுசெய்கிறார்கள்கூடே அவர்க ளிடத்தில் நீர்போய் (லாஇலாக இல்லல்லாகு) என்கிற கலிமாவையும் நீ யென்னுடைய அப்துாம். றசூலுமென்று சொல்லச்சொல்லு மென்றான் ஹூது அலைகிஸ்ஸலாம் கவுமுகளிடத்திலே போனார் அவர்கள் மனல்மேட்டுகளிலே பிரிவு பிரிவாக இருந்தார்கள் அந்தநாள் அவர்களுக்குப் பெருநாளாயிருந்தது.

இராஜாக்களும் — றயியத்துகளும் ஒரிடத்திற்கூடி யிருந்தார்கள் அவர்க ளெல்லாருக்கு மிராஜாவாக யிருக்கிறவன்பேர்-ஜல்ஜான் — அவன்பொன்னினாலே யவன் பாட்டன் ஆதுடைய தாஜூம்-தலையிலேவைத்துக் கொண்டு பொன் தருத்தின்மே லிருந்தான் அப்படியிருக்கிற போது ஹூது அலைகிஸ்ஸலாம் வந்து



என்கவுமுகளே என்னுடைய, றப்பையும் உங்களுடைய, றப்பையும் நீங்கள் வணங்குங்கள் அவன் அல்லாமல் வேறேநாயன் உங்களுக்கொருதருமில்லை.

நீங்கள் புத்துகான்களைநாயனென்று பொய்க்கட்டாய்ப் பேசுகிறீர்கள் நீங்கள் வணங்குகிறீர்களே அந்தப் புத்துகான்கள் ஆருடையகவுமுகளை முழுத்திப்போட்டது அவர்களைக் காணவயதால் நீங்கள் [illegible]வர்களல்ல உங்கள் நாயனிடத்திலே நீங்கள் அவர்களைக்காணவும் சங்கையானவர்க ளல்ல வென்று சொன்னபொழுது அந்தப் புத்துகான்களெல்லாம் பதறித் தாடித்து விழுந்தது அப்போதந்த-ஜல்ஜான் என்கிற இராஜா— கூடேயென்னிடத்தில் வாருமென்று சொன்னான் அப்போது ஹூது அலைகிஸ்ஸலாம் சூபுடைய புடவையுமுடுத்திக்கொண்டு— சூபினாலே தலைப்பாகையும் கட்டிக் கொண்டு கையிலே அசாவும் பிடித்துக்கொண்டிருந்தார்.

அப்போது அல்லாகு சுபுகான கூத்தஆலா அந்தக்காபிர்களுடைய கல்பிலே யெல்லாம் ஹூது அலைகிஸ்ஸலாத்துடைய பயங்கரத்தையுண்டாக்கினான் அந்த இராஜா இடத்திற்போய் அவர் நின்றபோது ஒருதரம் அபயசத்தமாக அலறினார்- பூமியுடைய சோனங்களி லிருக்கிற ஹைவான்க ளெல்லாம், லப்பைக்கு யாகூது, உம்முடைய நிசாலத்தைச் யெத்தினையும் நீரவர்களுக்குப் பயப்பட வேண்டாம் அவர்கள் கல்பிலே யெல்லாம் உம்முடைய பயங்கரம் நிறைந்திருக்குது அவர்களுடைய முகங்களெல்லா மஞ்சளாகப் போச்சு தென்று ஹைவான்களெல்லாம் அவருக்கு ஜவாபு சொல்லிச்சுது.

அப்போது அவர் கவுமுகளில் நின்றும் ஒரு மனிதனெழுந்திருந்தான் அவனுக்குப் பேர், உமறிபுனுதுல்வி— என்று சொல்லப்படும் அவன் சொன்னான்— கூடே உம்முடைய நாயனது சிபத்தை யெங்களுக்குநீர் சொல்ல நான் நாடுகிறேன் அவன் சிபத்தைச் சொல்லுமென்றான் அப்போது ஹூது அலைகிஸ்ஸலாம், றப்புடைய வலுப்பத்தை யெல்லாஞ் சொல்லி அவனுக்கு ஒப்புவமையில்லை-அவனுக்கு நிகர் ஒருதருமில்லை அப்படிக்கொத்த நாயனென்று வசுபுசெய்தார் அப்போது இராஜா சொல்லுவான் கூடே— உம்முடைய நாயன் எங்களை யொருகாரியம் செய்யச் சக்தி யிருக்குதா. எங்களுடைய கூட்ட மிகுதியா யிருக்குது— எங்களுக்குக் கூவத்துங் கடிசாக விருக்குது ஒருபகிரவைக்கும் எங்களிலே நின்றும்— ஆயிரப்படிக்குப் பிள்ளைபிறக்குதென்று சொன்னான்.

அப்போது கூது அலைகிஸ்ஸலாம்சொன்னார் அல்லாகு சுபுகானகூத்தஆலா, குறு ஆனிலே சொன்னதுபோலே-எஷினி அவர்கள் அறியவில்லையா அவர்களைப் படைத்தானே அந்தாயன் அவர்களைக்காணக் கூவத்தால்க் கடிசானவனென்கிறதை கூதுடைய கவுமுகளறியவில்லையாவென்று திருவுளமானன் கூது அலைகிஸ்ஸலாத்துக்கு முதல், ஈமான்கொண்டது- ஜனதத்திபுனுல் அசம் என்கிறவரும் அவருடைய சிறியதகப்பன் மக்களில் நாற்பது பேரும் ஈமான் கொண்டார்கள் பின்பு கூது நபி தம்முடைய விட்டளவிலே வந்துவிட்டார்.

மறுநாளானபோது-ஜனதத்திபுனுல் அசமும்-அவருடைய சிறியதகப்பன் மக்களும் அவர்கள் கவுமுகளிடத்தில் பெரியவராக விருக்கிறவர்களிடத்திலேபோய் ஜனதத்தென்கிறவர் சொன்னார் என்னுடைய கவுமுகளே ஊக்கானகாரியம் கசப்பாகவிருக்கும் அதை நீங்கள் கபூல்ச்செய்கிறதை விலக்கிக்கொள்ள வேண்டாம்- பாத்திலான காரியம் உங்களுக் கின்பமா யிருக்கும் அதை நீங்கள் விட்டு விடுங்கள்.

கூது அலைகிஸ்ஸலா மாகிறவர் உங்கள் சிறியதகப்பன் மகன்அவர் உண்மை சொல்லுகிறதை நீங்கள் பூர்ப்பமாக அறிந் திருக்கிறீர்கள் இப்போதவர் அல்லாகுத்த ஆலாவுடைய இடத்திலிருந்து முங்களுக்கு, வருது சொல்லுகிறவராக வந்தார் நீங்கள் அல்லாவுக்குப் பயந்து கொண்டு அவருக்கு வழிப்பட்டுநடங்கள் அப்படி வழிப்படாமற்போனால் ஆரு அலைகிஸ்ஸலாத்துடைய கவுமுகள்பேலே யிறங்கிச்சுதே அந்த அதாபு உங்கள்மே லிறங்குகிறதை நான் பயப்படுகிறேனென்று சொன்னார்.

அவர்சொன்னதைக் கவுமுகள் கேட்டபோது அவர்களெல்லாங் கோபமா யவரைத் திட்டிப் பேசி பேசி அடித்தார்கள்-பிறகு ஜனதத்தென்கிறவர் கூதுநபி யிடத்தில் வந்து இந்தச் செய்தி யெல்லாம்சொன்னார்-அப்போது கூதுநபி சொல்வார் அசமுடைய மகனே உம்முடைய பேரிற் குற்றமில்லை அல்லாகுத்தஆலா இடத்தில் உமக்குப் பிரத்தியுண்டா யிருக்குது அல்லாகுத்தஆலா வுதவிசெய்தானேயானால் நாளையத்தினம் நான்போ யழைக்கிறே னென்றார்.

மறுநாளானபோது கூதுநபி கவுமுக ளிடத்திலேபோய் என்னுடைய கவுமுகளே யென்பேச்சை நீங்கள்கேளுங்கள் அல்லாகுத்தஆலா வுங்களுக்குச் செய்த நிகுமத்தை நீங்க ளவனுக்கு மாறுசெய்கிறவர்களாகப் பதிலாக்கவேண்டாம் விரியான பூமியாகிறது அல்லாகுத்த ஆலாவுடைய கோபத்திலே நின்றும்-ஸபிராகப் போகிறது ஊக்கான காரியமாகிறது வருத்தமான ஏறு வாகனமாக விருக்குது அதிலேறுகிறவனை இலேசளவிலே வருத்திவைக்கும், பாத்திலான காரியமாகிறது இலேசான ஏறு வாகனமாக விருக்கும் அதிலேறப் பட்டவனை வருத்தத்தளவிலே வருத்திவிக்குமென்று சொன்னார்.

பிறகு அந்தக்கவுமுக ளவரைப் பெய்யாக்கி வைத்துத் தன்னுடையானகாரியம் மெத்தவும் செய்தார்கள் அவர் அவர்களுடனே கிருமையான பேச்சாகப் பேசுவார் அவர்கள் அவரைக் கடிசான பேச்சாகப் பேசி அவரை நோவினை செய்வார்கள்-பிறகு அல்லாகு சுபுகான கூத்தஆலா அவர்களுடைய பெண்டுகளின் குடல்வா யெல்லா மடைத்திப் போட்டான் ஒரு பெண்பிள்ளையும் ஒரு ஆண்பிள்ளையும் பெறவில்லை ஒருபெண் பிள்ளையும் பெறவில்லை அவர்களெல்லா மிராஜா,ஜலசா ளிடத்திற்போய் முறைப்பாடு செய்தார்கள்.

கூதுசொல்லுகிறது வுண்மையாயிருக்குது அல்லாகுத்த ஆலா எங்கள் குடல்வா யெல்லாமடைத்திப் போட்டான் அவர் சொன்ன சொல் லுண்மையா யிருக்கிறபடியாலென்று முறைப்பாடு செய்தார்கள்.

அப்போது இராஜா அப்படியல்ல நானொரு யோசனை சொல்லுகிறேன் அந்தப்படி கேளுங்களென்று சொல்லி நம்முடைய புத்துகான்களெல்லாம் தருத்தின்பேல் நிறுப்பாட்டிவைத்து அதற்குக், குறுபான்செய்து நீங்களெல்லாரும் அதற்குச் சஜிதாச்செய்து சாவிப்பாடாகக் கேளுங்கள் அந்தப் புத்துகான்களெல்லா முங்களுக்கு, ஜவாபுசொல்லும் அப்போது கூது அலைகிஸ்ஸலாம் பேரிற் காவிபாவிர்களென்று சொன்னான்- அவர்களந்தப்படியே செய்தார்கள் அவர்களுக்கொரு காரியமுங் கைகூடினாவில்லை.

பின்பு கூது அலைகிஸ்ஸலாம் கவுமுகளிடத்திலேபோய் என்னுடைய கவுமுகளே உங்களைப் படைத்து உங்களுக்கு நிகுமத்துங் கொடுத்து உங்களைக் கூவத்தாக்கி வைத்தானே அப்படிக்கொத்த நாயனைவிலே கேளுங்கள் அவனுங்களுக்கு ஜவாபு சொல்லுவான் - உங்கள் பெண்டுகளுடைய குடல் வா யெல்லாந் திறந்து விடுவான்- உங்களுடைய இராசாங்கத்தையும் உங்களுடைய கூவத்தையு மதிகமாக்கி வைப்பான்.

என்னுடைய கவுமுகளே தவுகிதுடைய கலிமாவளவிலே உங்களை நானழைக்கிறேன்– நீங்கள் கபூல்ச் செய்தீர்களே யானால் அல்லாகுத்த ஆலாவுடைய அதாபுக்கு நீங்

கள் அச்சத்திருவீர்கள் நீங்கள் விலக்கிக் கொண்டவர்களேயானால் அநாபுகொண்டு, தன்மைகொண்டு உங்களைப் பிடிப்பான்- உங்கள்மேலே கடிசானபிசலெ யனுப்பிவைப்பான் உங்கள் வீட்டில் நீங்களெல்லாம் கலாக்காகப் போவீர்களென்று சொன்னார்.

அவர்களதைக் கேட்டு கூதுஅலைகிஸ்ஸலாத்துடைய முகத்திலே யித்தந் தெறிக்குமட்டும் அடித்தார்கள் பிறகு அவர் சொல்லுவார் ஆண்டவனே நான் உன்னுடைய தூதை யவர்களுக்கு எத்திவைத்தேன் அவர்களுக்கச்சம் பூட்டிவைத்தேன் நியவர்கள்மேலே சாகிதாக இருவென்று சொன்னார் கூது நபிக்கு ஈமான் கொண்டவர்களில் சிலருமொரு மனிதன்வந்து கவுமுகளே உங்கள நபி உங்களுக்குப் பெருங்காற்று வந்து அதிலே நீங்கள் கலாக்காகப் போவீர்களென்று வருதாச்செய்தாரே அதற்குப் பயந்து கொள்ளுங்களென்றார்.

அப்போ தவர்களவனையும் திட்டி கூது நபியையும் திட்டி அவன் நாடினபடி செய்யப்படும் போவென்று தரத்திவிட்டார்கள் அப்போதந்த மனிதன் சொல்லுவார் கூதே உம்முடைய கவுமுகளுக்கு நீர் நசீகத்துச்சொன்னீர் உம்முடைய றப்பானவன் அவன் வேண்டின பேர்களை நேர்வழி காட்டுவான் வேண்டினவர்களை வழிகெடுத்துப்போடுவா னென்றார்.

பிறகு கூது அலைகிஸ்ஸலாம் தம்முடைய இராபிடத்திலே வந்துவிட்டார் பிறகு அந்தக்காபிர்களில் நின்று, மஜீதிபுனு சகிதென்கிற மனிதன் கூது நபியிடத்தில் வந்து கூதே-நான் உம்மிடத்திலொருகாரியமாக வந்தேன் அந்தக் காரியத்தை யின்னகாரியம் இதற்காக நீர் வந்தீரென்று சொல்லீரானும் நீர் நபியாகவும், றசூலுமாகவு மிருப்பீரென்று சொன்னான்.

அப்போது கூது அலைகிஸ்ஸலாத்து சொன்னார்-மஜீதென்கிறவனே நீர் உம்முடைய பெண்சாதி யுடனே கூடினீர் உம்முடைய பெண்சாதி சொன்னாள்-என்னுடைய வயிற்றிலேபிள்ளை தரித்தாப்போ லிருக்குதென்று சொன்னாள் அப்போது நீர் சொன்னீர் காலமே நான் கூதென்கிறவரிடத்திலே போகிறேன் இந்தச்செய்தியை நானவருக் கறிவிக்காமல் அவரிந்தச் செய்தியெல்லாஞ் சொன்னால்நான் அவருக்கு ஈமான் கொள்ளுவே னென்று சொன்னீரென்று சொன்னார்.

அப்போது, மஜீதென்கிறவர் உடனே (அகஹது அன்லாஇலாக இல்லல்லாகு-வஅன்னக -றசூலுல்லாகி) அச்கா என்கிறகலிமாவைச் சொல்லி ஈமான்கொண்டார் பிறகு அல்லாவுடைய றசூலே என்பெண்



சாதி ஹமலானுளா வென்று கேட்டார் மெய்தான் ஹமலானுள் இரட்டைப்பிள்ளையாக இரண்டு ஆண்பிள்ளை பெறுவாள் அந்த விரண்டு பிள்ளையும் சலாமத்தாகவிருந்து எனக்கு ஈமான்கொள்ளும் பின்னும் பத்துச்சூலிலே யிரட்டையாக இருபது ஆண்பிள்ளையைப் பெறுவாள் அந்த இருபதுபேரும் என்னு[illegible] உம்மத்திலே ஆவார்களென்று [illegible]சொன்னார்.

பி[illegible], மஜீதென்கிறவர் எழுந்து கூ[illegible] அலைகிஸ்ஸலாத் துடைய தலையை முத்திக்கொண்டு வீட்டுக்கு வந்து தன்பெண்சாதியுடனே யிந்தச் செய்தியையெல்லாஞ் சொன்னார் அந்தப் பெண்சாதியும் ஈமான்கொண்டு சாலிஹான பெண்பிள்ளையா யிருந்தாள்.

பிறகு மஜீது என்கிறவர் தம்முடைய ஈமானை மறைத்துக்கொண்டு கவுமுகளிடத்திலே யிருந்தார் அந்தக் கவுமுகள் கூது நபியைத் தீங்காகப் பேசினார்களேயானால் என்னுடைய சிறியதகப்பன் மக்களே யவரும் நம்முடைய சிறியதகப்பன் மகனல்லவா அப்படிப்பேசவேண்டாமென்று சொல்லுவார் ஒருநாளாகிறபோது.

இராஜாவும் கவுமுகளும் கூடிப் புத்துகாளை நிற்பாட்டி வைத்துக் கொண்டு சாராயங் குடித்துக்கொண்டிருக்கிறபோது கூது அலைகிஸ்ஸலாம் அவர்களிடத்திலே போய் அந்தப் புத்துகான்களாகிறது உங்களுக்கு வருகிற தங்கடத்தைத் தட்டவுமாட்டாது அதுஉங்களுக்கு ஒரு பிரயோசனத்தைக் கொடுக்கவுமாட்டாது நீங்கள் சொல்லுகிறதைக் கேட்கவுமாட்டாது நீங்கள் அதை வணங்க வேண்டாம் அல்லாகுத்த ஆலாவை வணங்குங்களென்று சொன்னார்.

அப்போ தவர்கள் சொன்னார்கள் அல்லாகுத்த ஆலா குறுஆனிலே சொன்னதுபோலே, எஃனி அந்தக் கவுமுகள் சொன்னார்கள் கூதே உம்மை நாங்கள் ஜாகிலாக எண்ணுகிறோம் இன்னம் உம்மைப் பொய் பேசுகிறவர்களில் நின்று முள்ளவரென்று சொன்னார்கள் பிறகு கூது அலைகிஸ்ஸலாம் சொன்னார் என்னுடைய கவுமுகளே யெனக்கு ஜகாலத்தில்லை யென்கிலும் நான், றப்பில் ஆலமீனுடைய றசூலாக விருப்பேன் என், றப்புனுடைய தூதை யுங்களுக்கு நானெத்திவைக்கிறேன்.

இன்ன முங்களுக்கு நான் நசீகத்துச் சொல்லுகிறவனாகவும் விசுவாசமானவனாகவு மிருப்பேன் உங்களில் நின்றும் ஒருமனிதன் மேலே உங்கள் றப்புடைய வருதுவாருகிறது உங்களைப் புதுமையாக்கிவைக்குதா அந்த மனிதனுக்களை யச்சம் பூட்டுகிறதற்காக வே

ண்டியும், றப்புடைய இபாதத்தளவிலே உங்களை யழைக்கிறதற்காக வேண்டியும்; றப்புடைய அதாபில் நின்று முங்களைப் பயங்கராக்கி வைக்கிறதற்காக வேண்டியும் அவருக்கு வருநுவந்தது — இன்னம் றாகு அலைகிஸ்ஸலாத்துடைய கவுமுகளுக்குப் பின்னலே பூமியிலே யுங்களைக் கலிபாக்க ளாக்கினதை நீங்கள் நினைத்துப்பாருங்கள் இன்னமுங்கள் படைகோலத்தை விஸ்தீன மாக்கினதையும் நினைத்துப் பாருங்களென்று திருவுளமானன்.

அப்துல்லாகிபுனு அப்பாசு றலியல்லாகு அன்கு சொல்லுகிறார் அந்தக் கவுமுகளில் னேமானவர்கள் நாறுமுழமாகவு மிருப்பார்கள் குள்ளமாக விருக்கிறவர்கள் அறுபதுமுழமாக விருப்பார்கள்- அவர்கள் சொன்னார்கள்—அல்லாகுத்தஆலா குறுஆனிலே சொன்னதுபோலே எம்னி அவர்கள் சொன்னார்கள் கூதே நீர் எங்களுக்குக் கொண்டு வந்திரோ அல்லாகுத்தஆலா ஒருவனைக வணங்குகிறதற்காக வேண்டியும் எங்கள் தகப்பன் மார்கள் வணங்கினார்களே அதையெல்லாம் விட்டு விடுகிறதற்காக வேண்டியும் கொண்டு வந்திரோ நீர், உண்மை சொல்லுகிறவராக இருந்தி ரானல் எங்களுக்கு அதாபு வருமென்று, வருதாச்செய்திரோ அந்த அதாபைக்கொண்டு வாரு மென்று சொன்னார்கள் அப்போது கூதுஅலைகிஸ்ஸலாம் சொன்னார்—எம்னியுங்களுடைய-றப்பிடத்திலே நின்றும் உங்கள்மேலே அதாபுங்,கோபமு முண்டாரு மென்றார்—கூது அலைகிஸ்ஸலாம் கவுமுகளுக் கருகே நடந்து போவார்.

அப்போ தந்தக் கவுமுகள் வீடுகளைக் கட்டுவார்கள் அந்தவீடு நான்றுகலந்தால் வைத்துக் செ[illegible]வார்கள் அதிலே- [illegible] ல[illegible]தயிடித்துப்போட்டு தேர்வி[illegible]ட்டுவார்கள் கூது அலைகிஸ்ஸலாமதைப்பார்த்துக் கவுமுகளே நீங்கள் அந்தவேலையைச்செய்கிறதைக்[illegible]னை உங்கள் றப்புடைய இபாதத்திலே பாக்காக விருக்கிறது-உங்களுக்கு மெத்தவும் கைறாக விருக்கும் அல்லாவுக்குப் பயந்துகொள்ளுங்கள் எனக்கு வழிப்பட்டு நடங்களென்பார்.

அப்போ தந்தக் கவுமுகள்வளாத்திட்டி யடித்துக் காலின்கிழே போட்டு மிதிப்பார்கள்-அவர்மவுத்தாய்ப் போனரென்று அவர்களுக்கெண்ண மாகும்அளவும், பின்பு அந்தக் கவுமுகள் சிரித்துக் கொண்டு போவார்கள் அல்லாகுத்தஆலா அந்தக் கவுமுகளுடைய குபாட்த்தைக் கைக்கொண்டு அவரைக் காத்துக்கொள்ளுவான்— அல்லாகுத்தஆலா குறுஆனிலே திருவுளமானதுபோலே எம்னி மைமூனமா



தலத்திலே நீங்கள் வீடுகளைக் கட்டுகிறீர்களோ அதையெல்லாம் வீணாக்கிப் போடுகிறீர்கள் நீங்கள் காலகால மிருக்கிறதற்காக வேண்டி யெடுப்புகளைத்தங்கரித்துக்கொள்ளுகிறீர்கள்.

நீங்க ளொருத்தனைப் பிடித்தீர்களேயானல் அடிக்கிறது கொண்டும், வாளினலேவெட்டுகிறதுகொண்டு-வன்பராக விருக்கிறவர்களுடைய [illegible]லே படுகிறீர்கள் ஒரு [illegible]வுக்கு நீங்கள்பயந்து கொள்ளுங்கள் நீங்கள் செய்கிற அமலைக் கொண்டு உங்களுக்குதவி செய்தான் ஆடு, மாடு, ஒட்டகங்களைக்கொண்டும், பிள்ளைகளைக் கொண்டுங், தோட்டங்களைக் கொண்டும் ஆறுகளைக் கொண்டும் உங்களுக்குதவிசெய்தானே அப்படிக்கொத்த நாயனுக்குப் பயப்படுங்களென்றார்.

பிறகு அவர்கள் சொன்னார்கள் எம்னியவர்கள் சொன்னார்கள் கூதே நீ ரெங்களுக்கு அத்தாட்சினையைக் கொண்டு வரவில்லை நீர்சொல்லுகிறதற்காக வேண்டி யெங்கள் நாயனை நாங்கள் விடுகிறது மில்லை உமக்கு நாங்கள் ஈமான் கொள்ளுகிறதுமில்லை, நாங்கள் சொல்லவில்லை நீ ரெங்களுடையநாயன்களைத் தட்டுகிற தற்காக வேண்டி ஒருஇலாகு உம்மைத் தீங்கு கொண்டு தொட்டா னென்கிறதையே யொழியத் தீங்குகொண்டு தொட்டபடியினலே உம்முடைய அக்குல் போய்விட்டுப், பினத்திக்கொண்டிருக்கிறீ ரென்கிறதையே யொழிய நாங்கள் சொல்ல வில்லை எங்களுடைய நாயன்களிலேநின்றும் ஒரு நாயன் உம்மைத்தீங்கான காரியம் கொண்டு உம்மைப் பிடித்தா னென்றுசொல்லுகிறோமென்றார்கள்.

அப்போது கூதுநபிசொன்னார் நானென்மேலே அல்லாகுசுபுகானகூத்த ஆலாவைச் சாக்கிவைக்கிறேன் நீங்களும் சாக்கியாகவிருங்கள்— அல்லா வல்லாத்தை நீங்கள் வணங்கு கிறீர்களே அதை விட்டும் நான் நீங்கிக்கொண்டே னென்றார் பின்பு சொன்னார் உங்களுடைய நாயன் என்னைத்தீங்கான காரியத்தைக் கொண்டு பிடித்தான் என்றென்னை யிருக்கிறீர்களே அப்படிக்கொத்த நாயனுக்கு நான் யாது செய்தேன்.

அந்த நாயன்களிடத்திலே கூவத்தண்டா யிருக்குமேயானல் அவர்களிலே பெலைக விருக்கிறது என்னைப் பிடித்துக் கொள்ளவும் நீங்க ளுண்மை சொல்லுகிறவர்களாக விருந்தீர்களேயானலெனக்கு மங்கப் புத்தகளுக்கு மிடையிலே விட்டு விடுங்கள் அதையெல்லாம் நா னுடைத்துப் போடுகிறேன் நான் அல்லாகுத்த ஆலாமேலே தவக்குல் செய்திருக்கிறேன் அவன் என

க்கு முங்களுக்கும் றப்பானவன்
னர்வினை பறவினை மற்றும் வஸ்
துகள் ஒன்றுமில்லை.

அல்லாகுத்தஆலா அதினுடை
ய முன்னெற்றி ரோமத்தைப் பிடி
த்துக்கொண்டே யொழிய என்னு
டைய றப்பாகிறவன் பெலனை
யின்மேலே யிருக்கிறான் நீங்கள் பி
ன்னறிந்து எனக்கு வழிப்படாமற்
போனீர்களேயானால் திடனாக எ
ன்னை ஏவப்பட்டதே உங்களுக்கு
எத்திவைத் திருந்த எனக்கு வழிப்
படாமற் போனீர்களே யானால் எ
ன்னுடைய-றப்பானவன் உங்களை
யல்லாமல் வேறே கவுமுகளை உங்க
ளுக்குப் பகர மாக்குவான் அந்த
நாயனை நீங்கள் ஒரு தங்சடமுந்
செய்ய மாட்டீர்கள் என்னுடைய
றப்பாகிறவன் எல்லா வஸ்துவின்
மேலேயும் பேணிக் கொள்வானெ
ன்று சொன்னார்.

கூது அலைகிஸ்ஸலாத்துடைய
சொல் அவர்கள் வழிப்படுகிறதை
யும், சூரியாட்ட மடிக்கிறமேயொ
ழிய நேர்வழியை யதிகமாக்கி வைக்
க்கவில்லை அன்றையதினம் கூது ந
பி வீட்டுக்கு வந்து விட்டு மறுநா
ளும்போனார் அந்தக் காபிரானவர்
களுடைய றூல் அந்தப்படிக்குத்
தானேயிருந்தது அன்றைய தினம்-
நுசைவிபுனு கவிலென்கிறவர்-ஈமா
ன்கொண்டு கவுமுகளைக் குபிரை
விட்டும் விலக்கினார்-அவர்கள் இவ
ளாத்தளவிலே மீளவில்லை.

பிறகு அவர் கவுமுகளிடத்தில்
நின்றும் நீங்கிப்போய் றப்புடைய
இபாதத்தைக் கொண்டு பராக்கா
னார் ஒருநாள் ஆகாசமாகக், கனவி
ல் ஒரு சத்தங்கேட்டார் நுகைலெ
ன்கிறவரே உம்முடைய தலையையு
யர்த்தி உம்முடையகவுமுகளுக்கு
வருகிற அதாபைப் பாருமென்று
சத்தங்கேட்டார்.

பிறகு தலையை யுயர்த்திப்பார்
த்தார் இருளான மலையைப்போலே
பெரிய இருளைக் கண்டார் அந்த
இருளாகிறது கூது அலைகிஸ்ஸலா
த்துடைய கவுமுக ளளவிலே ய
னுப்பப்படுகிற அதாபாக விருக்கு
மென்று சொல்லவும்கேட்டார் நு
கைலு பயந்தவராக முழித்து அ
வருடைய சிறிய தகப்பனார் மகன்
உமறிபுனுல் அசம் கூடத்தான் க
ண்ட மனைமச் சொன்னார்.

அவர் சொன்னார் உம்முடைய
கவுமுகளுக் கிந்தமனுமை யறிவிக்
கிறது உம்முடைய மேலே வாஜி
பென்றார் அப்போது-நுகைலென்
கிறவர் கவுமுகளிடத்திலே போய்
என்னுடைய சிறிய தகப்பனார் ம
க்களே நான் இன்னின்னபடி மனு
மிற் கண்டேனென்றார் அவர் சொ
ல்லைப்பாராட்டாமல் அவரைக்கொ
ன்று போட நாடினார்கள்.



பிறகு அவர்களை விட்டும் அவர்
களாசாய்க் கூது அலைகிஸ்ஸலாத்தி
டத்திலே யிந்தச்செய்திக ளெல்லா
மபருக் கறிவித்தார்-பின்பு சொன்
னார் எனக்கு வுத்திரவு கொடுங்கள்
இன்ன மொருதா மவர்களிடத்தி
லே போய் அவர்களை யச்சம்பூட்டி
வைக்கிறே னென்றார் கூது அலைகி
ஸ்ஸலா முத்திரவு கொடுத்தார் அ
வர் கவுமுகள் சத்தத்தையுயர்த்தி
அதாபைக்கொண்டு அச்சம் பூட்டி
னார்.

அப்போ தவர்கள் சொன்னார்க
ள் கூது அலைகிஸ்ஸலாத்துடைய நு
புவத்து உம்மளவிலே திரும்பிய
தோ நீங்காமல் அதாபைக்கொண்
டு நீரும் அச்சம் பூட்டுகிறீர் அந்த
அதாபு வருகிறதை நாங்கள் காண
வில்லை நீங்க ளுண்மை சொல்லுகி
றவர்க ளாகவிருந்தால் நீங்கள் சொ
ல்லுகிற அதாபைச்சுறுக்காக வரச்
சொல்லுங்களென்றார்கள்-பிறகு அ
வரை மெத்தவும் திட்டினார்கள் அ
வர் திரும்பி வந்துவிட்டார்.

கூது அலைகிஸ்ஸலாம், கவுமுக
ள்மேலே - பதுவாச்செய்ய நாடுந்
தோறெல்லாம் அவர்கள் கூட்டமி
குதியாக விருக்கிறதைப்பார்த்துச்,
சபூறு செய்துகொண்டிருப்பார் கூ
து அலைகிஸ்ஸலாம் நீங்காமல் சுவர்
க்கத்தைக் கொண்டும் தவாபைக்
கொண்டும் அவர்களுக்கு வருதாச்
செய்கிறவராகவும் அதாபு வேத
னைகளைக்கொண்டும் அச்சம் பூட்டி
வைக்கிறவராகவு மிருந்தார் (எம)வ
ருஷஞ்சென்று போகுமளவும்.

பிறகு அவர்கள் ஈமான் கொள்
ளமாட்டார்களென்று அறிந்தபோ
து, வாதில் நூகென்கிற ஓடை
கரையில் நடந்துபோய் அவ்விடத்
தில் அமிர்தமான தண்ணிருண்டா
யிருந்தது அதிலே உலுவுச் செய்
துகொண்டு (உடு)றக்ஆத்தும் தொ
ழுது கொண்டு வானத்தளவிலே இ
ரண்டுகையு முயர்த்தி ஆண்டவ
னே அவர்கள் செய்கிறதெல்லாம்
நீ யறிந்திருக்கிறாய் உன்னுடைய-
றிசாலத்தை யவர்களுக்கு நான் எ
த்திவைத்தேன் அவர்கள் ஈமான்
கொண்டு வரவில்லை -ஆண்டவனே
அவர்கள் மேலே பசியும், பஞ்சத்
தையு மிறக்கிவை - அவர்கள் ஈமா
ன் கொண்டால் நல்லது இல்லாம
ற்போனால் அவர்களுக்கு முன்னு
லே ஒருதரையும் அதாபுசெய்ய வி
ல்லையே அப்படிச்சோத்த கடினமா
அதாபாக அதாபுசெய்கிறதே யுன்
னிடத்திலே கேட்கிறேனென்று ப
துவாச்செய்தார்.

அல்லாகு கபுகானகூத்த ஆலா
அவருடைய, பதுவாவைக் கபூல்ச்
செய்து கூது அலைகிஸ்ஸலாத்தையு
ம். அவருக்கு ஈமான் கொண்டமூ
மினை பேர்களையும் காபிர்களை வி
ட்டும் நீங்கிக்கொள்ளச் சொல்லி
பேவினன்-பிறகு மழையைப் பிடி

த்துக் கொண்டான் பூமியெல்லாம் பஞ்ச முண்டாச்சுது பச்சையிலை யொன்றையும் பூமியில் விளையவைக்கவில்லை மேய்கிற ஹைவான்களெல்லா மவுத்தாய்ப் போச்சுது (ஏ) வருஷமட்டும் அந்தப் பஞ்சத்திலே காபிரானவர்கள் சபூறுசெய்துகொண்டிருந்தார்கள்.

பிறகு கூது அலைஹிஸ்ஸலாத்துக்கு ஈமான் கொள்ளாதிருந்தார்கள் அந்தச் செய்தியை இராஜா கேட்டு அந்தக் கவுமுகளிற் பெரியோர்களையெல்லா மழைப்பித்து உங்களுக்குப் பஞ்சத்துடைய வருத்தத்தாலே கூதுடைய தீனிற் புகுகிறதற்கு நினைப்புவைத்திருக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டேன்- அப்படிச் செய்கிறது உங்களுக்கு வாசியல்ல அப்படிச் செய்கிறதைக்காண நஜீசைத் தின்னலாம் சிறுநீரைக் குடிக்கலாம்.

கூதாகிறவர் வஞ்சனைக்காரர் மெத்தவும் பொய்பேசுகிறவர்- நம்முடைய பாவத்தினாலே நமக்குப்பஞ்சம் பிடித்தாலுங் காட்டிலிருக்கிற ஹைவான்களும் புழுப்பூச்சிகளும் அதுகள் பாவஞ் செய்யாதபடிக்கு அதுகளுக்கும் நமக்குப் பிடித்த பஞ்சம் பிடித்திருக்குதே ; உங்களுடைய தீன்மேலே தானே நீங்கள் தரிபட்டிருங்கள் அந்தப் பஞ்சம் வெகுநா ளிருக்கமாட்டாது நீங்கிப் போகுமென்று சொன்னான்-மனிதர்களைக் கேட்டபோது கூது அலைகிஸ்ஸலாத்துடைய தீனிற்புகுத நற்கருத்து வைத்திருந்தார்களே அதை விட்டுவிட்டார்கள் பஞ்சத்திலும், பசியிலும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

அப்போது கூது நபிமலையினுடைய உச்சத்திலே நின்றுங் கூப்பிட்டார் ஆதுடைய கவுமுகளே நீங்கள் அல்லாவுக்குப்பயந்துகொள்ளுங்கள் நான் கொண்டுவந்[illegible] கூதியத்தை நீங்கள் பொருந்திக்கொடுக்குறீர்கள் நீங்கள் தவுபாச்செய்யவில்லை நான் உங்களுக் கச்[illegible]ம்பூட்டிவைக்கிறேன் இந்தப்பஞ்சமாகிறது உங்களுக்கு முதல் அதாபமாகவிருக்கும் நீங்கள் ஈமான் கொண்டீர்களேயானால் வானமழையையிறக்கி வைக்க உங்கள் றப்பிடத்தில் நான் கேட்கிறேன் மழையும் பெய்யும் பூமி யழகான பூண்டுகளாக முளைப்பிக்குமென்று சொன்னார்.

அப்போது அந்தக் கவுமுகளெல்லாங் கூடி. நாம் பஞ்சம்பிடித்து கலாக்காகப் போகிறோமே அந்தப்பஞ்சம் தாயுமாக விருக்குமானால் நாமெல்லாம் கலாக்காகப்போய் விடுவோம்-கருபத்துல்லாவுடைய ஹறமத்துக் காகவேண்டிச் சிறிது பணங்களையு மனிதரையு மனுப்பி வைக்கலாம் அவர்கள்- கருபத்துல்லாவிற் போய் மழைபெய்யத் துஆ



ச் செய்வார்கள் என்று- மசலிகத்துப் பண்ணிக் கொண்டார்கள்.

அந்த நாளையில் அவர்களுக்கு ஒரு ஆபத் திறங்கிச்சுதானால், கருபாவுக்கு ஹதியா அனுப்பி வைத்து மனிதரையு மனுப்பி வைத்து அல்லாகுத்த ஆலாவிடத்தில் துஆச்செய்து அந்த ஆபத்தை நீக்கிக்கொள்ளுகிறது அவர்களுக்கு ஆதாரமாகவிருந்தது அவர்கள்- கருபாவிலே புகுதுகிறபோது ஜவாகிறுகளைக்கொண்டும் பலவகையான பூ[illegible]ங்களைக் கொண்டும் ஜீனத் தாக்கப்பட்ட ஒட்டகைமேலே யொழிய புகுதமாட்டார்கள்.

[illegible]ப்புறமெல்லாருக்கு அன்குபேசிவருகிறார் அந்தக் கவுமுகளில் அசுருபாக விருக்கிற பேர்கள் (எ) பேரையவர்கள் தெரிந்தெடுத்துக்கொண்டு (ஏ) பேருக்கு ஒரு தலைமைக்காரராக ஆக்கிக்கொண்டார்கள் அந்தத் தலைமைக்காரர் பேராகிறது, லெக்கிமு- லுக்குமான்- ஜல்கமா-இமேறு-உமைறு-இமறு-மஜீது-இவர்கள் கையில் கருபத் துல்லாவுக்கு மிகுதியான கதிபாக்களும் கொடுத்தனுப்பிவைத்தார்கள்.

மஜீது என்கிறவர் முதல் கூது அலைஹிஸ்ஸலாத்துக்கு ஈமான்கொண்டிருக்கிறார் அவரு மவர்களுடனே கருபாவுக்குப் போகிறார்கள் அப்போது ஆகாசமாக ஒருசத்தங் கேட்டார்கள் கலாக்கும் கேடுமாகிறது ஆதுடைய கவுமுகளுக்காகவிருக்கும்-சத்தாலும் அந்தக்கவுமுகளும் கலாக்காகப் போகிறார்கள் (எல்) வருஷமாக அவர்களின் றப்புடைய யேவலை விட்டு வழிகெட்டுப் போனார்கள் இப்போது மழையைத் தேடிப் போகிறார்கள் அவர்களுக்கு மழை பெய்ய வைக்கப்படாது இனியேலொரு பெருங்காற்று வந்து அந்தக்காற்றிலே யவர்களெல்லாரும் கலாக்காவார்களென்று சத்தத்தைக்கேட்டார்கள்.

பிறகு அவர்கள் நடந்துபோகிறபோது அவர்கள் மேலே தோதுடைய ஜப்பாவும் கையில் வாளுமாட்டுத் தோலுடைய சவுக்கு முண்டாயிருந்தது அவர்களுக்கு ஐவேதாவாகிறது செத்தமாட்டுடைய வுலர்ந்த இறைச்சியும் உப்புத்தண்ணீரு முண்டாயிருந்தது ஈமான் கொண்டிருக்கிற மஜீ தென்கிறவர் ஒருபைத்தைச் சொல்லிக்கொண்டு முன்னே நடந்தார்-அந்தபைத்தின் பொருளாவது எஃனி ஆதுடைய கவுமுகள் அவருடைய றசூலுக்குமாறுசெய்தார்கள்- அவர்கள் தண்ணீர்த்தாகமானவர்களாக ஆனார்கள் அவர்களுக்கு வானம் தண்ணீரைக்கொடைகொடுக்க மாட்டாது அல்லாகு சுபுகானகு வத்தஆலா குற்றுப்செய்தான் அவனுடைய குற்றமாகிறது அநியாயமல்ல அல்லாகுத்த ஆலா ஆதுடைய கவுமுகள் மேலே

ருக்கும் செய்த தாகிறது புத்தகாங்களை வணங்குகிறதற்கு அவர்களுடைய ஆசை காலிபான நேரத்திலே யாகவிருக்கும் அந்த ஆதுடைய கவுமுகள் கெட்ட கவுமுகள் அவர்கள் கலாக்காகப் போவார்கள் அவர்களுக்குப் பகாயில்லை நான் காலா காலம் கூதுடைய தீனைப் பிரியமாட்டேன் நான் பனுவாகப் போகுமளவு மென்று இந்த பைத்தைச் சொல்லிக் கொண்டு மஜீதென்கிறவர் நடந்தார்.

அப்போது ஒருகூட்டமலாயிக்கத்துகள் அவருக்கு முன்னேக்கி வந்து மஜீதே சோபன மென்கிற சோபனமெல்லா முமக்காக விருக்கும் நீரெங்கே யிருந்து வாரீர் எங்கேபோகிறீ ரென்று கேட்டார்கள் அப்போது தம்முடைய செய்திகளை யெல்லாம் அவர்களுக் கறிவித்தார் அப்போது அந்த மலாயிக்கத்துகள் மஜீதுடைய ஒட்டகையை விட்டும் அவரை யிறங்கச்சொல்லி அவருக்கு ஒரு ஒட்டகை கொடுத்து அதிலே யேறச் சொன்னார்கள் பிறகு மஜீதுடைய ஒட்டகம் அவர் ஊர் போய்ச்சேர்ந்து போச்சுது.

பிறகு மஜீதுடனே மலாயிக்கத்துகளும் ஒட்டகைமே லேறிக்கொண்டு ஆகாச மாக நடந்து மக்கத்திலே வந் திறங்கினார்கள் அப்போது ஹறத்துடைய வலது புறமும்,இடது புறமுஞ்சிறிது மலாயிக்கத்துகள் கைகளிலே வெள்ளைகொடியும் பிடித்துக்கொண்டு சப்பு சப்பாக நின்று கொண்டு கூதுக்கும் கூதுடனே சமான்கொண் டிருக்கிறபேர்களுக்கு முதலியுண்டாக அந்தமலாயிக்கத்துகள் துவாச்செய்யக் கண்டார்கள் இன்னம் ஆதுடைய கவுமுகள் கலாக்காகப் போகிறதற்கும் பதுவாச் செய்யக் கண்டார்கள் பின்பு ஆதுடைய கவுமுகள் அறுபத்தொன்பது பேரும் ஹறம் வந்து சேர்ந்தார்கள்-அவர்கள் கறத்திலே யிறங்கவில்லை அவர்களுக்கு[illegible]மு ஆகாசமாக அவர்களுக்கு- லஃனத்துச்செய்கிற சத்தத்தைக் கேட்கிறார்கள்.

பிறகு ஹறத்திலே வந்து இறங்கினார்கள் அப்போது ஹறத்திலே, அமாலிக்கா என்னுங் கிளையிலே நின்றும்,எருதுடைய மகனார்- மஹாவியர் இராஜாவாக விருந்தார் அவர் பெண்சாதி. ஹுசைமுவுடைய மகள்,ஜுதைனிமா வென்கிறவ ளிடத்திலே வந்திறங்கினார்கள்- பிறகு மஹாவியா வென்கிறவர் அவர்களைக் கேட்டார் நீங்கள் வந்தீர்களே உங்களுடைய செய்திக ளென்னவென்று அப்போது கூது அலைகிஸ்ஸலாம் நபியாக வந்ததும், இவர்களுக்குப் பஞ்சம் வந்து பிடித்ததும் ஹறத்தளவிலே மழையைத்தேடி துஆச் செய்கிறதற்காக வந்ததுஞ் சொன்னார்கள்.



அப்போது மஹாவியா அவர்களையெல்லாம் விருந்தாளி களுடைய தலத்தி லிறக்கி வைத்து அவர்களுக்கு வஜிபனமுங் குடிப்பானுங் கொடுத்து ஒரு மாதம்வரையிலும் அவரிடத்தில் வைத்திருந்தார்- அவர்களெல்லா மிராகம் பாடுகிறதும், சாராயம் குடிக்கிறதுமாக விருந்தார்களேயொழிய தாங்கள் நாடி வந்த மழையுடைய காரியத்தை மறந்தேவிட்டார்கள்.

பிறகு மஹாவியா அவர்களைத் துஆச் செய்துவிட்டுப் போங்களென்று சொல்லுகிறதற்கு ஹயாவைத்தா[illegible] - இராகம் பாடுகிற விரண்டு [illegible]ள்ளாட்டிகளுக்கு ஒரு பைத்தைப் படித்துக் கொடுத்துக் கின்னரங் கொட்டி யிராகம் பாடும்போது அந்த பைத்தை யவர்களுக்கு முன்னாலே படிக்கச் சொன்னார் அவர்கள் படித்தார்கள்.

அதன் பொருளாவது,எஃனி கவுமுகளே-உங்களுக்கு என்ன நீங்கள் எழுந்து நின்று தல்பியத்துச் சொல்லுங்கள்- அல்லாகுத்த ஆலா உங்களுக்கு ஒரு மேகத்தைக்கொடுப்பான் அந்த மேகமுங்களுக்கு உதவியான மழையைப் பெய்ய வைக்கும்- உங்களுடைய பூமியையும் காடுகளுடைய புறங்களையெல்லாந்தாகந் தீர்த்து வைக்கும்-அல்லாகுத்த ஆலா ஆதுடைய கவுமுகளுக்கு மழையை யிறக்கி வைப்பான்.

ஆதுடைய கவுமுக ளாகிறவர்கள் தாகத்துடைய கடுமையினாலே மவுத்தாய் கலாக்காகப் போகிறவர்களாக விருக்கிறார்கள் அவர்களிலே கிழவமாரும், வாலிபகாரருஞ், சிறுபிள்ளைகளும் பாக்கியாக விருக்கிறதை ஆதரவு வைக்கப்பட வில்லை மஸ்தாயிருக்கிற கூட்டங்களேயுங்களுடைய கவுமுகளுக் காகவேண்டி நீங்கள் தெளிவுபெற்றுக்கொள்ளுங்கள்-அந்தக் கவுமுகள் சைனானவர்களாக விருக்கிறார்கள்- நீங்கள் இடனைச் சந்தோஷமாக இவ்விடத்தில் உண்கிறத்தின் பேலேயும், குடிக்கிறத்தின் பேலேயும்,தரிபட்டிருக்கிறீர்கள் அப்படி யிருக்கிறதை நீங்கள் விட்டுவிடுங்கள்.

ஆதுடைய கவுமுக ளாகிறவர்கள் மனிதர்களில் உயர்த்தியானவர்கள் அவர்களைச் சங்கையானவர்களாகப் படைக்கப் பட்டதென்று இந்த பைத்தைச்சொல்லி யந்த இரண்டு வெள்ளாட்டிகளும் கின்னரங்கொட்டி ராகம் பாடினபோது அவர்கள் உணர்வுபெற்று நாம் வந்த காரிய மின்னமாக வில்லையேயென்று கைகளை யெல்லாங் கழுவிக்கொண்டு சாராயம் படாத புதுட்பிடவைகளை யுடுத்திக்கொண்டு அவர்கள் கதியாவாகக் கொண்டுவந்த ஆகிக்களையும், பூறாங்கனையும், உ

குபாவுக்குப் போட்டார்கள், சகு
பா அதைக் கபூல்செய்யாதபடிக்
கு எறிந்து போட்டது அப்போது
மஜீலென்கிறவர் சொன்னார்- இந்த
பைத்தை யுடைய காயனுகிறவன்
பூமினுடைய பேர்களிலே நின்றுமே
யொழிய அந்த சுதிபாவைக் கபூல்
ச்செய்யமாட்டான் நீங்களும் கூது
நபிக்கு ஈமான் கொள்ளுகிறீர்களா
வென்று கேட்டார்.

அப்போதவர்கள் சொன்னார்க
ள் மஜீதேயுன்னுடைய பேச்சாகி
றது நீர் கூதுக்கு ஈமான் கொண்டி
ருக்கிறதின்மே லறிவிக்கின்றது
நாங்களெக்காலமும் அவருக்குஈமா
ன் கொள்ளுகிறதில்லை யென்றார்க
ள் பிறகு ஒருமனிதன் ஜல்கமாவெ
ன்கிறவன் எழுந்திருந்து ஒரு பை
த்தைச் சொல்லிச்சொன்னான் சகு
தென்கிறவரே நீசொகிறது ஆதுடை
ய மக்களிலுள்ள கூட்டத்தி லுள்
ளவர் தமுதுடைய மக்களில் நின்
றுமுள்ளவர் சங்கையான கொடை
கொடுக்கிற எங்கள் தகப்பன் மாரு
டைய தீனை நாங்கள் விட்டுப் போ
ட்டு கூதுடைய தீனைத் தொடரவா
வென்றான் அப்போது மஜீதுசொ
ன்னார் உங்களைக்கொண்டு நான்கை
றையே யொழிய நாடவில்லையென்
று ஒரு பைத்தைச் சொன்னார்.

அதன் பொருளாவது ஆதுடை
ய கவுமுகளை எந்நாளும் வழிகேட்
டி லிருக்கிறவர்களாக நான்காண்கி
றேன் நேர்வழியான காரியத்தைத்
தொட்டும் அவர்கள் தூரமானார்கள்
அவர்களுடைய தப்புக்கு மாறுசெ
ய்கிறதுகொண்டு வெளியாங்கமாக
கூதுடைய தீனைவிட்டும் அவர்கள்
கைருனவர்களாக விருக்கிறார்க
ளென்று சொன்னார்-பிறகு அவர்க
ளெல்லாரும் ஒன்றாய் மழைபெய்
யத் தேடத் துடங்கினார்கள்.

ஒரு மனிதன் சொன்னான், எலே
னி ஆதுடைய, தப்பே ஆதுடைய
கவுமுகளுக்கு மழை பெய்யுவில்
அவர்கள் ஊசிற் புற்பூண்டுகெட்டமு
ளைச்சவை நீயாகிறவன் அடியார்க
ளுக்கு, தருமத்துச் செய்கிறவன்
சுகண்டிபாக விருக்குமே அப்படி
க்கொத்த மழையைப் பெய்யவை
இறக்கிறது முறுதாகவிருக்குமென்
று ஒருமனிதன் துஆச்செய்தான்.
பிறகு- லுக்கைமு என்கிறமனிதன்
ஒரு பைத்தைச் சொன்னான்.

அதன் பொருளாகிறது உன் ஆ
துடைய கவுமுகளும், அவர்களு
டைய வங்கிஷங்களும், அவர்களு
டைய காலத்தினது பஞ்சத்தினு
லே பதறுகிறார்கள்- உன்னிடத்தி
ல் நின்று மவர்களுக்கு மழையை
க்கொடுத்தருள் அவர்க ளுடைய
தாகத்துக்கு அந்தமழை, தருமத்
தாயிருக்குமே அப்படிக்கொத்த ம
ழையைக் கொடுவென்று துஆச்
செய்தான்- மற்றக் கூட்டங்களும்
அவரவர்களுக்கு வேண்டின படிக்



கு அல்லாகுத்தஆலா விடத்தில் து
வால்ச்செய்தார்கள்.

மஜிதுபுனு ஸகிதென்கிறவர் அ
முதுகொண்டு ஆண்டவனே உன்
னுடைய கறத்தனவிலே நான் வர
வில்லை பூமியிலே நீ மழையையிறக்
கிவைக்கத் தேடுகிறதற்காக வேண்
டியே யொழிய அல்லது ஒரு உம்
மத்தை நீ அயாத்தாக்கி வைக்கிற
த்தைத் தேடுகிறதற்காக வேண்டி
யே யொழிய அவர்க ளுனக்கு வ
ழிபட்டு நடந்தாலும் அல்லது மா
றுசெய்தாலுஞ் சரியென்றார் அல்
லாகுத்த ஆலா அதாபுடைய மலக்
களிலே வகியிறக்கி வைத்து அ
வர்மேலே- மூன்றுவகை மேக
த்தை யனுப்பி வைக்கச் சொன்
னான்.

ஒருமேகம் வெள்ளையும்-ஒருமே
கஞ் சிவப்பும்-ஒரு மேகங்கறுப்பும்
அந்தக்கறுப்பு மேகத்திலே அவனு
டைய கோபத்தையும், அதாபை
யும், நிரப்பிவைக்கச்சொல்லி யேவி
னான்- வெள்ளைமேக முதலுயர்ந்த
து-சிவப்பு மேகம் அதற்கடுத்தா
ப்போ லுயர்ந்தது- அதற்குப்பின்
னாலே கறுப்புமேக முயர்ந்தது-அ
ந்தக் கறுப்பு மேகத்தின்மேலேமே
கத்துக் கதிபதியான மலக்கும் க
டூரான காற்றுமுண்டா யிருந்தது-
அந்த மேகங்க ளெல்லா முயர்ந்த
தை யந்தத் துஆச்செய்த கவுமுக
ள் பார்த்தபோது அவர்கள்சந்தோ
ஷமாக நம்மாயஞ்சொல்லிக்கொ
ண்டார்கள் அவர்களில் நின்றும் ஒ
ருமனிதன் சொன்னான்-அந்த மூ
ன்றுமேகத்திலே நின்றும் ஒருமே
கத்தை நீங்கள் தெரிந்து கொள்ளு
ங்க ளென்றான்,

அப்போதவர்கள் சொன்னார்க
ள் வெள்ளைமேகத்திலே தண்ணீரி
ல்லை - சிவப்புமேகத்திலே காற்று
ண்டா யிருக்கும்-என்கிறுங் கறுப்
பு மேகத்தை நாம்-தெரிந்து கொ
ண்டோ மென்றார்கள் - அப்போ
தொரு சத்தமுண்டாச்சுது கறுப்
பு மேகத்தை நீங்கள் தெரிந்துகொ
ண்டீர்கள் அந்த மேகத்திலே நெ
ருப்புச் சாம்ப லுண்டாயிருக்குது
ஆதுடைய கவுமுகள் ஒருதரையும்
விடமாட்டாதென்று சத்தமுண்டா
னபோது அல்லாகு சுபுகானகுத்த
ஆலா நரகத்துடைய அதிகாரிமா
ரிக் களிலே வகியிறக்கி வைத்தா
ன்-கறுத்தச் சங்கிலியை மேகத்தி
லே கட்டி யந்த மேகத்தை யிழு
த்துக் கொண்டு ஆதுடைய பூமியி
லே போகச்சொல்லி யேவினான்.

பிறகு அந்த மேகம்-வாதில் மு
கிதென்கிற தலத்தில் நின்றும் அ
வர்கள் பூமியெல்லாம் பாவிபுது அ
ப்போ தவர்கள் சொன்னார்கள் அ
தோ மேகம்வருகிறது மழைபெய்
யப் போகிறதென்றார்கள்-அல்லா
குத்த ஆலா குறுஆனிலே திருவு
ளமானதுபோலே - எலேனி ஆது

டைய கவுமுகள் அந்தமேகத்தைப் பார்த்து,மேகமழை பெய்யவைக்குமே அந்தமேக மென்றார்கள்,

அல்லாகுத்த ஆலா சொல்லுகிறான் - நீங்கள் கருபத் துல்லாவிற் போய்த் திரமாகத் தேடினீர்களே யந்த மேகமாகவிருக்கும் அந்தமேகத்தின் மேலே காற்றுண்டா யிருக்குது அந்தக்காற்றிலே ரொம்பமான அதாபு முண்டா யிருக்குது அந்தக்காற்று அதன் தப்புடைய வலைக்கொண்டு ஆதுடைய பூமியையும், அந்த பூமியிலிருக்கிறவங் தடங்கலையும் ஊலாக்காக்கிப் போடும் அவர்களல்லாத பேர்களுடைய பேரை ஊலாக்காக்க மாட்டாதென்று திருவுளமானான்.

பிறகு அந்தக்கவுமுகள் புத்துகளையெல்லாம் சந்தோஷமாக திற்பாட்டினார்கள் அப்போது அல்லாகு சுபுகானகூத்த ஆலா அந்தக் காற்றுக்கு அதிபதியா யிருக்கிறாரே யந்தமலக்குக்குச்சொன்னான் பெருங்காற்றை ஆதுடைய கவுமுகள்மேல்விட்டு அவர்களை ஊலாக்காக்கிப் போடு-மற்றப் பேர்களுக்கெல்லாம் அந்தக்காற்று-றகுமத்தாக விருக்கட்டு மென்று திருவுளமானான்.

அந்த வருத்தில் கூது அலைகிஸ்ஸலாமும், அவருடனே யிருக்கிற மூமினான பேர்களு மலையி லிருக்கிற ஆதுடைய கவுமுகளே உங்களுக்கு அதாபு வந்து தொடுத்தது அந்தமேகத்திற் பெருங்காற்றுண்டா யிருக்கிறது அல்லாவுடைய அதாபாகவிருக்கும் அந்தஅதாபை விலக்கு கிறவர்கள் ஒருவரு மில்லை இப்போதாகிலும் நீங்கள் ஈமான் கொள்ளுங்கள்—நான் அல்லாகுத்த ஆலா விடத்தில் மன்றாட்டங் கேட்டுக் கொள்ளுகிறே னென்றார் அப்போ அந்தக் கவுமுகள் சொன்னார்கள் அது எங்களுக்கு மழைபெய்யவைக்கிற மேகமல்லவா வென்றார்கள்.

பிறகு அந்த மேகங்களைச் சுற்றி மலாயிக்கத்துகள் ஆயுதங்களோடும், கொடிகளும் பிடித்துக்கொண்டிருக்கிறதை யந்தக் கவுமுகள் கண்டபோது அவர்களுக்கு அதாபுவந்து இறங்குதென்று எக்கினக அறிந்து அவர்களுடைய கூடாரத்திற் போய்க் கொடிகளை யெல்லாம் விரித்து விட்டு ஆயுதங்களைக் கையிலெடுத்துக் கொண்டு பெண்டுகள் பிள்ளைகளை யெல்லாங் கோட்டைக் குள்ளே போகச் சொல்லி வில்லில் அம்பைப்பூட்டி மேகத்துக்கு மேலெறிந்தார்கள் மேகத்திலே மலக்குகளெல்லாந் தரிபட்டிருக்கிறார்கள்.

கூது அலைகிஸ்ஸலாமும், அவருடைய மூமினான கவுமுகளும் அவர்களுங் கச்சம் பூட்டிக்கொண்டிருக்கிறார்கள், தற்காற்றும் அல்லாகுத்த ஆலாவுடைய ஏவலுக்கு வழி



பார்த்துக்கொண் டிருக்கிறது அந்தக் காபிரானபேர்கள் சொல்லுகிறார்கள், கூதேஇனிமேல் நீரறிவீர் நாங்கள் கூவத்தானவர்களோ, உம்முடைய தப்பு கூவத்தானவனோவென் றறிவீரென்று சொன்னார்கள்,

பிறகு அல்லாகுத்த ஆலா காற்றுக்கு, குக்கும்செய்தான் மோதிரத்துடைய வளையத்தில் நின்றும் புறப்படச் சொல்லி யேவினான்-பிறகு காற்றுப் புதன்கிழமை-சுபுகுவக்கத்திற் புறப்பட்டு அந்தக் காபிரான கவுமுகளிலே ஒருசப்பு மனிதனை வானத்தளவி லுயர்த்தித் தலைகீழாகப் பூமியிலேபோட்டது இரண்டாவதும்-மூன்றாவதும் அவர்களை வானமளவு முயர்த்திப் பூமியிலே மோதி யடித்து அவர்களுடைய கை வாங்கிப்போட்டது அந்தபடிக்கு ஏழுநாள் மட்டும் பெருங்காற்றடித்து ஆதுடைய கவுமுகளெல்லாம் ஊலாக்காகப்போ போனார்கள்.

இப்சான்என்கிற இராஜாவுமுதன் ஊலாக்காகிறதைப் பார்த்துக்கொண்டு அவனைமேலடிக்கிற காற்றைத் தட்டிக்கொண் டிருக்கிறான் அந்தக்காற்று அவன் வாயிலே புகுந்த பின் அவாரத்தாற் புறப்பட்டு அவனும் மையித்தாய் விழுந்துசெத்தான் அல்லாகு சுபுகானகூத்த ஆலா குதுரதிலே திருவுள மானபோலே-சுப்ஙி கூது அலைகிஸ்ஸலாத்துடைய காபிரான கவுமுகள்பேரிலே அல்லாகுத்தஆலா அந்தக்காற்றை ஏழிரவும் பகலுக்- துடாகச் சாட்டினான்.

சத்திபேசி வருகிறார் அவர்களிலொருதன் மனிதர்களும், ஒட்டகங்களும் வானத்தளவிலே பறக்கிறதைப்பார்த்து வீட்டுக்குட்புகுந்து கதவைச் சாத்திக்கொள்வான்-காற்றந்தக் கதவைத்திறந்து வீட்டுக்குள்ளேபுகுந்து அவனை ஊலாக்காக்கிப்போட்டு வெளியே வந்து விடும் அவர்களெல்லாம் ஊலாக்கானபோது அல்லாகுத்தஆலா கறுத்தப்பக்கிசாரங்களை யனுப்பிவைத்து அவர்களைக் கொத்தி யெடுத்துக்கொண்டுபோய்க் கடலி லெறியச்சொல்லி யேவினான்.

நபிசல்லல்லாகு அலைகியோசல்லத்தைத் தொட்டும்அபிஉமாமா- றிவாயத்துச் செய்கிறார் - அந்தஆதுடைய கவுமுகள் இரவிலே வழிபனக்கின்று, சாராயம் குடித்துப் போட்டு நித்திரை செய்வார்கள்ராக்காலவும் - கின்சிறுகவு மாற்றப்பட்டவர்களாகப் பொழுது விடிவார்கள்-சிறிதுபேர்களைப் பூமிசொரிய வாங்கினவர்களாகக் காண்பார்கள்மற்றப்பேரை யெல்லாம் பெருங்காற்றுவந்து ஊலாக்காக்கிப் போட்டது அவர்கள் ஊலாக்கான தெல்லாம் சாராயமெத்தக் குடிக்கிறவர்களாகவும், வட்டி வாங்கித்தின்கிற

வர்களாகவும், இராகம் பாட்டுவிளை
யாட்டு மிகுதிபாகச் செய்கிறவர்க
ளாகவும், பட்டுப் பிடவை யுடுக்கி
றவர்களாகவும் இன்னம் சனத்தை
முறித்து நடக்கிறவர்க ளாகவும் இ
திலுடனே கூதுநபிக்கு ஈமான்
கொள்ளாம லிருந்தார்கள் அதற்கா
கவேண்டி ஹலாக்கானார்கள்.

ஹறதிதையுடையவாகள் பேசிவ
ருகிறார்கள் மக்கத்துக்கு துஆச்செ
ய்யப் போனார்களே அந்தக் கவுமு
கள் துவாச்செய்தது? பஹானியத்தி
லுள பக்கறு விட்டில் வந்திறங்கி யி
ருந்தார்கள் அப்போது நிலவு வெ
ளிச்சமான இரவிலே ஒருமனிதன்
வந்து ஆதுடைய கவுமுஹள் கலா
க்காகப் போன செய்தியை யறிவி
த்தான் அப்போ தவர்கள் கூதெங்
கே யிருக்கிறானென்று கேட்டார்க
ள் கடலோரத்தி லிருக்கிறானென்
று சொன்னான்-அவன்சொன்னதி
லேயவர்கள் சக்கானார்கள் அப்போ
து, பக்கறுடைய மகள் குஜைறு
சொன்னான் மக்கத்துடையநாயனு
லை அந்தமனிதன் உண்மைசொ
ல்லுகிறானென்று சொல்வாள் அவ
ர்கள் துஆச்செய்கிற நேரத்திலேஉ
ங்களுடைய மேலெண்ணத்தை யு
ங்களுக்குக் கொடுக்கப்படும் உங்க
ளுடைய சரீரத்துக்கு ஒரு காரிய
த்தைத் தெரிந்து கொள்ளுங்களெ
ன்று சொல்லப்பட்டது.

அப்போது மஜீது சொன்னார்
ஆண்டவனே யெனக்கு உண்மை
யும், நலவான காரியத்தையும்கொ
டுவென்று சொன்னார் அது அவரு
க்குக் கொடுக்கப்பட்டது - லைகு
சொன்னான் என் கவுமுகளுக்குக்
கொடுக்கிறதை யெனக்குங் கொடு
க்கத் தெரிந்து கொண்டே னென்
றான், கவுமுகள் ஹலாக்கானப்போ
லே அவனும் கலாக்கானான்-லுக்கு
மான் சொன்னார் ஆண்டவனேயெ
னக்கு ஹயாத்தைக் கொடுவென்று
சொன்னார் அப்போது ஏழு மாட்
டுடைய ஹயாத்தை யாகிலும், ஏ
ழுகழுகுடைய ஹயாத்தையாகிலு
ந்தெரிந்து கொள்ளென்று சொல்
லப்பட்டது அவர் ஏழு கழுகுடை
ய ஹயாத்தைத் தெரிந்து கொண்
டேனென்றார்.

பிறகு அவர் கழுகுடைய முட்
டை பொரித்த பிறகு குஞ்சையெ
டுத்து வளர்ப்பார் அது எண்பது
வருஷம் கயாத்தா யிருந்து மவுத்
தாய்ப்போம், மறுபடியு மொருகு
ஞ்சையெடுத்து வளர்ப்பார் அதுவு
ம் எண்பது வருஷம் ஹயாத்தாயி
ருக்கும் இந்தப்படிக்கு ஏழு குஞ்சு
வளர்த்தார் ஏழாவது குஞ்சு வளர்க்
கிறபோது அவருடைய வுடம்பிற
ந்தான் மகன் சொன்னான் உம்மு
டைய ஹயாத்திலே இன்னும் ஒரு
கழுகே யொழிய பாக்கியாக விரு
க்கவில்லை யென்று சொன்னானதப்



போது, லுக்குமான்சொன்னார் இ
துதான் என்னுடையகாலமென்றார்

பிறகு அந்தக் கழுகு ஹயாத்து
ப்பற்றற்றுப் போனபோது அதுபி
றந்தமலையுடைய வுச்சத்திலேபோ
யேறிக்கொண்டது, லுக்குமானும்
அதிலுடனே போனார் அதற்குப்ப
றக்கிறதற்குச் சத்தியில்லாமல் வி
ழுந்து செத்துப்போச்சுது, லுக்கு
மானும் அதிலுடனே மவுத்தானார்.

மூறாம்மதிபனு இசுகாக்குபேசி
வருகிறார்-மஜீதென்கிறவர் கூது அ
லைகிஸ்ஸலாத்துடனே சேர்ந்தஅவ
ருடனே யிருந்தார் கூது அலைகிஸ்
ஸலாம் அல்லாகுத்தஆலா வேண்டி
னமட்டும் ஹயாத்தாக-நூற்றைம்
பது வருஷமிருந்து பிறகு மவுத்
தானார் அவருடைய கபுர் கதுறல்
மவுத்தென்கிற ஹிறு லெப்ப மே
ட்டின்மேல் அடக்கியிருக்குதென்
று அலிறலியல்லாகு அன்குசொன்
னார்.

இன்னமொரு றிவாயத்திலேவ
ந்திருக்கிறது எல்லா நபிமார்களும்
அவர்களுடைய கவுமுகள். கலாக
பெற்றுபோயானால் அவருமவருக்கு
ஈமான்கொண்ட பேர்களு மக்கத்
துக்குப்போய் அவர்கள் மவுத்தா
குமளவும் அல்லாகுத்த ஆலாவை
வணங்கிக் கொண்டு மக்கத்திலே
தானிருப்பா ரென்று வந்திருக்கிற
து, வல்லலாத்து, வஸ்ஸலாம்.

## ஆறாவது செய்தி.

கூது-அலைகிஸ்ஸலாத்துடையகிஸ்ஸா-முற்றிற்று.

இச்செய்தி அறபுப்பாஷையா லிருந்ததைத் தமி
ழ்ப்பாஷையில்மொழிபெயர்த் தெழுதியவர் பவளமாந
கரம் காதிறுமுகம்மதுஜான்சாகிபுலப்பை ஆலிம்-இதனை
முதலில் அச்சிட்டவர் பாசிப்பட்டணம் நயினாமுகம்ம
துப்புலவர்.

பிசமில்லா கிற்றகுமா னிற்றகீம்.

———()———

இஃது,

# ஏ ழா வ து செ ய் தி.

# சத்தாதுகட்டியசுவர்க்கத்துடையகிஸ்ஸா

———()———

## இதாகிறது ஆதுடையமகன் சத்தீதும் சத்தாதும் இவர்களுடைய கிஸ்ஸாவையும் இறமதாத்தில் இமாதென்கிற சுவர்க்கத்துடைய அலங்கிதத்தையும் பேசுகிறதாகவிருக்கும்.

———()———

அபீ வாயிலிபுனு மன்சூறைத் தொட்டும் - கபியான்-றிவாயத்து ச்செய்தார் ஒருமனிதன் அவருக் குப் பேர்-அப்துல்லாகிபுனு குலா பாவென்று சொல்லப்படும் - அவர் ஓடிப்போன ஒட்டகையைத்தேடி அதனுடைய காட்டிலே போகிற போது ஒருபட்டணத்தைக் கண் டார்-அதிற் கோட்டையு முண்டா யிருக்கிறது - அந்தக் கோட்டை யைச் சூழ யுயர்த்தியான மாளிகை யுமுண்டா யிருக்கிறது அந்தப்ப ட்டணத்துக்கு முடுக அவர் ஒட் டகையில் நின்று மிறங்கி யந்தப்ப ட்டணத்திற் போனால்- தம்முடை ய ஒட்டகையுடைய செய்தியைய றியலா மென்று வாளை யுருவிக் கொண்டு அந்தப்பட்டணத்துக்கு ள்ளே போனார்.

அந்தப் பட்டணத்துக்கு வலு ப்புள்ள விரண்டு வாசலுண்டாயி ருக்குது அந்த விரண்டு வாசலிலும ஞ்சளிப்பான யாக்கூத்துகளுஞ் சிவந்த யாக்கூத்துகளும் புதைத் திருக்கிறது அந்தக் கல்லினுடைய வெளிச்சத்தினு லவ்விட மெல்லா மொளியாயிலங்கக்கண்டார்- அந்த விரண்டு வாசலிலேநின்று மொரு வாசலைத் திறந்து வுள்ளேபோய்ப் பார்த்தார் அது பெரிய பட்டண மாக விருந்தது அதைப் போலே ஒரு பட்டணத்தையுங் காணவில் லை அந்தப்பட்டணத்தில் மாளிகை களுண்டா யிருக்கிறது அந்தமாளி கைகளுக்குப் பச்சைக் கல்லினாலு ம், யாக்கூத்துக் கல்லினாலு மழுத் தப்பட்ட தூண்கள் நிறுத்தி யிரு



க்கிறது அந்த மாளிகைக்கு மேலே யும் பொன்னினாலும் - வெள்ளியி னாலும் சுவரெடுத்து முத்தினாலு ம், யாக்கூத்தினாலும் பச்சைக்கல் லினாலு மழுத்தப்பட்ட மாளிகை களுண்டா யிருக்கிறது அந்த மா ளிகை யுடைய வாசல்களெல்லாம் சுவர்க்கத் துடைய வாசலைப்போ லே யிருக்குது அந்த மாளிகையி லே ஜகுபருனுங், கஸ்தூரியுடைய குண்டுகளும் விரித்திருந்தது- அந் த மாளிகைக்குப் புறத்தாலே மரங் கள்- பழம்பழுத்த மாமுமுண்டா யிருக்கிறது அமிர்தமான தண்ணி ருடைய ஆறுகளுமோடுகின்றது.

அதை யெல்லாம் அப்துல்லா கிபுனு குலாபா - பார்த்து அல்லா குசுபுகானகூத்த ஆலா தன்னுடையா ருக்கு வசுபுசெய்தானே அந்தச்சு வர்க்கமா யிருக்குமென்று சொல்லி அந்த முத்துகளிற் சிறிதுங் கஸ்தூ ரியுடைய குண்டுகளிற்சிறிதும் ஜ குபர்-சகுபருனிற் சிறிதையு மெ டுத்துக் கொண்டு பச்சைக் கல்லை யெடுக்க நாடினார்-அவரா லெடுக்க ச் சக்திபெறவில்லை.

பிறகு ஒட்டகையிலே யேறிக் கொண்டு எமனிராச்சியத்திலே வந் து சேர்ந்து அந்தச் செய்தியைம னிதருக் கறிவித்தார் -பிறகு அந்த ச் செய்தியைக் கலிபா மஹாவியத் திபுனு அபீசுபியா னுக்கும் தெரி ந்தது அப்போது கலிபா அப்துல் லாவை யழைத்து நீ சென்னத்தை க் கண்டசொன்று கேட்டார்-பிறகு அவர்கண்ட கிஸ்ஸாவையெல்லாஞ் சொன்னார் அப்போது மஹாவியா நீர் சொன்னது பொய்யென்றுசொ ன்னார் அப்போது அப்துல்லா அ மீறுல் முமினீனே அந்தச்சுவர்க்க த்தில் நின்றும் விரித்திருந்த கஸ் தூரி யுடைய குண்டும், ஜகுபரு னையும் பாருமென்று காண்பித்தா ர் அதைக் கலிபா முகந்துபார்த்தா ர் வாசம் வரவில்லை பிறகு அதை யுடைத்துப் பார்த்தார் வாசமுண் டாச்சுது அப்போது அப்துல்லா வை யுண்மையாக்கி வைத்து அந் த சுவர்க்கத்தைக் கட்டினவர்களை யும், அதின்பேரையும் நமக்கறிவி க்கிறவர் யாரென்றுகேட்டார் அப் போது அவருடனே யிருக்கிறவர் கள் சொன்னார்கள் கருபுல்கிபுறாக் கே யொழிய மற்றவர்களுக்குத் தெரியமாட்டாதென்றார்கள்.

அப்போது மஹாவியா கருபுல் கிபுறை யழைக்கவிட்டு அப்துல்லா சொன்னதை யெல்லாஞ் சொல்லி யிப்படிப் போல் கொத்தபட்டண ம் துனியாவிலுண்டாவென்று கே ட்டார் அப்போது -கருபுசொல்வா ர்- அமீறுல் முமினீனே உங்களுக் கெத்தினபடிக்கு அந்தப் பட்டண ம் ஹக்காக விருக்கும் அந்தப் பட் டணத்தை யுண்டாக்கினவன் ஆது டைய மகன், சத்தாது என்கிறவன்

கட்டின சுவர்க்கமாகவிருக்கும் அந்தப் பட்டணத்தின் பேர்- இறமதாத்துல் இமாது என்கிறதாக விருக்கும்.

பிறகு கருபுசொன்னார் ஆதுக்கிரண்டு பிள்ளை யுண்டா யிருந்தது அதிலொருவன் பேர் சதீது, ஒருவன்பேர் சத்தாது ஆது ஊலாக்கான போது அவனிரண்டு மக்களுமிருந்து ஊர்களையெல்லாம் பிடித்து மனிதர்களெல்லா மவர்களிருவருக்கும் வழிப்பட்டு அவர்களுடைய காரியம் பிரப்பமானபோது சதீது என்கிறவன் மவுத்தானான்.

பிறகு – சத்தாதுமட்டு மிராஜாவாய்த் துனியாவடங்கலு மிராஜாவாயிருந்தான் அவன்முன் னுண்டான கிதாபுகளெல்லாம் ஓதுகிறதுகொண்டு பாக்காக விருந்தான் சுவர்க்கத்துடைய செய்தியைக் கெடயிற் பார்க்கும்போ தெல்லாம் அவனுடையகல்பு அந்தச்சொர்க்கத்தைப் போலே, கட்டவேணுமென்று நாடியது.

பிறகு நூறு கொல்லத்துக் காரமேஸ்திரிமார்களை யழைத்து ஒவ்வொருதருக்குக் கொல்லதக் காரரும், காமாட்டிகளுஞ், சிற்றாள்களும் ஆயிரமாயிரமாக ஆறுயிரம்பேரைக்கொடுத்து நீங்கள், சுகண்டியான, விஸ்தீனமாக மலைகள், மேடுகள், பள்ளங்களில்லாததாய் நல்லதண்ணீர் ஊருகளுண்டா யிருக்கிறபூமியாகப்பார்த்து அந்த இடத்திலே பொன்னினாலும், யாகூத்தினாலும் வெள்ளியினாலும், பச்சைக் கல்லினாலும், முத்தினாலும், ஒருபட்டண முண்டாக்குங்கள் அந்தப் பட்டணத்தில் மாளிகைகளுங் கட்டுங்கள், 'அந்தமாளிகைக்கு மேலாலே மாளிகையும் கட்டுங்கள், பலபல வகையான மரங்களுடைய வன்னிப்பும் வையுங்கள், ஆறுகளுந் தோண்டி யோடச்செய்ய வையுங்களென்றுசொன்னான்.

அப்போதந்தத் தலைமைக்காரர் சொன்னார்கள் பொன்னும்-வெள்ளியும், யாக்கூத்தும், முத்தும், பச்சைக்கல்லு மெங்களுக்கெங்கேகிடைக்குமென்று கேட்டார்கள், அப்போது சத்தாது சொன்னான் நான் துனியா அடங்கலுக்கு மிராஜாவா யிருக்கிறேன் துனியா வடங்கலு மென்கையி லிருக்கிறது நீங்கள் போய்ப் பொன், வெள்ளி,யிரத்தினங்கள் யாவையும் தலத்திற் போயெடுங்கள் மனிதர்களிடத்தி லிதுகளிருக்கும் படியாய் நீங்கள் கண்டர்களாகில் அவர்களுக்குப் பத்து வருஷம் தவணை வைத்து வாங்கிக் கொள்ளுங்க ளென்று சொல்லி அவன் புறத்தாலே ஆமில் களுக்குங் கடுதாசு மெழுதிக்கொடுத்து அந்த லட்சம் பேரையும் அனுப்பிவைத்தான்.



கருபு சொல்லுகிறார் அவன்புறத்தாலே அவர்களிலே இராஜாவாக (உளகுமு) பேரிருந்தார்கள் சத்தாது எழுதினபடிக்கு அவர்கள் செய்து கொடுத்தனுப்பி வைத்தார்கள் ஊருண்டாகிறவர்க ளெல்லா-மலை மேடு களில்லாத மைதானிபோய்த் தண்ணீரும் மிகுதியாயிருக்கிற இடமாகப் பார்த்துச் சத்தாதுசொன்ன படிக்குக், கறுப்பும், வெள்ளையுமாக விருக்கிற எமனிராச்சியத்துக் கல்லைக்கொண்டு ஊருக்கு அடிப்படைபோட்டு அதின்மேலே சுவர்களு மெடுத்து மாளிகைகளும் அதின் மேலே மாளிகையு மெடுத்து வனைக்கட்டித் தீர்த்தார்கள்.

பிறகு சத்தாது வலிநான் ஒரு கோட்டையைக் கட்டுங்கள் அந்தக் கோட்டையைச்சூழ வஜீர்களிருக்க ஆயிர மாளிகை கட்டச்சொன்னான் அதுகளெல்லாங்கட்டித் தயாரானபொழுது வஜீர்களுக்கு மற்ற மனிதர்களுக்கும் பணம் ஜவாதாமிகுதியாகக் கொடுத்து இறமதாத்தல் இமாதுக்குப் போகிறதற்கு ஆயத்தப்பட்டுக் கொள்ளுங்களென்றான் அவன் பெண்சாதி மாரையும் கிதமத்துச்செய்கிறவேலைக்காரரையும் ஆயத்தப்படச் சொன்னான் அவர்களெல்லாம் அந்தவூருக்குக்கூடியாகப் போகிறதற்கு ஆயத்தப்பட்டு (ம) வருஷஞ்சென்றது.

பின்பு சத்தாதும் ஆயத்தப்பட்டு அதனென்கிற ஊரிலே ஒரிராவை வைத்துப்போட்டு சத்தாது தனக்கு வேண்டின வஜீருசகளையும், லஸ்கர்களையும் கூட்டிக்கொண்டு ஒருபகலு மிரவும் நடந்துபோனார்கள் அல்லாகு தபுதான வுத்த ஆலாவானத்தில் நின்று பொருஅபயசத்தத்தை யனுப்பிவைத்தான் அந்தச் சத்தத்தினாலே அவர்களெல்லாரும் ஊலாக்காகப் போனார்கள் ஒருதராகிலும் அந்தவூரிலே புகுதவில்லை இனிமேல் கியாமத்துநாள் வருமளவும் ஒருதரும் புகுதமாட்டார்கள் அமீறுல் மூமினீனே உம்முடைய ஜமானிலே ஒரு முசுலிமான மனிதன் ஒட்டகத்தைத் தேடிப்போய் அவ்வூரிற் புகுந்த மனிதருக்கெல்லாம் அறிவிப்பாரென்று கருபுசொன்ன பொழுது.

மஊவியா றலியல்லாகு அன்கு சொன்னார் அந்த மனிதனுடைய குறிப்பை நீர் சொல்லாவேண்டுமென்றார் அப்போது கருபுசொன்னார் அந்த மனிதனுக்கு அடர்ந்த மயிருண்டாயிருக்கும்- இடுப்பானவர் குள்ள மானவர்-அவருடைய புருவத்திலே ஒருமச்சம்- கழுத்திலே ஒரு மச்ச முண்டாயிருக்கும் - அவருடைய ஒட்டகை ஓடிப்போய் அதைத் தேடிக்கொண்டு போவார் இறமதாத்துல்இமாது என்கிறதுவைக் கண்டு அதிலுண்டா யிருக்கிற

தை யவரெடுத்துக் கொண்டு வரு வாரென்றார் அப்போது அப்துல் லாஹிபுனு குலாபா-மஹாவியா இட த்திலிருந்தார் கருபுறஸியல்லாகுஅ ன்கு அந்த மனிதனைப்பார்த்து இ வர்தா னந்தவூரிற் புகுந்தவரென் றார்.

அப்போது மஹாவியா றலிய ல்லாகு அன்கு சொன்னார் அவர்எ ன்கோமு மென்னைவிட்டுப் பிரியாம ல் என்னுடைய ஹிதமத்தி லிருக்கி றாரே யென்றார் அவரந்தப்பட்டண த்திற் புகுந்திருப்பார் இல்லாமற் போனால் இனிமேற் புகுவாரென் றார்-மஹாவியா றலியல்லாகு அன் குசொன்னார்-இசுகாக்குடையதகப் பனே அல்லாகுத்த ஆலா உம்மை யல்லாத உலமாக்கள்மேலே யும் மை இல்மிலே வரிசையாக்கி வைத் தாரென்றார் அப்போது - கருபு சொன்னார்-என்னுடைய நபுசு ஒரு தன்கை வசமா யிருக்குதே அப்ப டிக்கொத்த நாயனை அல்லாகுத் தஆலா ஒரு வஸ்துவையும் படை க்கவில்லை அதைத்தவுறுத்திலேஅ வனுடைய அப்துமுசா அலைஹிஸ்ஸ லாத்துக்குத் தபுசீறு செய்தேயொ ழியவென்றார் வஸ்ஸலாத்து, வஸ் ஸலாம்.

## ஏழாவது செய்தி.

சந்தாதுகட்டின சுவர்க்கத்துடைய கிஸ்ஸா-முற்றிற்று.

————()————

இச்செய்தி அறபுப்பாஷையா யிருந்ததைத் தமி ழ்ப்பாஷையில் மொழிபெயர்த் தெழுதியவர் புவனமா நகரம் காதிமுகம்மது ஜான்சாகிபு லப்பை ஆலிம் இத னை முதலில் அச்சிட்டவர் பாசிப்பட்டனம்நயினாமுக ம்மதுப்புலவர்.

பிசுமில்லா ஹிற்றகுமா னிற்றகீம்,

இஃது,

## எட்டாவது செய்தி.

## சாலிகலைஹிஸ்ஸலாத்துடையகிஸ்ஸா.

————*————

இதாகிறது சாலிகுநபியுடைய கிஸ்ஸாவையும் அவருடைய கவுமுகளுடைய கிஸ்ஸாவையும் பேசுகிறதாக விருக்கும்.

————(*)————

அல்லாகுத்த ஆலா குறுஆனி லே திருவுளமானான்-எஃனிதமூது காவிலே அவர்களுடற்பிறந்தான் சா லிகை யனுப்பிவைத்தோம் தமூ தாகிறவன் ஆதுடைய மகன்-ஆ தாகிறவன் இறமுடைய மகன்- இ றமாகிறவன் சாமுடைய மகன்-சா மாகிறவர் நபியுல்லா நூகு அலைஹி ஸ்ஸலாத்துடையமகன்.

கருபுறலி யல்லாகு அன்குபேசி வருகிறார் அல்லாகு சுபுகானகூத்த ஆலா ஆதுடைய கவுமுகளை ஹலா க்காக்கிப் போட்டபோது தமூது டைய கவுமுகள் வந்து அந்தவூரை யெல்லாங் கைவசு மாக்கிக்கொண் டிருந்தார்கள்-தமூதுக்குபத்தே கி ல்வானக் கூட்டத்தா ருண்டா யிரு ந்தார்கள் ஒவ்வொரு கூட்டத்தாரு க்குப் பெண்களும் பிள்ளைகளும் அல்லாமல் எழுபதி னாயிரத்துக்கு மேலே யதிகமாயிருந்தார்கள் அவ ர்கள் மிகுதியானார்கள் ஆதுடைய கூட்டத்தைக்காண.

அவர்களும் பசாதும், குபிரை யும் கூவத்தையு முடையவர்களாயி ருந்தார்கள் அவர்களிருக்குந் தலம் ஷாமுக்கும், ஹிஜாசென்கிற ஊருக் கு மிடையிலே வாதில் குறாவென் கிற இடத்திலும் ஹஜரென்கிற இ டத்திலு மிருந்தார்கள் அவர்களுக் கிராஜா ஜுன்தகுபின் அம்று என் கிறவன் அவன் தமூதுடைய கிளை யி லுள்ளவன் கூது அலைஹிஸ்ஸலாத் துக்கு ஈமான்கொண் டிருக்கிறார்க ளே அவர்களில்நின்று மொருகூட் டத்தார் ஆதுடைய கவுமுகளை அ

தை யவரெடுத்துக் கொண்டு வரு வாரென்றார் அப்போது அப்துல் லாகிபுனு குலாபா-மஹாவியா இட த்திலிருந்தார் கருபுறலியல்லாகுஅ ன்கு அந்த மனிதனைப்பார்த்து இ வர்தா னந்தவூரிற் புகுந்தவரென் றார்.

அப்போது மஹாவியா றலிய ல்லாகு அன்கு சொன்னார் அவரெ ங்கோமு மென்னைவிட்டுப் பிரியாம ல் என்னுடைய கிதுமத்தி லிருக்கி றாரே யென்றார் அவரந்தப்பட்டண த்திற் புகுந்திருப்பார் இல்லாமற் போனு லினிமேற் புகுதுவாரென் றார்-மஹாவியா றலியல்லாகு அன் குசொன்னார்-இசுகாக்குடையதகப் பனே அல்லாகுத்த ஆலா உம்மை யல்லாத உலமாக்கள்மேலே யும் மை இல்மிலே வரிசையாக்கி வைத் தானென்றார் அப்போது - கருபு சொன்னார்-என்னுடைய நபுசு ஒரு தன்கை வசமா யிருக்குதே அப்ப டிக்கொத்த நாயனை அல்லாகுத் தஆலா ஒரு வஸ்துவையும் படை க்கவில்லை அதைத்தவுறாத்திலேஅ வனுடைய அப்துமூசா அலைகிஸ்ஸ லாத்துக்குத் தபுசீறு செய்தேயொ ழியவென்றார் வஸ்ஸலாத்து, வஸ் ஸலாம்.

## ஏழாவது செய்தி.

சத்தாதுசட்டின சுவர்க்கத்துடைய கிஸ்ஸா-முற்றிற்று.

———()———

இச்செய்தி அறபுப்பாஷையா யிருந்ததைத் தமி ழ்ப்பாஷையில் மொழிபெயர்த் தெழுதியவர் புவனமா நகரம் காதிமுகம்மது ஜான்சாகிபு லப்பை ஆலிம் இத னை முதலில் அச்சிட்டவர் பாசிப்பட்டணம்நயினுமுக ம்மதுப்புலவர்.

பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம்,

இஃது,

## எட்டாவது செய்தி.

## சாலிகலைகிஸ்ஸலாத்துடையகிஸ்ஸா.

———*———

### இதாகிறது சாலிகுநபியுடைய கிஸ்ஸாவையும் அவருடைய கவுமுகளுடைய கிஸ்ஸாவையும் பேசுகிறதாக யிருக்கும்.

———(*)———

அல்லாகுத்த ஆலா குறுஆனி லே திருவுளமானுன் -ஸமூது கூட்டத்தா ருக்கு-அவர்களுடன்பிறந்தான் சா லிகை யனுப்பிவைத்தோம் ஸமூ தாகிறவன் ஆதுடைய மகன் - ஆ தாகிறவன் இறமுடைய மகன்- இ றமாகிறவன் சாமுடைய மகன்-சா மாகிறவர் நபியுல்லா நூகு அலைகி ஸ்ஸலாத்துடையமகன்.

கருபுறலி யல்லாகு அன்குபேசி வருகிறார் அல்லாகு சுபுகானகூத்த ஆலா ஆதுடைய கவுமுகளை ஹலா க்காக்கிப் போட்டபோது ஸமூது டைய கவுமுகள் வந்து அந்தவூரை யெல்லாங் கைவசமாக்கிக்கொண் டிருந்தார்கள்-ஸமூதுக்குப்பத்தே சி ல்வானக் கூட்டத்தா ருண்டா யிரு ந்தார்கள் ஒவ்வொரு கூட்டத்தாரு க்குப் பெண்டுகளும் பிள்ளைகளும் அல்லாமல் எழுபதி னாயிரத்துக்கு மேலே யதிகமாயிருந்தார்கள் அவ ர்கள் மிகுதியானார்கள் ஆதுடைய கூட்டத்தைக்காண.

அவர்களும் பசாதும், குபிரை யும் கூவத்தையு முடையவர்களாயி ருந்தார்கள் அவர்களிருக்குந் தலம் ஷாமுக்கும், கொசென்கிற ஊருக் கு மிடையிலே வாதில் குருவென் கிற இடத்திலும் ஹஜ்ரென்கிற இ டத்திலு மிருந்தார்கள் அவர்களுக் கிராஜா ஜுன்தகுபின் அம்று என் கிறவன் அவன் ஸமூதுடைய கிளை யி லுள்ளவன் கூது அலைகிஸ்ஸலாத் துக்கு ஈமான்கொண் டிருக்கிறார்க ளே அவர்களில்நின்று மொருகூட் டத்தார் ஆதுடைய கவுமுகளை அ

லாருக்க ஆலா பெருங்காற்றைக் கொண்டு எப்படி ஹலாக்காக்கிப் போட்டானென்று சொல்வார்கள்.

அப்போது தமூதுடையகவுமுகளிற் பெரியவர்களா யிருக்கிறவர்கள் சொல்வார்கள் ஆதுடைய கவுமுகள் வீட்டைப் பெலனகக் கட்டவில்லை மணல் மேட்டின்மேலே வீடு கட்டிக்கொண் டிருந்தார்கள் அவர்களுடைய புத்திரர்களுக்கு ஊக்கான வணக்கமாக வணங்கவில்லை நாங்கள் கூவத்தாற் கடினமானவர்கள் எங்களுடைய வீடுகளும், பட்டணமும் பெலனக விருக்கிறது மலைகளைக்கொத்தி நாங்கள் வீடுகளாக்கிக் கொண்டோம் எங்கள் வீட்டிற் காற்றுவந்து புகுதமாட்டாது அதுவுமல்லாமல் எங்கள்நாயனை ஊக்காக வணங்கிறோம் எல்லா னேரத்திலு மெங்கள் நாயனுக்குக் குருபான் செய்கிறோமென்று சொல்வார்கள்.

கருபு தலியல்லாகு அன்குபேசிவருகிறார் அவர்களுடைய கூவத்தினாலே மலைகளையெல்லாந் துளைத்து வீடாக்கிக்கொண்டார்கள் அந்தவீட்டினுடைய நீளம் (ா) முழமும் அகலம் (ா) முழமுமாகவைத்தார்கள் அந்த வீட்டினுடைய மேற்பதி யிரும்பினாலே போட்டார்கள் அதற்கு வாசது மிரும்பினாலே வைத்தார்கள் அந்த வாசலைப்பெலனவர்களே யொழிய மற்றொருவருந் திறக்கமாட்டார்கள் அதற்கு முதலவர்கள், சோசு என்கிற ஆரிவிருந்தார்கள் அந்தப்பூமி மணற்பூமியானபடியினாலே அவ்விடத்திலேயிருந்து, கஜர் என்கிற பூமி கெட்டியாய் மலையும் கல்சனுமதிலே யிருதமாயிருக்கிற படியினாலே அவ்விடத்தில் வந்து குடியேறி மலைகளையெல்லாந் துளைத்து வீடுகள் கட்டினார்கள்.

பிறகு அவர்களிற் பெரிய மனிதராக விருக்கிறவர்களிராஜாவின் தகுபின் அம்றிடத்திலே வந்து நாங்கள் வணங்கும்படியாய் ஒரு சாமியைப் பண்ணுகிறோம் ஆதுடைய கவுமுகளும், நூகுடைய கவுமுகளும் அப்படிக்கொத்த சாமியைப் பண்ணவில்லை அதற்கு நீருத்திரவுகொடுமென்று கேட்டார்கள் அப்போ திராஜா நன்றாய்ப் பண்ணுங்களென்று உத்திரவு கொடுத்தான் அந்தக் கவுமுகள், கைத்து என்கிற மலைக்கிப்போய்ச் சிறிது நாளவ்விடத்திலிருந்து சாமியைப் பண்ணினார்கள்.

அதினுடைய முகம் மனிதர்முகம்போலேயும், அதின் கழுத்தும் நெஞ்சும் மாட்டினுடைய, கழுத்தும் நெஞ்சும் போலேயும் அதினுடைய விரண்டுகையும் காலும் குதிரைக்கால் போலேயும் கல்லினாலே பண்ணிப் பொன் வெள்ளித்



தகடடித்து அதின் தலைமேலே சிவந்த பொன்னினாலேதாஜமும்போட்டு அதற்கு, சஜதாவும்செய்து,குருபானுஞ்செய்து இராஜா இடத்திற் கொண்டுவந்து சொன்னார்கள் நாங்கள்மெத்த வருத்தப்பட்டு எங்களுடைய சாமியைப் பண்ணினோம் அதினுடைய அழகைப்பார்க்கிற தற்காகவேண்டி நீர் வரவேண்டிய தென்றார்கள் பிறகிராஜாவும், இராஜாவுக்குத் தனதான மனிதருமாகப் புறப்பட்டுச் சாமிக்கு முடுகவந்தபோது குதிரையைவிட்டு மிறங்கி அதற்குச் சஜதாச்செய்தார்கள்.

பிறகிராஜா அந்த சாமியை வைக்கிற தற்காகவேண்டி ஒரு வீடுகட்டச்சொல்லி யேவினான் அந்த வீட்டினுடைய நீளம் ஒரு நாழிகைவழித் தூரமும், அகலம் ஒருநாழிகை வழித் தூரமுமாக வைக்கச் சொல்லியேவினான் அந்த வீடெல்லாம் பொன் வெள்ளித் தகடடித்துப் பலவகை யிரத்தினங்களைக் கொண்டும் அழுத்தும்படியாய் யேவினான் அவர்களந்த வகைப்படிக்குச் செய்தார்கள்-அந்த வீட்டினுடைய விரிப்புத்தீபாஜப் பட்டைக்கொண்டு விரிக்கச்சொல்லி யேவினான் - இன்னம் யானைக் கொம்பினாலே தகுத்துப்பண்ணிப் பொன் வெள்ளித்தகடடித்து அதிலே யிரத்தினங்களையெல்லாம் புதைத்து அதின் மேலே சாமியை நிற்பாட்டச்சொல்லி யேவினான்.

இன்னு மந்த வீட்டில் கிந்தில்களெல்லாம் பொன் சங்கிலியினாலே தூக்கச் சொல்லி யேவினான் இன்னும் அந்தவீட்டுக் கிரண்டுவாசல் வைத்து ஒரு வாசலுக் கிரண்டு கதவு வைத்து ஒவ்வொரு கதவுக்கு (ா) கல்காவுண்டாக்கி அந்த கல்காவிலே பொன் வெள்ளித் தகடடித்து அதிலே யெல்லாம் ஜவ்கருகளை யழுத்தச்சொல்லி யேவினான் அது நட்சத்திரத்தைப் போலே யிலங்கும் இன்னுமந்த விரண்டுவாசலுக்கு மிரண்டுதிரை கட்டச்சொல்லி யேவினான்- அந்தத்திரைக்கு இஜ்ஜத்துடைய திரையென்று பேர்வைத்தான்.

அந்த வேலையெல்லா மவன்வவற்படிக்குச் செய்து முடிந்தபிறகு அந்தச் சாமியைத்தகுத்தின்மேலே நிற்பாட்டி மற்றச் சின்னச்சாமிகளையெல்லாம் அதற்கேற்ற தகுத்துப்பண்ணியதை யந்தவீட்டில் வைத்தான் பிறகு கவுமுகள் சொன்னார்கள் இராஜாவே யிந்தசாமிகளுக்கு வேலை பணிவிடை செய்கிறதற்குத் தாய் புறத்தாலுந், தகப்பன் புறத்தாலும் அசலுபாக விருகிறவர்களை வைக்க வேணுமென்று சொன்னார்கள்.

கேள்விக்கு நீ, முன்னுடைய இறத்தையு மழகாக்கிவைத்த புதுமையென்ன வுன்னுடைய சாமிபிடத்திலே கீமிஞ்சுத்தாக விருந்து உன் சாகிபை விட்டும் நீ பறந்து வந்துவிட்டாயாவென்று கேட்டாள்.

அப்போ தந்தப் பக்ஷிராசாந் சொல்லியது நானென் சாகிபைவிட்டும் ஓடி வரவில்லை என்னிலும் நான் சுவர்க்கத்துர்க்கமாக விருப்பென் ஆதம் அலைஹிஸ்ஸலாத்துடைய மகன், காபீலென்கிறவர் அவருடன் பிறந்தான் ஆபீலைக்கொன்றுபோட்டு அவருக் கடக்கத்தெரியாத படிக்கு உடற் பிறந்தானுடைய மையித்தைத் தோள்மேற் போட்டுத் திரிந்து கொண்டிருக்கிறபோது அல்லாகுத்த ஆலா என்னைச் சுவர்க்கத்தில் நின்றும் அனுப்பிவைத்து மையித் தடக்குகிறதைப் படித்துக்கொடுக்கச் சொன்னுன் நானுமொரு காகமும் வந்து நாங்க ளிரண்டுபேருஞ் சண்டைசெய்து அந்தக் காகந் செத்துப்போய் நான் பூமியை யென் காலால் தோண்டியந்தக் காகத்தைத் தபனஞ் செய்தேன்.

காபீல் அதைப்பார்த்துக் காகத்துக்குத் தெரிந்தது நமக்குத் தெரியாமற் போச்சுதேயென்று விசாரப்பட்டு அவரும் பூமியைத் தோண்டி அவருடற் பிறந்தானைப் புதைத்துப் போட்டார், நானந்தக் காகமாக விரும்பேனென்று சொல்லியுன்னை அழுகிறவளாகவும், விசாரமானவளாகவும் காண்கிறேன் உன்னுடைய செய்தி யென்னவென்று கேட்டது.

அப்போது, காபுக்குடைய பெண்சாதி—ஜகூமு யென்கிறவள் சொன்னுள் என்புருஷனை நான் நூறுவருஷமா யிழந்துவிட்டேன் அதற்காக நான் அழுகிறேனென்று சொன்னுள்— அப்போ தந்தப் பக்ஷிசாரம் உம்முடைய புருஷனளவிலே நீர் சேருகிறதற்கு உவந்திருக்கிறீரோவென்று கேட்டதற்கு அவர் சொல்லுவார்—நான் நூறுவருஷமாக என்புருஷனை யிழந்திருக்கிறேன் இப்போது சேர்ந்தால் மெத்தவும் புதுமையான காரியமாக விருக்குமென்று சொன்னுள்.

அப்போ தந்தப் பக்ஷிசாரஞ் சொல்லியது அல்லாகுதஆலா எல்லாவனுனின் மேலேயும் சக்திபெற்றவன் நீயறியவில்லையா வென்றுசொல்லி நீரும்முடைய புருஷனிடம் போகிறதானுல் என்னுடனே வாருமென்று சொல்லியது அப்போது ஜகூமு என்கிறவள் புருஷனுடைய தல்வாரை யெடுத்துக்கொண்டு நடந்தாள் அந்தப் பக்ஷிசாரம் பூமிக்கு முடுகுதலாய்ப் பறந்தது அல்லாகு தபாரக வதஆலா, ஜகூமுக்கு மிருந்த வழியை லேசாக்கி விட்டான்—அவள் பாலஷ



ஷாவிலே நடந்துபோய் அந்த ஓடைக்கரையி லிருக்கிற பொதும்பிற்போய்ச் சேர்ந்தாள்—அப்போதந்தப்பக்ஷிசாரம், காபுக்கை யித்திரை செய்கிறவராகப் பார்த்து உக்கியிறந்துபோன முன்னுருவை ஓயாதந்தக்கிவைக்கிற காயனுடைய குழுதத்தைக் கொண்டு கிளறுந்திருமென்று சொல்லியது அப்போதவர் நூறுவருஷத்துக்குப் பிறகு எழுந்திருந்தார்.

அப்போது பெண்சாதி அவரிடத்திற்போனுள்—பெண்சாதி பென்றறிந்து கழுத்தைக் கட்டிக்கொண்டு கடினமான அழுகையாக வழுதார் பிறகு பெண்சாதி கூட விழிகூடினுர் அவள் சாவிரு அலைஹிஸ்ஸலாத்தை யமலானுள், காபுக்குடைய நுத்துபா அவர் பெண்சாதியுடைய குடல் வாயில் விழுந்தபோது அல்லாகுத்த ஆலா மலக்கல்மவுத்தை யனுப்பிக் காபுக்குடையானைக் கபூல்ச் செய்யச் சொல்லித் திருவுளமானுன், காபுக்கு மவுத்தானுர் பிறகு, ஜகூமு என்கிறவள் மலைப் பொதும்பைவிட்டும் புறப்பட்டன அந்தப் பக்ஷிசாரம் அவளுக்கு வழிகாட்டிக் கொண்டுவந்து தமுனுடைய வீட்டில் விட்டது பிறகு அவளுடைய பத்துமாதம் நிறைந்த பின்னர், ஜகூமு என்கிறவள் பிள்ளைப்பெற்றுள் சாவிரு அலைஹிஸ்ஸலாம் பிறந்தசெய்தி • காபுனுடைய

நூ மக்களிலும் பிள்ளைகளிலும் பிறகு புத்தகாலெல்லாம் தவிழுதாக விருந்துபோச்சுது அந்தக் கவுமுகளெல்லாங் கேள்விகிற்போய் புதிதின்னை யெல்லா மூய்த்துக் கைதநான்கள்,

பிறகு இராஜா அந்தப் பெரியதாயிடத்திற் போய் மெத்தவுந் தாழ்ச்சியாக உனக்கென்ன முடிபத்து வந்து பிடித்திருக்குதென்று கேட்டான் அப்போது இபுலீச அந்தபுத்துவயிற்றிற் புகுந்துகொண்டு நமுதுடைய கட்டளையை உங்களிலே பொருமின்னை பிறக்கப்பட்டது அந்தப்பிள்ளை கடவுடைய நினைவிலே உங்களை மாறக்கும் நீங்க ளந்தப் பிள்ளைக்குப் பயப்படவேண்டாமென்று சொன்னுன், பிறகு சாவிரு அலைஹிஸ்ஸலாம் அழகானவராக வளர்ந்து பதினுவருஷத்திக்கு வெத்தின பொழுது தமுதுடைய கவுமுகளுக்குப்போய் கவுமுகளே நீங்களென்னுடைய வசனத்தை நீங்க ளறியாமற்போகவேண்டாம் நானின்னுன் மகன் இன்னுனென்று சொல்வார்,

அப்போதவர்கள் சொல்வார்கள் மெய்தான் நீ தாய் புறத்தானுல், தகப்பன் புறத்தானும் வம்சம் அசலானவன் தானென்று சொன்னுர்கள்—பிறகு வயது பதினைந்தாகித் தாயிடத்தில் இத்தினை தெய்யப்போது அவளிலே அபயசத்து

...வும் ...க்குமாகவும், சத்தத்தைக் கேட்டார்—பிறகு பததி முழித்துத் தாயாரைக் கேட்டார் தாயே, இதென்ன சத்தமென்றுகேட்டார்—அப்போது தாயார் சொல்லுவாள் நாருடைய மகன் ஒருமுடைய அவுலாதில் இன்றும்-கல்வா ரென்றுமொரு மனிதனிருக்கிறார் அவர்வந்தா வைத்துக்கொண்டு எழுவதுவசத்துக்கொருதரம் இந்த ஊரில்வந்து புகுந்து சண்டைசெய்து பணங்காக ஆடு மாடு ஒட்டகை யிவைகளையெல்லாங் கொள்ளை கொண்டு போய்விடுவார்.

இப்போ அந்த மனிதன் வந்து வெகுக் கொள்ளை கொள்ளுகிறா ரென்றுசொன்னாள்—ஜுன்தகு என்கிற இராசாவும் அவன் கவுமுகளும் கொள்ளைகொண்டு உடமைகளையெல்லாம் பறித்துக்கொள்ளப் போனார்கள் அவர்களிலே ...யெவ்விலே பென்றுந்து சென்றனர். அப்போது சாலிகுஅலைகிஸ்ஸலாம் அவர் தகப்பனுடைய ஆயுதங்களையெடுத்துக் கொண்டு தகப்பனுடைய லஸ்கரிற்போய் ஒரு சத்தமிட்டார் அந்தச் சத்தத்துடைய சடுதத்திலேயே அவனுடைய லஸ்கரில் அநேகம்பேர் மூவத்தாய்ப் போனார்கள்.

அவ்வல் ஹாஜத்தாகிறது என்னுடைய விரண்டு கையையும், காலையும் கட்டிப்போடுங்கள்- என்னால் என்பதறித் துடிக்காமலிருக்கிறதற்காகவேண்டி- அப்படி நான்பதறித்துடித்தேனாகில், என் றப்புடைய அம்றுக்கு மாறுசெய்தவனாவேன்- இரண்டாவது ஹாஜத்தாகிறது என்னுடைய முகத்தை நீங்கள் பார்க்காம லிருக்கிறதற்காகவேண்டி முகத்தைக் குப்புறப் போடுங்கள் என் முகத்தை நீங்கள் பார்த்தால், உங்களுக்குக் கிருபையுண்டாகும்- அப்போது அறுக்க மாட்டீர்கள் தகப்பன் பிள்ளைபேரில் மெத்தவும் கிருபையானவரா யிருக்கிறபடியால்; மூன்றாவது ஹாஜத்தாகிறது-கத்தியை நன்றாய்த் தேஜாகத் திட்டிக்கொண்டு என்னுடைய, கல்க்கில் நடத்தாட்டுகிறத்திலே தீவாமாகவையுங்கள் அது எனக்கு முங்களுக்கும் லேசாகவிருக்கும் உங்கள் றப்புக்கும் பொருந்தமாக விருக்கும்-நாலாவது ஹாஜத்தாகிறது என்னுடைய புடவையைக் கழற்றிப் போடுங்கள் அந்தப்புடவையி லிரத்தம் படாமலிருக்கிறதற்காக வேண்டி யந்த இரத்தத்தைத் தாயாரவர்கள் பார்த்தால் மெத்தவும் விசாரப்படுவார்களானபடியால்- ஐந்தாவது ஹாஜத்தாகிறது தாயாரவர்களுக்கு என்னுடைய சலாம்சொல்லி அவருக்கென் சட்டையைக்காண்பிக்க நீங்கள் நாடினீர்களானால் அதைக் காண்பிக்கவும், அதை யவர்பார்த்து விசாரந்தீர்ந்து சவிப்பாறியிருப்பார், மெத்தவும் பிள்ளைகள்பேரில் தாய்மார் கிருபையானவரென்றுசொன்னார்- அப்போது இபுறாகீம் நபி சொல்லுவார் மகனே, நீர் நல்ல ஒத்தாசையானபிள்ளை அல்லாகுத்த ஆலாவுடைய எவனுக்கு வழிப்பட்டா யென்றார்- பிறகு இரண்டு கையும் ஒரு காலுங்கட்டி முகங்கிழாலே போட்டார்- அல்லாகுத்த ஆலா குறுஆனிலே திருவுளமானான் - இருபேரும் அல்லாவுடைய எவனுக்கு வழிப்பட்டபோது முகத்தைக் குப்புறப் போட்டார்- அப்போது இசுமாயில் நபி சொன்னார் என்னுடைய தகப்பனாரே, என்னுடைய கட்டையவிழ்த்து விடுங்கள் கட்டிப்போட்டறுக்கிறது நான் பொருந்த மில்லாத காரியம்போ லிருக்குது கத்தியை யென்னுடைய கல்க்குமேல் வையுங்கள் நானந்தக் கத்தியை கல்க்குமேல் நடத்தாட்டிக் கொள்ளுகிறேன் கல்க்குகள் இபுறாகீம் கலீலுல்லாவுடைய மகனார் தன் றப்புடைய எவனுக்கு வழிப்பட்டா ரென்கிறத்தை யறிகிறதற்காக வேண்டி யென்றார், பிறகு கத்தியைக் கல்க்



கிலே புகுதவைத்து நடத்தாட்டினார், தொண்டைக்குழி யறவில்லை, பிறகு தகப்பனைக்-கத்தியை நன்றாய்த் தேஜாக்கிக்கொள்ளுங்களென்றார், மறுபடியுங் கல்மேலே கத்தியை நெருப்புத் தழல் பறக்கத் தீட்டினார், கத்திநல்லதேஜாக நெருப்புப்போ லிலங்கியபோது- மறுபடியும் கல்க்குமேலே வைத்து நடத்தாட்டினார், கத்தி புரண்டு போச்சுது - அப்போது இசுமாயில் நபி சொல்வார், தகப்பனே, கத்தியுடைய நுனிகொண்டு கல்க்கைக் குத்துங்களென்றார் அந்தப்படியும் குத்தினார்-கத்தி மடங்கிப்போனது-கல்க்கு அறவில்லைப்-பிறகு தன்னாலே லொட்டும் பார்த்துக் கோபமாகக் கத்தியைக் கல்மேலடித்தார் அந்தக்கல் லறுந்துபோச்சுது- கல்க்கு அறவில்லை இபுறாகீம் அலைகிஸ்ஸலாம் அதைப்பார்த்து புதுமையானார், உடனே ஜிபுரியில் அலைகிஸ்ஸலா மிறங்கி இபுறாகீமே, நீரிந்தக் குதறத்தைப் பார்த்துப் புதுமையாகிறீரோ இதைக்காணப் பெரிய குதறத்து, நம்றூது உம்மைக் கையையுங், காலையுங்கட்டி நெருப்பி லெறிந்தானே அந்தக்கட்டையெல்லா மெரித்து நெருப்புத் தின்றுபோட்டுதே உம்முடைய சரீரத்தி லிருக்கிற ஒரு ரோமமாகிலும் லொக்சான் வராமலிருந்ததே அதுவே பெரிய புதுமையாக விருக்குமென்று சொன்னார்-ஈருபறுதாகிக் குறவி யல்லாகு அக்குனைத் தொட்டும், றிவாயத்துவந்திருக்குது, இபுறாகீம் நபி எழுபதுதரம் கல்க்கை யறுத்தார் - அறுத்தவுடனே கல்க்கு மேவிப்போகுது பிறகு கூப்பிடப்பட்டது இபுறாகீமே, நீர் கண்ட மனாமை உண்மையாக்கி வைத்தீர் இப்படிப் போலேதான் எகுசான் செய்தபேர்களுக்கு நாம் பிரதி செய்வோம் உம்முடைய மகனை நீரறுத்தி ரதை நாம், சபிகாக்கிவைத்தோம் உம்முடைய மகனுக்குப்பகரமாயிந்த ஆட்டை யறுமென்று- ஆடுவந்திறங்கிச்சுது-அப்போது இபுறாகீம் அலைகிஸ்ஸலாம், அல்லாகு அக்பர், அல்லாகு அக்பர், அல்லாகு அக்பர் என்றார்-அப்போது இஸ்மாயில்நபி, லாஇலாக இல்லல்லாகு வல்லாகு அக்பர், அல்லாகு அக்பர்வலில்லாகில் ஹம்து என்று சொன்னார்-அந்தத், தக்பீறு, இயாமுத்த சுபியிலே சொல்லுகிறது சுன்னத்தாச்சுது - பின்பு ஜிபுரியில் அலைகிஸ்ஸலாம்- கொம்புள்ள கொழுத்த ஒரு செம்மறியாடு கொண்டுவந்து கொடுத்தார், சகிதும், சுபையும், இபுனு அப்பாசும் சொன்னார்கள்- ஜிபுரியில் அலைகிஸ்ஸலாம் கொண்டு வந்த செம்மறியாடாகிறது-நாற்பது வருஷம் - சுவர்க்கத்தில் மேய்ந்துகொண்டிருந்தது- அந்த ஆட்டைக் கொடுக்கச்சொல்லி

யுத்திரவாச்சுதென்றார்கள்—இன்னும் அப்பாசு பேசிவருகிறார் இசுமாயீல்நபிக்குப் பகரமாகவந்து இபுருகிம்நபி குறுபான் செய்த ஆடாகிறது ஆதம் அலைகிஸ் ஸலாத்துடைய மகனா ஆபீல் குறுபான்செய்த அவருடைய குறுபான் கபூலாச்சுதே அந்த ஆடென்றார் பிறகு அந்த ஆட்டை இபுருகிம்நபி பிடித்துக்கொண்டுவந்து குறுபான்செய்யுந்தலமாகிய மீனும் பஜாரிலே குறுபான் செய்தார்—இபுனு அப்பாசு பேசிவருகிறார், இசுலாமுடைய துவர்க்கத்தில், அந்த ஆட்டுத்தலை யுலர்ந்துபோய்க் கொம்புடனே கூடக், கஃபத்துல்லாவிலே தூக்கியிருந்ததென்றும், அல்லாவைக் கொண்டு சத்தியமாகச் சொன்னார்—நபி சல்லல்லாகு—அலைகிவசல்லம்—ஜிபுரியீல்அலைகிஸ்ஸலாத்தைக் கேட்டார்கள்—அல்லாகுத்தஆலா, உம்மைப்படைத்த நூறந்துப்படிக்கு நீர் எப்போதாகிலும் வருத்தப்பட்டுத் தானியாவிலிறங்கின துண்டா வென்று கேட்டார்—அப்போது ஜிபுரியீல் அலைகிஸ்ஸலாம் சொன்னார்—நாலு தலத்திலே அந்தப்படிக் கிறங்கி யிருக்கிறேன்—முந்தின தலமாகிறது, இபுருகிம்நபியை நெருப்பி லெறியப்படும்போதும் நான் அறுவிசின்கீழிருந்தேன்—என்னுடைய றப்புசொன்னான்—என்னுடைய தோழன் இபுருகிமைச் சுறுக்காகப்போய் — எத்திக்கொள்ளுமென்றான், ஒருதரம் சிறகை விரித்துக் கொண்டு அவ்விடம்வந்து சேர்ந்தேன்— இரண்டாவது தலம் இசுமாயீ லுடைய கழுத்தில் இபுருகிம்நபி கத்தியை வைத்து அறுக்கும்போது நான் அறுவிசின்கீழிருந்தேன் அப்போ தென்னுடைய றப்பைச் சுறுக்காகப் போய் எத்திக்கொள்ளென்றான்—திமைத்து முழிக்கிற நேரத்தில் வந்து கத்தியை யறுக்காமற் புரட்டி விட்டேன்—மூன்றாவது யூசுபு அலைகிஸ்ஸலாத்தைக் கிணற்றி லெறிந்தபோது நான் அறுவிசின்கீழிருந்தேன் - அல்லாகுத்த ஆலா திருவுளமானான், என்னுடைய ஹபிபு யூசுபு கிணற்றில் விழுமுன்னாலே சிக்கிரமாகப்போய் எத்திக் கொள்ளுமென்றபோது — நான் கிணற்றின் வாயில்நின்று யிறங்கு முன்னாலே வந்து சேர்ந்தேன்—நாலாவது குப்பாறுகள் தங்களைக் கல்லாலே யடித்துக் காலிற் காயம்பட்டு உங்கள் கையினாலே அந்த இரத்தத்தைப் பிடித்து ஆகாசத்தி லெறிந்தீர்களே அப்போ தென்னுடைய றப்புதிருவுளமானான் — சுறுக்காகப் போய் என்னுடைய ஹபிபை யெத்திக் கொள்ளும் அவருடைய இரத்தம் ஒருதுளி பூமியில் விழுந்தால், அந்தபூமியில் ஒரு மரமும், புற்பூண்டையுமுளைக்கவைக்க மாட்டேனென்றான் — சுறுக்காரவந்து எத்திக்



கொண்டேன்— இந்த நாலுதரமும் நானிறங்கினது என்னைப் படைக்கப்பட்ட நூறந்துப்படிக்கு வருத்திப்பட்டிறங்கினேனென்றார்.

ஐந்தாவது பாபு—முற்றித்து.

——()——

## ஆறாவது பாபு.

இதாகிறது, வருணத்துப் பெற்ற நம்றூது ஹலாக்காகப் போனதைப் பேசுகிறதாக விருக்கும்.

---

உலமாக்கள் பேசிவருகிறார்கள் அந்த பூமியிலே முதல் வன்பனுக விருந்தவன் கன்ஆனுடைய மகன் நம்றூது—அவனுடைய பட்டணத்தில், மழைமாரியில்லாமல் வெள்ளாண்மை விளையாமற் சீமைகளில் மிகுதிகரிப்புண் டாகுமென்று சாத்திரக்கார ரவித்தபோது வீரிலிருந்த தானியங்களை யெல்லா மழைப்பித்துக் கிடங்குகளிற் கட்டிவைத்தான் - பிறகு கரிப்புவந்தபோது தானியம் வாங்குகிறதற்கு நம்றூதிடத்தில் மனிதர்கள் போவார்கள்—அப்போது இபுருகிம் நபியுங் கூடப் போவார், நம்றூதிடம் போகிறவர்களை யெல்லாம் உங்களுடைய றப்பு யாரென்று கேட்பான்—நீதா னெங்களுடைய றப்பென்று சொன்னால், அவர்களுக்குத் தானியங் கொடுத் தனுப்பி விடுவான்.

இபுருகிம் நபிபோனபோது உம்முடைய றப்பு யாரென்று கேட்டான்—அப்போது இபுருகிம் அலைகிஸ்ஸலாம் சொன்னார்- கல்க்குகளை யெல்லாம் ஹயாத்தாக்கி வைக்கிறன்—மவுத்தாக்கி வைக்கிறனே அவன்தா னென்னுடைய றப்பென்று சொன்னார்— அப்போ தவருக்குத் தானியங் கொடாமற் போகச்சொல்லி விட்டான்—பிறகு இபுருகிம் அலைகிஸ்ஸலாம் ஒருமணல்மேட்டின் மேல்வந்து அந்த மணலைமூட்டையாகக் கட்டிக்கொண்டு போனார்—பெண்சாதி பார்த்துச் சந்தோஷமாகிறதற்காகவேண்டிப் பிறகுபெண்சாதி யிடத்தில்வந்து அந்த மூட்டையைக் கட்டினப்போலே அவ்விடத்தில் வைத்துத் தாம்வெளியேபோனார்—பிறகு அவர்பெண்சாதி அதை யவிழ்த்துப் பார்த்தார் அந்த மணலெல்லாம் மாவாகவிருந்தது அதை யெடுத்து ரொட்டி சுட்டுவைத்தார்—பிறகு இபுருகிம் நபி வெளியில் நின்றும் வந்தபோது ரொட்டியைப் பாத்திரத்தில் வைத்துக்கொண்டுபோய்ப் புருஷனிடத்தில் வைத்தார்—அப்போது இபுருகிம் நபி யதைப்பார்த்து எங்கிருந்து வந்ததென்று கேட்டார் — அப்போது பெண்சாதிசொல்லுவார்—நீங்கள் கொண்டுவந்த மாமூட்டையில் நின்றும் சமைத்தேனென்று சொன்னார்—அப்போது இபுருகிம்

ஙபி அல்லாகு சுபுகானகுத்த ஆலா
அந்தமண்ணையாவாக்கினு னென்று
நித்து அவனை மெத்தவும் புகழ்ந்
து சக்றும்செய்தார்-பிறகு நம்றூ
துடைய வழிகேடு நாளுகருசா ள
திசமாய் இபுறாகிம் சொல்லுகிறது
உண்மையாகவிருக்குமென் றெண்
ணிக் கொண்டு நான் வானத்திலே
றி அவநுடைய நாயனைப் பார்க்க
வேணுமென்று ஒரு வலுப்பமான
மனூரு பாபிபெண்கிறவுரில் கட்ட
ச்சொல்லி யுத்திரவு செய்தான் அ
ந்த மனூருமேலேறி வானத்திலிரு
க்கும் இபுறாகிமுடைய நாயனைப்பா
ர்க்கவேணுமென்று நாடிக் கட்டச்
சொன்னான்-அந்த மனூருவுடைய
வுயர்த்தி ஐயாயிரம் முழம்வைத்
துக்கட்டித் தீர்ந்தது; பிறகு நாலு
கழுகு கொண்டுவந்து அதை வலு
ப்பமாகுமளவும் நல்லவதீபனங்க
ள்கொடுத்து வளர்த்தான் - பிறகு
ஒருபெட்டகம் பண்ணிக் கீழே ஒ
ருவாசலும் மேலே ஒருவாசலும்
வைத்தான் - அந்தப் பெட்டகத்
தை யந்தக்கழுகுடைய காலிற்கட்
டி யந்தப்பெட்டிக்குமேலே நாலு
அசாநிறுத்தி-அந்த அசாவிலிறை
ச்சியைக்கொளுக்கி நம்றூது மவ
னுடனே ஒருமனிதனுமாக அந்தப்
பெட்டிக்குள்ளே அம்பும்,விற்லும்
அவர்களுக்குச் சவாதாக்களும்வை
த்துக்கொண்டு அந்தப்பெட்டியை
மனூருமே லேற்றச்சொல்லிப் பெ
ட்டகம் மனூருமேல் வந்தபிறகு
அந்தப்பெட்டிக்குளவர்க ளிருபே
ரும் புகுந்துகொண்டு-பிறகு அந்த
க்கழுகுடைய கண்ணைத் திறந்து
விட்டான்-அந்தக் கழுகு பசியாக
விருந்த படியால் அதின் தலைக்கு
மேலே யிறைச்சி தூக்கி யிருக்கி
றதைப் பார்த்து அதைத் தின்கிற
தற்காக வேண்டி அந்தப் பெட்டி
யைத் தூக்கிக்கொண்டு அந்த இ
றைச்சியை நாடி யாகாசத்தில் பற
ந்தது - வெகுதூரம் பறந்தபோது
நம்றூது தன்னுடனே யிருக்கிறவ
னைப் பார்த்து மேற்கதவைத் திற
ந்துபார் வானம் முடுகியிருக்குதா
வென்றான் பிறகவன் மேற்கதவை
த் திறந்து பார்த்து முன்னிருந்த
படியே வானமிருக்குதென்றான்-பி
றகு கீழேயிருக்கிறகதவைத் திறந்
து பூமியைப்பார்-அது யெந்தப்ப
டி யிருக்குதென்றான் பிறகவன் கீ
ழ்வாசலைத் திறந்துபார்த்துப் பூமி
வெள்ளை நுரைபோலிருக்குது - ம
லைகளெல்லாம் புகைபோற் காணு
தென்றான்-பின்பு கழுகு ஆகாயத்
தை நாடிப் பறந்தது காற்றுரமாக
வீசுமளவும் - பிறகு கொஞ்சநேரம்
போனபிறகு திரும்பிப் பார்க்கச்
சொன்னான்-அவன் மேற்கதவைத்
திறந்து பார்த்துச் சொல்லுவான்
வானம், முன்னிருந்த கோலத்திலி
ருக்குது பூமி யிருளாக விருக்குதெ
ன்றான்-அப்போது அடாவழிகெ



ட்ட முடனே, நீ யெங்கே போகி
றா யென்று ஒரு சப்தமுண்டாச்சு
து அப்போது, நம்றூது அம்பை
வில்லிலே பூட்டி வானத்தைப் பா
ர்த்தெய்யச் சொல்லி-குலாமையே
வினான்-குலா மவன் சொற்படிக்கு
அம்பைப் பூட்டியெறிந்த போது
தில், அந்த அம்புக ளெல்லா மிரத்
தத்திற் புரண்டு கொண்டு விழுந்த
து - அதைப் பார்த்து வானத்து
டைய நாயனையும் நாம் பிடித்துக்
கொண்டோ மென்றான்-அந்த அ
ம்புகளெல்லா மிரத்தத்திற் புரண்
டுகொண்டு விழுந்ததில்; உலமாக்க
ள் இருத்திலபாளுர்கள்- இகியா
தமியன்னாகு அன்கு சொன்னார்-
ஆயத்தில், கடலுண்டா யிருக்கி
ன்றது, அந்தக் கடலிலிருக்கிற மீ
ன்கள் அல்லாஹுக்காகவேண்டித் த
ன் சரீரத்தைக் கொடுத்தது அந்த
மீன்களில் அம்புபட்டு மீனுடைய
விரத்தம் அம்பிற் புரண்டுகொண்
டிருந்ததென்றார்- இன்னுஞ் சிறிது
பேர்கள் சொன்னார்கள் - ஆகாசத்
தில் பக்கிசாமுண்டா யிருந்தது-
அம்பு அந்தப்பக்கிசாத்தில் பட்
டு அதி னிரத்த மந்த அம்பிலிருந்
த தென்றார்கள்-பிறகு நம்றூது அ
ம்புகளி லிரத்தங் கண்டபோது வா
னத்து ராசாவையும் நாம்பிடித்துக்
கொண்டோ மென்று அவனுடனே
யிருக்கிற மனிதனுக்குச் சொன்
னான் அந்த இறைச்சியைக் கட்டி
யிருக்கிற அசாவைக் கீழே யாக்கச்
சொன்னான் - பிறகு அந்த மனித
ன் கீழேயாக்கினான்-கழுகு கீழ்நோ
க்கிப் பறந்தது கழுகிறங்குகிற சத்
தத்தையும், பெட்டகத்துடைய ச
த்தத்தையும் மலைகளெல்லாங் கே
ட்டுப்பயந்தது-கியாமத்து நாள் மு
டுகிச்சுதென்று எத்துமளவும் அல்
லாகுத்த ஆலா குறுஆனிலே அ
வர்கள்செய்த மக்று அந்தமக்றில்
நின்று மலைகள் நீங்கிப்போசமாட்
டாதென்று திருவுளமானான்-பிறகு
ஊரில்வந்து சேர்ந்தபோது அல்லா
கு சுபுகானகுத்த ஆலா நம்றூது
டைய மனூருமே லொருகாற்றை
யனுப்பி வைத்தான்-அந்தக்காற்று
அந்த மனூரை பிடித்து அதி
ன் தலையைக் கடலிலே கொண்டு
வந்துபோட்டது, மற்றதெல்லாமூ
ரில்விழுந்து அவர்கள் வீடுகளை யெ
ல்லா மிடித்துப் போட்டது - அ
ப்போது நம்றூதும் அவன் கவுமு
களும் மெத்தவும் பயந்தார்கள்-அ
ல்லாகுத்த ஆலா, குறுஆனிலே தி
ருவுளமானது போலே அவர்களு
க்கு மேலாலே நின்றும் அவர்கள்
மேலே யந்த மனூரு இடிந்து விழுந்
தது அவர்களறியாத புறத்திலே
அவர்களுக்கு அதாபு வந்தது- நம்
றூது கலாக்கான செய்தியை நிவர
த்துச் செய்யப்பட்டது- அல்லாகு
த்த ஆலா, நம்றூதனிலே யொரு
மலக்கை யனுப்பிவைத்து நீ யென

க்கு ஈமான்கொண்டாலுன்னுடை
ய ராசாங்கத்தின் மேலுன்னைத்தரி
பாடாக வைக்கிறேனென்று சொ
ன்னான்-அந்த மலக்குவந்து சொ
ன்னபோது நானல்லாமல், வேறே
ஒரு நாயனுண்டாயிருக்கிறானா, நா
ன் அவனுக்கு ஈமான் கொள்ள வெ
ன்றான்-பிறகு இரண்டாவதொரு ம
லக்கும், மூன்றாவதொரு மலக்கு
மந்த மூன்று மலக்குகளுக்கு
மந்தப் படியே ஜவாபு சொன்னா
ன்-அப்போ அந்த மலக்குச்சொன்
னார்-நல்லது உன்னுடைய கூட்ட
மெல்லாம் மூன்று நாள் மட்டும்-ஒ
ரு இடத்திற் கூட்டென்று சொன்
னார் - அந்தப்படியே கூட்டினான்,
பின்பு அல்லாகுத்த ஆலா, அந்த
மலக்கை-யேவி அவன்பேரிற் கொ
சுகுடைய கூட்டத்தைத் திறந்து
விடச்சொன்னான் - பிறகு பொழு
துவிடிந்தது - கொசுகுக் கூட்டங்க
ள் புறப்பட்டுப் பொழுதை மறை
த்துக்கொண்டது, அவர்கள்பொழு
தைப் பார்க்கவில்லை, அல்லாகுத்த
ஆலா அந்தக் கொசுகுக் கூட்டங்
களை நம்றூதுபேரிலும் அவன்கவு
முகள் பேரிலுமனுப்பி வைத்தான்
அந்தக் கொசுகுக் கூட்டங்கள் அ
வர்கள் சதையைத் தின்று, அவர்க
ளிரத்தத்தைக் குடித்து, அவர்கள்
சரீர மெல்லாம் எலும்பும், தோலு
மாக்கிப் போட்டது - நம்றூதுக்கு
அல்லாகுத்த ஆலா ஒரு கொசுகை
யனுப்பிவைத்தான் - அந்தக் கொசு
குஅவன் மூக்குத் துவாரத்திற் பு
குந்து அவன் தலை மூளையிலே செ
ன்று அவன் மூளையெல்லாந் தின்
றுகொண்டிருந்தது - அப்போதவ
னவனிலே மெத்தவும் இருபையா
னவர்கள்-அவர்களிரண்டு கைகொ
ண்டும் அவர்கள் பெலனெல்லாங்
கூட்டி உரமாக அவன் தலையிலடி
ப்பார்கள்.

அந்தப்படிக்கு அடித்துக் கொ
ண்டுவந்தால் நம்றூதுக்குச் சற்று
நேரம் லேசாகவிருக்கும் - அந்தப்
படி யடிக்கடி அடித்துக்கொண்டி
ருப்பார்கள் - நம்றூது எகுனத்து
ல்லா மிகுந்தவன்புகைக் காரியத்
திருந்தான், நானூறுவருஷம் ஊயா
த்தாக விருந்தான் பிறகு - அந்தக்
கொசுகு அவன் மூளையிற் சேர்ந்து
நாற்பது நாளையில் மூளையெல்லாந்
தின்றுவிட்டது, பிறகுநம்றூதுமெ
த்தவும் வருத்தப்பட்டு கலாக்காய்
ச்செத்துப்போனான்.

ஆறாவது பாபு முற்றிற்று.

## ஏழாவது பாபு.

இதாகிறது சாறுவும்மா
மவுத்தானதின் பிறகு இபு
றாகீம் அலைகிஸ்ஸலாம்



வேறேபெண்சாதி நிக்காகு
செய்ததும் பிறகு அவர்
மவுத்தான செய்தியும்பேசு
கிறபாபாகவிருக்கும்.

உலமாக்கள் பேசிவருகிறார்கள்
சாறுவும்மா-நூற்றிருபத்தேழுவய
தில் ஷாமிலே கன்ஆனுடைய பூமி
யில் நின்று, ஜபாபறத்து என்கிற
சிற்றூரில் மவுத்தானார்கள்- பிறகு
இபுறாகீம் அலைகிஸ்ஸலாம் அந்த
ஊரில் ஒரு நிலம்வாங்கி, சிறுஅத்
தாச் செய்துகொண்டிருந்தார்கள் அ
ந்தத்தலத்தில் அடக்கப்பட்டது சா
றுவும்மா மவுத்தானதின்பிறகு இ
புறாகீம் அலைகிஸ்ஸலாம் கன்ஆன்கி
ளையில் நின்றும் ஒருபெண்பிள்ளை
யை நிக்காகு செய்துகொண்டு ஆ
று ஆண்பிள்ளைகளைப் பெற்றார் அ
ந்தப் பெண்பிள்ளையுடைய பேரா
கிறது எகுத்தியுடையமகள் கத்
தூறு எகுச-இம்றுன்-மதியன்-மதி
யான்-எசிக்கு-பாக்கு-இந்தஆறு
பேரும்-கத்தூறு என்கிறவர்பெற்
ற ஆண்பிள்ளைகளாக விருக்கும் இ
ன்னம் அறபுக் கிளையில் நின்று
மொரு பெண்பிள்ளையை நிக்காகு
செய்தார் அந்தப் பெண்பிள்ளையு
டைய பேராகிறது - அகியபுனியு
மகள் கசூறு-கைசான்-சைபுகு-அ
மீமு-ஊத்து-லாயிச- இந்த ஆறு
பேரும் கசூறு என்கிறவர்பெற்ற பி
ள்ளைகளாயிருக்கும்- இபுறாகீம் நபி
அவர்களுக்கு இசுமாயில், இசுகாக்
கு இவர்களுடனேகூடப் பதின்மூ
ன்று பிள்ளைகள் அந்தப் பிள்ளைக
ளுக் கெல்லாந் தலைச்சம்பிள்ளை இசு
மாயில் நபியாக விருக்கும், இபுறா
கீம்நபி உபாத்தான செய்தியைப்
பேசுகிறோம் உலமாக்கள் பேசிவந்
தார்கள் - அல்லாகு சுபுகானகுத்த
ஆலா அவனுடையகலீல் இபுறாகீ
முடைய, ரூகைக்கைப்பற்றிக்கொ
ள்ள நாடினபோது-அவரளவில் ம
லக்கல்மவுத்தை யனுப்பிவைத்தா
ன்-மலக்கல் மவுத்து வயதுசென்ற
கிழவருடைய வடிவுகொண்டு அவ
ரளவில் வந்தார் அப்போது இபுறா
கீம் அலைகிஸ்ஸலாம் வந்தவருக்கு
விருந்துகொடுக்கத் தயாறுசெய்து
அவரை வஜ்பனந் தின்னச்சொன்
னார், அவரொருபிடி வஜ்பனத்தை
யள்ளி யிரண்டுகண்ணிலும், காதி
லும் போட்டுக் கொண்டார், பின்பு
வாயிலும் போட்டுக் கொண்டார்.
அந்த வஜ்பனம் வயிற்றிற்புகுந்து
மலத்துவாரத்திற் புறப்பட்டுப்போ
னது அதை இபுறாகீம்நபி பார்த்து
உம்முடைய ஊரெல்லையென்று
கேட்டார், என்னகாரியத்திற்காக
வஜ்பனத்தைக் கண்ணிலும், காதி
லும் புகுதவைக்கிறீர் கிழவரேயெ
ன்றார் - அப்போது மலக்கல்மவுத்
தாச்சொன்னார் இபுறாகீமே, வயது
சென்றால் அக்கலும் தமொதிப்.

போமென்றார் முன்னாலே இபுறாகீம் நபி அவருடைய றப்பைக்கேட்டிருந்தார், ஆண்டவனே, என்னுடைய றாகைக் கபூல்செய்கிறதற்கு என்-றூகியில்லாமற் செய்யவேண்டாமென்று முறையிட்டுச் செய்ததற்கு அல்லாகுத்த ஆலாவுக்குத் தொழுகையடியால் அந்தப்படி செய்கிறேனென்று கபூல்செய்திருந்தான்-பிறகு மலக்கல் மவுத்துத் தம்முடைய- ஹாலைச்சொன்னபிறகு இபுறாகீம் நபி உம்முடைய வயது எவ்வளவென்றார் மலக்கல் மவுத்து இபுறாகீமுடனே அவர் வயதுக்கிரண்டு வருஷமதிகமாகச்சொன்னார். அப்போது இபுறாகீம் அலைகிஸ்ஸலாம்சொல்லுவார் உமக்கும் நமக்கு மிரண்டுவருஷந் தபாவத்துண்டாயிருக்குது இன்னு மிரண்டு வருஷம் போனால் என்னுடைய அகுவாலும் இந்தப்படியாகுமென்று பிறகு ஆண்டவனே, வித்திருந்த கால்வரு முன்னாலே என்னுடைய றாகை கபூல்செய்யுவீரென்று கேட்டார். உடனே மலக்கல் மவுத்து எழுந்திருந்து அவருடைய றாகைக் கைப்பற்றிக் கொண்டார். அப்போது இபுறாகீம் அலைகிஸ்ஸலாமுடைய வயது (௨௱௰வது) வருஷத்தில் - உபாத்தானார்; பிறகு சாறும்மாவுடைய கபுறுக்கடுத்தாப்போலே அவரையும் நல்லடக்கஞ் செய்யப்பட்டது.

ஏழாவது பாபு-முற்றிற்று.

---

## எட்டாவது-பாபு.

**இதாகிறது, அல்லாகுத்த ஆலா இபுறாகீம் நபிக்குத் தனதாக்கிவைத்த காரியத்தைப் பேசுகிற பாபாக விருக்கும்.**

---

இபுறாகீம் அலைகிஸ்ஸலாமாகிறவர் வாலிபக்காரருக்கெல்லாம், நாயகமான வராயிருந்தார்- இன்னும் விருந்து கொடுக்கிறவர்களுக் கெல்லாந் தகப்பனாராக விருந்தார், இன்னி மவர்களில் கின்றும் விருந்துகளுண்டாச்சுது-காலை வழிபனம், மாலை வழிபனம் அவர் விருந்தாளிகளுடனே யல்லாமற் தின்கிறதில்லை, விருந்தாளி யில்லாமற்போனால் ஒரு காதவழியாகிலும் நடந்துபோய் விருந்தாளிகளை யழைத்து வருவார்-இன்னும் அல்லாகுத்த ஆலாவுடைய வங்கிஷத்தில் நின்றும், நபிப்பட்டத்தை யுண்டாக்கினான்-இன்னும் பின்னுண்டான வர்களுக்கெல்லா மவரை யுண்மையானவராக்கினன்-இன்னும் பலவகையான பலாயிகளைக் கொண்டு மவனைச் சோதித்தான்-அவரந்த பலாயிகளுக்கெல்லாம் சபூறுசெய்து அந்த நிறைவேற்றி வைத்தாரென்று குறுஆனிலே ஷாகிது சொன்னான் அவன் இருவனைமானன் அவருடைய றப்பு சிறிதுகலிமாக்களைக் கொண்டு சோதித்த நேரத்தில், அந்தக்கலிமாக்களை யெல்லா மவர் நிரப்பமாக்கி வைத்தார்-அவர் அல்லாகுத்த ஆலாவுக்கு வழிப்பட்ட உம்மத்தாக விருந்தார்-அவர் புறாத்காணும் முன்னாலே அவருக்கு நேர்வழியைக்கொடுக்கப்பட்டது அல்லாகுத்த ஆலா, முதல் அவரை கலீபன் முகலீபன் என்று பேரிட்டான்- இன்னும் அவர்முதல் கத்னைச்செய்தவர்-இபுறாகீம் நபி அவர் பிறந்த (௱௨௰வது) த்துப் பின்னையில், தமக்கு கத்னைச்செய்துகொண்டார் - அப்போ தந்தக் கத்னைச் செய்த சபாயிறுவுக்கும், அமாலிக்காக் கூட்டதாருக்குமிடையிலே சண்டையுண்டா யிருந்தது இரண்டு கூட்டத்திலும் வெட்டுப்பட்டு மவுத்தானார்கள் - அப்போது இபுறாகீம் அலைகிஸ்ஸலாம் தங்கள் அகுகாபிகளை யடக்கிறதற்காக வேண்டித் தெரியாமல் போனபடியால், கத்னைச்செய்கிறதை இசுலாமானவர்களுக்கு அடையாளமாக்கினார்-இன்னுமவர் கைவிமுதலுடுத்தினவர் அதற்கு முன்னுலொருத்தரு முடுத்ததில்லை இன்னுமவருடைய நடையெல்லாம் முதற்செய்தவர்-முதல் குறுபான் செய்தவர் - அல்லாகு அபுகானகுத்த ஆலாவுடைய காரியத்தில் முதல் நெருப்பி லெறியப் பட்டவர்- இன்னுமவராகிறவர் மவுத்தான பேர்களை அவர்களுக்காக வெல்டி- ஜியாத்தாக்கப்பட்டதே அவர்களிலே, முந்தினவர்-இன்னும் அவராகிறவர் கியாமத்து நாளையில் வெள்ளைத் துகிலுடுத்தாட்டப் படுகிறவர்- இன்னும் கியாமத்து நாளையி லவருக்கு அவருடைய இடது புறத்தில் மின்பறை வைக்கப்படும், இன்னு மவராகிறவர் முதல் மீசையை வெட்டி நகமறுத்து அரையைச் சிரைக்கிறதில் கத்தியைப் பரிமாறினவர்-இன்னு மவராகிறவர் கமுக்கட்டு மயிரைப் பிடுங்கினதிலும், மிசுவாக்குச் செய்ததிலும் முந்தினவர்- இன்னுமவராகிறவர் தலை மயிரினத்திலும் வாய் . கொப்புளித்து நாசிக்குத்தண்ணீர்- செலுத்தினதில், முந்தினவர், இன்னுமவராகிறவர் தண்ணீர்கொண்டு இஸ்திஞ்சாத் துப்பரவைக்கினதில் முந்தினவர் அல்லாகுத்த ஆலாவுடைய காரியத்தில், சிறந்துப் போனவர்களில் அவர்முந்தினவர்-அல்லாகுத்தஆலா அவரை மனிதர்க்கெல்லாம்- இமாமாக்கிவைத்தான் குறுஆனிலே-இபுறாகீமே,உம்மை நானாக்கினேன்-மனிதருக்கு இமாமா யென்று இரு

வுமானான் ஹாச்சுடைய காரியத்தில் நம்முடைய றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை அவர் செய்தபடிக்குச் செய்யச்சொல்லிவேயினான் — இன்னு மவராகிறவர் மெத்தவும் அமர்த்தியானவர் அல்லாகுத்தஆலா, அளவிலே முகம் வைத்தவர் குறுஆனிலே இருவுளமானான் இபுறுகி மாகிறவர் சபுறு செய்கிறத்தில் மிகுதியானவர்— சாலையப்படுகிறத்தில் மிகுந்தவர் அல்லாகுத்தஆலா விடத்தில் மீளுகிறவர்-இன்னும் அல்லாகுத்த ஆலா இபுறுகிம் அலைகிஸ்ஸலாம்பேரில் பத்துசகுறுபயிறக்கி வைத்தான் அந்த சகுபுகளிலே மிகுதம், மிதால்க ளுண்டாயிருந்தது, இஸ்மாயில் நபி இசுகாக்கு அலைகிஸ்ஸலாம் இவர்களுடைய செய்திகளிற் கொஞ்சம் பேசுகிறோம் இசுமாயீல்நபி, ஈறுகும் கிளையில் ஒரு பெண்பிள்ளையை நிக்காகுசெய்துகொண்டு தகப்பனாருடைய ஏவற்படிக்கு அந்தப் பெண்பிள்ளையைத் தலாக்குச்சொல்லி மறுபெண்பிள்ளையை நிக்காகு செய்துகொண்டு தகப்பனாரேவற்படிக்கு அந்தப் பெண்பிள்ளையை வைத்துக்கொண்டார்— அந்த இக்கதை முன்னாலே யெழுதி யிருக்கின்றோம் இரண்டாம் பெண்சாதியுடையபோாகிறது, செப்பிகத்து அவர் தகப்பன்பேர், முலானு இசுமாயீல் நபிக்குச் செய்திதந்து என்கிறவர் பனிரண் டாண்பிள்ளைகளைப் பெற்றார், அந்தப் பிள்ளைகள் போாகிறது (நாபித்து) கைதாறு (அதிய்யல்) மைதா (மசுமாகு) தயா (மாசா) ஆஜர் (பதூறு) அறுது கைசு தகுபா (கைதமாறு) நாபித் என்கிற பிள்ளையில் நின்றும் கைதாறென்கிற பிள்ளையில் நின்றும் ஹக்குத்தஆலா அறபிக் கவுமுகளைப்பிரித்து வைத்தான்— இசுமாயீல் அலைகிஸ்ஸலாத்துக்கு அல்லாகுத்தஆலா நபிப்பட்ட மிறக்கி வைத்து அமாலிக்காக்கிளையா ளவிலே நபியாக அனுப்பி வைத்தான்—அவருக்கு மவுத்து காலிறுனபோது இசுகாக்கு நபிக்கு வசியிறக்கிவைத்தான்—இசுமாயீ லுடைய மகளை உம்முடைய மகன் ஈசுக்குக் கலியாணஞ் செய்து கொடுமென்று ஒலியுந்தபோது அந்தப்படியே செய்தார் இசுமாயில் அலைகிஸ்ஸலாம் (௱௩௰௭) வயாத்தாக விருந்து பிறகு உபாத்தானார்-அவர் தாயார் காஜிறு வம்மா வுடைய கபுறுக், கடுத்தாப்போலே—ஹகத்தில், குஜாறு என்கிற தலத்தில்— அடக்கப்பட்டது பிறகு இசுகாக்கு நபி தைவிலுடைய மகளார் றபக்காவென்கிற பெண்பிள்ளையை நிக்காகு செய்து (சுமிறுலிம்) சென்றுபோனபிறகு யாகூபு நபியையும், ஈசுவையும் இரட்டைப் பிள்ளையாக விரண்டுபேரையும் பெற்றார் — அவர்களிருபே



ரும் பிறந்ததில் புதுமையான செய்லாவுண்டு அதாகிறது-சந்தி றகுமத் அல்லா இக்குசெய்தார் — றபக்கா என்கிற பெண்பிள்ளை யிரண்டுபேரையும் ஹமலானபோது பிள்ளைப் பெறும் வகுத்தில் யாகூபு நபிமுதற் புறப்படாகுகிறார் — அப்போது ஈசு சொல்லுவார் அல்லாவி னுகிள நீ முதற் புறப்பட்டால் என்தாயுடைய வயிற்றில் நான் குறுக்கே கிடந்து உன்னைப் புறப்படவொட்டேன் தாயாரைக் கொன்று போடுவேனென்றார் அப்போது யாகூபுநபி பயந்தார்— ஈசுமுதலில் பிறந்தார்—அதற்காக வேண்டி ஈசென்று பேர்வைக்கப்பட்டது—அவர் வயிற்றிலும் பெரியவரா யிருந்தார்—இருபேரும் பெரியவர்களானபோது ஈசைத் தகப்பனாருவந்திருப்பார்—யாகூபைத் தாயாருவந்திருப்பார்— இசுகாக்கு அலைகிஸ்ஸலாத்துக்குக் கண்மறைவாக விருந்தது-ஒருநாள் ஈசுக்குச்சொன்னார்— மகனே, நீவேட்டை யாடுகிறாயே, அந்த இறைச்சியிற் கொஞ்சம் இறைச்சிகட்டு உறட்டியும், இறைச்சியும் கொண்டுவா அதை யுன்னுடைய ஹக்கிலே துஆச் செய்கிறேனென்றார் இதை இசுகாக்கு நபி பெண்சாதிகேட்டிருந்தாள் தான் உவந்த பிள்ளைக்கு அந்தத் துஆவாகவேணுமென் றெண்ணி அப்போது ஈசுவேட்டைக்குப்போனார் பிறகு யாகூபு நபியுடைய தாயார் வீட்டிலொரு ஆடிருந்தது — அதையறுத்துக் கபாபுபண்ணி உறட்டியும் சுட்டு யாகூபை அழைத்துச் சொல்லுவார்மகனே, யுன்னுடைய தகப்பனார் உன்னுடம் பிறந்தான் ஈசுக்குத் துஆச் செய்கிறேனென்று சொல்லியிருக்கிறார்—ஆகையால் ஈசு வருமுன்னாலே நீ போய் இந்த உறட்டியும், இறைச்சியும் உன்னுடைய தகப்பனார் முன்வைத்து, துஆச்செய்யச் சொல்லிக் கேளென்று இந்தப்படிக்கு கிலாச்செய் தனுப்பினார்.

பிறகு யாகூபு தகப்பனாரிடத்திற்போய் அந்த உறட்டியும், இறைச்சியும் வைத்துத் துஆச்செய்யச் சொன்னபோது — அதைத்தின்று துஆச்செய்தார். உன்னுடைய பிசனத்தில், அன்பியாக்களும், இராசாக்களு முண்டாகவென்று அல்லாகுத்த ஆலாவிடத்தில், துஆச் செய்தார்-பிறகு ஈசு உறட்டியும், இறைச்சியுங் கொண்டுவந்து துஆச் செய்யச்சொல்லிக் கேட்டார்—அப்போது—துஆச்செய்தேனே யென்றார் பிறகு ஈசுதம்பி யாகூபுபேரிற் கோபமானார்— அப்போது இசுகாக்கு நபி சொல்லுவார். மகனே, இன்னுமொரு, துஆவிருக்குது உனக்குச் செய்கிறே னென்று உம்முடையபிசனத்திற் பிச்சைக்கா

மனாலுடைய வெண்ணிக்கை போலே ராசாக்க ளுண்டாவார்கள் — அவர்களுக்கு அவர்களல்லாமல் வேறே இராசாக்க ளுண்டாக மாட்டார்களென்று, அதுஞ்செய்தார்—பிறகுயாகூபு நபி ஈசுக்குப் பயந்து அவர்மாமா வீட்டிற் போய்விட்டார்அப்போது யாகூபுநபி(அ-ஸ) அவர் மாமாவுக்குக் கிதுமத்துச் செய்கிற வழுத்துக்கொண்டு தன்னுடைய மகள், றகீலைப்பெண் பேசினார். அந்த வழுத்து நிறைவேறினபோது, றகீல் சிறுபிள்ளையாக விருந்தார். ஆனபடியால், பெரிய பிள்ளை லய்யா என்கிறவளைக் கலியாணஞ் செய்து கொடுத்தார்— பிறகு யாகூப் நபி றகீலைக் கொடுக்கவில்லையென்று அவர் மாமாவிடத்திலே, மாமா அந்நுடனேயிருக்கிறபோது அவ்விடத்திலிருந்து நீர் என்னை மருட்டிவிட்டீர், றகீலைக்கொடுக்கிறேனென்று (அ-ஸ) கிதுமத்தாகிய வேலைவாங்கிக்கொண்டு பெரியமகள், லய்யாவைக் கலியாணஞ் செய்துகொடுத்தீரென்றார், அப்போது அவர்மாமா சொல்லுவார்- பெரிய மக ளிருக்கும்போது சின்னமகளை யாராகிலுங் கலியாணஞ் செய்து கொடுப்பார்களாவென்று இப்போதும் (அ-ஸ) கிதுமத்துச் செய்தால், சின்ன மகளைக் கொடுக்கிறேனென்றார்— அந்த காலையில் இரண்டுபேர் பிறந்தாளையும் கலியாணஞ்செய்கிறது ஜாயிசாகவிருந்தது— மூசா அலைகிஸ்ஸலாத்துடைய காலையிலே ரண்டுபேர் பிறந்தாளைக் கொள்ளுகிறது ஹறாமாச்சுது— மறுபடியும் யாகூபு அலைகிஸ்ஸலாம் (அ-ஸ) மாமாவுக்குக் கிதுமத்துச் செய்து பிறகு றகீல் என்கிற பெண்பிள்ளையையும் கலியாணஞ் செய்தார் லய்யா என்கிறவர் நாலு பிள்ளைப் பெற்றார் — றூபீலென்கிறவரும் யஹூதா என்கிறவரும்—சம்ஊன் என்கிறவரும் — லாவாவும் இந்த நாலு பேரும் —லய்யாவென்கிற ஸ்திரீயின் பெண்சாதி பிள்ளைகள்— றகீலென்கிற பெண்பிள்ளை-யூசுபு அலைகிஸ்ஸலாத்தையும்— புன்யாமீனையும் பெற்று (அ-ஸ) காலையில் மவுத்தாகிப் போனார், லெய்யாவுடைய தகப்பனார்—இரண்டு வெள்ளாட்டியையும் யாகூபுநபிக்குக் கொடுத்தார் ஒருத்தியுடைய பேராகிறது— ஜுல்பா—மற்றொருத்தி—பல்கீமா இந்த இரண்டு வெள்ளாட்டியையும் பெத்தாகக் கொடுத்தார் அவர்க ளிருவரில் நின்றும் ஒவ்வொருவர் மூன்று பிள்ளைப் பெற்றார்கள்— ஜுல்பாவுடைய பிள்ளைகள்—தான்என்கிறவரும் — நுகுதாலியும்—ஜாதுவும்— பல்கீமாவுடைய பிள்ளைகளாகிறது—ஜாது என்கிறவரும்—ஆஷிறும்— நிறைவுப் அயஸ்க்கரு அலைகிஸ்ஸலாத் துடைய பிள்ளைக ளடங்கலும் (௰௨) பேராகவிருப்பார்கள்- பின்பு யாகூபுநபி



மாமாவை விட்டுப்—பிரிந்து தம்முடைய பிள்ளைகளையும்— பெண்சாதிமார் களியத்துகளையுங் கூட்டிக்கொண்டு பலஸ்தீனென்கிற ஊரில்தகப்பனார் இசுகாக்கு அலைகிஸ்ஸலா மிடத்திலேயிடத்துக்கு வந்துசேர்ந்தார்- முகம்மதிபுனு இசுகாக்கு என்கிறவர்பேசுவாருகிறார்- இசுகாக்கு நபியுடைய மகனார் ஈசுவென்கிறவர் இசுமாயில் நபியுடைய மகளார்-நசமத்து என்கிற பெண்பிள்ளையைக் கலியாணம் முடித்து அவரைக் கூட்டிக்கொண்டு ஊருக்குப்போய்ச் சேர்ந்தார்—றூமிகளெல்லாரும் நசமத்துடைய வயிற்றில் ஈசுக்குப் பிறந்தவர்கள் பனிஅஸ்பர் என்கிறவர்கள் வெள்ளைக்காரர் பலசாதியும் ஈசுனுடைய அவலாதில் நின்று முள்ளவர்கள் பிறகு இசுகாக்கு நபி (௱௮௰) ஆண்டில் வபாத்தாகிப் பட்டது—ஜீரான் என்கிற தலத்தில் அவர் தகப்பனார் இபுறுகிம் அலைகிஸ்ஸலாத்துடைய கபுறுக் கடுத்தான்னையாக அடக்கப்பட்டது வல்லாறு அறுலம்— தம்மத்துமாம் வஸ்ஸலாத்து வஸ்ஸலாம்.

---

நான்பதாவதுசெய்தி,

## இபுறுகிம் அலைகிஸ்ஸலாத்துடைய கிஸ்ஸா

முடிந்தது.

பிசுமில்லா ஹிற்றகுமானிற்றகிம்.

இ ஃ க.

## பத்தாவது செய்தி.

# யூசுபு அலைகிஸ்ஸலாத்துடைய கிஸ்ஸா

அல்ஹம்து லில்லாகி றப்பில் ஆலமீன் வஸ்ஸலாத்துவஸ்ஸ லாமு அலா றசூலிகி செய்யிதினா முகம்மதின் வஆலிகிவசகுபிகி அசுமயீன்.

அம்மாபகுது, குறுஆனிலே யிந்தக் கிஸ்ஸாவைப் போலொரு கிஸ்ஸாவு மில்லை யுறுதிப்பாட்டையும், பூராயத்தையும், புதுமைகளையும், மேன்மேலும் யூசுபு நபியுடையகிஸ்ஸாவிற்புதைந்திருக்கின்றுப் போலொரு கிஸ்ஸாவுமில்லை.

ஆதலாலிந்தக்கிஸ்ஸாவை அல்லாகுத்த ஆலா, அழகான கிஸ்ஸாவென்று பேர்வைத்தான், அஃதேதென்றால், மற்றுமுண்டான நபிமாருடைய விசளங்களும், சாலிகான பேருடைய விசளங்களும், மலாயிக்கத்துகளுடைய விசளங்களும், சைத்தானுடைய விசளங்களும், மனிதர் ஜின்னுடைய விசளங்களும் நாற்கால் மிருகத்துடைய விசளங்களும், இராஜாக்களுடைய நடபடிக்கைகளும், உலமாக்களுடைய நடபடிக்கைஅறிவுகளும், கச்சவடக்காருடைய விசளங்களும், பக்கி பூராயமுள்ளவர்களின் விசளங்களும், ஜாகிலானவர்களுடைய விசளமும், ஆண்பிறந்த வர்களுடையவிசளமும், பெண்பிறந்தவர்களுடைய காதும், மக்றும், கைவும், தௌகிதுடைய விசளமும், வுசீ அத்துதரிக்கத்து-ஹகிக்கத்து - மஹரிபத்துடைய வரலாறுகளு, மனுமுடறுப்புடைய வகைகளும், ஹபீபும குபூபுடைய விசளங்கள் முதலான விவைகளெல்லாமிந்த, யூசுபுநபியுடைய கிஸ்ஸாவிற புதைந்திருக்கின்றன,



முந்தின, பாபாகிறது,
அவர் வங்கிசத்தையும்,
அவர் சூறத்தையும்,
அவர் வர்ணிப்புகளையும்,
பேசுகிறதாகவிருக்கும்.

நபிசல்லல்லாகு அலைகி வசல்லம், மிகுறாசுக்குப்போகிறபோது ஆறும் வானத்தில், யூசுபு நபியைக் கண்டு புதுமையானார்கள்— அஃதெப்படியென்றால், அவர் தலைக்கு முடிசூட்டப் பட்டவராய்ச் சிறப்பாகிய, துகிலுடுத்தப்பட்டவராய், கிரீடந்தரிக்கப் பட்டவராய், ராஜாக்கள் பிடிக்கப்பட்ட அசாப்பிடித்தவராய் வலது புறத்தில் (எழுநூறு) மலக்குகளும், இடதுபுறத்தில் (எழுநூறு) மலக்குகளும், பிறகே நபிமார்களும் இவர்களெல்லாரும், சூழ்ந்து யூசுபுநபியை நடுவே வைத்துக்கொண்டு அல்லாகு சுபுகானகுத்த ஆலாவைத்தசுபீகுசெய்து கொண்டிருக்கிறார்கள்— அவர் முன்னாலே ஷீதேவி யென்கிற மரம் நிற்கிறது— அந்தப்படியாக ஆறும் வானத்திற் கண்டோமென்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லந் திருவுளமானார்கள் — அப்போது அசுகாபிகள் கேட்டார்கள் அல்லாகுத்த ஆலாவுடைய றசூலே, எந்தப்படி யூசுபுநபியைக் கண்டீர்கள் என்றபோது ஆண்டவர் சொன்னார்கள் பதினாலாம் பக்கத்துடைய ஒளிபோலே

கூடு

கண்டு ஜிபுரியிலைக் கேட்டேன் இத்தனைசிறப்பா யிருக்கிறாரே யிவரா ரென்றபோது, ஜிபுரியீல் அலைகிஸ்ஸலாம் சொன்னார்கள் — இவர்தான் யூசுபுநபியாக விருக்கும் [illegible] கத்துக்கும், யூசுபு நபியுடைய—தாயாருக்குங் கொடுக்கப்பட்ட அழகு உம்முடைய உம்மத்துகளுடைய அழகிலே செம்பாதி யழகு கொடுக்கப்பட்டதென்றார்கள், யூசுபுநபி, மிசுறுராச்சியத்தில் தெருவீதியில் நடந்தாராகில் அவர்முகத்தினுடைய ஒளிமதில்களெல்லாம் ஒளிவிழுந்திருக்கும்—சேற்றிலே பொழுதுடைய காந்தி விழுந்து எந்தப்படி ஒளியிலங்கிறதோ அப்படிப் போலே ஒளியிலங்கும்— ஆறும்வானத்திலே ஆதம்—அலைகிஸ்ஸலாம், யூசுபு நபியைக்கண்டு அல்லாகுத்த ஆலாவைக் கேட்டார் இந்தவள்ளலான பிள்ளையாரென்றபோது அல்லாகு சுபுகானகுத்த ஆலா அறிவித்தான் இவர்தான் — உம்முடைய உகப்பான, வள்ளலான மகனார் யூசுபு அலைகிஸ்ஸலா மென்று திருவுளமானான், அந்நேரத்தில் யூசுபுநபிகிட்ட மூடுகி மார்போடே யணைத்துக் கொண்டு இரண்டு கண்ணுக்கு மிடையிலே முத்திக் கொண்டார் ஆதம்— அலைகிஸ்ஸலாம் கோதுமைக் கனியைத் தின்று பாவஞ்செய்யு முன்னே லவருக்குக் கொடுக்கப்பட்ட அழகை யவர் பாவஞ்செய்த

பிறகு அந்த அழகையெல்லாம் யூசுபு நபிக்குக் கொடுக்கப் பட்டது அல்லாகுத்த ஆலா அந்த அழகெல்லாங் கொடுத்தான் இன்னும், ம[illegible]ப்புங் கொடுத்தான்-அவருடைய நிறம், மெத்தவும் அழகானநிறம், முகம், மெத்தவும் ஸீனத்தாக விருக்கும், உரோமமெல்லாம் மெத்தவும் கறுத்திருக்கும்- கண்விழிபருத்த விழியாகவிருக்கும், சரியொத்த வழகா யிருப்பார்.

கெண்டைக்கால், தோட்பும் பருத்திருக்கும், மூக்குக் கொழுந்திட்ட மூக்கா யிருக்கும், தொப்புள் சிறுத்திருக்கும், வலதுகன்னத்தில் ஒரு மறுவுண்டு, முகம், மெத்தவும் ஸீனத்தாய்ப் பதினலாம் பக்கத்து நிலவுபோ விலங்கும், இரண்டுகண்ணுக்கு மிடையில் நபிப்பட்ட மென்கிற முத்திரை பதினலாம் பக்கத்து நிலவுபோ விலங்கும், அவர்சிரித்தாரே யானல்- பல்-எயிறுகளெல்லாம் ஒளியாசப் புறப்படும்- அவர்பேசினரேயானல் இருட்டிலே பந்தங் கொளுத்தினப்போ லிருக்கும்-ஒருத்தரு மவருடைய வர்ணிப்பை வண்ணிக்க சக்தி பெறமாட்டார்கள், யூசுபு நபியவர் பாட்டனர், மகுலீனு, அவர் அவ்லாது, இபுறூகிம் அலைகிஸ்ஸலாம், அவருடைய அவுலாது இசுகாக்கு நபி, அவர் அவுலாது யஃகூபு அலைகிஸ்ஸலாம், அவர் மகன் யூசுபு அலைகிஸ்ஸலாம், அவர் ஷாமி ராச்சியத்திலே யிருக்கிறபோது-இசுகாக்கு-நபிக் கிரண்டுபிள்ளை பிறந்தது மதியன் என்று ஒரு மகனும் மத்தா னென்று ஒருமகனுமுண்டு மதியன் இவர்பேர்கொண்டு மதியனென்று பேர்வைக்கப்பட்டது, இசுகாக்கு நபி பட்டணத்தி லிருக்கிறபோது மதியன்கூட விருந்தார். அப்போது ஒருராத்திரி மனும் கண்டார் அந்தமனுமாகிறது இசுகாக்கு தம்முடையமுதுகிலே நின்றும் ஒருவனுப்பமானமரம் பச்சயாகக் கிளையும், கொப்புமாகப் புறப்படக் கண்டார்- அந்த மனுமியத்தி லவருக்குச் சொல்லப்பட்ட- அந்தக்கொப்பும், பணுருமாகிறது உன்னுடைய பிச்சளம் அன்பியாக்களல்லோவென்று-பிறகு பாந்தாப்போலே முழித்தார் அல்லாகு சுபுகானகூத்த ஆலா வகியிறக்கினன் பைத்துல் முகத்திசப்பூமிக்கு நகுலாகப்போகச் சொல்லிவகிவந்தது, பிறகு இசுகாக்கு நபிபைத்துல் முகத்திசிற்போய் எல்லாரையும் நேர்வழியில் வரவழைத்தார் அவர்கள் கொஞ்சம் பேரொழிய எல்லாரு மவசைகு வந்திருப்பார்கள் இப்படி நடந்துகொண்டு வருகிற நாளையில் அவருக்கு வயது (௮௰) ஆச்சுது பிறகு அவருக்குப் பார்வையும் மங்கிப்போச்சுது அவருக்கொரு



பள்ளியுண்டு அதி லிருந்து அல்லாகுத்த ஆலாவை வணங்கிக்கொண்டிருப்பார்-ஒரு இரவு தம்முடைய நம்பிராட்டி கூடவிருக்கிறபோது ஜமாகை நாடி நம்பிராட்டியாரிடத்தில் வந்தார், அப்போது நம்பிராட்டியார் சிரித்துக் கொண்டு சொன்னர் இன்னும் பிச்சளமுண்டாகுமோ, ஹமாஜத்தைக் கிறைவேத்தவோ, வந்தீர்களென்ருர் அப்போது வீடுகூடினர். பிறகு ஹமலா யிரண்டாண்பிள்ளை யுண்டானர் பின்பு பிள்ளையுண்டா யிருக்கிறசெய்தியைப் புருஷனுக் கறிவித்தார்-அப்போது இசுகாக்கு அலைகிஸ்ஸலாம் சொன்னர் நீசொல்லுகிறது புதுமையல்ல நான் மனுமியத்திலே கண்டிருக்கிறேன்-என்முதுகில் நின்றும் ஒருமரம் புறப்பட்டதென்ருர் அப்போது நம்பிராட்டியார் சொல்லுவார் அல்லாகுத்த ஆலாவுடைய நபியே, யிது இரண்டுபிள்ளையும் என் வயிற்றிலே வழக்காடிச் சண்டை செய்யுமாப்போலே ஒன்றுக்கொன்று எசலிக்கொண்டிருக்கிறதென்ருர்- அப்போது இசுகாக்கு அலைகிஸ்ஸலாம் சொல்லுவார்-இன்ன அல்லாகுத்த ஆலாகைகறுக விருக்குமென்ருர், பிறகு ஹமலாவுடைய நாளை நிரப்பமாகி வயிற்றிலிருந்து இரண்டு பிள்ளையும் எசலிக்கொண்டு நான் முந்திப் பிறப்பேன், நீ பிந்திவாவென்று எசலிப்பாச்சுது-அதிலொரு பிள்ளை நீ முந்திப் பிறந்தாயானல் நான் [illegible] சின்னுதாயைக் கொல்லுவேனென்று [illegible] முந்திப்பிள்ளை [illegible] சொல்லும்-இப்படி நாமை யுண்டாய்ப் பிரமாதத்தை யுந்த தாயைக் கொல்ல வேண்டாம் நீ தானே முந்திப்போவென்று சொன்னிச்சுது, முந்திப்பிறந்தபிள்ளை நான்ஈசா-பிந்திப்பிறந்த பிள்ளை யாகூபு அவருக்குப் பட்டப்பேர் இசுறயீலென்று சொல்லப்படும், இரண்டு பிள்ளையும் ஆண்பிள்ளையாகப் பெற்ருர் முந்திப் பிறந்தபிள்ளை பிந்தினதுடைய புறவடியுடனே கொளுவு நானாத் தொடர்ந்தாப் போலே பிறந்தது.

ஆனபடியினலே பிந்தின பிள்ளை யாகூ பென்றும் முந்தின பிள்ளை ஈசென்றும் பேர்வைக்கப்பட்டது, பிறகிரண்டு பிள்ளையும் வளர்ந்து (௫௧) வயதாச்சுது அப்போது இசுகாக்கு அலைகிஸ்ஸலாம், தம்முடைய பள்ளியை மக்க ளாளிலே சாட்டி அவர்களிருபேரும் பள்ளியைத் துப்பர வாக்கிக்கொண்டு பள்ளிக்குத் திறமத்துச்செய்துகொண்டிருந்தார்கள், தசப்பனருக்கு மவுத்தானதுமாகவும், பிறகு இசுகாக்கு நபிக்குள்ள பாடா பொட்டகைக்கோ வேறுகழுதை மற்றுமுள்ளதை யெல்லாம், இரண்டு பேருக்குஞ் சரியாகப் பங்கிட்டுக்கொடுத்

தார் இசுகாக்கு அலைஹிஸ்ஸலாம், ஈ
சென்கிற பிள்ளையுடையுவந்திருப்
பார் தாயார் யாகூபு நபியை யுவந்
திருப்பதுபோலப்படி யிருக்கிற நாளை
யிலே ஒருநாள் இசுகாக்குநபி தா
முவந்தபிள்ளை ஈசையழைத்து இ
ந்த மாதமின்ன தெய்தியிலொரு
நாள்வருகிறது அந்த நாளையில் நீ
யொரு ஆடுமறுத்து இறைச்சியும்
கோதுமைரொட்டியும் சுட்டுக்கொ
ண்டுவா அதைப் புசியாதிப் பிறகு
அல்லாகுத்த ஆலாவுக்கு சுத்து
செய்து உன் முதுகில் கின்றார்—அ
ன்பியாக்கள் பிறக்க நான் ஹக்குத்
த ஆலாவிடத்தில் துஆச் செய்கி
றேனென்றார் அதைத் தாயார் கே
ட்டுக்கொண்டிருந்தார், ஈசென்கிற
பிள்ளைக்கு அங்கை தொடுத்து
முழங்கை வரைக்கும் மெத்த அடர்
ந்தரோமமா யிருக்கும், இவர்களிரு
பேரும் முறைமுறையாக ஆடுமே
ய்த்துக்கொண்டுவருவார்கள் அன்
றைக்கு ஈசுடைய முறையாய் அவ
ராடுமேய்க்கப்போனார் அந்த வே
ளையில், தாயார் ஒருதந்திரமத்துப்
பண்ணினார் அதாவது ஒரு முலை
குடிப்பருவமுள்ள ஆட்டை யறுத்
துரித்து அந்தத் தோலிற் பாதித்
தோலை வலது கையிலும், பாதித்
தோலை இடது கையிலுமாக, யாகூபு
நபிக்குக்கட்டி இறைச்சியும், ரொ
ட்டியுங்கட்டி ஒரு தட்டில் வைத்து
மூடித் தானு வந்த பிள்ளை யாகூ

பு நபிகையிற்கொடுத்து மகனே, நா
னுன்னை யுன் தகப்பனாரிடத்தி லெ
ழுப்பிவைக்கிறேன் இதைக் கொ
ண்டுபோய்க் கொடு அவருனக்குத்
துஆச்செய்து அந்த துஆ உன் கா
ரியத்தில் கபுலாய் உன் முதுகுத் த
ண்டில் நின்றும் அல்லாகுத்தஆலா
அன்பியாக்களைப் பிறப்பிக்கவும்
போது மென்றார்—அப்போது யாகூ
கூபு நபி யதை வாங்கிக் கொண்டு
தம்முடைய தகப்பனார் இசுகாக்கு
அலைஹிஸ்ஸலாமவர்களிடத்திலே வந்து மு
ன்னே யிருந்து அந்த ரொட்டியும்,
இறைச்சியும் வைத்துத் தகப்பனா
ருடனே பேசினார் அப்போது இசு
காக்கு நபிசொல்லுவார் பேச்செல்
லாம், யாகூபுடைய பேச்சைப்
போ லிருக்கு தென்று கையைப்
பிடித்துப் பார்த்தார், ஈசைப்போ
லிருக்குதென்றார்—பின்புயாகூபுநபி
சொல்லுவார். அல்லா வுடைய நபி
யே, நீங்களெனக்கு அறுதிப்பாடு
செய்தபடியே யெனக்குத் துஆச்
செய்யுங்கள்—யாகூபுஅடுகாத் திருக்
கிறார் நான்தான் ஈசென்றார். அப்
போது இசுகாக்கு நபி தா முவந்த
படி துஆச்செய்தார்—அந்தி பரிம
ளமும் அங்கே யிருந்துபிறகு இவர்
வந்துவிட்டார். அப்போது ஈசுவந்
து இசுகாக்குநபி முன்னே யிருந்து
கொண்டு தகப்பனே, யெனக்கு நீ
ங்கள் அறுதி செய்திருக்கிறீர்களே, அப்ப
டியே யெனக்கு துஆச் செய்யுங்க



ளென்று அவருமுரட்டியும், இறை
ச்சியுங் கொண்டுவந்து வைத்தார்—
அப்போது இசுகாக்குநபி சொல்
லுவார். இன்றைக்கு நீ யென்னிடத்
தில் வந்திருந்து உனக்கு நான் துஆ
ச்செய்ய வில்லையாவென்றார். அத
ற்கு ஈசுசொல்லுவார். நான் இன்
றைக்கு ஆடுமேய்க்கப் போனேன்
வரவில்லை பாவா வென்றார். அப்
போது இசுகாக்கு நபி தம்முடை
ய நம்பிராட்டியாரைக் கூப்பிட்டுச்
சொல்லுவார்— உன்னுடைய ஹிக்
குமத்தான செயல்களிலே என்ன
த்த தென்று கேட்டபோது நம்பி
ராட்டியார் சொன்னார். அல்லாவு
டைய நபியே நீங்கள் துஆச்செய்
கிறது, யாகூபுக் காகவேணுமென்
று நானுவந்திருக்கிறேன் — ஈசுக்கு
துஆச்செய்கிறது எனக்கு உவப்
பல்ல ஏனென்றால் அவன் இப்பாறு என்
கூடப் பேசும்போது என் கூடக்
குளிரப் பேசுகிறதுமில்லை, ஆனப
டியால் இந்த ஹிக்குமத்துச் செய்
தே னென்றார்.

அப்போது ஈசு அதையறிந்து
யாகூபைக் கொன்றுபோட வென்னி
னார். பின்னையும் நாம் கொன்று
போட்டோ மானால், தகப்பனார் ப
துவாச்செய்வா ரென்று பயந்து அ
வ்வெண்ணத்தைத் தவிர்த்தார். இ
தை இசுகாக்குநபி யறிந்து மகனைக்
கூப்பிட்டு ஈசே, யுன் தம்பியைச்
சதியானஞ் செய்யாதே—உன் பிதி

ராட்சணைகளிலே சுல்தான்களும்,
இராஜாக்களு முண்டாக நானுவக்
கு துஆச் செய்கிறே னென்று— அ
ப்படியே துஆச் செய்து ஈசுடைய
கோபத்தை யாற்றினார். பிறகு இ
சுகாக்கு நபி தம்முடைய பள்ளி
யைமகனார் யாகூ பவளிலே சாட்டி
யுடைமையும் இரண்டுபேருக்குஞ்
சரியாகப் பகிர்ந்து கொடுத்துச் சி
றிதுநாளிருந்து தாமுமவுத்தாகவும்
செய்தார்—அதற்குப் பிறகு ஈசென்
கிறவர் தம்முடைய வுடற் பிறந்
தானைமேலாடி அவருடைய வுடை
மைகளையும், வன்பாகப் பறித்துக்
கொண்டார், அதின்பிறகு தாம் அ
பாதிராஜாவுடைய மகளைக் கலியா
ணஞ் செய்ய நாடித் தூதனுப்பி
வைத்துக்கலியாணஞ் செய்து விடு
கூடினார் அவர் கறுத்தப் பெண்பி
ள்ளையாக விருப்பார்—ஈசு வெளுப்
பாக விருப்பார்-இவர்களிருபேர் பி
றமாக விரண்டு பிள்ளை ஒருஆணும்,
ஒருபெண்ணுமாகப் பிறந்தது— ஆ
ண் பிள்ளைக்கு அசுபரென்று பேர்
வைத்தார்-பெண்பிள்ளைக்கு லைலா
வென்று பேர்வைத்தார்—பின்பு அ
சுபரென்கிற ஆண் பிள்ளைக்கு ஒரு
அபஷிப் பெண் பிள்ளையைக் கலி
யாணஞ்செய்து கொடுத்தார், லை
லாஎன்கிற பெண்பிள்ளையை ஒரு
அபஷிக்குக் கலியாணம்,முடித்துக்
கொடுத்தபோது—ஒரு ஆண்பிள்ளை
பிறந்தது—அந்தப் பிள்ளைக்கு அபி

யென்று பேர் வைத்தார் — அந்தப்
பட்டணத்தி லுள்ளவர்களெல்லாரு
ம் ஈசனவி லெக்கோழும் சாருதலா
ய் வப்போக அவரைச் சூழ்ந்து
கொண்டு அவர் சொற்படிக்கு நட
ந்து கொண் டிருப்பார்கள் யாகூபு
நபி பக்கிருகந் திரிவார், அப்போ
து தாயார் சொல்வார் மகனே, யா
கூபே, உன்னுடப் பிறந்தான் ஈசு
உன்னைக் கொல்ல நாடியிருக்கிறான்
உன்னுடைமைகளையும், பறித்துக்
கொண்டான் - அவன் காரியமாறெ
தெல்லா மாகட்டும், நீபூறு செய்
துகொள் ளென்றார் — இப்படியிருக்
கையில்—ஈசு என்கிறவர் அபகிப்ப
டையைக் கூட்டிக்கொண்டு வந்து
தம்பி யாகூபைப் பிடிக்கத் தக்கதா
கப் பைத்துல் முகத்திசுப் பட்ட
ணத்தில் வந்து தேடுகிறபோது,யா
கூபுநபி தாயாரளவில் வந்து ஒளித்
துக்கொண்டார்—அப்போது ஈசுஅ
தை யறிந்து தாயார் வீட்டை வந்
து வளைந்து கொண்டு யாகூபை ஒ
ப்புத்தாருங்கள். உங்கள் வீட்டிற்
சேவகரை யனுப்புவே னென்றார்.
அப்போது தாயார் யாகூபுநபியை
முக்காட்டுக்குள்ளே விட்டுக் கொ
ண்டு கொல்லை வழியே கூட்டிக்
கொண்டுபோய்ச் சொல்லுகிறார்—ம
கனே நீ யுன்மாமன் —லாயான் அ
வருடற் பிறந்தான் மார்களெல்லா
ரும் இபுறுகீம் நபியுடைய பிச்சளங்
களிலே நல்லுமின்னபேர்களாக்

ரும் அவர்கள் ஹஜ்ஜான் என்கிற ப
ட்டணத்தி லிருக்கிறார்கள் நீயவ்வி
ளிடமாகப் போய்ச்சேர் அவர்களு
க்கு மாமிகளும், கன்று, கானிகள்
தட்டுமுட்டு சாமான்கள் மிருகமு
ண்டும் அவ்விடத்திற்போய் உன்
மாமன், லாயான் அவருக்குக் கிது
மத்துச் செய்துகொண் டிரு— அவ
ருக்குப் பெண்மக்க ளுண்டும் அ
தை யுனக்குக் கலியாண முடித்
துத் தாவும் செய்வார் அவருக்கெ
ன் சலாமுஞ் சொல்லென்று சொ
ன்னபோது—யாகூபுநபி போகிறதற்
கு ஆயத்தப்பட்டார்—பிறகுதாயார்
வழிச்செலவுக்கும் தங்கித்துக்
கொடுத்தார். அதையும் வாங்கிக்
கொண்டு பயணம் புறப்பட்டார்.
பிறகு தாயார் வீட்டுக்குள் வந்து
கதவைத் திறந்து மகனே, ஈசே,
யிங்கே வந்துபார்த் தம்முடைய
தம்பியிருந்தால் பிடித்துக்கொள்ளு
மென்று சொன்னபோது ஈசுவந்
து வீடெல்லாஞ் சோதித்துப் பார்
த்துத் தாயார் மேல் மெத்தவுங்
கோபமாகத் திரும்பி அபசாரசாசி
யத்துக்குப் போய்விட்டார்—பிறகு
யாகூபுநபி நடந்து ஹஜ்ஜானென்கிற
பட்டணத்துக்கு வந்தார். அவ்வி
டத்திலே லாயான் என்கிறவருடை
ய பெண்மக்கள் இலியெஸ் மின்
ஜாகள்—அழகாய்த்—தெளிவாய் — ஒ
ருமேல் வீட்டின்மேலிருந்து நாலா
புறமும் பார்த்துக்கொண் டிருக்கிற



போது, யாகூபுநபி ஒரு கிணற்றண்
டைவந்து அதிலே தண்ணிரெடுத்து
... செய்து இரண்டுமக்கு ஆத்
துமக்கு ... துஆச்செய்தார். அ
ண்டபோது கையில் லாயா னுடைய
மக்கள்ந்த யெல்லாம் பார்த்துக்
கொண்டிருந்து தம்முடைய தகப்
பனிடத்தில் வந்து பாவாவே, யி
ங்கே யொருமனிதன்வந்தார்—அவர்
துஆச்செய்கிறது—நீங்கள் துஆச்செ
ய்யுமாப்போலும், அவர் தொழுகி
றது நீங்கள் தொழுகிறது போலு
மிருக்கு தென்று சொன்னார்கள்
அதைக்கேட்டு லாயான் மக்களுக்
குச் சொல்லுவார், நீபோய் அவ
ரையழைத்துக் கொண்டு வாவென்
றனுப்பினர். பிறகு, அந்தப் பெண்
பிள்ளைபோய் யாகூபுநபியைக் கூட்
டிக்கொண்டு தகப்பனிடத்தில் வ
ந்தது—பிறகு லாயான் வந்தவரைப்
பார்த்து ஓய்வாலிபக்காரரே, நீரெ
வ்விடத்தி லிருந்து வருகிறீர் நீர்யா
ருடைய பேரென்ன வென்று
கேட்டார். அப்போது யாகூபுநபி
சொல்லுவார்நானிருகிறவன் யாகூபு
புனை இசுகாக்கிபுனு இபுறுகீம் அலை
இஸ்ஸலாம் சாமிலேயிருந்து உம்
மை நாடிவந்தேன் என்று செய்தி
யெல்லாஞ் சொன்னார்— அப்போது
லாயான் ஒருதரம் அழுதி அடியமி
ட்டார். அவருயிர் புறப்படுதற்க
மட்டுமுண்டு அப்படிக்கொருந்த சகி
கத் தாக்கினதின் பிறகு அவர் தா

யார் விசளம் அவருடப்பிறந்தா
ஈசுடைய விசளமெல்லாங் கேட்கத்
தொடுத்தார்—அப்போது யாகூபுநபி
தமக்கும்,தம்முடைய வுடற் பிறந்
தானுக்கு மிடையிலே நடந்தது மி
வருடைய வுடைமைகளை யெல்லாம்
பறித்துக்கொண்டு இவரை பக்கி
ருக்கிவிட்டதும், தாயாருடைய வி
சளமெல்லாஞ் சொல்லிப் பின்பு
சொல்லுவார் எங்கள்தாயா ரும்மள
விற்போ யும்முடனே கூட இருக்
கச் சொல்லி யெனக்கு நசீஹத்து
ஞ் சொல்லி யனுப்பிவைத்தார், ஆ
கையால், அவர் சொற்படிக்கு —நா
னும்மளவில்வந்தே னென்றார்—அப்
போது லாயான் நாயனைப் புகழ்ந்து
சொல்லுவார்.- என் நாயன் அரிய
பெரியவன்—பக்கல் துஆச்செய் தி
ருக்கிறேன் யாநாயனே, யெனக்கு
ஒருசாலிகான அடியானைக் கொண்
டுவந்து விடு என்பிள்ளைகளில் ஒன்
றை நிக்காகு முடித்துக்கொடுக்கவு
மென்று துஆச்செய்தபடிக்கு அ
ல்லாகுத்த ஆலா, என்துஆவைக் க
பூல்செய்து என்முறுதாம் காகிலா
க்குவானேகவு மென்று சொல்லி நா
ன் நாடினபடிக்கு நீர் பாத்திமாக
விருக்கு மென்று சந்தோஷமாய்த்
தம்முடைய காரியங்—களைவகள் ஆ
ஸ்தி—பாஸ்திக ளெல்லாம், யாகூபு
நபி யளவிற் காட்டினார். அந்தப்படி
சிலநாட் சென்றதின் பிறகு—லாயா
ன் என்கிறவர் தம்முடைய பெண்

மக்களில் - மூத்தபிள்ளை, லய்யா என்கிறவர் அவருடைய கண்மாத்திரம் மாறுகண்ணாக விருக்கும், கண்பார்வை மந்தமாக விருக்கும், அவளைக் கலியாண முடித்துக் கொடுத்தார்.

யாகூபு அலைகிஸ்ஸலா மவளைக் கண்டபோது கண்ணுறையக் கண்டார், பிறகு லாபானிடத்திற் போய் என் மாமனே, நானென்னுடெல்லாம் பழுதாக்கிப்போட்டேன் நீ எனக்கு நான் காணத்தவளல்லவே அப்படிக்கொத்தவளைக் கலியாண முடித்துத் தந்தீரே யென்றார்-அப்போது லாபான் சொன்னார் நானுமக்குக் கலியாணமுடித்துத் தாகாடி யிருந்தது சாகிபத்தில் பதக்கு என்கிற பிள்ளையாக்கும்-அது என் பிள்ளைகளிற் சிறுபிள்ளையாக விருக்கும் - ஆனாலும் நீர் அறியீரா பெரியபிள்ளை யிருக்கச் சிறியபிள்ளையைக் கலியாணஞ் செய்கிற தமுகல்லவே ஆனபடியால் மூத்தபிள்ளையைக் கலியாண முடித்துத் தந்தேனென்றார், பிறகு அவர்மகளார் - லய்யா இடத்திற் போய்ச் சொல்லுவார் மகளே, நீ குறுபான் செய்ய இபாதத்துச்செய் அல்லாகு சுபுகானகுத்த ஆலாவுன், அதனைக் கபூல்செய்து உன்புருஷனார் கல்பு உன்மேற்பிரியமாக விருக்கவும் போதுமென்ற போது-லய்யா அந்தப் படியே செய்தார் கபூலாச்சுது-பிறகு யாகூபு அலைகிஸ்ஸலாத்துடைய வர் பேரிற் கிருபையாயிருந்து லய்யாவுக்கு ஹமலாய்-றூபீனு, சம்ஊனென்கிற இரண்டு பிள்ளையைப்பெற்றார் - பின்பு ஹமலாய் லாவா, எகூதாஎன்கிற இரண்டுபிள்ளையைப் பெற்றுப் பிறகு மவுத்தானார்-அதற்குப் பிறகு லாபான் என்கிறவர் யகூபு நபிக்கு இரண்டாவது மொரு மகள் சபுரு வல்பா என்கிறவளைக் கலியாணமுடித்துக் கொடுத்தார்- பிறகு விடுபா அவரும் ஹமலாய்த்தான், நக்தாலி என்கிற இரண்டு பிள்ளையு மிரட்டையாகப் பெற்று அவரும் மவுத்தானார், பிறகு மூன்றுவதும் ஒரு பெண்பிள்ளை யவர் பேர்-சுறுவியா என்கிறவளைக் கலியாணமுடித்துக் கொடுத்தார்- அவ ழகாக விருப்பார் -அவருங் ஹமலாய், சாதிறான், ஜியாதுன் என்கிற விரண்டு பிள்ளையு மிரட்டையாகப் பெற்றார்-பின்பு ஹமலாய்-ஆசு-ஆஷிஸ் என்கிற விரண்டு பிள்ளையும் பெற்ற பிறகு மவுத்தானார்-நாலாவது மொரு பெண்பிள்ளையைக் கலியாண முடித்தார் அவர் சிறு பிள்ளையா யிருக்கிறகாலமே அவர்பேர்- றஹீல் லாபானுடைய பிள்ளைகளில் அவர் மெத்தவும் அழகுள்ளவராக விருப்பார் அவருக்குப்பேர்-சம்சுந்நகார் என்றும் அவ



ருடைய அழகுக்காகச் சொல்லப்படும்-அவராகிறவர் சாகிபத்தில் பறாக்கு என்கிறவர் அவரைக் கண்டபோது யாகூபு அலைகிஸ்ஸலாமுக்கு வயது எண்பது பிறகு கன்ஆன் என்கிற பட்டணத்திலிருக்கையில்-அப்போது தாயாரும் மவுத்தானார் பின்பு- அவ்விடத்திலேயிருக்கவும் வரத் துடங்கிச்சுது- அப்போது யாகூபு நபிக்கு நபிப்பட்டமுண்டாச்சுது-பிறகு மாமனார் லாபானிடத்திலே முன்னேறிப்போய் அவர் தமக்குச் செய்த லவாத்தானீயுபகாரம், கிருமத்துகளெல்லாவற்றையும் மெத்தவும் போற்றிப், புகழ்ந்து நன்றாக்கத்தினை விடுத்திற் சக்கூறாஞ் செய்து சொல்லுவார் உண்மையாக வென்னுடைய நாயனாரிய பெரியவன் என்னைக் கன்ஆன் என்கிற ராச்சியத்தவிலாலேக்கொள்ளும்படி ஆதரைப் போகச்சொல்லி வதிந்து நானவ்விடத்துக்குப் போகவேணு மென்று சொன்ன போது-லாபான் நாயனைப்புகழ்ந்து சுக்கூறாம் செய்கிறவராகவும்- அல்லாகுத்த ஆலா ஆதரக வனுப்பின்து என்னமாக விருந்தது என்று புதுமையாய்ப் புகழ்ந்தவராகவும்- சுஜூதிலே விழுந்து பின்பு தலையையுயர்த்திச் சொல்லுவார் யாகூபு அலைகிஸ்ஸலாமே, நீர் என்னிடத்தில் வந்தநாள் தொடுத்து இதுவரையில் உம்மை என்னுடைய தலைமக்கு வைத்து என்னுடைய சகலவுடமெல்லா முமமளவிற் காட்டி நான் அனுவலந்து அல்லாகு சுபுகானகுத்த ஆலாவை வணங்கிக்கொண்டிருந்தேன் இப்போ தென்னைவிட்டுப் போகிறீரா வென்று விசாரப்பட்டுச் சொல்லுவார், உம்மாலே நான் நன்மையாக விருந்தேனே போதீய வேறொன்றுங் கண்டிலேன் ஆனாலொரு தலத்துக்கு நீர் நருவாக அனுப்பப்பட்டீரே, அவ்விடத்துக்கு நானும்முடைய குஞ்சுகுழந்தைக ளெல்லாரையுங் கூட்டிக்கொண்டு வருவேன் என்றால் என்னுடைய மக்களையும் உம்மையும் விட்டுப்பிரிந்திருக்கிறது எனக்கு உகப்பல்ல ஆனா லும்முடைய வேண்டுதல் என்னுடைய வேண்டுதலுக்கானா எனக்கு மெத்தவு முமையுத்தான் நீருமக்கு வேண்டினதை யெடுத்துக்கொண்டு போங்கள் உடைமைகளில் நின்றும் வஸ்துவகைகளில் நின்று முங்களுக்குச் சவாதாவாகத் தங்களித்தாக் கொள்ளுங்க ளென்றார் அப்போது யாகூபு அலைகிஸ்ஸலாஞ்சொல்லுவார்.

அல்லாகுத்த ஆலா உமக்குக் கைமுன் பிரத்தி செய்வாராகவும், ஆனாலெனக்கு ஆடுகள் மாத்திர மல்லாம லிடைமைகளி லேயாப்பிள்ளை யென்றார் - அப்போது ஆடுகளில், (௫௱-ம்) மாடுகளில் (௫௱-ம்) குதி

ரைகளில் (௩௱-ம்) கோவேறு கழுதைகளில் (௩௱-ம்) ஒட்டகைகளில் (௩௱-ம்) இவைக ளெல்லாம் மேய்க்கிற இடையர்களையும் கூடத் தங்கித்துக் கொடுத் தனுப்பினார் யாகூபு அலைஹிஸ்ஸலாம் தம்முடைய குடும்பத்தாரையும் கூட்டிக் கொண்டு தாமும் பத்துப் பிள்ளைகளுமாகப் புறப்பட்டார் ஒரு கவுலிற் சொல்லப்பட்டது (௰௨) பிள்ளையுமிரண்டு சுரியத்துகளுமாகக் கூட்டிக்கொண்டு புறப்பட்டா ரென்றும் சொல்லப்பட்டது-இருவர் பேராகிறது தல்பா என்றும், மற்றொருத்தர்பேர் பல்ஹா என்றும் பிறகு யாகூபு அலைஹிஸ்ஸலாம் இவர்களெல்லாரையும் கூட்டிக் கொண்டு கன்ஆன் ராச்சியத்தை நாடி முன்னோக்கி நடந்தார்கள் - இவர் வருகிறா ரென்கிறசெய்தி அவருடற்பிறந்தான் ஈசுக்கு எத்திச்சது- யாகூபு அலைஹிஸ்ஸலாத்தைஅல்லாருத்த ஆலா கன்ஆனென்கிற ராச்சியத்துக்கு ராஜா அளவில் தூதாகப் போகச் சொல்லி யனுப்பினான், அவ்விடத்துக்கு வருகிறா ரென்கிறசெய்தி ஈசுக்குத் தெரிந்தபோது அவர்- கோபமாய்க் கடிந்து கொண்டு சொன்னார்-நானல்லோ யாகூபைக் காணத் தூதுப் பட்டத்துக்குப் பாத்திர மானவனென்று சொல்லித் தாமும், தம்முடனே கூடின கூட்டங்களுஞ் சேவகருமாகப் புறப்பட்டு கன்ஆன் என்கிற ராச்சியத்துப் பாதையில்வந்து பாளையம்போட்டார். இந்தச் செய்திக ளெல்லாம் யாகூபு அலைஹிஸ் ஸலாத்துக்கு உம்முடைய உடற்பிறந்தான் ஈசு உம்மளவி லுன்னைத யெல்லாங் கொள்ளை யிட்டுக் கொண்டுபோக நீங்கள் போகிற பாதையை வழிகட்குப் பாளையம்போட்டிறங்கி யிருக்கிறாரென்கிற செய்தி யாகூபுநபி கேட்டு அவ்விடத்தில் தானேயமிறங்கி மகனார் றூபீலை யழைத்துச் சொல்லுவார்: மகனே, உன்னுடைய பெரிய தகப்பன் ஈசு இந்த மலைக்கும், ஆற்றுக்கும் மிறகே வந்து இறங்கி யிருக்கிறாராம், நீ யவரளவிற் போய் நான் சொல்லுகிற செய்தியைச் சொல்லென்று சொல்வார், நாம் நம்முடைய தாய்வயிற்றி லிருக்கும்போது நீர் நம்முடனே சண்டைக்கு நிற்கவும் செய்தீர்- பிறகு நாம் பிறந்து வளர்ந்து பெரிய ஆளாய்த் தலையுயர்ந்தோம் நம்முடைய தகப்பனாரும் மவுத்தானார். பின்பு, என்னுடைய உடைமைகளெல்லாம் அநியாயஞ்செய்து பறித்துக் கொண்டீர்-என்னைக் கொன்றுபோடவும் நாடினீர் - உம்மைவிட்டு மோடிபொளித்தேன் - இப்போ என்னுடைய நாயன் என்னை நருக்கிரக அனுப்பினான்- ஆனபடியால், நான்முன்னோக்கி வந்தேன்-இனிமேல் அநியாயஞ் செ



ய்ய சத்திபெறமாட்டீர்-அல்லாருத்த ஆலா, காத்துக்கொள்ளுவான், இது வெல்லாமுமக்குப் போதாது, அல்லாவுக்குப் பயந்து கொள்ளவும், குடல் வாய் மனிதனை நினைத்துக்கொள்ளவும், வழிகேடுகளை-விட்டொழியவும், ஹசது-வினை — பகை-கோபம்-வஞ்சகம்-இவை யாதொன்றும், வைக்க வேண்டாமென்று இவையெல்லாஞ் சொல்லிப் போகவிட்டார். பிறகு றூபீல் என்கிறவர் தம்முடைய பெரியதகப்பனார்-ஈசளவில் வந்தார்-பிறகு, தம்முடைய தகப்பனார் சொன்ன விசனமெல்லாம் சொல்லத்தக்கதாகத் தொட்டு முடியவேபோது அவரைக் கண்டவுடனே மகிழ்ச்சட்டியனைத்து அருகே யிருத்திக்கொண்டு யாகூபு அலைஹிஸ்ஸலாத்துடைய செய்திக ளெல்லாம் கேட்டார் - அப்போது றூபீல் தம்முடைய தகப்பனார் சொன்னபடியே பெரிய தகப்பனாருக்குச் சொல்லிக் காண்பித்தார்-ஈசு இவையெல்லாங் கேட்டுச் சொல்லுவார்-நீ யுன் தகப்பனாருக்குச்சொல்- தாம் நபியாய் நருலாய் வந்தாரானால் தம்மை அல்லாருத்த ஆலா, ஏவின காரியத் தனவிற் போகலாம், நீர் போகவேமென்று சொன்னே னென்று சொல்லென்றார். அப்போது றூபீல் தம்முடைய தகப்பனாரளவில் வந்தவர் பெரியதகப்பனார் சொன்ன செய்திகளெல்லாஞ்சொன்னார் - அப்போது யாகூபு அலைஹிஸ்ஸலாம் தம்முடனே கூடவந்தவர்களைப் பார்த்துச் சொல்லுவார் அல்லாருத்த ஆலா, ஈசுடைய குபாட்டத்தை எங்களைத்தொட்டும் நன்றாகக் காத்துக் கொள்வானாகவும் நீங்கள் அல்லாருத்த ஆலாவுடைய ஆதரவுகொண்டு நடங்களென்றபோது எல்லாரும் நடந்து போகிறபோது அவர்களுக்கு முன்னேயொரு ஓடைக்கரை யுண்டாயிருந்தது - அந்தக்கரையளவிற் செல்லும்போது, ஈசு அந்த மலைப்புறத்தில் நின்றும் புறப்பட்டுவந்து யாகூபு நபியையும் அவர்மக்களையும் அபசிப்படையைவிட்டு வளைந்து கொண்டார்- கறுத்த விழியை வெள்ளைவிழி சூழ்ந்தாற் போற் சூழ்ந்துகொண்டார்கள்-அதையாகூபு நபி கண்டு சொல்வார் தமையனாரே, யிவையெல்லா முமக்கு நியாயமல்ல உம்முடைய படையும் படைக் கூட்டங்க ளெல்லாம் என்னுடைய மக்கள்(௰) போர் கூடவும் விட்டுப் பார்க்கலாம், இப்போது நீர் தமையன்- நான் தம்பி இரண்டுபேரு மொருக் கால் மல்லுக்கட்டிப் பார்த்துக் கொள்ளலாமென்றுசொன்னார்-அதற் கிரண்டுபேரும் பொருந்தி யிதுநல்ல நியாய மென்று சொல்லி ஆயுதங்களைப் பரியவைத்துவிட்டு இரண்டுபேரும் மல்லுக்கட்டினார்கள்- யா

கூபு அலைகிஸ்ஸலாம் நுபுவ்வத்து,
றிசாலத்து என்கிற் கூவத்துக் கொ
ண்டு ஈசுமே விடம்பெற்று எடு
த்துத் தூக்கிப் பூமியில் விழுந்தா
ட்டி நெஞ்சின்மேலேறிக்கொண்டு
ஈசே, யென்று கூப்பிட்டார்— நாய
ன்செய்த செயலைக் கண்டாயா வெ
ன்று சொல்லுவார்—அப்போது ஈசு
அழுதார்—பிறகு யாகூபு நபி அலை
யனார்பேரி லிரக்கம்வந்து விடுமென
வு மழுதார் பிறகு யாகூபு நபி நெ
ஞ்சைவிட்டு மிறங்கினார்-பின்பு ஈசு
எழுந்திருந்து தமையனார் தம்பி
யார் யாகூபு நபிக்குக் கண்ணேறி
வுசொல்லிக் கெஞ்சிச்சொல்லுவார்
என்னுடற்பிறந்தானே, நானுனக்
குச்செய்த காரியங்களுக் கெல்லா
ம் நீ யெனக்கு கலால்ச் சொல்லு
ம், என் நாயன் பக்கலி லெனக்குப்
பிழை பொறுக்கத் தேடிக்கொள்
ளும் அதிதனென்றால், அல்லாகு
சுபுகானகூத்தஆலா உம்மையென்
னைக்காண வரிசையாக்கி வைத்தா
ன் நுபுவ்வத்துக் கொண்டும், நூ
தாயனுப்பியது கொண்டு மென்று
சலித்துச் சாவியப்பட்டுச் சொன்
னபோது, யாகூபு அலைகிஸ்ஸலாம்
தமையனுருக்குத் துஆச் செய்து
கொள்ள அல்லாகு சுபுகானகூத்த
ஆலா அளவில்க் கையையுயர்த்தி
நாயனே, யென்தமையன் பிச்சன
த்தில் ஐயூபுநபியும், சல்தான் ஸ்க
ந்தர் துல்கறு நபினியு முண்டாக்

கினையென்று துஆச்செய்தார் அல்
லாகுத்த ஆலா அதைக் கபூல்ச்செ
ய்து கொண்டான்-பிறகு யகூபு
நபி தமையனாரைக் கூப்பிட்டு என்
னுடற் பிறந்தானே, உமக்கு நல்
மாராய முண்டாவ தாகவும் என்
னகிய பெரியநாயன் நுபுவ்வத்தைக்
கொண்டு தனதாக்கி வைத்துக்கொ
ண்டான்-அதைவை நும்முடைய பி
ச்சங்களில் நுபுவ்வத்தைத் தன
தாக்கிவைத்தான் நீர் நல்மாராயம்
பெற்றுக் கொள்ளுமென்று சொ
ன்னபோது-ஈசுவென்கிறவர் சந்தோ
ஷமா யவரு மவர்கூடவந்தவர்களு
மவரவர்கள் தங்கள்வீடுகளை நாடி
ப்போனார்கள்—பிறகு ஈசுவுடை
டைய ஊரைநாடித் திரும்பினார் யா
கூபுநபி கன்ஆனைநாடி முன்னேறி
னார்-பிறகு யாகூபு அலைகிஸ்ஸலாம்
தமையனாருக்காகத் துஆச் செய்த
படிக்கு அல்லாகுத்தஆலா, ஐயூபு
அலைகிஸ்ஸலாத்தை ஈசுவுடைய பிச்
சங்களில் நருவாக வுறப்பினான்
சுல்தான் ஸ்கந்தர் துல்கறு நபிநி
யை எழுவானமுதற்படுவான் வரை
யில் இராஜாவாக ஈசுவுடைய சுறிய
த்திலே யுண்டாக்கினான்-பிறகு யா
கூபுநபி கன்ஆனுடைய திசையிற்
போனபோது அவ்விடத்திற் பே
ய்க்கறுபினால் விஸ்தீனமான ஒரு
வீடு இவருக்காகக் கட்டப்பட்டது
அந்தவீடு வவரு மவருடைய அ
வுளாதாந்த மாசத் தரிபட் டிருக்



தார்கள்—அந்தக் கன்ஆன் ராச்சிய
த்துக்கு இராஜாவிருந்தான் அவன்
பேராகிறது, சமியிபுனுதாறுன் எ
ன்று சொல்லப்படும் கன்ஆனு
டைய ராச்சிய மெல்லாம் ஆண்டு
கொண் டிருந்தான். அதிலுள்ளவர்
களு மவனுக்குப்பின் சென்று அ
வனுத்திரவுப்படி நடக்கிறார்கள் பி
றகு யாகூபு அலைகிஸ்ஸலாம் கன்ஆ
னென்கிற பட்டணத்தில்வந்து வீ
டுகட்டி விடுதிவிட்டாரென்று அந்
தச்செய்திக ளெல்லாம் அந்த இரா
ஜாவுக் கறிக்கை பண்ணினார்கள்—
பிறகு இராஜா தன்மந்திரிமார்களு
ம், தலைமைக் காரரும், படைக்க
ட்டுமாகப் புறப்பட்டு யாகூபுநபி
யைக் கலாக்குப் பண்ணுவோமெ
ன்று நாடிநடந்து நபியுடைய மாளி
கை யருகே வந்து பார்த்தான் அ
ந்த மாளிகையெல்லாம் லகிபாய்ப்
பார்வைக் கழகில்லாமற் பேடோ
லாகத் தண்டு நாமேன் வந்தோமெ
ன்று மெத்தவும் கைசேதப்பட்டுத்
தன்னுடைய மந்திரிமா ருடனே
சொல்லுவான் நானிப்போது இந்
த மனிதனை நாடிவந்ததற்கு எனக்
கு மெத்தவும் சலிப்பாச்சுது இம்
மாத்திரக் காரியத்தை நமக்குப் பா
ர்த்துவந்து சொல்ல ஒரு ஆளையனுப்
பாமல் மோசம்போனேன் நமக்கு
வந்தசெய்தி யிப்படி யல்லவே ஆ
னால் வந்துவிட்டோமே செய்யப்
போகிற தென்ன இவ்விடத்திற்

குனே தாணையம் இறங்கி யவர்கிட்
டே நாம்போ யவருடைய வரலாற்
றை யறியவோமென்று-அவனு மவ
ன் பந்திரிமாருமாக நபியை நாடிப்
போனார்கள்— அப்போது யாகூபு
அலைகிஸ்ஸலாம் கம்புளி குபினால்
ஜப்பாவும், கம்புளிகுபினால் தலை
ப்பாகையும், கம்புளிகுபினால் இடு
ப்பாடு முடுத்திக்கொண்டு மாளிகை
யி லிருக்கிறகாலி லவர் கிட்டப்
போனார் சுகைமுனன்கிற ராஜாவும்
அவனும் மந்திரிமாருமாக யாகூபு
நபிமுன்னே யிருந்ததின்பிறகு, சு
கைமு னென்கிற இராஜா அவன் வா
ய்திறந்து சொல்லைத் தொடுத்தான்-
நீர் யாரென்றும், எங்கே நின்றும்
வந்தாயென்றும், என்னுத்தார பி
அவன் பேராகிறது மஜ்லிசு - மற்
றொருவன் இராஜாவுக்கு மதுபான
ங்குடிப்பாட்டுகிறவன் அவனாகிறது
மாலா இவர்களிருபேரையும் சிறை
யில்வைத்த காரணமாவது அபிறு
விபா என்கிற பட்டணத்தில் றை
யானிபுனு ஒலீது இராஜாவிருக்கிற
து அந்த இராஜாவுக்குச் சிம்அரீசு
என்கிற இராஜா இருக்கிறது அந்த
றையானிபுனு ஒலீது இராஜாநடக்
கிற நடபடிகள் அந்த தேசத்தாருக்
கு அநியாயமாகக் கண்டபடியினா
லே அந்தஇராஜாவைச் சொல்ல நா
டினார்கள்- மிசுறுப்பட்டணத்தார்க
ளு மொருவூரிலே யிரண்டு இராஜா
க்களுமுண்டோ ஒருவுறையில் இர
ண்டுவாள் கிடக்குமோவென்று பே
சிக்கொள்ளுகிறார்கள், அஜீசு இரா
ஜாவும் ஒருக்கால் நான் ராஜாவென்
கிறான்- ஒருக்கால் தலைவனென்கிறா
ன் அதிறையானையும் அந்தமிசுறி
ல்தானே இராஜாவாகப்பேசுகிறான்.

அதுவுமிப்படியாக விருக்குது
மிசுறுப் பட்டணத்தார்களுக்கும்
இராஜா நடக்கிறநடபடிகள் பொரு
ந்தாத படியினாலே இராஜாவைக்
கொல்லுகிறதற்கு உபாயம் நினைத்
து இராஜாவுக்கு மதுபானங்குடிப்
பாட்டுகிறவனுக்கும் உறட்டி சுட்டு
க் கொடுக்கிறவனுக்கும், மிகுதியுந்
திரவிய முடைமைகளுந் தருகிறோ
மென்று யாருமறியாமல் அவர்களி
ருபேருடனையும் பேசிச் சம்மதப்
படுத்தி யவர்களுக்குச் சொல்லுவா
ர்கள் நீங்கள் இராஜாவுக்குக் கொடு
க்கும் வஜீபனத்தில் நஞ்சைவைத்து
க் கொடுக்கவேணுமென்று சொன்
னபோது அவர்களிருபேரும் நல்ல
தென்று சம்மதித்தபோது அவர்
களுக் கொப்புக்கொண்ட கைக்கூ
லிப்பணங் கொண்டுவந்து கொடுக்
கும்போது மதுபானங் குடிப்பா
ட்டுகிறவன் பணம்வாங்கமாட்டே
னென்று மறுத்தான்- உறட்டிக்கார
ன் நானே நஞ்சைவைத்துக் கொல்லு

கிறேனென்று பணத்தை வாங்கிக் கொண்டான்- பிறகு உறட்டிக்காரன் தான்செகிற வழிபணத்தில் நஞ்சைவைத்துச்சுட்டு இராஜா முன்னே கொண்டுவந்து வைத்தான்,- பிறகு குடிப்புக்கொடுக்கிறவன் குடிப்பைக் கொண்டுவந்து இராஜா முன்னே வைத்தான் பின்பு இராஜா உறட்டி தின்ன நாடினான்-அப்போது மதுபானக் குடிப்பாட்டுகிறவன்சொன்னான்-இராஜாவே, அந்த உறட்டியில் நஞ்சைவைத்திருக்குது உறட்டியைத்தின்ன வேண்டாமென்றான்- பிறகு உறட்டிக்காரன்சொல்லுவான்-இராஜாவே, அந்தக்குடிப்பில நஞ்சுகரைத்து வைத்திருக்கிறான் அதைபருகாதேயு மென்றான்- இராஜா இருபேருடைய சொல்லையுங் கேட்டு மதுபானக் கொண்டுவந்தவனை நீகொண்டுவந்தமதுவை நீதானே குடியென்றான்-பிறகு அவன் குடித்துவிட்டான்.

அவனுக்கொரு தங்கடமுமில்லாமலிருந்தான் பிறகு உறட்டிகொண்டு வந்தவனை நீகொண்டுவந்த உறட்டியை நீதானே தின்னென்றபோது அவன் மாட்டேனென்று மறுத்தான்-பிறகு அந்த உறட்டியை ஒரு மிருகத்துக்குப் போட்டபோது அது தின்றவுடனே செத்துப்போச்சுது இவர்களிரண்டுபேரையும் சிறையில்வைக்க எவினான் யூசுபு நபியைச் சிறையில் வைத்தபோது சிறையிலிருந்த பேர்களுடனே தான் மனுஷருக்கு உடைப்பேனென்று சொன்னார் அப்போ இந்த இரண்டுபேரில் ஒருவன் மற்றொருவனோடே சொல்லுவான் இந்த இபுறானியப்பாஷை பேசுகிற யூசுபு நபி யின்றைக்குச் சோதிக்கவேணுமென்று யூசுபுநபி யிடத்தில் வந்து மனுஷக்கனாவிலிருக்க மனும் கண்டோமென்று சொன்னார்கள் சில இமாம்கள் சொன்னார்கள் அவர்கள் மனுஷங்கண்டது மெய்யென்றார்கள் அவர்களிருவரும் யூசுபுநபியருகேவந்து அல்லாவினுடைய நாங்கள்உம்மைக்கண்டபோதே உம்முடையபேரில் மிகுதியு முவப்பானோமென்றார்கள்-அப்போது யூசுபுநபி அல்லாவைக்கொண்டு சத்தியமாகச் சொன்னார் உங்களை வருந்திக்கேட்கிறேன் நீங்களென்னை யுவந்திருக்கவேண்டாம் அல்லாவினுடைய என்னை யொருவருவந்திருக்கையிலே அவர்களென்னை யுவந்தினலெனக்குப் பலாய்வந்தொழிய என் தாய்தகப்பன் என்னை மிகுதியுமுவந்தபடியால் எனக்கிந்தனை பலா யுண்டாச்சுது அல்லாகுத்த ஆலா உங்களுக்குப்பறக்கத்துத் தருவாருகவும் என்னை நீங்க ளுவக்க வேண்டாமென்றார். பிறகு இராஜாவுக்கு மதுபானங் குடிப்பாட்டுகிறவன் சொன்னான் நான் கண்ட மனுஷமாகிறது நானொருதோப்பிலிருந்து மூன்று முந்திரிகைப்



பழக்குலைகொண்டுவந்து அதைப்பாத்திரத்தில் பிழிந்து இராஜாவுக்குக் குடிப்பாட்டக் கண்டேனென்று சொன்னான் — அப்போது உறட்டிக்காரன் சொல்லுவான் நான் கண்ட மனுஷமாகிறது என்தலைக்குமேலேசங்கிலியில்உறட்டிகளும், பலவழிபணங்களு முண்டாயிருக்குது அதைப்பலபக்கிசாதங்கள் வந்து கொத்தித்தின்னக் கண்டேனென்று சொன்னான்— யூசுபுநபி யந்தச் சிறைகூடத்தில் வந்த பிறகு அந்தச் சிறைகூடத்தி லொருவன் நசலானால் அந்த நசலாளி யருகேபோய் அவர்கள் வசிக்கிற காரியத்தைச்செய்து நிறைவேற்றுவார்- அவர்களுக்கிருக்குமிடம் நெருக்கமா யிருந்தா லந்த விடத்தை விஸ்தின மாக்கிக் கொடுப்பார்— அவர்களி லொருவருக்கு ஒரு காஜத்து முதலானது முண்டா யிருக்கில் அந்த காஜத்தை நிறைவேற்றிக்கொடுப்பார்-ஒருவர் சலித்திருந்தா லவர் சலிப்பை நீக்குவார்-அதை நீக்குகிறதற்கு மிருதியும் வருந்துவார்-இவர் சிறை கூடத்தில் வந்தபோது சிறையிற் கிடக்கிறபேர்களிற் சிலபேர்களுடைய ஆதரவுமறிந்து அவர்களுக்குப் பரியும் சகடனமர், யவர்கள், சலிப்புநீனக்கண்டபோது— அவர்களுக்கு சொல்லுவார் நீங்கள் சபூறு செய்து கொள்ளுங்கள் உங்களுக்கு நல்லாராய முண்டாகு மென்றபோது அவர்கள் சொல்லுவார்கள் நீர் யாவரிபகாரர் உமக்கு அல்லாகுத்த ஆலா நல்லுதவி செய்வாராகவும், உம்முடைய நற்குணத்தை யறியாக்கினது என்ன புதுமைதானே நீரொன்று கேட்டார்கள்-அப்போது சொல்லுவார் எம்பேர் யூசுபு எங்கள் தகப்பனார் அல்லாகுத்த ஆலாவுடைய றாதர் யகுக்கூபு நபி, அவர் தகப்பனார் இசுகாக்கு நபி, அவர் தகப்பனார் அல்லாவுக்கு உவந்த இபுறாகீம் கலீலுல்லா நாங்களெல்லாம் இபுறாகீம் நபி அவுலாதிலுள்ளவர்க ளென்று சொன்னார்— அப்போதந்தச் சிறை கூடத்துக்குத் தலைவன் சொல்லுவான் நான் சக்தி பெற்றேனாகில் உம்மைவிட்டுப்போவது தானே யிந்தச் சிறையைவிட்டும் நீங்கி உமக்கு வேண்டிய ஊருக்குப் போமென்று சொல்லுவேன் இராஜாவி னுத்தரவில்லாமல் சிறை நீக்க எனக்குச் சக்தியில்லை ஆகிலும் மென்றாலே யேலமட்டு மும்மக்கு நன்றிசெய்வே னென்றான்— பிறகு யூசுபு நபியுடனே மனுஷங் கண்டுமனுஷருக்கு உடைபடுத்துத் தாருமென்று சொன்ன விரண்டுபேரில் நின்றுமொருவனுக்கு இராஜாவாற் பொல்லாங்கு வருமென்று மனுஷக் கூடறுத்துச் சொல்லுகிறதைவிட்டும் புறக்கணித்து அவர்களிருவருக்குஞ் சொல்லுவார்.

உங்களுக்கு வருகிற வஜீபனம்
ருகிறதற்கு முன்பாக உங்கள் ம
னுமுக் கூடறப்புச் சொல்லுகிறே
ன்-அப்படி மனுமுக் கூடறுத்துச்
சொல்லுகிறது எனக் கென்னுடை
ய நாயன் அல்லாகுத்த ஆலா, அ
றிவித்ததாயிருக்கு மென்றபோது
அவர்க ளிருவருஞ் சொன்னார்கள்
இப்படிக் கண்ணழித்த வார்த்தை
பேசுகிறது வஞ்சனைக்காரர், சாஸ்தி
ரகாரர், சூனியகார ராக்கும் பேசு
வார்களென்று சொன்னார்கள்- அப்
போது யூசுபுநபி சொல்வார் -நான்
வஞ்சனை காரனுமல்ல- சூனியகார
னுமல்ல எனக்கு என்னுடைய னறிவி
த்ததைச் சொல்லுவே னென்று
சொல்லி நீங்களிருபேரும் இசுலா
மார்க்கத்தில் வாருங்களென் றழை
த்தபோது அவர்களும் மற்றுமந்த
ச் சிறை கூடத்தி லிருக்கிறவர்களு
ம் அவர்கள் முன்னாலே புத்துகள்
வைத்து வணங்கிறார்கள்- அதையூ
சுபுநபி பார்த்துச் சிறையிலிருக்கிற
பேர்களே? உங்களுக்குப் பல தம்
பிரான் கள்ளதோ ஒருவனாகிய ஹ
க்குத்த ஆலா, யெல்லா வுயிரையும்
படைத்து அதற்கெல்லா பிரணங்
கள் கொடுத்து அடக்கி யாளுகிற
நாயன் நல்லதோ வென்றுசொல்ல
ப்பிறகு அவர்களிற் சிறிதுபோ இ
சுலாமானார்கள்- பிறகு மனுமுக்கூ
டறப்புச் சொல்லுவார்- மதுபான
ஞ் குடிப் பாட்டுகிறவனே? நீ மூன்
று மூந்நிரிகைப்பழக்குலே கண்டா
யே அதாவது நீ மூன்று நாட்சிறை
கூடத்தி லிருப்பாய் நாலாநாட் சி
றையை விட்டு முனக்குத் தலைமை
கிடைக்குமென்றுசொல்லி-மற்றொ
ருவன் கூடச்சொல்லுவார்-உன்னை
வெட்டிக்கழுவிற் போடப்படு மெ
ன்று சொன்னபோது அவர்களிரு
வரும் நாங்கள் மனும் காணவில்லை
உம்மைச் சோதிக்க வேண்டிப்போ
ய் சொன்னோ மென்று சொன்ன
போது யூசுபு நபி சொல்லுவார் நீ
ங்க ளென்னோடே மனுக்கண்டோ
மென்று சொல்லியந்த மனுமுக்கூ
டறுக்கவுஞ் சொல்லி யிப்போது
காண வில்லையென்று சொல்லுகிறீர்
கள் நான் சொன்னபடியே அல்லா
குத்த ஆலா, நடப்பிப்பா னென்று
சொல்லி யிவர்க ளிருபேரில் ஒருவ
ன் சலாமத்துப் பெறுவா னென்று
யூசுபுநபி யெண்ணி அவனோடுசொ
ன்னார் நீயுன் இராஜாவுடனே நான்
சிறையிலிருக்கிறே னென்றுசொல்
லென்றார்- அவன் சலாமத்துப் பெ
ற்றுப் போனபோது சைத்தானவ
னுடைய ராஜாவுடன் இந்தச்செய்
தியைச் சொல்லாத படிக்கு மறப்
பித்துப் போட்டான்- அப்படி யூசு
பு நபி மனிதனைக்கொண் டுதவி தே
டினபடியினால் அல்லாகுத்த ஆலா
யூசுபு நபியைச் சிறிதுகாலஞ் சிறை
யிலே தரி படுத்தினான், தப்சீர்க்
காரர் மிகுதி பேசினார்கள்- ஏழு வ



ருஷஞ் சிறையிலிருந்தார்- றசூல் ச
ல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுள
மானார்கள்-யூசுபு நபி யந்த மதுபா
னங் குடிப் பாட்டுகிறவனுடன் உ
ன் இராஜாவுடன் என் காரியத்தை
ச்சொல்லென்று சொல்லாதிருந்தா
ல் சிறை கூடத்தில் சற்றுநேரமுந்
தரிபடாமல் உடனே சலாமத்துப்
பெறுவார்-என்று இன்னம் ஒரு வி
சளத்தில் வந்திருக்குது ஜிபுரியீல்
அலைகிஸ்ஸலாம் யூசுபுநபி சிறையி
லிருக்கும்போது சிறை கூடத்தில்
வந்தபோது யூசுபுநபி யவனைக்கண்
டவுடனே ஜிபுரியீலென் றறிந்து
சொல்லுவார் அச்சம் பூட்டுகிறபே
ருடைய வுடன்பிறந்தவரே குற்ற
ஞ்செய்த பேர்களிருக்குஞ் சிறை
கூடத்தில் நீர்வந்ததேதென்றுகேட்
டார்- அப்போது ஜிபுரியீல்சொல்லு
வார் தூய்மையானவரே? தூய்மை
யானவருடையமகனே? ஆலத்தையு
டைய நாயன் அல்லாகுத்த ஆலாவு
மக்கு சலாஞ் சொன்னான் - பின்பு
உம்முடனே கேட்கச் சொன்னான்
மனிதனைக்கொண் டுதவி தேடிக்
கொண்டீர், இதற்கு ஹயாவானீ
ரில்லையே யென்னுடைய சிறப்பி
னுனை யிந்தச் சிறையினின்னஞ் சி
றிது காலமும் வைப்பேனென்
று திருவுளமானா னென்றார்- அப்
போது யூசுப்நபி சொல்லுவார்- நா
ன் மனிதனைக்கொண் டுதவி தேடி
னதற்கு அல்லாகுத்த ஆலா, பொ
ருந்தி யிருக்கிறேனோ வென்றபோ
து ஜிபுரியீல் பொருந்தி யிருக்கிறா
னென்றார், அல்லாகுத்த ஆலா, பொ
ருத்த முண்டானபோதே வேறொ
ருகாரியத்தை நான்பாராட்டின தி
ல்லையென்று சொன்னபோது ஜிபு
ரியீல் போய்விட்டார்-இமாம் கலபி
றலி யல்லாகு அன்கு என்கிறவர்
சொன்னார். யூசுபுநபி ஐந்து வருஷ
ஞ் சிறையி லிருந்தபோது பிறகு
இராஜாவுக்கு மதுபானங் குடிப்பா
ட்டுகிறவனைக்கொண் டுதவி தேடி
னபடியால் பிறகும்- ஏழுவருஷஞ்
சிறையிலிருந்தார் யூசுபுநபி யுடைய
பலாய் தீர்மானமாய் அவரந்தச் சி
றைகூடம் விட்டு களாசுபெற முடி
கினபோது - றையானிபுனு ஒலீது
என்கிற இராஜாமிகுதியும் புதுமை
யும்-அமனியுமான ஒருமனுங் கண்
டான்-அந்த மனுமாகிறது நீல் என்
கிற ஆற்றுத் தண்ணீர் வற்றியுலர்
ந்ததன் பிறகு அவ்வாற்றில் நின்று
ம் ஏழுமெலிந்த மாடு புறப்பட்டு
ஏழு கொழுத்தமாட்டைத் தின்று
நின்றது-பிறகு நிரம்ப விளைந்த ஏ
ழு கோதம்புக் கதிரை ஏழுசாவியா
ன கதிர்வந்து மேலாடிநல்ல கதிரை
ச் சுற்றிவளைந்து கொண்டிருக்க ம
னுமிற்கண்டு முழித்து சைறுனுபி
ப்-பிறகு தேசத்தி லுண்டான வ
ஞ்சனைகாரர், சாஸ்திரகாரர், நாகம்
காரர் எல்லாரையு மழைப்பித்துத்
தான்கண்ட மனுமை யவர்களோ

டு சொல்லி யிதற்குக் கருபிறுசொல்லுங்க ளென்றபோது- அவர்கள் சொல்வார்கள் இராஜாவே? நீர்கண்ட மனமாகிறது அதைக் கூடலுங்கிறது பிழையென்று சொன்னபோது இராஜாவுடைய இருவரில் பசகலால் ஒருவன் சிறையி லிருந்து கலாக பெற்றவன் நானிந்த மனமுக் கூடறுத்து உங்களுக்குச் சொல்லுகிறே னென்றபோது இராஜா நீயெப்படி மனமுக் கூடறுப்பாயென்று கேட்டான். அப்போது தவன் யூசுபுநபி யுடைய சேதியை யறிவித்து அவர் சிறையி லிருக்கிறுர் நாங்க ளிருவருஞ் சிறையிலிருக்கிறபோது நாங்கள் மனுக்கண்டு அவருடனே சொன்ன பிறகு அவரெங்களுக் கூடறுப்புச்சொல்ல அதுமெய்யாக விருந்த செய்திபெல்லா மிராஜாவுக்குச் சொல்லிக் காண்பித்தான் - என்னை யவரளவிலனுப்பினு லவரிடத்திலே தாங்கள் கண்டமனமுக் கூடறுப்புக்கேட்டு வந்து சொல்லுகிறேனென்றான். அப்போது இராஜாவுக்குச் சொடுத்தான்-அவன் சிறை கூடத்தில் வந்து யூசுபு நபியுடன் சொல்லுவான் உண்மையான சொல் லுடையவரே? யெங்களிராஜா ஒருமனம் கண்டான் அதற் கூடறுப்புச் சொல்லவேணுமென்றபோது யூசுபுநபி அதென்ன மனமென்றுகேட்டார். அப்போதவன் சொல்லுவான் - ஏழு கொழுத்த மாட்டை ஏழு மெலிந்தமாடு தின்னக்கண்டதும், ஏழு நல்ல கதிரை யேழுசாவிக்கதிர்வந்து அடர்ந்து மேலாடினதும், ஒரு சிறுபிள்ளையை இடங் கட்டில்மேல் வைக்கக்கண்டதும் இப்படியாக இராஜாகண்ட மனு மென்றபோது யூசுபுநபி சொல்லுவார் அதற்குத் தகுபீருகிறது ஏழுவருஷத் துடாக வெள்ளாண்மை செய்து அந்த வெள்ளாண்மைக் கதிரோடறுத்துக் கட்டி வைக்கிறது ஏழு கொழுத்த மாடு கண்ட ஆடறுப்புப், பிறகு ஏழுவருஷந் துடாக பிருதியும் பஞ்சம் வரும் அந்தப்பஞ்சத்திற் கட்டிவைத்த தானியத்திற் சிறிதொழிய மற்றதெல்லாந் தின்றழிந்துபோகும்- அந்த சிறுபிள்ளை யாகிறது கண்டது வன்னைத்தான் கண்டாயென்று சொன்னர்- பிறகு அந்த மதுபானங் குடிப்பாட்டுகிறவன் இராஜா அளவிற்போய்யூசுபுநபி மனு மூடறுத்ததை இராஜாவுடன் சொன்னபோது இராஜா சொல்லுவான்- நீதிரும்பிப்போய் இந்த மனுமூடறுத்தவரை என்னளவிற் கூட்டிவாவென்று சொல்லி யனுப்பினன் அவன் திரும்பி வந்து சொல்லுவான் யூசுபு நபியே? யும்மை யிராஜா அழைக்கிறுன் வாருமென்றபோது யூசுபுநபி சொல்லுவார்.

நான் வருகிறதில்லை நீபோய் இராஜாவுடனேசொல் சுலைகா



யழைத்து ஒருவீட்டில்வைத்து மிசுரிலுள்ள தலைவமார்பெண்டுகளில் (சுமி) பேரையழைப்பித்து அவர்கள்கையில் ஒருகத்தியும் ஒருபாற்பழமுங் கொடுத்து இதையறுத்துத்தின்னுங்க ளென்று சொல்லிப் பிறகு சுலைகா என்னிடத்தில்வந்து யூசுபே, வெளியில் வாருமென்று சொன்ன பிறகு நானந்தப் பெண்பிள்ளைக ளிருக்குமிடத்தில் வந்தேன் அவர்க ளென்னைக் கண்டவுடன்கருணுகி யவர்கள் மனம்பேதலித்துத் தங்கள் கையிலிருந்த பழத்தை யறுக்கிறேமென் றெண்ணிக்கொண்டு தங்கள்கையை யறுத்துக் கொண்டு இரத்த மோடவைத்துக் கொண்டார்களே அவர்களுடைய செய்தியன்னவென் றவர்களைக் கேட்கச் சொல் நான் சுலைகாவுடப் பொல்லாங்கில்லை யென்று இராஜாவுக்கு வெளியானதின் பிறகு இராஜா கிட்டவருவேன் அதுவரைக்கும் நான் வருகிறதில்லை யென்று சொல்லி யழைக்கவந்தவனை யனுப்பிவிட்டார்- அப்பொழுது யல்லாகு அவர்களுடைய மானுர் அப்துல்லா சொன்னர் யூசுபுநபி தம்முடைய சரீரத்தில் நாம் துப்பரவென்கிறத்தை இராஜா அறியும்முதலின் மதுபானக்காரனுடன் போனாகில் சுலைகாவுடைய புருஷன் கித்பீரென்கிற தலைவனுக்கு யூசுபுநபியாலுள்ள அ க ளை வி ர ா து கல்பும், பிருதி குடாயிருக்கும் அவர்தான் நம்முடைய பெண்சாதியை வலிய அழைத்தா ளென்கிற மனக்குறைநீராது றருல் சல்லல்லாகு அலைகி வசல்லம் திருவுளமானர்கள் யூசுபுநபி சபுறு செய்த தற்குநான் பிருதியும் புதுமை யானேன் அவர் சபுறுசெய்தது மதுபானக் காரன்வந்து இராஜாகண்ட மனுமுக் கூடறுப்புச் சொல்லு மென்றுகேட்டபோ துடனே கூடறுப்புச் சொல்லிவிட்டாரோ நானேயவரிருக்கிறதத்தி லிருந்தேனுகில் அந்த மனுமுக் கூடறுப்புச் சொல்லுகிறதில்லை யெனக்குப்பெரிய தலைமைதருகிறதைக் கட்டளை தந் தொழியச் சொல்லேன் இன்னம் யூசுபுநபிசபுறுசெய்ததாற் புதுமை யானேன் இராஜாவுடைய மதுபானக் காரன் யூசுபுநபி யிடத்தில் வந்து இராஜா வரச்சொல்லுறுன் வாருமென்றபோது நீர் இராஜாவிடத்திற் திரும்பிப் போவென்று அந்தப் பெண் பிறந்த பேர்களுடனே விசாரங் கேட்க வேண்டித் திருப்பியனுப்பிவிட்டாரோ ஆனால் பிருதியும் புதுமை யானேன் அநேக நாளவ லிருக்குந் தலத்திலிருந்து அவரிரண்டு நாளைக்குச் சிறையிற்கிடந்த இடத்தில் நானிருந்தேனுகில் மதுபானக் காரன் வந்தழைத்த தற்குத் தீவிர பாசமாய்ப் புறப்பட்டு எல்லாருக்கும் முதல் போய்த் தீவிரமாக இராஜாவாசல்,

போய் விடுவேனென்று நம்முடை
யஆண்டவர்கள் திருவுள மானுர்கள்
பின்பு இராஜா யூசுபு நபியவர்களி ல
னுப்பின தூதன் யூசுபு நபியவர்களிடம்
வந்து அழைத்தபோது நான் வரு
கிறதில்லை அந்தப் பெண் பிறந்த
பேர்களும் கலீகாவையும் அழைப்
பித்து அவர்களுடன் என் செய்தி
யைக் கேட்டு நான் துய்மை யான
தின் பிறகு நான் வருவேனென்று
சொல்லி யனுப்பிவிட்டதும்-பிறகு
அவனி ராஜாவுடன் இந்தச்செய்தி
யெல்லாஞ் சொன்னபோது கைக்
ளை யறுத்துக் கொண்ட பெண்பி
றந்தபேர்களையும், கலீகாவையு மா
ள்விட் டழைப் பித்தான், அவர்க
ளெல்லோரும் வந்து கூடினதின்
பிறகு இராஜா தங்கள் கைகளையறு
த்துக்கொண்ட பெண்பிறந்த பேர்
களைக் கேட்டான் யூசுபு நபி யுங்க
ளிடத்தில்வந்து வெளியானபோது
உங்களுடைய ஹாலென்ன அவரு
டைய ஹாலென்ன வென்று கேட்
டபோது அவர்கள் சொன்னுர்கள்
ங்க ளெங்களுடைய கைகளிற்ப
ழம்வைத் தறுத்துத் தின்கிற போ
து யூசுபு நபிவந்தார் நாங்களவரைக்
கண்டவுடனே அவர்மேல் மைய
லாகிப் புத்திதடுமாறிக் கைகளைப்
பழமென் றறுத்துக் கொண்டு இர
த்த மோடுகிறதையு மறியாமல் அ
வரைப் பார்த்த பார்வையா யிருந்
தோமென்று சொன்னபோதுஇரா
ஜா அவர்களுடன் கேட்டான் நீங்க
ளவர்மேல் மையலானதேயல்லாம
லவருங்கள் மேல் மையலாக வில்
லையோ வென்ற போது அவர்கள்
சொன்னுர்கள்,

அல்லாகுத்த ஆலா துய்மையா
னவன் - நாங்க ளவரிடத்தில் ஒரு
பொல்லாங்கையு, மொரு மையலை
யுங் கண்டது மில்லை, யறிந்தது மி
ல்லை யென்று சொன்னுர்கள்-இவர்
கள் சொன்னதின் பிறகு கலீகா
சொல்வார் இப்போ துன்னம் வெ
ளியாகதென்று சொல்லுவார் -நா
னவனாத்துடர்ந் தழைத்ததே யல்
லாம லவனென்மேல் மயலானது மி
ல்லை-யென்னையவ னழைத்தது மில்
லையென்று கலீகாசொன்னுர்-இப்ப
டியிவர்கள்சொன்ன செய்திகளையூசு
புநபி கேட்டபோது பிறகு நானந்
தப் பெண்களை யழைப் பித்துக்
கேட்கச் சொல்லி யிராஜா வுக்குச்
சொல்லி யனுப்பின தெல்லாம் க
லீகாவுடைய புருஷனுக்கு நான்
துய்மை யென்கிறதற்குச் சாட்சி
யொப்பிவிக்க வேண்டிய தென்று
சொன்னுர்-அந்தப் பெண்களெ
ல்லா மிராஜாகூட நடந்தசெய்தியெ
ல்லாஞ் சொன்னபோது - இராஜா
திடனு யிருந்தான்-பிறகுயூசுபு நபி
யுடைய விசுவாசத்தையும், புத்தி
யையு மறிந்து பிறகு அவரை யெ
ன்னிடத்திற் கூட்டிவாருங்கள் அவ
ரை யெனக்குத் தனது தக்கோ



லைந்துக்கொள்ள வேணுமென்று
முன்னனுப்பின தூதனை யூசுபுநபி
யவனி லனுப்பினுன்- அப்போதவ
ன் சொன்னுன் அடியே னொரு வி
ண்ணப்பஞ் செய்யப் பயமா யிரு
க்கு தென்றுன் - அப்போது இரா
ஜாவம்மா சொல்லு பயப்படவேண்
டாமென்று சொன்னுன். அவர்நட
க்க மாட்டார் ஒரு தண்டியல் வே
ணு மென்றுன் - அப்போது நல்ல
து ஒருநனக தண்டியலுங் கொடுத்
துப் போய்களும் விட்டான் பிறகு
தூதன் அந்தத் தண்டியலைச் சிறை
கூடத்து வாசலில்வைத்து உள்ளு
க்குப்போய் யூசுபுநபியைக் கண்டு
கும்பிட்டு விழுந்தான் - ஆண்டவ
னே நான் போனவுடனே யங்கே
யழைப்பித்துக் கொள்வே னென்
றல்லோ வார்த்தைப்பாடு இப்போ
தேழுவருஷஞ் சென்று போச்சே
அதைத் தம்பிரானுக்காகப் பொறு
த்துக் கொள்ளவேணு மென்றுன்
அப்போது வள்ளல்யூசுபு நபிசொ
ன்னுர் உன்பேரிற் குற்றமில்லை எ
ன்மேல் குற்றந்தான், நீ மறந்தா
யென்றுர் -அதாகிறது என்னைப் ப
டைத்தவ னவனி துதவி தேடாம
லுந்த விராஜாவைக் கொண்டுதவி
தேடினபடியா லென்றுர் - நல்லது
கனக பல்லக்கிலேற வாருமென்று
ன்-அப்போது யூசுபுநபி சொல்வார்
என்னைச் சிறையில்வைத்தநாச்சியா
ர்வந்து கைபிடித்துப் பல்லக்கில்
வைத்தா லேறுவேனென்றுர்- அப்
போது அஜீசு இராஜா கலீகாவை
க்கோபித்துக் கொண்டு உன்றலே
யல்லவா - அருமந்த பயல் போயி
ருனென்றுன் - அவனைச் சிறையில்
வையாவிட்டால் நாக்கைப் பிடுங்கி
ச்சாவே னென்றுயே விட்டிருந்
தாப்போ லிருந்தா லவனறியமாட்
டானே யென்றபோது கலீகா அ
ழுதார்-பின்பு சொல்லுவார் உமக்
கென்ன நட்டமோ உமக்கிட்டுப்
பாய் கணவனிலுடைமை நிரப்பிக்
கொண்டோ காவல்லோ போடத்
தாலென்னைப் பெண்டுக்குப் பிடிக்
க வந்தாரென்று சொல்லிக் கேட்
டேனென்றுர் அப்போது யூசுபுநபி
யை யழைக்கவந்தவன் அஜீசு இரா
ஜாவுடனே யந்தச்செய்தியை எல்
லாஞ் சொன்னுன் - அதைக்கலீகா
கேட்டு மெத்தவழுதார்-அப்போது
அழைக்கவந்தவன் சொன்னுன்-எ
னழுகிறீர் இராஜனிடத்திற் கூட்டி
ப்போய் மனும் தருவீரு சொன்ன
பின்பு உங்களிடத்தி லனுப்பி விடு
வாரென்றுன்-அதுகேட்டுக் கலீகா
வும், அதிசமாகச் சிறை கூடத்திற்
போனுர்கள்-தண்டியலைப்பார்த்துப்
பழசாயிருக்குதென்று கலீகா தன்
னுடைய மாளிகையிற புதுமாதிரி
ப்பல்லக்குப் புலிமுகம்வைத்து இர
த்தினத்தாற் சமைத்திருக்கிறதண்
டியலை யெடுக்க ஆள விட்டு வந்த
போது யூசுபுநபிக்கு முகவேலைசெ

லே நெருப்புப்பற்றி வெந்து கரியைப்போற் கறுத்துப் போச்சுது ஒரு பிள்ளையை யெடுத்துக் கட்டில்மேல் வைத்துக் கொண்டது தானிருக்கும், இவையாகும் நீர்கண்டமனும்-இதினுடைய அந்தமனுமெல்லாங் கண்டதின்பிறகு திடுக்கிட்டு முழித்தேனென்று யூசுபு அலைகிஸ்ஸலா மிவையெல்லாஞ் சொன்னபிறகு இராஜா சொல்வான்-அல்லாவினுணை நான்கண்ட மனும்-புதுமையா யிருக்கிலும் நீரதை யிப்போது சொன்னது அந்தமனுமைக்கான மிகுதியும் புதுமையாயிருக்குதென்று சத்தியமாகச்சொல்லி யிதற்கு வகை யென்னவென்று இராஜா கேட்டான்-அப்போது யூசுபு அலைகிஸ்ஸலாஞ் சொல்லுவார் இராஜாவே யிந்தமெளிதலானஎழுவருஷத்தில் வேளாண்மை பயிர் மிகுதியுஞ்செய்து நன்றாக விளைந்ததின் பிறகு அந்தப் பயிர்களெல்லாந் தாளோடறுத்துக் களஞ்சியங்களிலே பதனம் பண்ணிவைத்திராகிற் தானியம் மனிதருக்குந், தாளெல்லாம் மிருகஜாதிக்குமாக விருக்கும்- இப்படிக் களஞ்சியத்திற் கட்டிவைக்கிறது மிகுதிநாளைக்குக் கெட்டுப் போகாம லிருக்கும் அந்த வருஷங்களுக்குப் பிறகு பலபலகோணத்தினுலும் உம்மளவில் வஜீபனங்கொள்ள வருவார்கள். இப்படி மிகுதி கோணங்களில் நின்றும்-தானியங்கொள்ள உம்மிடத்தில் வருவார்கள். எந்தக் கோணங்களிலுந் தவசமில்லாத படியால் உம்மிடத்தில்வந்து தவசங்கொண்டாராகில் மிகுதி திரவியம் வந்து சேருமென்று யூசுபு அலைகிஸ்ஸலாஞ்சொன்னபோது-இராஜா இப்படிவகைவிபாமாய் வேளாண்மைசெய்து எல்லாத்தையுங் களஞ்சியங்களிற் கட்டிவருகிற பேர்களுக்கு விற்கத்தக்க மனிதர் யாரிருக்கிறா ரென்றும், நமக்கு மிகுதி பாரமிருக்குதேயென்றும் இராஜாசொன்னபோது யூசுபுநபி சொன்னார் என்னை யிந்தப் பூமியுடைய காரியமெல்லாம் பார்க்கக் கட்டளையிடும் நானெல்லாக் காரியமுங் கனைக்கும் நன்று யறிவேனென்று சொன்னார்-இந்தத்தலத்திற் சொல்லப்பட்டது- அதாவது இராஜா இந்தக்காரியங்களுக்கு யார்கின்று இந்தக்காரியம் பார்க்கிறதென்றபோது யூசுபுநபி சொன்னார் என்னை யிக்காரியங்களுக்குத் தலைமையாய்க் கட்டளையிடும்பயிர் செய்கிற பரிசுபாங்குகளும் விளைந்ததின்பிறகு எல்லாத்தையுங் களஞ்சியங்கள் கட்டுகிற பரிசும் பலதேசத்தார் வருகிற பாதைகளறிந்து அவர்களுக்கு விற்கும் பரிசுமறிவேனென்றுசொன்னபோது- இராஜா சொல்வான் இப்போ தமக்கிந்த இடத்திற்பெரியதலைமை யுண்டென்று சொன்னான் - நருல்



கள்ளெல்லாரு அலைகிஸ்ஸலாம் திருவுளமானார்கள்.

யூசுபுநபி இராஜா தலைமைக்கு யாரென்றபோது என்னை யிந்தப்பூமியுடைய தலைமைக்குக் கட்டளையிடுமென்று சொல்லாதிருக்கில் அந்த இராஜா அந்நேரமே தலைமையைக் கட்டளையிடுவான் அப்படிச் சொன்னதால் ஒருவருஷஞ் சென்றதின்பிறகு தலைமை கட்டளையிட்டானென்றார்கள்-அப்பாசு றளியல்லாகு அன்குடையமகனார் அப்துல்லா என்கிறவர் சொன்னார் யூசுபுநபி தலைமைகேட்டு ஒருவருஷஞ் சென்றபிறகு இராஜா யூசுபுநபியை அழைப்பித்து அவருக்குக் கனகமுடியுந் தலையில் வைத்து, இராஜதனமென்கிறவாளுமரை யிடுப்பிற் சேர்த்து அவருக்கொரு சிங்காதனமுங் கொடுத்தான்-அது எப்படிக் கொத்த கொலுவாசில் முத்து, மாணிக்கம், நவரத்தின, மழத்தப்பட்ட கொலு அதினுடைய நீளம் (௩௰) முழம் அகலம் (௰) முழம்- இப்படிக் கொத்த அழகு பொருந்திய கொலு வுண்டாக்கிக் கொடுத்து பிறகு இராஜா யூசுபுநபியைக் கொலுவுக்குப் புறப்படு மென்று சொன்னபோது-கனகமுடியும், இராஜ வாளுமணிந்து பதினாலாம் பட்சத்து நிலவுதித்தாப்போலே புறப்பட்டார் - வலீதென்னுமிராஜாவுடைய மகன் றையான் என்னுமிராஜாவும், மற்றுமுண்டான இராஜாக்கள், மந்திரிமார், பெரியோர்களும், படைக்கலன்களும், சுபத்து, நகரா, மேளா, தாளங்களுடனே, படை பதாதிகளோடு சூழவந்து சிங்காதனக் கொலுவின்மேலே பொழுதுதித்தாப்போலே வீறிருந்தார்-அப்போது றையானிபுனுவலீதும், மற்றுமுள்ள இராஜாக்கள், மந்திரிமார், பெரியோர்கள், றையத்துகள், படைத் தலைவரார், இவர்களெல்லாருஞ் சூழ்ந்து நிற்கும்போது, றையா னிபுனுவலீது சொல்லுவான்-எல்லாருங் கேளுங்கள் இந்நேரமும் நான் இராஜாவாயிருந்தேன் - இன்றுமுதற்கொண்டு தேசமடங்கலுக்கும் இவரே இராஜா, இவருடைய செங்கோல் நாயமாச்சுது, இவருடைய ஆக்கினைக்குட்பட்டு நடவுங்கள், அஜீஜா இராஜாவுடைய தலைமையும் நீங்கிப் போச்சுது யூசுபு அலைகிஸ்ஸலா மிராஜாவாகு மென்று சொன்னபோது மற்று முண்டான இராஜாக்க ளெல்லாரும் யூசுபு நபியுடைய உத்திரவுபடிக்கு நடந்தார்கள் - பின்பு வலீதென்னு மிராஜாதன் சிங்காதனம் அடங்கலும் நபிக்குச் சாட்டி விட்டுத் தன்வீட்டி லிருந்து விட்டான், இன்னுமொருதவுலாத்தது யூசுபுநபி அமீருவியா வென்கிற பட்டணத்திற் பல்லக்கிலேற்றிக் கொண்டு வருகிறபோது றையானி

ராஜாவானவன் மேன்மாடியிலின், றவிறுகிறபோது கண்டான். பிறகு யூசுபுநபி முடுகி ஏறுவதனைம் விட்டிறங்குகிறபோது இறங்க வேண்டாமென்று ஆர்விட்டான்- அப்படியே யிறங்காமல் புலிமுகத்தண்டிகை மேல் இராஜாவுடைய அரண்மனை யுள்ளே போனபோது அவனிருக்கிற பொன்னின் கட்டிலின்மேற் கையைப்பிடித்திருத்திக் கொண்டான்- அப்போது (ஸல) பாவையாலு மிராஜாவேயினென் அகளுக் கெல்லாம் வள்ளல் யூசுநபி மறுமொழிசொன்னார்- அதுகண்டு அவர்தலைத்தடவி முத்திக்கொண்டு நால்வயதாய்ப் போனேன் இந்தப்பாவைமெல்லாம் படித்து முகிய-நீர்வாலிபரா யிருந்து எப்படிப் படித்தீரென்று கேட்டான்- அப்போதவன்னல் யூசுநபி சொல்லுவார் உமக்குக் கப்பங்கட்டுகிற அஜீசு மிஸ்றினுடைய காவலிற் சிறைக்கூடத்தில் ஏழுவருஷமிருந்தேன்- அதிற் பலபாஷைக்காரு மிருந்தார்கள் அவர்களிடத்திற் படித்தேனென்றார் அப்போது-ஹைறானிஇராஜா சொல்லுவான் உம்மைச் சிறைக்கூடத்தில் வைத்தது மெப்போவென்று கேட்டான்- நானறிந்தாலதற்சேத்தபுத்தி சொல்வேனென்றான் பிறகு அவருக்கு இராஜவாழ்க்கை கொடுத்து எல்லா இராஜாக்களு மிவர் சொற்படிக்கு நடக்கும்படியாய்க் கட்டளை யிட்டுத் தான் தன்வீட்டி லிருந்து விட்டான்-பிறகு யூசுபுஅலைகிஸ்ஸலாம் தம்முடைய கொலுவிலிருந்து செங்கோல் நடத்தும்போது மிஸ்ற நாட்டுக்குப் பிறகு சுலைகாவுடைய புருஷன் அஜீசு மிஸ்று மவுத்தானன்-மவுத்தானபிறகு யூசுபுநபிக்குக் கலியாணமுடித்த விசனமிரண்டு சொல்லகச் சொல்லப்பட்டது- அதிலொன்றுவீது மிஸ்று என்னுந்தலைவன் மவுத்தானபிறகு யூசுபு அலைகிஸ்ஸலாம் சுலைகாவைக் கலியாணம் முடித்தபிறகு நீ முன்னுடைய காரியத்திலு மிப்படிக் கலியாண முடித்தகாரியம் நல்லதல்லோ வென்று கேட்டபோது சுலைகா சொல்வார் உண்மை யானவரே, யென்னைப் பழித்துப் போகாதேயும் நான்மிகுதி யழகும், வடிவுந்தெளிவுமா யிருந்தேன்- மிஸ்றென்னு மிராஜா என்னை யிக்காதுபடிக்கு அல்லாகுத்தஆலா, என்னைக் காத்துவைத்தான் அப்படி நானிருக்கும்போது நீர் மிகுதி யழகும், வடிவுமாகி யென்வீட்டி லிருந்தபோது என்னுகை பொறுக்காம லும்மைத் தொடர்ந்தேன் இப்போது நீரென்னைத் தொடர்ந்தீர் முன் நானுமைத் தொடர்ந்தது போலே யிதென் பிறகு யூசுபுநபி சுலைகாவோடு விடு கூடினபோது கன்னிபாதாரமாகவிருக்கக் கண்டார் – அல்லாகுத்த



ஆலா, சுலைகாவை யூசுபுநபிக்கென்று படைத்த படியினாலே காத்துவைத்தான்-மற்றொரு சொல்லாவது யூசுபுநபி தாமும், தம்முடைய படைகளுமாய் இராஜ காரியங்களிற் போகிற போது சுலைகா தன்னுடைய மேனியழகெல்லாம் போய் வாழ்வுமுடைமையும் போய்க் கண்ணும் பார்வை குறைந்தவராய் அந்தப் பெருவழியில் நிற்கும்போது யூசுபுஅலைகிஸ்ஸலாம் இத்தனை பவுசுடன் போகிறதைக் கண்டு சொல்வார் அடிமைகளை யிராஜாக்களாக்கி, யிராஜாக்களை யடிமைகளாக்கின அல்லாகுத்த ஆலா தூய்மையானவனென்று சொன்னதின் பிறகு யூசுபுநபி திரும்பிப்பார்த்தார்-அப்போது சுலைகாதான் யூசுபுநபியைத் தன்வீட்டில்வைத்து வளர்த்ததினால் நம்மளவில் நன்றிசெய்வா ரென்று ஆசைவைத்தார்-பிறகு யூசுபுநபி யவளை மறுபடியுந் திரும்பிப்பாராமற் போகிறபோது அல்லாகுத்தஆலா, யூசுபுநபி யளவில் வஹியிறக்கினன், நானுமக்குச் சுலைகாவை நிக்காகு முடித்துத் தந்தேனென்று வஹிவந்தபோது யூசுபுநபி சொன்னார் – நாயனே சுலைகா மிகுதி வயதாய்ப் புருஷனுக்குப் பருவமானவரல்லவே யென்றபோது அல்லாகுத்த ஆலா, யூசுபுநபி யளவில் மறுபடியும் வஹியிறக்கினன்-நானவளை முன்னிருந்த அழகினும், வடிவினுந், தெளிவினு, மதிகமாக வாலிபகுமரியாக வுண்டாக்கித் தருகிறேனென்று வஹிவந்ததின் பிறகு நல்லதென்று கலியாண முடித்தார்-பிறகு முன்னிருந்ததினும் பதின்மடங்கழகும், வடிவுமாகக் கொடுத்தான் யூசுபுநபி கலியாண முடித்தபின் இருவருந் தனித்தபோது சுலைகா தொழுகைகொண்டு பாக்காமி நெடுநேரமாய்த் தொழுகிறபோது யூசுபுநபி யவருடைய அழகும் வடிவுங் கண்டதின் பிறகு அவர்மே லாசை கொண்டு ஆசை மிகுந்ததால் தொழுது நிறுமளவுஞ் சபூறு செய்யமாட்டாமல் அவர் போட்டுத்தொழுகிற குப்பாயத்தைப் பிடித்திழுத்துத் தம்முடைய கையை நீட்டிப் பிடித்தார்.

பிறகு சுலைகா இவரளவில் திரும்பிப் பாராமல் தொழுதபடியினாலே குப்பாயத்தை வலுவாக இழுத்தார் குப்பாயங் கிழிந்து போச்சுது-பின்பு ஜிபுரயீல் அலைகிஸ்ஸலாம் வந்து யூசுபுநபியுடன் சொன்னார் யூசுபே, முன் சுலைகா வும்மளவில், மையலாகி யும்முடைய குப்பாயத்தைக் கிழித்தாப்போ லிப்போது நீரவர்மேல் மையலாகி யவருடைய குப்பாயத்தை யும்முடைய குப்பாயத்துக்குப் பதிலாகக் கிழித்தீர் என்று சொன்னார்-பின்பு சுலைகா யூசுபுநபிக் கிரண்டு பிள்ளைபெற்றார்-ஒருவர்பேர் அபுறு வென்றும், மற்றொருவர் பேர் மீசாவென்

ளும்,பிறந்தது, யூசுபு அலைகிஸ்ஸலா
ம் மிசுறு இராஜாவாய். மிகுதியும்
நெறிநீதமாக நடத்தின படியினா
லே மிசுறிலுள்ள ஆண் பெண் அ
னைவரும் யூசுபுநபிபேரில் மிகுதியு
முவப்பானார்கள்- அல்லாகு சுபுகா
னகூத்த ஆலா, குறுஆனிலே திரு
வுளமானான்-யூசுபுக்குப் பூமியிலே
தலைமையைக் கட்டளை யிட்டோ
மென்று திருவுளமானான் - பிறகு
மலிவான நல்லவருசம் வந்து நட
ந்தனபோது மழைமாரிகள் மிகுத
மாய்ப்பெய்யத் தடங்கிச்சுது அப்
போது - யூசுபு அலைகிஸ்ஸலாம் மி
குதியுங் கனிவாய் மிசுறு இராச்சி
யத்தில் ஒருங்காலும் வேளாண்மை
செய்யாத காம்புகள், மேடு, காடுக
ள், பள்ளங், குழிக ளெல்லாம் வே
ளாண்மை புலதானியங்கள் கொண்
டு வேளாண்மை செய்யத் தடங்
கினார் - முந்தின வருஷஞ்செய்த
வேளாண்மை யெல்லாந் தானோ
டறுந்து ஒருதானியமு முதிர்ந்து
போகாமற் பதனமாகக் களஞ்சிய
ங்களிற் கொண்டுவந்து சேர்த்தார்
கள்-இரண்டாம் வருஷமு- முன்வ
ருஷத்திற் பதிமடங்கதிகமாய் வே
ளாண்மை செய்தார்கள், அதுவும்
பதிமடங்கதிகமாய்ப் பொலிவுகண்
டது அதையு மப்படியே தானோ
டறுத்துக் களஞ்சியங்களிற் கொ
ண்டுவந்து சேர்த்தார்கள்-இந்தப்ப
டிக்கு வேளாண்மை ஒருவருஷத்

துக் கொருவருஷம் பதிமடங் கதி
கமாகத் தானியம் விளைந்து களஞ்
சியங்களிற் சேர்த்தார்கள்-இந்தப்ப
டியாக ஏழுவருஷ மதிகமதிகமாக
வேளாண்மை செய்து ஒரு தானி
யமும் சிதறாத படிக்குக் கொண்டு
வந்து களஞ்சியங்களிற்போட்டு ஒ
ன்றாகச் சேகரித்துக் கொண்டார்க
ள்-பிறகு ஆகாத அமலியான பஞ்
சமாகிய வருஷம் வந்து தடங்கிச்
சுது-தேசங்களி லுண்டான. மனி
தருக் கெல்லாம் பசியுந், தூடும்,
வருத்தமு முண்டாச்சுது அப்படிப்
பசியும், வருத்தமும், வந்து தடங்
கினபோது மிசுறு ராச்சியத்துக்
கெல்லா மிராசாவாகிய யூசுபுஅலை
கிஸ்ஸலாம் நித்திரை செய்து இர
ண்டு ஜாமஞ்சென்றபோது பசிவுந்
துகொட்டது- அப்போது ஆகாச
த்திலொரு சத்தங் கேட்டார்- அ
தாகிறது யூசுபே, யிது பசியுண்டா
ன நேரமென்று சத்தங்கேட்டு அ
ப்போதே யூசுபுநபி பஞ்சமாகிய வ
ருஷம்வந்து தடங்கிச்சு தென்று
றிந்தார்-பஞ்சவருஷத்தில் நின்று
முந்தின வருசம் வந்தபோது மலி
ந்த வருசங்களிற் றங்கித்த தவ
ச தானியங்கள் செலவழியத் தட
ங்கிச்சுது-முந்தினவருஷம், மிசுறு
தேசத்திலுள்ள மனிதரெல்லாந் த
ங்க ளிடத்தி லுள்ள வெள்ளியும்,
பொன்னும், பணங்காசு இவைகளெ
ல்லாங் கொண்டு அவர்கள் கையிலுண்டா



னதை யெல்லாங் கொண்டுவந்து
கொடுத்துத் தானியங் கொண்டார்
கள்-இரண்டாம் வருஷம் அவர்கள்
ஆபரணங்கள்- இரத்தினங்க ளுண்
டான தெல்லாம் யூசுபுநபி கையிற்
கொடுத்துத் தவசங் கொண்டார்க
ள்-அவர்கள் கையில் ஒரு இரத்தி
னமும், ஒரு ஆபரணமுமில்லை அந்
தப்படி யில்லாமற் போகு மளவுந்
தவசங் கொண்டார்கள்- மூன்றாம்
வருசம்,ஆடு, மாடு, ஒட்டகை, வே
லேறுகழுதை, யிவைக ளெல்லாத்
தையும் கொடுத்துத் தவசம் வாங்
கினார்கள்-அவர்களுக் காரு, ஆடு,
மாடு, ஒட்டக, மிவைகள் ஒன்றுமி
ல்லாமற்போகுமளவும் கொண்டார்
கள்-நாலாம் வருசமவர்கள், பூணு
ல், முதலான மெத்தைக ளெல்லா
ங்கொடுத்துத் தவசங் கொண்டார்
கள்-ஐந்தாம் வருச மவர்கள், வீடு
வாசல், தோப்புத் துறை, நிலம் பு
ல, முண்டானவை யெல்லாங் கொ
டுத்துத் தவசங் கொண்டார்கள்-ஆ
றாம் வருஷமவர்கள் பிள்ளைகுட்டிக
ளடங்கலையும் அடிமைச் சீட்டெழு
திக் கொடுத்துத் தவசங் கொண்
டார்கள்-ஏழாம் வருஷம் அவர்க
ளெல்லாரு மாண் பெண்ணுள்பட
அடிமைச் சீட்டெழுதிக் கொடுத்
துத் தவசங்கொண்டார்கள்-மிசுறு
இராச்சியத்தில் ஒரு காட்டாண்மக
னு, மொரு காட்டாண்மகளு மில்
லை - யூசுபுநபிக்கு அடிமையாகிப

போயிய இப்படி மிசுறு தேசத்தி
லுண்டான மனித ரடங்கலும் யூசு
புநபிக் கடிமையாய் அவர்கள் ஆள
டிமைகளு மிவருக் கடிமையாய்ப்
போனபடியினாலே யூசுபு அலைகிஸ்
ஸலாம் நடப்பித்த காரியத்திலெல்
லாம் மனிதரெல்லாம் புதுமையாய் அல்
லாகுத்த ஆலாவைக்கொண்டு சத்
தியமாகச்சொன்னார்கள் யூசுபு நபி
யுடையஇராஜவாழ்க்கை போலொ
ரு இராஜாவையும் நாங்கள் கண்ட
தில்லையென்று சொன்னார்கள்-பிற
கு யூசுபு அலைகிஸ்ஸலாம் ஒலிதெ
ன்னு மிராசாவுடைய மகன் றை
யானிராசாவுடன் சொன்னார்-அல்
லாகுத்தஆலா எனக்குத் தந்த கா
ரியங்களி லிப்படிச் செய்தா னெ
ன்றதைக் கண்டீரோ வென்றபோ
து இராஜாசொன்னான்- உம்முடை
ய புத்தியும், அக்குறுங் கண்டு நா
ங்க ளடங்கலும் உமக்குப் பின்சென்
று உம்முடைய வுத்தரவின்படி
தட்டாமல் நடக்கிறோமென்றுசொ
ன்னார்கள் - பிறகு யூசுபுநபி சொல்
லுவார் அல்லாகுத்த ஆலாவையு,
முங்களையுஞ், சாட்சியாகவைத்து
இந்த மிசுறிலுண்டானபேர்க ளட
ங்கலையும் உரிமைவிட்டு அவர்கள்
வீடுந்தோப்புந், துறை,ஆளடிமை,
பூணாரங்கள், இரத்தினங்க ளுண்
டான வஸ்தடங்கலும் அவர்களுக்
குக் கொடுத்து விட்டேனென்று
சொல்லி அந்நேரமே அவர்க ளட்

ங்களையு முரிமைவிட்டு அவர்களு
டைமைகளையுங்கொடுத்துவிட்டார்
இன்னுமொரு விசளயாவது, சுலை
காவும் கூட அடிமையானவர், விடும்
விலைப்பட்டுப்போய் ஒருகுச்சுவிட்
டிலிருந்தார்-அப்போது யூசுபுநபி சி
றையி லிருக்கிறபோது தாம் சேர்க்
துகொண்ட கந்துறிகொடுத்தார் –
அதற்கு மிசுறிலுள்ள ஆண், பெ
ண், சிறியார், பெரியா ரடங்கலும்
வந்து கூடினார்கள்-சுலைகா வாசிலிலே
யென்று தன் மந்திரியை விட்டார்-
அவருஞ் சில பெண்டுசளுமாக வந்
து சுலைகாவை யழைத்தபோதுசுலை
கா சொல்லுவார் பெரியதனம் வந்
துபோச்சுதோ, தனக்கு வரப்போ
காதோ, தன் ஆட்பேருடனேயோ
நான் வருகிறதென்று சொல்லிவிட்
டார்-அதுகேட்டு வள்ளல் மெய்
தானென்று சிவிகையில் மந்திரிமா
ருடன் வந்திறங்கி வாசலில் நின்று
நாச்சியாரே, வாருங்களென்று கூப்
பிட்டார், அப்போது "சுலைகா நா
னிப்போது நாச்சியாரே, விலைப்ப
ட்டு அடிமையானேனே யென்றார்,
அப்போது யூசுபுநபி யழுதார், பிற
கு சொல்லுவார் உங்களை யிந்தப்
பெரிய தனத்திலும் நான்மறக்கிற
தில்லை வந்த விதியெல்லாம் வரவல்
லோ வேணுமென்றுசொல்லி யிந்த
இராஜ வாழ்க்கையெல்லா மெங்கள்
தகப்பனார் மடியில்வைத்து ஒருக்
கால் முந்திக்கொண்டாரே யதற்கு
ப்போதாது வாருமென்று யூசுபுந
பி சிவிகையிலுள்ளே கொண்டுபோ
ய்ச் சைன்யப் பிடித்துப் பல்லக்
கி லிருக்கச்சொல்லி புறக்காவைக்
கொண்டு மூடியெடுத்தார்கள் யூசுபு
நபி குதிரைமே லேறிவந்தார் சுலை
கா தம்முடைய மாளிகையில் வந்த
போது கஸ்தூரி வஜீபனங் கொடுத்
தார்கள், அப்போதாக்கு மந்தக்கூ
ட்டத்திலே சுலைகாவைக் கலியாண
ஞ் செய்துகொள்ளுமென்று அல்
லாகுத்த ஆலாவுடையவஹி வந்தது,
அப்போதக்கும் சுலைகாவுக்கும் யூ
சுபுநபிக்குங் கலியாணமாச்சுது, எ
ல்லாகு அகுலம்- இவ்விதமாக விச
ளங்களில் வந்திருக்குது யூசுபுஅலை
கிஸ்ஸலாம் அந்தப் பஞ்சமான வரு
ஷங்களிலே ஒரு பொழுதாகிலும்
வயிறு நிரம்பத் தின்றதில்லையென்
று-அப்போது யூசுபுநபியைக் கேட்
கப்பட்டது உண்டான் - களஞ்சிய
மெல்லா முந்முடைய கைவசமாயி
ருக்க நீங்கள்-வயிறு நிரம்பத் தின்
னாமலிருந்த தேதென்றபோது யூசு
பு அலைகிஸ்ஸலாஞ் சொல்லுவார் நா
னப்படி வயிறுநிரம்பத் தின்றேனா
கில் பசித்தபேர்களை மறந்து விடு
வேனென்கிறது கொண்டும் ஊர்க்கு
த்த ஆலாவைப் பயந் திருக்கிறதற்
காக வேண்டியும் – வயிறு நிறை
யத் தின்னவில்லையென்று சொன்
னார்கள்.



பிறகு தைபாளிபுறு ஒலிதென்
கிற இராசாவை யொருநாளைக்
கொருதரந் தின்னச்சொல்லி யேவி
னார் அப்படி இராசாவை யொருதர
ந் தின்னச்சொல்லியேவினது இரா
சாவும், பசியை யனுபவித்தாற் ப
சித்தபேர்களை மறக்கமாட்டான் மி
சுகீன்களுக்கும் நன்றிசெய்வானெ
ன்கிறதை நாடினார்-பிறகு மிசுறி இ
ராச்சிய மல்லாமல் மற்றுமுண்டா
ன தேசங்களுக்கு மிசுறாருக்குப்பி
டித்த பஞ்சம்போலே பிடித்து அந்
தந்தத் தேசங்களிலுண்டான மனி
தரெல்லாம், மிசுறை நாடித் தவசங்
கொள்ளவந்தார்கள் வந்த பேர்களு
க்கு யூசுபு அலைகிஸ்ஸலாம் நேரிதி
தம் நடத்தினபடியாவது-வந்தபே
ர்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்
வொரு ஒட்டகைச்சுமை தானிய
ம் விற்கிறதே யல்லாமல் தினம்வி
ற்கத் தேவையில்லை, சோனுக்கும்,
மிசுகீனுக்கும், பெரியோருக்கும்,
சிறியோருக்குஞ், சரியாக விற்கத்
தொடங்கினார்கள், இப்படித் தேசதே
சங்களிலிருந்து வருகிற பேர்களுக்
கெல்லா மேற்றவாட்டமில்லாமல் ஒ
வ்வொரு ஒட்டகைச்சுமை விற்றார்
கள்-அன்றுஞ் வந்தமனிதருக் கெல்
லாந் தவசங் காணவேணு மென்கி
றதற்காக வேண்டியும், மனிதருக்
கிடையில் நேரிசெய்ய வேணுமெ
ன்கிறதற்காக வேண்டியும் இப்படி
த்திட்டம் பண்ணி விற்றுக்கொண்
டு வந்தார்கள் – பலதேசங்களுக்கு
முண்டான பஞ்சமும், வருத்தமு
ம், ஷாமுராச்சியத்துக்கும், கன்ஆ
ன் என்கிற இராச்சியத்துக்கும் ப
ஞ்சம் வந்து தொட்டது-அப்போ
து யகுக்கூபு அலைகிஸ்ஸலாமுக்கு
ம்-அவர் மக்களுக்கும், வருத்தமு
ம், பஞ்சமு முண்டாச்சுது -பிறகு
யகுக்கூபுநபி தம்முடைய மக்களை
மிசுறுக்குப்போய்த் தவசங்கொண்
டு வாருங்களென்று அவர்களை யனு
ப்பிப் புன்யாமீனைத் தம்மிடத்தில்
வைத்துக்கொண்டார் - அவர்களும்
பயணம் புறப்பட்டுப் பலஸ்தீன் எ
ன்னுந் தேசத்தோடே கூடிய அ
ஜானதி னென்னு மூரில்வந்து வி
டுதிவிட்டார்கள்-மறுபடியும் புறப்
பட்டு மிசுறிற்போய்ச்சேர்ந்தார்கள்-
பிறகுயூசுபு அலைகிஸ்ஸலாமிடத்திற்
போனபோது யூசுபுநபி அவர்களைத்
தமையமாரென் றறிந்தார்-அவர்கள்
தம்பியூசுபு என்கிறதை யறியவில்
லை-பிறகு அப்துல்லா இபுனு அப்
பாசு சொன்னார்-யூசுபு நபியுடைய
உடற்பிறந்தான்மார் யூசுபு நபியைக்
கிணற்றிலே தள்ளினதற்கு, மவர்க
ள் தவசங்கொள்ள மிசுறுக்கு வந்த
தற்கு மிடையிலே நாற்பது வருஷ
மா யிருந்ததென்று இதுவென்கெ
ட்ட சொல்லாயிருக்கும்- பெலத்த
சொல்லவது யூசுபுநபியை யகுக்கூ
புநபி பிரிந்த என்பது வருஷத்துக்
குப் பிறகாக்கும்-சந்திப்பானது இ

வர்கள் தவசங் கொள்ளப்போனத
ற் கடித்தாப்போலே தான் சந்திப்
பானது வல்லாகு அகுலம் -அப்ப
டி நான் நீடிந்தபடியினலே யவர்க
ளறியாமற் போனர்களென்று சொ
ன்னர்கள் - இன்னுஞ் சொல்லப்ப
ட்டது-யூசபு அலைகிஸ்ஸலாம் மிக
று இராஜாவுடைய கோலமாக வுடு
பிடவையு முடுத்திக்கொண்டு, நா
லும்மேலே போட்டுக் கழுத்தில் ந
வரத்தின மிழைக்கப்பட்ட, முத்து
க்கோர்க்கப்பட்ட பதக்கமும் போ
ட்டுத் தலையிற் கனக முடியும்வை
த்து இராஜகொலுவில் மந்திரி, பி
ரதானியுமா யிருந்தபடியால் யூசபு
நபியுடைய தமையன்மா ரறிந்தார்
களில்லை-பிறகு யூசபுநபி யவர்களை
விலே பார்த்தபோது அவர்கள் இ
புறனிப் பாஷைகொண்டு பேசின
ர்கள்-அப்போது யூசபுநபி தமைய
ன்மாரைக் கேட்டார்-நீங்களார் உங்
கள் காரியமேது நீங்களெந்தத் தே
சம் எத்தனை தேசங்களில் நின்றும்
மனிதர்கள் வந்தார்கள் அவர்கள்கா
ரிய மறியப்பட்டிருந்ததே யுங்கள்
காரிய மறியப்படவில்லையே அதே
தென்று கேட்டபோது- அவர்கள்
சொல்லுவார்கள்-காமென்னும் பட்
டணத்திலுள்ள மனிதரில், ஆடுமே
ய்க்கிறபேர்கள் அந்தத் தேசத்திற்
பஞ்சம் வந்தபடியினலே யிந்தத்
தேசத்திற் றவச முண்டாயிருக்கு
தென்கிற செய்திகேட்டுத் தவசம்

வாங்கிக்கொண்டுபோகவந்தோமெ
ன்று சொன்னர்கள்-அப்போது யூ
சபுநபி சொன்னர்-நீங்கள்நம்முடை
ய தேசத்திலுண்டான வுளவெல்
லாம் பார்த்துக்கொண்டுபோக வந்
தீர்களாக்குமென்று சொன்னபோ
து அவர்கள் அல்லாகுத்தஆலாவை
க்கொண்டு சத்தியமாகச் சொன்ன
ர்கள் நாங்கள் உளவாளிகளல்ல நா
ங்களெல்லாரும் அல்லாகுத்தஆலா
வுடைய நபிமார்களி லொவ்வாயா
ன யகுக்கூபு அலைகிஸ்ஸலா முடை
ய மக்களா யிருக்கு மென்றபோது
நீங்க ளெத்தனை மக்களென்றபோ
து அவர்கள் சொல்வார்கள்(௰௨) பி
ள்ளை யென்றர்கள்-பிறகு யூசபுநபி
இவ்விடத்தி லிருக்கிறது எத்தனை
பேரென்று கேட்டார் - அவர்கள்
நாங்கள் (௰) பேரிருக்கிறோ மென்
றர்கள்-அப்போது யூசபுநபி மற்ற
ப்பேர் எங்கேயென்று கேட்டார்-
அதற்கவர்கள் சொன்னர்கள் இர
ண்டுபேரிலொருவர் எங்கள் தகப்ப
னருக்கு மெத்தவு முவப்பானவர்
அவர்காட்டிற் போனவிடத்திலே க
லக்காகப்போனர் மற்றொருவர் எ
ங்கள் தகப்பனரிடத்தி லிருக்கிற
ர்-அவராகிறவர் காட்டிற்போய்க்கல
க்காகப் போனவருடைய தாய் ஒ
ன்றான உடன்பிறந்தா ரொரும் எங்
களுடைய தகப்பனர் நமக்குவப்
பானமகன் கலக்காய்ப் போனபடி
யால் மிகுதியுஞ் சலிப்புள்ளவரா யி



ழுதழுது அவர் கண்ணும் மந்திப
மாய்ப் போச்சுதென்றர்கள்- அப்
போது யூசபுநபி சொல்வார்- நீங்க
ள் சொன்னபேச்சு உண்மைதா
னென் றறிந்திருக்கிறபேர்களைச் சா
ட்சி விடுங்களென்றர்-அதற்கவர்க
ள் சொல்வார்கள் - இராஜாவே இப்
போது நாங்களறிந்தவூரல்லவேயெ
ங்கள் செய்தி யிந்தவூரில் யாரறிய
ப் போகிறர்கள் எங்களுராகில் மி
குதி பேரைக்கொண்டு சாட்சிசொ
ல்லி விப்போமென்று சொன்ன
போது யூசபு அலைகிஸ்ஸலாம் சொ
ல்லுவார்-நீங்க ளுண்மை யானவர்
களாகி லுங்கள் பேச்சை யுண்மை
கொள்ள வுங்கள் தகப்பனரிடத்தி
லிருக்கிற வுங்க ளுடற்பிறந்தானை
யென்னிடத்திற் கூட்டிவந்தா லுங்
கள் சொல்லெல்லாம் மெய்யா யிரு
க்கு மென்றபோது அவர்கள் சொ
ல்வார்கள்-இராஜாவே நாங்கள் எங்
கள் தகப்பனருட னிந்தச்செய்திக
ளெல்லாஞ்சொல்லி யவரிடத்திலி
ருக்கிற எங்க ளுடற்பிறந்தானை யெ
ங்களோடு விடுமென்று சொன்ன
லவரை யெங்களோடு விடுகிறதற்கு
மிகுதியுஞ் சலிப்பார் ஆகிலுமெங்
கள் தகப்பனரோ டவரை யெங்க
ளுடனே விடுமென்று மெத்தவும்
வருந்திக் கேட்போமென்று சொ
ன்னபோது யூசபு அலைகிஸ்ஸலா, ம
வரைக்கூட்டி வருமளவு முங்களா
லொருவர் நம்மிடத்தி லிருந்தவே

ணுமென்றர்- அப்போ தவர்கள் த
ங்களில் யாரிருப்பாரென்று பிசகு
நடந்தபடியினலே தங்களுக் கிடை
யிலே கரைபோட்டார்கள்-அப்படி
க் கரைபோட்டதில் சம்கூன் என்
கிறவர் பேர்வழியாகக் கரைவிழுந்
தது-பிறகு யூசுநபி யிடத்திற் சம்
கூனைவிட்டுத் தவசமளந்து கொண்
டு தங்களூருக்குப் போகப் பயண
மானபோது யூசபு அலைகிஸ்ஸலாம்
தம்முடைய பயல்கள்கூட அவர்க
ள் தவசங்கொள்ளவந்த வுடைமை
யை யவர்க ளறியாமல் அவர்கள்
பொதிக் குள்ளே வைத்து விடச்
சொல்லி குக்கும் செய்தார்- அந்த
ப்படியே பயல்கள் அவர்கள் கொ
டுத்த வுடைமையை யவர்களுடை
ய பொதிக்குள்ளே வைத்துவிட்
டார்கள் - கதாதா என்னும் இமாம்
சொன்னர் - அவர்கள் தவசங்கொ
ள்ளக் கொண்டுபோன வுடைமைக
ள் வெள்ளியா யிருந்ததென்று ஆ
லிம்கள்-இது பெலன்கெட்ட சொ
ல்லாயிருக்கும் பெலத்த சொல்லா
வது அவர்கள் தவசங்கொள்ளக்
கொண்டுபோன வுடைமை கம்புளி
க் கயிறு யிருக்கு மென்றர்கள், வ
ல்லாகு அகுலம்.

யூசபு அலைகிஸ்ஸலா மவர்கள் த
வசங்கொள்ளவந்த வுடைமையைத்
திரும்பிவிடக் காரண மேதென்று
பேசகப்பட்டார்கள்- இமாம் கல்பி
யென்கிறவர் சொன்னபடிக்கு அவ

ர்கள் தவசத்துக்குக் கொடுத்தவு
டைமை தவசத்துடன் திரும்ப
வைத்தது தகப்பனார் யகூக்கூபு அ
லைகிஸ்ஸலாம் அதைக்கண்டா ராகி
லதன் உடைமைகள் கொண்டுவந்த
து ஆகாதென்று அந்த வுடைமை
யைத் திரும்பியனுப்பி விடுவா ரெ
ன்றுக்கும்- அந்த வுடைமையைப்
பொதியில் வைக்கச்சொன்னது-இ
ன்னுஞ் சொல்லப்பட்டது-தகப்ப
னார் யகுக்கூபு அலைகிஸ்ஸலாம் அவ
ர்களுக்கும், பஞ்சமும், வருத்தமு
முண்டாச்சுது ஷாமிந்த வுடைமை
யை யெடுத்துக்கொண்டா லவருக்
குத் தங்கடமா யிருக்குமென்கிற
தைநினைத் தப்படியே பொதியில்
வைக்கச்சொன்னதென்றுஞ் சொ
ல்லப்பட்டது-இன்னும் யூசுபு அலை
கிஸ்ஸலாம் இப்படிச் செய்தது அ
வருடைய தமையன் மாருடைய தி
னைச் சோதிக்கவேண்டி- அவர்களிந்
த வுடைமை கொடுத்தல்லோ தவ
சம்வாங்கினது அந்தவுடைமை அ
வர்கள் பொதியிற்கண்டவுடனே -
யுடைமையுங்கொண்டு திரும்பு வா
ர்களென்றுக்கு மிப்படிச் செய்த
தென்றும் சொல்லப்பட்டது- பிற
கவர்கள் மிசுறுவிட்டுப் பயணமாய்
ப் புறப்பட்டுத் தங்கள்தகப்பனா ரி
டத்தில் வந்து சேர்ந்தபோது -
சொல்வார்கள் எங்களுடைய பாவா
வே மனிதரெல்லாரிலும் உத்தமாய்
இராஜாக்களுக் கெல்லாந் தலைவரு
மாய் எங்களை மிகுதியுஞ் சங்கை
செய்தவரிடத்தி லிருந்து வந்தோ
ம் அவர் நம்முடைய கிளையாரில் ஒ
ன்று மொருவரா யிருக்கவேணும்
அவரெங்களைச் சங்கை செய்தாப்
போலே நாங்களுமவரைச் சங்கை
செய்தோ மென்று தகப்பனாருட
னே சொன்னார்கள்-பிறகு யகுக்கூ
புநபி சம்கூனை எங்கேயென்று கே
ட்டார் அப்போ தவர்கள் சொல்
வார்கள் மிசுறு என்னும் தேசத்தி
ராஜா அவரைப் பிணைவைத்துக்
கொண்டார் நாங்களுங்களிடத்தில்
வந்து புன்யாமீனைக் கூட்டிக்கொ
ண்டு மறுபடியும் மிசுறுக்கு வர
வேண்டியவரை வைத்துக் கொண்
டாரென்று தங்களுக்கும், மிசுறு
இராஜாவுக்கு மிடையில் நடந்த செ
ய்திபெல்லாஞ் சொன்னார்கள்- பிற
கு யகுக்கூபு அலைகிஸ்ஸலாம், மக்
களோடு நீங்களேது காரியத்துக்கா
க அந்த இராஜாவுடனே யுங்கள்
செய்திகளை யெல்லாஞ் சொல்லவு
ம், அந்த இராஜா சம்கூனைப் பிணை
வைத்துக் கொள்ளவுங் காரிய மெ
ன்ன வென்றபோது மக்கள்சொல்
லுவார்கள் எங்களை யெல்லாமுளவு
காரரென்றும், உள்ளிடம் பார்க்க
வந்தவர்களென்றும் பிடித்துக்கொ
ள்ளவேணுமென்றுஞ் சொல்லிப்
பிறகு நீங்கள் புன்யாமீனை யுங்கள்
தகப்பனாரிடத்தி லிருக்குதென்று
சொன்னீரோ, அந்த வுண்மை யறி



யவேண்டி நீங்கள் புன்யாமீனை யெ
ன்னிடத்திற் கொண்டு வருமளவும்
சம்கூன் பிணையாயிருக்கட்டு மென்
று வைத்துக்கொண்டு பின்பு சொ
ன்னார்கள் நீங்கள் புன்யாமீனைக் கூ
ட்டிக்கொண்டு வந்தீர்களானால் நீங்க
ளுளவுபார்க்க வந்தவர்களல்ல, உங்
களுக்குத் தவசந்தந்து சங்கையாக
அனுப்புவோம் அப்படிக் கூட்டிவ
ராவிட்டால் நீங்கள் சொன்னதும்
பொய், உங்களுக்குத் தவசமுந்த
ருகிற தில்லையென்று சொன்னார்க
ளென்று சொல்லி யவர்கள்கொண்
டுவந்த பொதிகளைக் கொட்டும்
போது இவர்கள் தவசத்துக்குக்
கொடுத்த வுடைமைகளைத்தப் பொ
திக்குள்ளிருக்கக் கண்டார்கள் -அ
ப்போது யகுக்கூபு நபி சொல்லு
வார் நீங்கள் தவசத்துக்குக் கொடு
த்தவுடைமை யுங்கள் பொதியில்
வரக் காரியமேதென்றபோது அவ
ர்கள் சொல்லுவார்கள் ஒருக்காலு
ம் வழிகேடு செய்கிறதில்லை யெந்
த விதமோ இந்த முதல் எங்கள்
பொதியிலே வந்து தென்கிறதை
நாங்க ளறிய மாட்டோமென்று
சொன்னார்கள்-அப்போது யகுக்கூ
புநபி இராஜாவுடைய வுடைமை
யைத் திரும்பக் கொண்டுபோய்க்
கொடுங்களென்றார் அவர்கள் சொ
ல்வார்கள் எங்களுடனே புன்யாமீ
னை அனுப்பி வையுங்களென்றார்க
ள்-அப்போது யகுக்கூபு அலைகிஸ்
ஸலாம் புன்யாமீனை யுங்களோ ட
னுப்புகிறதில்லை நீங்க ளவனை யொ
ரு குபாடஞ் செய்கிறதில்லையென்
றுறுதியாய்ச் சத்தியஞ்செய்து தரு
மளவு மென்றார்-அப்தல்லாஹிபுனு
அப்பாசு றலியல்லாகு அன்கு சொ
ன்னார் யகுக்கூபு அலைகிஸ்ஸலாஞ்
சத்தியஞ்செய்து தாருங்க ளென்ற
து கொண்டு அவருடைய நாட்டம்,
முகம்மது சல்லல்லாகு அலைகிவச
ல்லமைக் கொண்டு சத்தியஞ் செய்
கிறதை நாடினார்கள்-பிறகு தகப்ப
னார் சொற்படிக்குச் சத்தியஞ்செய்
து கொடுத்தபோது அல்லாகுத்த
ஆலாவே, சாட்சியென்று-பின்பு பு
ன்யாமீனை யவர்களோடு கூட்டினார்
கள்-பிறகவர்கள் புன்யாமீனைக் கூ
ட்டிக்கொண்டு பயணமாய்ப்போக
நாடினபோது யகுக்கூபு நபி மக்க
ளோடு சொல்வார் மிசுறுப் பட்ட
ணத்துக் கோட்டையிற் புகுதும்
போது ஒரு வாசலிற் புகுதவேண்
டாம் பலவாசலிலும் பிரிந்து போ
ங்களென்று சொன்னார்-அதேதுக்
காக வேண்டியென்றால் யகுக்கூபு
நபியுடைய மக்கள்,மிகுதியழகும்,
வடிவும், நீளமு,மூபரமு முள்ளவர்
களா யிருக்கிறபடியினாலே ஒருமிக்
கப்போகிறது கண்ணூறுபடுமென்
று பயந்ததற்காக வேண்டியாயிரு
க்குமென்று-பின்புஞ் சொல்வார் அ
ல்லாகுத்தஆலாவுடைய காரியத்தா
லொரு காரியத்துக்கும் பலமொ

டுக்கவலாதென்றுமக்களுக்குச்சொ
ல்லிப்பிறகு பிள்ளைகளுக்குநல்மொ
ழிசொல்லி யனுப்பினர்-பிறகு அ
வர்கள் தகப்பனருக்குப் பயணஞ்
சொல்லிக்கொண்டு மிசுறுக்குப் பு
றப்பட்டார்கள்-மிசுறுப் பட்டண
த்துக்கு நாலு வாசலுண்டு தகப்ப
ஞர் சொற்படிக்கு அந்த நாலுவா
சலாலும்போய் மிசுறுக்கு இராஜா
வாகிய யூசுபு அலைகிஸ்ஸலாமைக்க
ண்டு சந்தித்தபின் பிறகு-இராஜா
வே நாங்கள் சொன்னவார்த்தைப்
பாடுதப்பாமல் எங்களுடற் பிறந்தா
ன் புன்யாமீனைக் கூட்டிவந்தோமெ
ன்று சொன்னர்கள்- அப்போதுயூ
சுபு அலைகிஸ்ஸலாம் நீங்களென்பே
ரில் நெறிசெய்தீர்கள் நன்றிசெய்தீ
ர்கள் இனிமே லென்னிடத்திலேத
லைமைபெற்றுக் கொள்வீர்க ளென்
றுசொல்லி வந்தபேர்களை மிகுதியு
ஞ் சங்கையாக விருக்கச்சொல்லிய
வர்களுக்கு விருந்துஞ் சொல்லிச்
சோறுகறிகள் பலவிதமாய்ச் சமை
த்து எல்லாரையு மழைக்கவிட்டுச்
சங்கையுடனே யிருத்திச்சொல்லு
வார், உங்களி லிரண்டு பேராகச்சப்
பிலிருங்களென்று யூசுபுநபி சொன்
னதின்பிறகு, அவர்க ளெல்லாருந்
தங்கள் தங்க ளுடன் பிறந்தவர்க
ளாகச் சோடு சோடாக விருந்தார்க
ள்-பிறகுபுன்யாமீன் தனியே யிரு
ந்து தன்னுடற் பிறந்தானை நினைத்
தழுதார்-அழுது சொல்லுவார் ஏ

ன்னுடன்பிறந்தவர் ஹயாத்தாயிரு
ந்தா லென்னுடன்கூடி யுண்பாரே
யென்று சலித் தழுதபோது யூசுபு
அலைகிஸ்ஸலாஞ் சொல்லுவார்- நீங்
களெல்லாரு மிரண் டிரண்டுபோ
க விருந்தீர்கள் அவர்மாத்திரந் தனி
யேநின்று சலிக்கிற தேதென்று
சொல்லித் தம்முடனே கூட்டிக்
கொண் டுண்டார்-அப்படி யிருபே
ரு மொரு சகனி லுண்கிறநேரத்தி
ல் யூசுபுநபிக்குச் சுலைகாபெற்றபிள்
ளைகளி லொருபிள்ளை மாளிகை வா
சலில்வந்து இவர்கள் பசியாறுகிற
தைப் பார்த்துக் கொண்டு நின்றது
அப்போது புன்யாமீ னந்தப் பிள்
ளை யுடைய முகத்தைப்பார்த் தழு
தார் அந்தக் கன்னி சொல்லாஞ்சோ
றுண்கிற சகனில் விழுகுது - அப்
போது வள்ளல் யூசுபு சொல்லுவா
ர் புன்யாமீனே பசியாமல் என்பிள்
ளையைப் பார்த்து ஏதுக் கழுகிறீ
ரென்றார்.

அப்போது சிறப்பும், தகுதியு
முடைய இராசாவே சொல்லப் ப
யமாயிருக்குதென்றார்- அப்போது
யூசுபுநபி சொல்லுவார் - தம்பியே
பயப்படாதேயும் உம்முடைய ம
னதிலுள்ளதைச் சும்மா சொல்லு
மென்றார் - அப்போது சொல்லு
வார்-அந்தப்பிள்ளை யென் தமைய
னார் யூசுபு நபியுடைய முகவாக்கா
யிருக்குதென்றார் - இது என்னஆ
ச்சரியம் உன் தமையனை ஓநாய்



கொண்டுபோச்சுதாமே அப்படிப்
போன யூசுபு கயாத்துடனே வந்து
பெண்ணுங் கொண்டு பிள்ளையும்
பெற்றிருக்கிருரோ - ஏதுக்கழுகி
றீர் சும்மா! சோற்றை யுண்ணுமெ
ன்றார் - பிறகு அந்தப்பத்துப்பேர்
களையுஞ் சொல்வார்- யகுக்கூபுநபி
யுடைய மக்களே உங்களுக்குத் த
ம்பி யூசுபுபேரி லிரக்கமுங்,கிருபை
யு மில்லையோ இவனொன் பிள்ளையை
ப் பார்த்துத் தமையனைப்போலிரு
க்குதேன் றழுகிறரோ யென்றார்
அப்போதவர்கள் சொல்வார்கள் த
குதியையுடைய இராஜாவே யெங்
கள் தம்பி யூசுபுமே லிரக்கமுங், கி
ருபையு மில்லாம லிருக்குமோ இ
வன்சில பிள்ளைகளைக் கண்டால்
தன் தமையனைப்போ லிருக்குதெ
ன்று இப்படித்தா னழுவான்-நாங்
கள் மனதி லிரக்கமா யிருப்போ
மென்றார்கள் வல்லாகு அகுலம்
பின்பு விருந்துகொடுத்துத் தீர்ந்த
பிறகு இரவானபோது யூசுபு அலை
கிஸ்ஸலாம் பகல்விருந் துண்டது
போலே யிருவரிருவராக நித்திரை
செய்யுங்க ளென்றபோது அவரவ
ர் கூடப்பிறந்த பேர்களுடன் அவ
ரவர்கள் நித்திரைசெய்தார்கள். பிற
கு புன்யாமீன் தனியே நிற்கிறதை
க்கண்டு பிறகு யூசுபு அலைகிஸ்ஸ
லாம் புன்யாமீனைக் கூப்பிட்டு எ
ன்னுடன் நித்திரை செய்யுமென்று
சொல்லித் தான் படுக்கிற சப்ரம

ஞ்சக் கட்டிலின்மேலே தலையணை
மெத்தையுடன் அவரையுங் கூடப்
படுக்கச்சொல்லி விடியுமளவுந்தம்
முடனணைத்து முத்தியிட்டுக் கொ
ண்டு விடிந்தபோது அவர்களுக்கு
ச்சொல்லுவார் நீங்கள் கூட்டிவந்தி
ர்களே அவருக்குங்களைப்போ லொ
க்கப்பிறந்த வுடற்பிறந்தா னில்லா
மற்றயங்கிறரே அவர் நம்மிடத்தி
லிருக்கட்டும் உங்கள் காரியந் திரு
மளவும் என்று சொல்லி அவர்களு
க்கெல்லாம் விடுதி விடுங்கொடுத்
து ஊணும், குடிப்புங் கொடுக்க ஆ
ள்களுங் கட்டளையிட்டு அவர்களை
விடுதி வீட்டுக்குப் போகச் சொல்
லிப் புன்யாமீனைத் தம்முடைய மா
ளிகையி லிருத்திக் கொண்டார்-பி
றகு யூசுபு அலைகிஸ்ஸலாம் புன்யா
மீனைக் கிட்ட இருத்திக் கொண்டு
ம்முடைய பேரென்னவென்று கே
ட்டபோது என்பேர் புன்யாமீனெ
ன்று சொன்னர் - புன்யாமீனுக்கு
ப் பயனென்ன வென்று கேட்ட
போது தாயைச் சாகக்கொடுத்தவ
னென்றார் - பிறகு யூசுபுநபி யுமக்
கிப்படிப் பேர்வைப்பானே னென்
று கேட்டதற்கு நம்மைத் தாயார்
பெற்றவுடனே மவுத்தானர்- அத
ற்காகவேண்டி யிந்தப் பேர்வைத்
தார்க ளென்றார் - பிறகு உம்மு
டைய தாய்பேரென்னவென்றுகே
ட்டார் - அதற்குப் புன்யாமீன் எ
ன்தாயார் பேர், ருகிலா, லாயானு

டையு மகளா யிருக்குமென்றபோ
து யூசுபுநபி கேட்பார் - கலியா
ணஞ் செய்தீரா வென்று கேட்ட
போது ஓம்பெண் கொண்டேனெ
ன்றார் — உமக்குப் பிள்ளைக ளுண்
டோவென்று கேட்டார் ஓ மென்
றார்-எத்தனைபிள்ளையென்றார்— அப்
போது பத்துப்பிள்ளை யுண்டென்
றார் - அப்போதவர்கள் பேரென்
னசொல்லுமென்றார் — பிறகு புன்
யாமீன் சொல்லுவார்- எனக்கொரு
தமையனு ருண்டாயிருந்தார் அவர்
மவுத்தாய்ப்போனார் அவர் பேரில்
நின்றும், அவர்பட்ட பாட்டில் நின்
றும், என் பிள்ளைகளுக்குப் பேர்
வைத்தேனென்று சொன்னார்-அப்
போது யூசுபு நபி — என்னென்ன
பேர்வைத் தீரென்று கேட்டபோ
து புன்யாமீன் சொன்னார்-அந்தப்பி
ள்ளைகளுடைய போகிறது முந்தி
ன பிள்ளையுடைய பேர் — பாலிகு
இரண்டாம் பிள்ளையுடைய பேர்
ஆகிறு - மூன்றும் பிள்ளையுடைய
பேர் அசுக்கல் நாலாம் பிள்ளையு
டைய பேர் — அகியர்ஐந்தாம் பிள்
ளையுடைய பேர் அகியர் - ஆறும்பி
ள்ளையுடைய பேர் நுகுமான் — ஏ
ழாம் பிள்ளையுடைய பேர் உறுது
எட்டாம் பிள்ளையுடைய பேர்அறு
சு-ஒன்பதாம் பிள்ளையுடைய பேர்
ஹயித்தும்-பத்தாம் பிள்ளையுடைய
பேர் முத்தம்மிம் என்று சொன்னா
ர்—அப்போது யூசுபு அலைகிஸ்ஸலா
ம் — இந்தப் பேர்களுடைய மகுனா
வாகிறதென்னவென்று கேட்டார்,
புன்யாமீன் சொல்லுவார்—பாலிகே
ன்னும் பேருடைய அருத்தமாவது
என் தமையன் யூசுபைப் பூமியிழு
ந்தி விட்டதற்காகவேண்டி இப்பே
ரிட்டேன்-ஆகிறென்னும்பேருடை
ய அருத்தமாவது என்தமையனெ
ங்கே யிருந்தாலுங் கைருள்ளவராக
விருப்பார் அதற்காகவேண்டி இப்
பேர் வைத்தேன்-அசுக்கலென்னு
ம்பெயருடைய அருத்தமாவது எ
ன்தமையன் யூசுபும், நானும் தாயுந்
தகப்பனு மொன்றாகிய வுடற்பிறந்
தவர்கள் அதற்காகவேண்டி அசுக்
கலென்று பேரிட்டேன்.

அகியர் என்னும் பேருடையஅ
ருத்தமாவது, என் தமையன்யூசுபு
என் தாய்க்குத் தலைமகனாயிருந்தா
ர் அதற்காக அகியர் என்னு பேர்
வைத்தேன்-நுகுமான் என்கிறபே
ருடைய அருத்தமாவது என்தமை
யன் எங்கள் தகப்பனார் வயிற்றிற்
பிறந்தவர்களில் -அவர் மெத்தவும்
மிருதுவானவர் அதற்காக நுகுமா
னென்றுபேரிட்டேன்—உறுதுஎன்
னும் பேருடையஅருத்தமாவது எ
ன்தமையனார் அழகென்னும்நிறபி
லாயிருந்தார்,.அதற்காக உறுதென்
னும்பேரிட்டேன்-அறுசு என்னும்
பேருடைய அருத்தமாவது என்த
மையன்என்னுடனுக்குத் தலைபோ
லாயிருந்தார் அதற்காக வேண்டி



அறுசு என்னும் பேர்வைத்தேன்-
ஹயித்தும் என்னும்பேருடைய அ
ருத்தமாவது, என்தகப்பனார் யகு
க்கூபு நபியென்னுடனே சொன்னா
ர் உன் தமையனெங்கே யிருந்தா
லும் ஹயாத்துடனே யிருப்பாரெ
ன்றார்கள்— அதற்காக அந்தப்பேர்
வைத்தேன்— முத்தம்மிம் என்கிற
பேருடைய அருத்தமாவதுஎன் த
மையனை எப்போது நான்காண்
பேனோ அப்போது என் கண்குளி
ர்ந்தவனாய் என் சந்தோஷம் நிறை
படியானவனாயிருப்பேன்— இதற்கா
கவேண்டி முத்தம்மிம் என்றுபேர்
வைத்தேனென்று சொன்ன போ
து யூசுபு அலைகிஸ்ஸலாஞ் சொல்லு
வார்-நானுன் தமையன் கலாத்தாக
ப்போனவருக்குப் பகரமாக வுனக்
குநானுடற் பிறந்தானாக இருக்கிறே
ன் உமக்குச் சந்தோஷமோ வென்
று கேட்டபோது புன்யாமீன்சொ
ன்னார்-உம்மைப்போ லொத்தவர்க
ளுடற் பிறந்தானா யிருக்கிறது ஆ
ருக்குக் கிடைக்கும், அப்படிக் கி
டைக்கினும், என்தகப்பனார் யகுக்
கூபு அலைகிஸ்ஸலாமும், என் தாயா
ர், ராகிலாவும் உம்மைப்பெற்றார்க
ளில்லையே அப்படிப் பெற்றார்களா
கிலுடன்பிறந்தா னென்கிறதுண்டா
குமென்று சொன்னபோது- யூசுபு
அலைகிஸ்ஸலாம் மிகவும் அழுதுகொ
ண்டு எழுந்திருந்து புன்யாமீனகெ
ருங்கோடே நெஞ்சைவைத்துக் கட்டி
த்தழுவிக்கொண்டு-சொல்வார்நானு
க்கு முன்னுடைய வுடற்பிறந்தான்
யூசுபு நீ நற்செயல் கெடவேண்டா
ம், இந்தச் செய்திகளை யெல்லாந்
தமையமாரோட றிவிக்க வேண்டா
மென்றும் தம்பிக்குப் புத்திசொல்
லிப்பிறகு யூசுபு அலைகிஸ்ஸலாந்த
ம்முடைய தமையன் மாரகளுக்கு
த் தவசம் நிறைபடியாக அளந்து
கொடுத்து ஒவ்வொரு பொதியாக
வெடுத்துவிடச்சொல்லிப் புன்யாமீ
னுடைய பொதியிற் பொன்மரக்கா
லைவைக்கச் சொல்லியேவினார்- அ
ந்தப்படியே பொன் மரக்காலை யே
வலாட்கள் புன்யாமீனுடைய பொ
தியில் வைத்தார்கள்.

அந்தப்பொன் மரக்கால் பவ
ல இரத்தினங்கள் பதிக்கப்பட்ட
மரக்காலாயிருக்கும் - சகுபுல் அகு
பாறென்னும் இமாம் சொன்னார்—
யூசுபுஅலைகிஸ்ஸலாம் புன்யாமீனுட
னே நானுன்னுடற் பிறந்தான் யூ
சுபென்று சொன்னபோது புன்யா
மீன்சொல்லுவார்- நானும்மை விட்
டுப்பிரிந்து-போகிறதில்லையென்று
சொன்னபோது யூசுபு அலைகிஸ்ஸ
லாஞ் சொல்லுவார் -நான் தகப்ப
னைப் பிரிந்தநாள் முதலாய்ச் சி
றிதுசலிப்பாலும் உம்மைக்கொண்
டல்லோ தகப்பனார் சலிப்பாயி யி
ருந்தார்- நானும்மைப் பிடித்துவை
த்துக் கொண்டேனேயெ வைருக்குச்

சலிப்புமேல்ச் சலிப்பதிக மாகுமெ
ன்று சொன்னதின் பிறகு சொன்
ஞர் - உம்மைப் பிடித்துவைத்துக்
கொள்ள இடப்பாடாக மாட்டாது
ஒரு உபாகிய செயலை நான் வெளி
யாக்கியே யொழிய அப்படி ஆகா
தசெயற் செய்கிறதற்குப் பாரட்
டமாட்டே னென்றபோது உமக்
கு வேண்டியபடி செய்யுமென்று
சொன்ஞர்-அப்போது யூசுபு அலை
கிஸ்ஸலாஞ் சொன்ஞர்-உம்முடை
ய பொதிக்குள்ளே மாக்காலைவை
த்து நீங்கள் பயணம் புறப்பட்டுப்
போகிறபோது பொன் மாக்காலை
க் களவு கொண்டு போகிறீர்க ளெ
ன்று கூப்பிட்டு மாக்கால்யாருடை
ய பொதியி லிருந்ததோ அவரைப்
பிடிப்பே னென்று சொல்லி யுன்
னைப்பிடிக்கலா மென்றபோது புன்
யாமீன் அப்படியே செய்யுமென்
ஞர்-பிறகு மாணிக்க, மிரத்தினம்
பதிக்கப்பட்ட பொன் மாக்காலைப்
புன்யாமீனுடைய பொதிக்குள்ளே
போட்டுவிட்டார்கள்-பிறகு எல்லா
ருந் தானியப் பொதிக ளெல்லா
மெடுத் தேற்றிக்கொண்டு பயண
ம்புறப்பட்டுச் சிறிதுதூரம் போன
போது ஒரு ஆளைவிட்டு அவர்களை
க் கள்ளரென்று கூப்பிட்டபோது
அவர்கள் சொன்ஞர்கள்- நாங்க ள
படிக் கொத்த அழிச்சாட்டியஞ்
செய்ய வரவில்லை யென்றபோது
தூதன் சொல்வா னப்படியே யுங்

களிற் களவு செய்தவர்க ளுண்டா
யிருந்தா லவனை யென்னபராப்ப
த்தியஞ் செய்யவேணுமென்றுகே
ட்டபோது- அவர்கள் சொன்ஞர்க
ள் அப்படியே யெங்களா லொரு
வருடைய தட்டுமுட்டில் அந்தக் க
ளவுண்டாயிருக்கிற் கள்ளனுக்குள்
ளபராய்பத்தியம் அவனைச் செய்ய
லாமென்று சொன்னபோது எல்
லாருந் திரும்பக்கூடி வந்ததின்பிற
கு அவர்களுடைய பொதிகளைச்
சோதித்தான்- தூதா என்கிற இ
மாம்சொன்ஞர்-அந்தத் தூதனவர்
களி லொருவருடைய தட்டுமுட்
டைச் சோதிக்கும்போது அல்லா
குத்த ஆலா அளவில் இஸ்தகுபா
றுஞ்செய்து, தவுபாவுஞ்செய்வார்-
இப்படிச் சோதித்துப் புன்யாமீனு
டைய தட்டுமுட்டிற் சோதிக்கும்
போது அதில் மாக்காலிருந்தெடுத்
துப் பிறகு யூசுபு அலைகிஸ்ஸலாஞ்
சொல்லுவார் நா மிவரெடுப்பா ரெ
ன்றெண்ணவில்லை யென்றபோது
தமையமார்க ளெல்லாருந் தலைகவி
